www.padippakam.com



# ஒரு வீடு ஒரு தமிழன்

## முழு நீள நகைச்சுவை நாவல்

கி.செ.துரை

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு வீடு ஒரு தமிழன்

(ஒரு முழு நீள நகைச்சுவை நாவல்)

முதல் வெளியீடு -2011
எழுதியவர் - கி.செ. துரை
பதிப்பகம் - அலைகள் பதிப்பகம்

மேலட்டை வரைபு - செந்தில்

பக்கம் - 269
விலை -
கருத்துக்கு -thurai@tamilnet.dk

Fist edition 2011/ Authur k.s.thurai
Published by - alakal pathippakam
cover design- senthil

படிப்பகம்

www.padippakam.com



## சிரித்து வாழ்வோம்..

உங்கள் கைகளில் தவழும் இந்த நாவல் அலைகள் இணையப்பத்திரிகையில் தொடராக வெளிவந்தபோது உலகத்தின் பல பாகங்களில் இருந்தும் பாராட்டிக் கடிதங்கள் வந்தன. அத்தருணம் இதை நூல் வடிவில் கொண்டு வரவேண்டும் என்றும் பலர் கேட்டிருந்தனர். அவர்கள் விருப்பம் இன்று தமிழகத்தில் உள்ள அன்பு நண்பர் ரவி மூலமாக நிறைவேறியுள்ளது.

ஒரு படைப்பு அதைப் படிப்பவர்களுக்கு ஏதோ ஒருவகையில் பயனுள்ளதாக அமைய வேண்டும். அந்தப் பயனை வாசகர்கள் சிரித்தபடியே அனுபவிக்கவும் வேண்டுமென்று எழுதப்பட்டுள்ளது இந்த நாவல். அதனால்தான் புலம் பெயர் தமிழர் வாழ்க்கையின் பல்வேறு பக்கங்களையும் சிரித்தபடியே படம்பிடித்துச் செல்கிறது. இதில் வரும் பாத்திரங்கள் காவியங்களோ கற்பனைகளோ அல்ல நம் கண்முன்னே நடமாடும் ஜீவனுள்ள மனிதர்களே.

இந்த நாவல் டென்மார்க்கில் வீடு ஒன்றை வாங்கப் புறப்பட்ட தமிழ்க் குடும்பத்தின் ஆவலில் இருந்து உற்பத்தியாகி, தாயகம் வரை பயணப்பட்டு வருகிறது. நமது அறியாமையை நினைத்து சிரிப்பதற்கான வாய்ப்புக்கள் மலிந்துள்ள இடங்களுக்குள்ளால் அந்த நதி வளைந்து வளைந்து ஓவியமாய் ஓடுகிறது.

புலம் பெயர் படைப்புக்கள் புலம் பெயர் வாழ்வை மட்டும்தான் பிரதிபலிக்க வேண்டும் என்ற வாதத்தை ஒரு புறம் வைத்துவிட்டு, எங்கிருந்தாலும் வாழ்வு வாழ்வுதான் என்ற கோணத்தில் இக்கதை எழுதப்பட்டுள்ளது. எந்த இலக்கிய அணியுடனும் சமரசம் கண்டு கதைச் செல்வத்தின் அழகைக் குலைத்துவிடாது, சொந்த மூலப் பொருட்களில் அமைக்கப்பட்ட ஒரு வீடாக உங்கள் முன் தரிசனமாக-றது. இதன் கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே பயணியுங்கள். நீங்கள் சிரிப்பீர்கள், சிந்திப்பீர்கள் ஒரு கணம் உங்கள் கையில் இருக்கும் இந்த நாவல் தரமானதுதானா என்றும் சீர்தூக்குவீர்கள்.

அத்தருணம் உங்கள் உள்ளத்தில் இது ஒரு தரமான நாவலே என்ற எண்ணம் மலருமானால் ஈழத் தமிழ் படைப்பிலக்கிய வரலாற்றுக்கு

3/ ஒரு வீடு ஒரு தமிழன்

நானும் ஒரு சிறு விளக்கை ஏற்றினேனே என்ற ஆத்ம திருப்தி

என்னுள் பரவும்.

எனது படைப்புக்கள் சிரித்து வாழ்கின்றன.. அவற்றைப் படிப்பவர்களும் சிரித்து வாழவேண்டும் என்ற ஆவலுடன் வெளி வருகின்றன. என் வாசகரின் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி.

வணக்கம்.

கி.செ.துரை டென்மார்க்
10.03.2011

www.padippakam.com


# 01

ஆப்கானிஸ்தானில் இருந்த புத்தர் சிலைகள் மீது பீரங்கியடித்துக் கொண்டிருந்தார்கள் தலபான்கள். போரையே வெறுத்து வெறுங்கையுடன் துறவியான புத்தபெருமான் உடைந்து நொருங்கி, சிதிலமாகி காற்றில் கரைந்து கொண்டிருந்தார்.

புத்தர் தூசாகப் போவது போல போரினால் உலகமும் உடைந்து தூசாகப் போகிறதா? இப்படியாக ஒப்புமை காணும் நிலையில் சிவபாலி இருக்கவில்லை.

புத்தர் என்றால் நமக்கு வேண்டாதவர் என்ற எண்ணத்துடன் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதிலிருந்து ஆரம்பிக்க இருக்கும் பாரதூரமான விடயங்களை அவரால் கணக்கிட முடியவில்லை. ஆங்காங்கு சேகரித்த சின்னஞ்சிறு உள்ளூர் சங்கதிகளுக்குள்ளால் உருவேறி இருந்தார்.

அப்போதுதான் தொலைபேசி மணி அடித்தது.

அவரை ஐயாமுத்து வலிந்து சாப்பாட்டிற்கு அழைத்தார். அந்த நேரம் அவருடைய அன்பான அழைப்பு தூண்டிலில் குத்திய இரைபோல அவருக்குப் படவில்லை.

ஐயாமுத்துவின் மத்தியானச் சாப்பாடுதான் அவருடைய மனக்கண்ணில் ஒரு தடவை ஊர்வலம் போனது. இள மஞ்சளில் புரியாணி சோறு, ஆட்டிறைச்சிக்கறி, அவித்த முட்டை, ஒரு பருப்புக்கறி பிறகு ஐஸ்கிறீம்... போவதா விடுவதா கடுமையாக யோசித்தார்.

"அழைத்தவர் குரலுக்கு வருவேன் என்றான் கீதையிலே கண்ணன். புத்தர் சிலை உடைப்பு முடிந்து தொலைக்காட்சியில் சினிமா சிதறல் ஆரம்பித்திருந்தது. பழைய புதுப்பாடல்கள் ஒன்றுமாறி ஒன்று சிதறும் நிகழ்ச்சி அது.

"அடடா! இதுவல்லவோ ஆண்டவன் குரல்...." ஐயாமுத்துவின் வேண்டுதலை மதித்துப் புறப்படலாமென்று குடும்பத்தோடு புறப்பட எண்ணினார். மனைவி பிரியாமணியை ஒரு தட்வை ஓரக்கண்ணால்

www.padippakam.com



பார்த்தார். அவள் உறங்குகிறாளா அல்லது உறங்குவது போல பாவனை செய்கிறாளா என்பது தெரியவில்லை...

"அம்மாச்சி ... நேரம் பத்தாகுதணை... குஞ்சு" ! ,

"சும்மா இருங்கோ... சனி ஞாயிறுதன்னும் கொஞ்சம் நிம்மதியாப் படுக்க விடமாட்டியள்..,"

"பிரியாமணியை படுக்கையால் எழுப்பி" அவளுடைய உடுப்புகளை அயன்பண்ணிக் கொடுத்து, ஐயாமுத்து வீடு போறதெண்டால் .... நினைக்கவே அவருக்கு இமயமலையைத் தூக்கிப் போன களைப்பு வந்தது. பதினொரு மணிக்கு முந்தி படுக்கையில் இருந்து கிளப்ப முடியாது.

இதுகளை கிட்டிமாட்டி.... படுக்கையாலை எழுப்பி...., சலித்தார்.

ஐயாமுத்து வீடு போறதெண்டால் அரைமணி நேரம் காரோட்டம்... கடைசி ஒரு பன்னிரண்டு மணிக்காவது போக வேண்டாமோ? தடுமாறினார். ஐயாமுத்துவுக்கு ஏன் இந்த வேலை..? உந்தச் சனியனுகளைக் கொண்டு சாப்பிடப் போறதெண்டால் .... யாருக்கும் கேட்காமல் மனதிற்குள் திட்டிக் கொண்டே முகத்தைத்திருகி வீம்புக்கு சிரித்தபடி எழும்பினார்.

போன மாதம் சுந்தரம் வீட்டுக்கு சாப்பிடப் போய் ... பிறகு கடைக்குப் போய் நடந்த கூத்து நினைவுக்கு வந்தது..

ஆணம் வைக்கக் கூடிய கறுப்பு நிறமான கறிச்சட்டிகள் அரை விலைக்குப் போட்டிருந்தார்கள். மரக்கறிக்கு, மாமிசத்திற்கு, திவசத்திற்கு, பக்கத்து வீட்டு பரமேஸ்வரி அக்காவுக்கென்று மொத்தம் பத்துச் சட்டிகளை வாங்கியிருந்தாள் பிரியாமணி.

அத்தனை சட்டிகளையும் கார் டிக்கிக்குள் வைக்க முடியாமல் போய்விட்டது. தெருவில் வைத்தே சட்டி வைத்திருந்த பெட்டிகளைப் பிடுங்கி வீசிவிட்டு, ஒன்றுக்குள் ஒன்றாக சட்டிகளை அடுக்கிக் கொண்டிருந்தார்... அப்போது போலீஸ் கார் வந்து பக்கத்தில் நின்றது.

www.padippakam.com



றோட்டோரம் நின்று இந்த வேலை செய்தால் சும்மா விடுவார்களா? கடையில் களவெடுத்து வந்திருப்பதாக யாரோ ஒரு பென்சனிஸ்ற் கிழவி போன் செய்திருக்கிறது. அகதிகளால் தான் நாடு சீரழிகிறதென அரசியல்வாதிகளும், தொலைக்காட்சிகளும் பேசித் திரிவதால் வந்த சன்னதம் இது. சட்டிகளின் மலிவைப் பார்த்த மலாரடிப்பில் பிரியாமணி றிசீட்டையும் வீசிவிட்டாள்.

சத்தியம்பண்ணி, கடைகாரனிடம் போய் கதைத்து, போலீஸ்காரனிடம் இருந்து தப்பிவர அவருக்குப் போதும் போதுமென்றாகிவிட்டது. ஊரில் உள்ள புட்டணி ஒழுங்கை முருகன் கழகம் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் ஓட்டத்தில் முதலாவது இடம் பெற்றிருந்தாள் பிரியாமணி . அன்று அவளுக்கு ஓர் அலுமினியம் சட்டியை பரிசாகக் கொடுத்திருந்தார்கள். அன்றிலிருந்து சட்டிகளை வாலாயம் பண்ணுவது அவளுடைய குணம்.

அதிகமான தமிழ் வீடுகள் முழுவதும் அலுமினியம் சட்டிகளால் நிறைந்திருப்பது ஏன்? திடீரென அவர் மனம் ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாக ஆராய்ச்சி செய்தது. பற்பசையைப் பிதுக்கி பிறசில் வைத்து வேகமாக தீட்டத் தொடங்கினார். எண்ணங்கள் எங்கெங்கோ ஓடின...

பிறகு வாயைக் கொப்பளித்தபடி புதிதாகச் சிந்தித்தார். வெறுங்கையோட போறதே? ஓடிப்போய் கடையில ஒரு பூச்செண்டு வாங்கிவர பிரியாமணியும் துயிலெழ நேரம் சரியாக இருக்குமென எண்ணினார்.

கீழே கிடந்த காற்சட்டையை இழுத்துப் பூட்டிக் கொண்டு வேகமாக வெளியே தாவினார்.

"எணேய் எங்க போறியள் ?" பிரியாமணி குரல் கொடுத்தாள்.

"ஓடிப்போய் ஒரு கட்டுப் பூவும், காலைச் சாப்பாட்டுக்கு பணிசும் வாங்கி வாறனே.. "

"பணிசை மட்டும் வாங்கிவாங்கோ அண்டைக்கு வாங்கின சட்டி கிடக்கு அதிலை ஒண்டைக் குடுப்பம்"

"சீ பூம்பா சாடி போல இனி இந்தச் சட்டியும் எத்தனை

www.padippakam.com



வீடுகளுக்கு பரிசாக சுழலப் போகுதோ?" மனிதில் கலங்கியபடியே பாண் வேண்டுவதற்காக பாய்ந்து காரில் ஏறினார்.

02

சொன்ன நேரத்திற்குள் அவர்களால் புறப்பட முடியவில்லை. வாழ்க்கையில் வரக்கூடிய தோல்விகளும் அதற்குள்ளேயே மறைந்திருப்பதையும் அவர்களால் புரிய முடியவில்லை.

... காரில் ஏற தேர் முட்டிவரை சாமியைக் கொண்டுவந்தது போல களைபோட்டுவிட்டது. சிவபாலி கோபத்தோடு மிதித்த மிதியில் கார் அசுர வேகமெடுத்தது.

"அப்பா கைப்பையை மறந்திட்டன்.." பிரியாமணி காருக்குள் இருந்து குரல் கொடுத்தாள்.

"பேசாமல் கிட நீ எண்டைக்கு பையை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய் ?" அவருக்கு விசர் ஏறியது.

அதற்குள் கார் ஐயாமுத்து வீட்டு வாசலில் நின்றது.

"டிங்.. டிடிங்..." வாசல் மணியை அழுத்தினார்.

"வாங்கோ... வாங்கோ... ! " ஓடி வருவதுபோல பாவனை காட்டியபடி ஐயாமுத்து அவர்களை மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். சோறும், கறியும் குழைந்து பனையோலைப் பெட்டியில் போட்டால் வரும் புளிப்பேறிய வாசமொன்று, அவரின் பின்னால் புயல் போல வந்து ஆளைத் தூக்கி இருத்தியது.

"றோடு வழுக்கேல்லையே ? வேகமாக வந்தால் பொ-லிஸ் பிடிக்கும்..." யாரோ ஒரு தமிழர் விபத்தில் சிக்கியது போன்ற விடயங்களை ஆலாபனை ஆக்கியபடியே சோபாவில் குந்திக் கொண்டனர்.

"சாப்பிட முந்தி சூடா ஒரு ரீ அல்லது குளிரா ஒரு கோலா ?"

"வேண்டாம் வேண்டாம் நேரம் ரெண்டு மணி ஒரேசா

படிப்பகம்

www.padippakam.com



சாப்பிடலாம்." கிலிங், கிலிங் ஓசைகளுடன் மேசைக்கு சாப்பாடு வந்தது.

அளவு சாப்பாடு, கொலஸ்ரோல், சத்தியமூர்த்திக்கு பாரிசவாதம் வந்தது. ஊருக்குப் போய் ஆசை தீர ஆட்டிறைச்சி தின்று மண்டையைப் போட்ட போஸ்ற்மாஸ்டரின் கதை.. சுகர் ஏறுவது போன்ற மாமூல் விடயங்களுடன் சாப்பாடு முடிந்தது.

"சுகர் இருந்தாலும் ஒரு நாளைக்கு ஐஸ்கிறீம் குடிக்கிறதாலை பிரச்சனை இல்லை.." ஐயாமுத்துவின் மனைவி தேவாரச்செல்வி திரு வாய் மலர்ந்தபடியே ஐஸ்கிறீமை நீட்டினாள். சலரோகப் பிரச்சனை இருப்:பதால் சிவபாலி பிரியாமணியை ஒரு தடவை பயத்துடன் பார்த்துவிட்டு ஐஸ்கிறீமை சுர்ர்ரென்று உறிஞ்சி இழுத்தார்.

"உங்க வீடு வலு நீற்றா இருக்கு..." பிரியாமணி சொன்னாள்.

"எல்லாம் வளர்ந்த பிள்ளையள் இருக்கிறதால வீடு சுத்தமா இருக்கு... சின்னப்பிள்ளையள் எண்டால் கஷ்டந்தான்." தேவாரச்செல்வி சிரித்தபடி சொன்னாள்.

"இது வாடகை வீடுதானே ?" இது பிரியாமணியின் கேள்வி.

"ஓமோம்" இது ஐயாமுத்து.

"பதினைஞ்சு வருசமாகக் கட்டின வாடகையைக் கூட்டிப் பார்த்தால் அந்தக் காசுக்கு சொந்தமா ஒரு வீட்டை வாங்கியிருக்கலாம" சலிப்புத் தமிழ் பாடினாள் தேவாரச் செல்வி.

"ஏன் நீங்கள் ஒரு வீட்டை வாங்கினால் கட்டுற வாடகை ஆருக்கோ போகாமல் ஒரு முதலாகப் போயிடுமே ? சொந்தமா ஒரு வீடிருந்தால் ஊருக்குப் போற நேரம் வித்துப் போட்டுப் போக வசதியா இருக்கும். வீணாப்போற காசை ஒரு வீடாக்கிறது எவ்வளவு புத்திசாலித்தனம் ?" திடீரென பிரியாமணியைப் பார்த்துக் கேட்டாள் தேவாரச்செல்வி.

"டங் ! " பிரியாமணியின் ஈய மண்டையில் ஒரு அடி. மனதில்

www.padippakam.com



சொந்தமாக வீடு வேண்டும் ஆசை விதை விழுந்தது.

"சொந்தமா வீடு வாங்கேல்லை... இதுதான் இவவின்ரை கதை.. காசுக்கு எங்கை போறது? , ஐயாமுத்து எரிச்சலாக இருந்தார்.

"காசென்ன காசு... கேட்டவுடனை பாங்கில லோன் குடுக்கிறான். இப்ப வீட்டு விலை வேறை குறைஞ்சிருக்கு. இந்த நேரத்தை விட்டால் மலிவான விலைக்கு வீடு வாங்க ஏலாது. அந்த வீடு முந்தி ஒன்ரரை மில்லியன் போட்டிருந்தது. இப்ப ஒன்று தசம் ரெண்டு மில்லியன் போட்டிருக்கிறான்." ஐயாமுத்துவின் வீட்டிற்கு அடுத்த பக்கம் இருந்த வீட்டைக் காட்டினாள்.

சிவபாலிக்கு மனது திக்திக்கென்று அடித்தது. போனமாதம் சாப்பிடப்போய் சட்டியள் வாங்கி வந்த வினையை அவர் மறக்கவில்லை. இந்த மாதம் சாப்பிட வந்து வீட்டையே வாங்கப் போறாளோ ? என்று எண்ணித் திகைத்தார்.

இதற்கு முன் ஐயாமுத்து வேறு எதையோ தொடங்குவதற்காக தொண்டையைக் கனைப்பது தெரிந்தது. இருந்தாலும் அவருக்கு ' வாய்ப்பின்றி தேவாரச் செல்வியே தொடர்ந்தாள். எப்பிடியோ பிரியாமணியை ஒரு வீடு வேண்டச் செய்துவிட வேண்டுமென அவள் கங்கணம் கட்டிவிட்டது தெரிந்தது.

"அக்கா சொல்லுறது சரிதான்.. இத்தினை வருசமா உழைச்சு என்னத்தைக் கண்டம்? மற்றமற்றச் சனங்கள் எல்லாம் புத்தியா வீடு வேண்டிக் கொண்டு போய் எத்தினையோ வரியமாச்சு... அட அதையேன்... எத்தினையோ சனம் வாங்கின வீட்டை வித்து வித்து லாபமெடுத்து மூண்டாவது நாலாவது வீடெண்டு போயிட்டுதுகள். நாளைக்கு இந்தப் பிள்ளைகளை வைச்சுக் கொண்டு.. இவருக்கு ஒண்டு வந்தால்..." பிரியாமணி லொடக்கென இரண்டு துளி கண்ணீரைக் கொட்டினாள். அது தேவாரச்செல்வியின் கைப்படத்தில் விழுந்தது.

அதைக் கூர்ந்து பார்த்த தேவாரச்செல்வி, என் மேல் விழுந்த கண்ணீர் துளியே இத்தனை நாளாய் எங்கிருந்தாய்..., என்று மனதிற்குள் பாடினாள்.

www.padippakam.com



"அழாதையுமப்பா ! அழாதையும்..." கை துடைக்கும் துண்டை பிரியாமணியிடம் எடுத்துக் கொடுத்தாள் தேவாரச்செல்வி.

"சரி.... சரி... இந்தக் கதையை விடுவம்..." ஐயாமுத்தர் கதையை திசை திருப்பினார். இவ்வளவு காசைச் செலவழித்து சோத்தைக் காய்ச்சி ... ஆக்களைக் கூப்பிட்ட வேலையை முடிக்காமல் வீடு.. வீடென்று கத்துறாளே என்று மனதிற்குள் எரிந்து கொண்டார்.

அவருக்கு பழைய பாலத்தடி கறுவலோடு ஒரு கொடுக்கல் வாங்கல் பிரச்சனை ... அவனிடம் ஐம்பதாயிரம் குறோணர் வாங்கி

வட்டியும் இல்லாமல் முதலும் இல்லாமல் சுத்திவிட்டார் அந்தப் பிரச்சனை இன்னமும் முடியவில்லை.

போனவாரம் அந்தப் பிரச்சனை சிறிது சூடு பிடித்திருந்தது.

வெள்ளிக்கிழமை விரதத்துக்காக கோயில் வந்த சனங்களுக்கு புளிச்சாதம் கிண்டிக் கொண்டிருந்தார் ஐயாமுத்து. அவர் சாதம் கிண்டும் செய்தியறிந்து அந்த இடத்திற்கே வந்துவிட்டான் கறுவல்.

"மற்றவன்ரை காசை சுத்தித் திண்டு போட்டு, ஊருக்குப் புளிச்சாதம் கிண்டுறியோ? " என்று அவன் கோயிலுக்குள் வைத்து ஐயாமுத்துவை கேட்காத கேள்வி எல்லாம் கேட்டான். ஐயாமுத்துவால் அவனை எதிர்த்து எதுவும் பேச முடியாமல் போய்விட்டது. கறுவலுக்கு பாடம் படிப்பிக்க அருள் செய்ய வேண்டுமென பிள்ளையாருக்கு மட்டும் ஒரு தேங்காய் உடைத்துக் கொண்டார்.

கறுவலோடு மோதுவதற்கு கொம்பு சீவிவிட சிவபாலிதான் சரியான நாம்பன் மாடு என்று அவருக்கு கனவில் ஓர் அசரீரி கேட்டது. இதன் பின்புதான் வேலையைத் தொடங்கினார். அதன் முதல் கட்டமாகத்தான் சிவபாலியை சாப்பாட்டுக்கு அழைத்து வந்தார். இதற்கிடையில் பிரியாமணி குறுக்கிட்டது அவருக்கு சினமூட்டியது.

சிவபாலியின் குணம் தெரிந்ததால் சிறிது நேரத்தில் பிரியாமணி அமைதியானாள்.

www.padippakam.com



அந்த அமைதியான பொழுதில் சிவபாலி சிகரட்டை மூட்டினார்... அது மெல்லப் புகைய ஆரம்பித்தது...

03

"தம்பி சிவபாலி.. உங்கடை குடும்பத்தின்ரை பேரென்ன... புகழென்ன... முள்முருக்கடி சிவன் கோயிலுக்கு உங்கடை தாத்தாவின்ரை தாத்தாதானே மணியகாரரா இருந்தவர்."

சிவபாலிக்கு மயிர்க் கூச்செறிந்தது.... இது எப்படி ஐயாமுத்துவுக்கு தெரிந்தது..?

பாழடைந்து போன முள்முருக்கடி சிவன் கோயில் அவர் கண் முன் தஞ்சைப் பெருங் கோயில்போல கிடுகிடுவென எழுந்தது...

அவருடைய தாத்தாவின் தாத்தா... அவர் யாரென்றே தெரியவில்லை... கடா மீசையோடு ஒரு உருவம் மணியகாரராக நிற்பது போல பிரமை... கனவைக் கலைத்தார்...

ஒரு கணம் ஐயாமுத்துவையே கூர்ந்து பார்த்தார். ஏதோ சில செய்திகள் உண்மைபோல அவருக்குப் பட்டது.

அப்பன், பாட்டன், பூட்டனென்று எல்லோருமே பனங்கள்ளடித்துப் போட்டு, பெண்சாதிமாரை கோடாரியால் கொத்துவதற்கு விரட்டியபடியே வாழ்க்கையைக் கழித்துதான் அவர் கண்ட குடும்ப வரலாறு. போன வருடம்தான் புத்தம் புதிதாக இந்த மணியகாரர் கூத்தாட்டக் கதை அவருக்குக் கிடைத்தது.

பக்கத்து வீட்டில் இருக்கிற அல்லைப்பிட்டிச் சிவகுரு தான் முந்தின பிறவியில் கர்நாடகாவிலை ஒரு பெரிய செட்டியாராக இருந்ததாகவும்.. தான தர்மம் செய்து வரும் போது அளவுக்கு அதிகமாக வட்டி வேண்டியதாகவும் அதனால்தான் மீண்டும் மனிதனாகப் பிறந்திருப்பதாகவும் காண்டம் வாசித்து அறிந்து கொண்டார்.

அதேபோல போன பிறவியில் முருக்கடி வாசுதேவன் அமெரிக்காவில் கோடீஸ்வரனாகவும், தில்லைக்கனகசபை உறிட்லரின்

படிப்பகம்

www.padippakam.com



படையில் தளபதியாக இருந்ததாகவும் கேள்விப்பட்டிருந்தார். இந்தியா போய் காண்டம் வாசித்துப் பார்த்து சனமெல்லாம் போன பிறவிகளை அறிந்து மகிழும் செய்தி அவ்வருக்கும் தெம்பூட்டியது.

"இந்தப் பிறவியிலைதான் கோவேறு கழுதையாய் போயிட்டன் போன பிறவியிலையாவது உருப்படியாக இருந்திருப்பேனோ" என்று எண்ணி இவரும் தமிழ்நாடு போய் காண்டம் வாசித்துப் பார்த்தார்.

அன்று அவர் கண்களையே அவரால் நம்ப முடியாமல் போய்விட்டது. போனவுடனேயே பறாளை சிங்காரி அப்பாவுக்கும், குடாரப்பு கிளி ஆய்ச்சிக்கும் இவர் பிள்ளையாகப் பிறந்ததையும், பிறந்த திகதியையும் காண்டம் வாசிப்பவன் சரியாகச் சொல்லிவிட்டான்.

முன்னொரு காலத்தில் முருக்கடி சிவன் கோயில் தஞ்சை பெரிய கோயில் போல பெரியதாக இருந்ததாகவும், அதில் இவருடைய பேரனே மணியகாரராக இருந்ததாகவும் கூறினான். அதன் பின் இவரே மணியகாரரா வந்து பல சேவைகள் செய்ததாகவும், கொடை வள்ளலாக இருந்ததாகவும் கூறியிருந்தான். அக்காலத்திலேயே ஒரு குதிரையில் வந்து ஒரு போத்துக்கேயனை இவர் சுட்டதாகவும் அதன் மூலம் கேள்விப்பட்டார்.

அதைக் கேட்கக் கேட்க சிவகுருவுக்கு தோள்கள் தினவெடுத்ன... வட்டி, வரி, கிஸ்த்தி என்று மீசை துடிதுடித்தது பழைய கதை.

அந்தப் போத்துக்கேயன்தான் மார்க் ஜென்சன் என்ற பெயரில் பிறந்திருக்கும் ஸ்கனபோ நகரத்து பால் வியாபாரியான டேனிஸ்காரன் என்றும், போன பிறவியில் போத்துக்கேயனாக இருந்த அவனைச் சுட்டதால்தான் இவர் டென்மார்க் வர நேர்ந்ததாகவும் காண்டம் வாசிக்கப்பட்டிருந்தது.

அட மூதேவியளே ஒரு காரைக் கண்டு பிடிச்சியளோ, ஒரு வானைக் கண்டு பிடிச்சியளோ, கடைசி ஒரு சின்ன மோட்டரையாவது கண்டு பிடிச்சியளோ... ஒண்டையும் கண்டு பிடிக்க இல்லை இப்ப காண்டமோ வாசிக்கிறியள் என்று அவர் மனம் இடைக்கிடை ஊளையிடும் எனினும் பிறகு அதையெல்லாம் வசதியாக மறந்துவிடுவார்.

www.padippakam.com



இதையெல்லாம் நினைத்துத்தான் அவர் காண்டத்தில் அறிந்த குலப் பெருமையை யாருக்கும் சொல்லாமலே மறைத்து வைத்திருந்தார். யாருக்கும் சொல்லாத விடயத்தை இப்போது ஐயாமுத்து சொன்னபோது அவர் ஆடாமல் ஆடிவிட்டார். ஒரு வேளை காண்டத்தில் சொன்னது உண்மைதானோ என்ற சந்தேகம் மனதில் தலைவிரித்தாடியது.

"எல்லாம் சரி முற்பிறவியிலை நான் முருக்கடி சிவன் கே-ாயில் மணியகாரரா இருந்த கதை உங்களுக்கு எப்படி..." சிவபாலி இடைமறித்தார்.

பிரியாமணி சத்தியம் வாங்கிவிட்டு ஐயாமுத்துவின் மனைவி தேவாரச்செல்விக்கு என்றோ ஒருநாள் சொன்ன கதை இது. தான் வாய்தடுமாறி உளறிவிட்டதை ஐயாமுத்து கண்டு கொண்டார்.

கவனத்தைத் திருப்ப ஒருவாறு ஜேர்மனிக்குள் கதையை நகர்த்தினார்.

"போனமாதம் ஜேர்மனி போனனான்! அப்ப சிறீலங்காவிலை இருந்து ஒரு கிழவன் வந்திருந்தது... ஆளின்ரை பேர் ஞாபகமில்லை... அவர்தான் சொன்னவர்.. உடனை சொல்ல வேணுமெண்டு நினைச்சனான்... எங்கை இந்தப் பரபரப்பிலை அயத்துப் போனன். " என்று மணியகாரராக இருந்த கதையை அடி முடி தெரியாமல் கடைந்து தப்பித்துக் கொண்டார்.

"சூடா ஒரு பிளேன் ரீ... குடியுங்கோ சாப்பிட்டதுக்கு கொஞ்சம் தெம்பா இருக்கும்." முற்பிறவிக் கதையைத் தொடங்கிய கையோடு தேவாரச்செல்வி ரீ போட்டு வந்துவிட்டாள். அதைக் குடித்துவிட்டு மறுபடியும் உசாரானார் சிவபாலி.

"உங்களுக்கு தெரியும் நான் ஊர்ச்சோலி கதைக்கிறதில்லை.. சீச்சீ ... பிறகு எனக்கேன்..." ஐயாமுத்து மூக்கை மூக்கை நீவினார். சிறிது தடுமாறினார்... ஒரு பொழுது உறுக் கென்று விக்கினார்.

"என்ன ... என்ன.. என்ன விசயம் சொல்லுங்கோ ! சொல்லுங்கோ! சிவபாலி துடித்தார்."

"வேண்டமப்பா! நீங்கள் பிறகு தாங்கமாட்டியள்..." ஓடியோடி

படிப்பகம்

சன்னல்களைச் சாத்திவிட்டு தலையைத் தலையைச் சுழற்றி நாலு பக்கமும் பார்த்துக் கொண்டார்.

"இந்த மனிசனுக்கு வாய் கிடக்காதப்பா ! வேண்டாம்.. வேண்டாம்... வீண் பிரச்சனை.." தேவர்ரச்செல்வி ஒரு குதி குதித்தாள்.

"என்ன... என்ன.. சொல்லுங்கோ..." சிவபாலி விடவில்லை.

"பிறகு என்ரை பேரை மாட்டிவிடக் கூடாது.." என்றபடி தொண்டையைக் கனைத்தார் ஐயாமுத்து.

"ம்.. சொல்லுங்கோ.. உங்களுக்குத் தெரியுந்தானே.. என்னைப்பற்றி.." சிவபாலி அவரைத் துளைத்தெடுத்தார்.

எல்லாம் தெரிந்த பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்து விட்டதைக் கண்டு கொண்டார் ஐயாமுத்து. ஒரு கோப்பை சோத்தின் மகிமையை மெச்சினார்.

"நாட்டில நீங்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் "கஸ்டப்பட்டனீங்களோ?"

"இல்லையே"

"ஆராவது உங்களுக்கு ஒரு லட்சம் காசு கட்டி வெளிநாடு அனுப்பி வைச்சவங்களோ?"

"இல்லையே..." சிவபாலிக்கு கோபம் சிரசில் முட்டியது.

"உங்களுக்கு வெளிநாடு வர காசு தந்து, உங்களைப் படிப்பிக்க வைச்சது எல்லாமே தானெண்டு கறுவல் ஒரு இடத்தில சொல்லியிருக்கிறான்."

"கறுவலோ ! பிச்சைக்கார நாய்..." சிவபாலிக்கு தேகமெல்லாம் நடுங்கியது.

"பொறுமை ! பொறுமை ! இதுக்கே இவ்வளவு கோபப்படுறீர்.... மற்றதைச் சொன்னா என்ன பாடுபடுவீர்... ? இதுக்குத்தான் ஒண்டுமே உமக்கு சொல்ல மாட்டன் எண்டனான்." நிறுத்திக் கொண்டார்.

www.padippakam.com



“சரி... சரி .. விடுங்கோ.. அந்த நகரத்தில இருந்தால் இப்பிடித்தான் பல சோலிவரும்.. பேசாமல் ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு இந்தப் பக்கமா வாருங்கோ” தேவாரச்செல்வி வீடு வேண்டும் கதைக்குள் பாய்ந்தாள்.

ஐயாமுத்துவிற்கு விசர் விசராக வந்தது...

“என்னப்பா சொல்லுறியள்... ஒண்டு தசம் மூண்டு மில்லியன்தானே.. அந்த வீட்டைப் பாப்பமே...” அருகில் விற்பனைக்குக் கிடந்த வீட்டைக் காட்டினாள் பிரியாமணி. அவளுக்குக் கறுவலின் பிரச்சனை பெரிதாகப்படவில்லை.

“என்னமோ நீயே பாத்துச் செய்...” சிவபாலி சலிப்புடன் வாக்குக் கொடுத்தார். இருந்தாலும் அவரின் மனதில் கறுவல்தான் ஆடிக் கொண்டிருந்தான்.

ஐயாமுத்து கடைக்கண்ணால் சிவபாலியையே அடிக்கொரு தடவை பார்த்துக் கொண்டார். பிறகு கதையை எடுத்து விட்டார்.

“உன்ரை மனிசி பிரியாமணி டென்மார்க் வர முந்தி உனக்கும் ஒரு டேனிஸ்காரிக்கும் தொடர்பு இருந்ததாகவும், உங்கினேக்குள்ளை ஓடியாடித் திரியிற கறுப்புத் தலைமயிர் பெடியொண்டு உன்ரை பிள்ளைதானெண்டும் கறுவல் சொன்னவன்... எனக்கு அதைக் கேக்க பத்திக் கொண்டு வந்திச்சு.. விட்டன் அவனுக்குப் பாட்டு.. பொறுக்கி...” ஐயாமுத்து முடிவுவரையும் கக்கினார்.

அதற்குப் பிறகு சிவபாலியால் அங்கே இருக்க முடியவில்லை.. புழுப்போலத் துடித்துக் கொண்டிருந்தார். “கறுவலை மட்டும் காணட்டும் கதை பேச்சுக் கிடையாது மிதிதான்..”

“சிவபாலி அதுதானே வேண்டாமெண்டுறது.. அமைதியா இருங்கோ.. முக்கியம் என்ரை பேரை இழுத்துப் போடக் கூடாது. எனக்கு முன்னாலை கறுவலை வைச்சுக் கேட்டால் நான் செத்தாலும் இப்பிடிச் சொன்னதாக ஒப்புக் கொள்ள மாட்டன்.”

இந்த சிவபாலியும் அப்பிடிப்பட்டவனில்லை... நான்

படிப்பகம்

முற்பிறவியிலை முருக்கடி சிவன் கோயில் மணியகாரன் வாறன்.. ! , மனைவியோடு சேர்ந்து காரில் ஏறினார்.

கறுவலைக் காண வேணும் கண் மண் தெரியாமல் உதைக்க வேணும் அவர் மனம் துடிதுடித்தது. காரின் புகைபோல மனமும் கரிக்கரியாய் புகை கக்கி உறுமியது.

04

விமானமொன்று விரைவாக வருகிறது.. அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டிடம் ஒன்றுக்குள் புக்கெனப் புகுந்து போகிறது...

சொற்ப நேரத்தில் இன்னொரு விமானம் வருகிறது. அடுத்த கட்டிடத்தில் மோதுகிறது.. இரண்டாவது கட்டிடமும் இடிந்து சரிகிறது..

ஒரே புகை மண்டலம், மக்கள் திசை திக்கு தெரியாமல் ஓடுகிறார்கள்.

இது திரைப்படமா நிஜமா என்பது கறுவலுக்குத் தெரியவில்லை. எதிர்பாராத தாக்குதல் ஒன்று நடந்தால் மக்கள் எப்படி அல்லோலகல்லோலப்பட்டு ஓடுவார்கள் என்று கறுவல் யோசித்தான்.

அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்களை ஒப்பு நோக்கிப் பார்த்தான். எவ்வளவு நேரம் இருந்தானோ தெரியவில்லை. ஒரு விஸ்கிப் போத்தல் முடியும்வரை தொலைக்காட்சிக்கு முன்னாலேயே இருந்திருப்பது தெரிந்தது.

வயிறு எரிந்தது.. இரவுச் சாப்பாட்டுக்காக எதாவது இருக்கிறதா என்று பார்த்தான், எதுவும் இல்லை. சீனா ரெஸ்டுரன்டுக்குப் போய் ஏதாவது சாப்பிடலாமென நினைத்தான். ஜாக்கட்டைப் போட்டுக் கொண்டே தள்ளாடியபடி வெளியே நடந்தான்.

பெற்றோல் செற் சந்தியையும் தாண்டி சிறிது தூரம் நடக்க வேண்டும். இருந்தாலும் அவனால் நடக்க முடியவில்லை.

இருளில் ஓர் உருவம் வருவதை அவனால் அவதானிக்க முடியவில்லை...

“படீர்.. !” பின்பக்கமாக் ஓடிவந்த யாரோ காதாவடியைப் பொத்தி அடித்ததால் தலை கரணமாகச் சுழன்று விழுந்தான் கறுவல். உலக வர்த்தக மையக் கட்டிடத்தில் விமானம் வந்து இடித்ததை விட பலமாக இறங்கியது அடி...

www.padippakam.com



அடுத்த கணம், அத்திவாரத்திற்கு மொங்கான் போட்டது போல ஒரு சப்பாத்துக்கால் அடி வயிற்றில் ஓங்கி பொதக்கென மிதித்து....

"ஐயோ !" என்று அலறினான்..

மூக்கிலும் வாயிலும் சப்பாத்துக் காலால் ஓங்கி அடுத்த எகிறினான் அந்த மனிதன்... இரத்தம் நாலு பக்கமும் சீறியடித்தது..

யார் அடிக்கிறான்... ஏன்..? எதற்காக அடிக்கிறான் என்பதெல்லாம் கறுவலுக்கு விளங்கவில்லை. அடித்தவன் முகமூடி போட்டிருப்பது மட்டும் அந்த மங்கிய இருட்டில் தெரிந்தது.

கறுவலால் எழுந்து நடக்க முடியவில்லை.. அந்த உருவம் அவனுடைய ஜாக்கட்டைப் பிடித்து மேலே தூக்கியது. கறுவலின் தலை தொங்கிக் கிடந்தது.. ஏற்கெனவே அடித்த விஸ்கியின் மயக்கம் வேறு.. யாரோ ஒரு நிற வெறி பிடித்த டேனிஸ்காரன்தான் வெளிநாட்டவனை இப்படி மிருகத்தனமாக தாக்குவதாக நினைத்தான்.

"டேய் கறுவல் பொறுக்கி நாயே ! ஒரு லட்சம் தந்தனீயோ...

இந்தாபிடி.." முழங்காலால் அந்த உருவம் அடிவயிற்றில் குத்தி அடிப்பிடித்த கிழங்குக் கறியை தோண்டிப் பிரட்டுவது போல கடாசியது.

"டேனிஸ்காரிக்குப் பிறகால திரியிறது நீயோ நானோ ?"மீண்டும் முழங்காலால் குத்தி வயிற்றை நசுக்கியது. அலறவும் வழியின்றி அறிவில்லாமல் கீழே விழுந்தான் கறுவல். அந்த உருவம் வேகமாக ஓடி மறைந்தது.

சொற்ப நேரத்தில் கண் விழித்தான். வீதியின் குளிர் நடுநடுங்க வைத்தது.. அவனைக் காப்பாற்ற அதுவரை யாரும் வரவில்லை.

"ஒரு லட்சம் டேனிஸ்காரி!" என்று கூறிய தமிழ் குரல் மட்டும் காதுக்குள் சுழன்று சுழன்று வந்தது... என்ன நடக்குது? ஒன்றுமே விளங்காமல் முனகினான் கறுவல். யாரோ ஆள்மாறி அடித்துவிட்டார்கள் என்றுதான் மயக்கத்தில் புரிந்து கொண்டான்.

மீண்டும் மயக்கத்தில் விழுந்தது போல கீழே கிடந்தான்.

அந்த நேரம்...

www.padippakam.com



சிவபாலி வெற்றி வீரனாக வீடு திரும்பினார். முகமூடியை கழற்றிவிட்டு ஐயாமுத்துவிற்கு போன் எடுத்தார்.

"உறலோ ! "

"அது நான்தான் கதைக்கிறன்..."

"நானெண்டு..."

"வேறை ஆர் சிவபாலிதான்..."

"ஏன் என்ன விசேசம்..."

"கறுவலுக்கு நல்ல சாத்து சாத்தியிருக்கிறன்... பெற்றோல்சற்சந்தியிலைதான் கிடக்கிறான்.. நல்லவனுக்கு நான் சிவ-பாலி தீயவனுக்கு நான் சவபாலி !" வாயால் விசுக் சத்தம் எழுப்பி விரலையும் ஒரு சுழற்று சுழற்றினார்.

"ஐயையோ ! போலீசுக்கு சொல்லப் போறானே!"

"பயப்பிடாதீர் ... முகமூடி போட்டுத்தான் அடிச்சனான்... " சிரித்தார், போனைக் கட் பண்ணிவிட்டார்.

ஐயாமுத்துவுக்கு தேகமெல்லாம் புல்லரித்தது. மந்திரம் சொல்லி பேயை ஏவிவிட்டாலும் இவ்வளவு விரைவாக செயற்படாது.. என்பதைப் புரிந்து கொண்டார். ஒரு கோப்பை சோத்தை மடையாக வைத்ததால் அந்தக் காலத்து பில்லி சூனியமெல்லாம் தோற்றுவிட்டதை அறிந்து சிரித்தார்.

படுக்கப் போனவர் தூக்கம் கலைந்தார். புதிய உற்சாகத்துடன் கறகறவென காற்சட்டையைப் போட்டுக் கொண்டு ஸ்பைடர் மான் போல பறக்காத குறையாகத் தாவிக் காரில் ஏறினார். பெற்றோல் செற் சந்திக்கு விரைந்தார்...

கறுவல் நாயே அண்டைக்கு கோயிலிலை வைச்சு என்னையோ அவமானப்படுத்தினனீ... இப்ப எப்படி இடியப்பம்... தனக்குள் பேசிச் சிரித்தார்.

சட்டென ஒரு கையால் பாக்கெட்டை தடவினார் கைத் தொலைபே-பசியை எடுத்துப் பார்த்தார். அது வேலை செய்யவில்லை என்பதால் திருப்தியடைந்தார். போன வாரம் அவரையறியாமலே

www.padippakam.com


கைத்தொலைபேசி தட்டுப்பட்டு இவரும் கந்தையாவும் கதைத்த செய்தி இன்னொருவருக்குப் போனதில் இருந்து... நிமிடத்திற்கு ஒரு தடவை கைத்தொலைபேசியை பார்ப்பது அவருடைய பழக்கமாகியிருந்தது...

பெற்றோல் செற் சந்தி நெருங்கியது....

தன்னுடைய அடுத்த அத்தியாயத்தை அரங்கேற்ற முடிவு செய்து கொண்டார் ஐயாமுத்து....

## 05

பெற்றோல் செற் சந்தி நெருங்க நெருங்க ஐயாமுத்து பரவசமானார்... காரின் முன் விளக்குகளை வீசி வீசி அடித்துப் சில-ாவினார்... இடது பக்கமாக இருக்கும் குறுகலான மாகிரத வீதியால் காரைத் திருப்பினார்...

இடையில் ஓர் அச்சம் கறுவல் மண்டையைப் போட்டிருந்தால் தானும் கம்பி எண்ண வேண்டி வந்துவிடுமே என்று யோசித்தார்... திரும்பி ஓடிவிட எண்ணி, அரை மனதுடன் காரை மடக்கெனத் திருப்பினார்...

அப்போதுதான் யாரோ ஒருவர் தவழ்ந்து தவழ்ந்து நிலத்தோடு போராடுவது தெரிந்தது.. காரை அப்படியே ஸ்ராட் செய்தபடி நிறுத்திவிட்டு ஓடிப் போனார்... மங்கலான வெளிச்சத்தில் கூர்ந்து பார்த்தார்... இரத்தக் காயங்களுடன் கறுவல் நிலத்தோடு போராடி எழுந்து நிற்க முயல்வது தெரிந்தது...

சந்தேகமே இல்லை அது கறுவலேதான்....

அவரின் உள்ளம் ஆகாயத்திற்கும் தரைக்குமாக துள்ளிக் குதித்து மகிழ்ந்தது. கண்களில் ஆனந்தப் பேரொளி... உடம்பில் இனம் பரியாத புது வீச்சு... அழித்து முடியும்வரை காத்திருந்து பின் உதவ ஓடிப்போகும் செஞ்சிலுவைச் சங்கம் போல நவீன பரோபக-ாரியாக மாறினார்.

“ஆர் ... தம்பி ... கறுவலோ ... ஐயோ என்னைப் பெத்த ராசா... நான் பெத்த செல்வம் என்னையா நடந்தது...” அழுது குளறியபடி ஓடி கறுவலைத் தூக்கினார், காரில் போட்டார். கறுவல் ஏதோ சொல்ல முயன்றான், அதையெல்லாம் கேட்காமல் விரைவாக ஆஸ்பத்திரியை

படிப்பகம்

www.padippakam.com


நோக்கிக் காரை ஓடலானார்.

இடையில் ...

கறுவல் நாயின் இரத்தம் பட்டு காரின் சீற் நாசமாகிவிடுமே என்று மனதில் சிறு பொழுது சைவப்பழமாகித் தடுமாறினார். , சீற் பழுதாய்ப் போனால் பறவாயில்லை நீ வடிவா படும் தம்பி! ஆள் பெரிசோ சீற் பெரிசோ, என்று பின் தூய தமிழ் நெஞ்சத்தராய் மாறி வாழ்த்தினார். இப்படி ஐயாமுத்தர் மனதால் ஒன்றும் செயலால் ஒன்றுமாக அழகிய பல திருவுருவங்கள் எடுத்து முடிப்பதற்குள் வைத்தியசாலை வந்துவிட்டது.

கறுவலை வைத்தியசாலையில் சேர்த்து, காயங்களுக்குக் கட்டுப் போடுவித்து, வார்டில் சேர்க்க நேரம் நடுநிசியாகிவிட்டது.

கறுவல் ஐயாமுத்துவைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான்.

“ அண்ணே ! உங்களை எவ்வளவோ பேசியிருப்பன்.. ஆனால் நீங்கள்தான் எனக்கு கடைசியிலை உதவியிருக்கிறியள்.” கண்களில் நீர் ஆறாக சொரிய, அரகரவென கைகள் மேலுயர்வது போல உயர, தில்லைச்சிதம்பரத்தில் நடராசர் தரிசனம் கண்ட மெய்யடியார் போல விக்கி விக்கி அழுதான். “என்ரை காசை நீங்கள் எப்ப வேணுமெண்டாலும் தாங்கோ..”

அதைக் கேட்க ஐயாமுத்துவுக்கு காட்அற்றாக்கே வந்துவிடும் போலிருந்தது...

அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது என்று கூறி ஐயாமுத்துவின் தகப்பன் கோனார்ச்சாமி அவருக்கு சிறு பிள்ளையாக இருக்கும் போதே வேப்பெண்ணை பருக்கி தடியால் அடித்த நாட்கள் நினைவுக்கு வந்தது. அப்போதெல்லாம் விளங்காத அடியைப் போல அண்ணன் தம்பி உதவாது என்ற பழமொழி இப்போதுதான் அவருக்கு செம்மையாக விளங்கியது. பழுத்துக் காய்ந்த இலந்தைப் பழம் போன்ற அவருடைய கண்கள் இரண்டும் நீரில் ஆடின...

“தம்பி கறுவல் அடித்தாலும்... அணைச்சாலும் நான் எப்பவும் உம்மை மதிச்சுத்தான் நடப்பன். ஏனெண்டால் ... உங்கடை குடும்பம்

www.padippakam.com



அப்படி.. உங்கடை பாட்டன்ரை பாட்டன் கந்தசாமி கோயிலுக்கு மணியகாரரா இருந்தவரெண்டு கேள்விப்பட்டனான்."

அமெரிக்க போர் விமானங்கள் பின்லாடனைத் தேடி டோராடே-பாரா மலையில் காப்பற் குண்டுகளை வீசியது போல ஒரு தட-ாலடி வீச்சு வீசினார்.கறுவலுக்கு திடீரென மயிர்க்கூச்செறிந்தது... இது அவன்

முன்னர் கேள்விப்படாத கதையாக இருந்தது. ஜேர்மனியில் இருந்து வந்த ஒரு பெயர் தெரியாத கிழவன் சொன்னதாக தனது புலுடாவை ஓரங்களின்றி நீட்டிவிட்டார் ஐயாமுத்து.

பின் மெல்ல விடயத்திற்கு வந்தார்...

தான் வந்த வழியில் சிவபாலியின் காரைக் கண்டதாகவும், அவன் மீதுதான் தனக்கு சந்தேகம் இருப்பதாகவும் சொல்லி, இந்த விடயத்தை யாருக்கும் சொல்லக்கூடாது என்றும் ஒரு டுப்பிளிக்கேற் சத்தியமும் வாங்கிக் கொண்டார்.

பின் , எதுக்கும் நான் கண்ணால் காணாத ஒன்றைச் சொல்லக் கூடாது , என்று வாய்க்குள் சடைந்து கொண்டார். சட்டென கண்களை மூடி பரவசமானார்.

மை போட்டுப் பார்ப்பவன் போல வாய்க்குள் முணுமுணுத்தபடியே தேடிக் கொண்டுபோனார். ஒவ்வொரு வீதிக-ளின் பெயர்களையும் உரத்து சொல்லியபடி சென்று சிவபாலி வீடு இருக்கும் வெஸ்ரகேதவில் வந்து நிற்பதாகச் சொன்னார். சட்டடெனக் கண்களைத் திறந்து மீண்டும்

நினைவுக்கு வந்தார். சிவபாலி மீதுதான் தனக்கு சந்தேகம் நிலவு-வதாக பாவனை காட்டிக் கொண்டார். எப்போதுமே தான் சொல்லும் சாத்திரம் அதிகமாக குறி தப்புவதில்லை என்றும் கூறினார்.

கனிந்த மரகதக் கனியாக நின்ற அவரை கறுவல் பயபக்தியுடன் பார்த்தான்.

ஐந்தாம் வகுப்பில் நாலு வருடங்கள் பெயில் விட்டிருந்து, பின் வாத்தியாருக்கு அடித்துவிட்டு பாடசாலையை விட்டு ஓடிய ஐயாமுத்து வெளிநாடு வந்து சாத்திரியானது கறுவலுக்கு அந்த

படிப்பகம்

நேரத்தில் புதுமையாகத் தெரியவில்லை. அவனுடைய எண்ணங்கள் எல்லாம் முகமூடி போட்டு அடித்த சிவபாலியைச் சுற்றியே ஓடியது...

"கறுவல் பொறுக்கி நாயே! " என்ற குரல் அவனுடைய மனதில் கோடு விழுந்த ரெக்கோட் போல மீண்டும் மீண்டும் ஓடியது. அது சிவபாலியுடைய குரல் போலவே தென்பட்டது.

ஒரு இலட்சம் குறோணர்.. டேனிஸ்காரி என்பதெல்லாம் ஏன் சிவபாலியின் வாயிலிருந்து வர வேண்டும் என்பதுதான் பெரும் குழப்பமாக இருந்தது. மனவலியும், உடல் வலியும் சேர கறுவல் அப்படியே உறங்கிப் போய்விட்டான்.

அதுவரை காத்திருந்த ஐயாமுத்து அதிகாலை இரண்டு மணிக்கு வைத்தியசாலையை விட்டு வெளியேறினார். புளியமரத்து எறிமாடனுக்கு எதிராக பெல்லிப் பேயை ஏவிவிட்ட திருப்தி மனிதில் நிறைந்திருந்தது.

வீடு வந்தவர் மகாவிஸ்ணு பாற்கடலில் பள்ளி கொண்டது போல அப்படியே படுக்கையில் சயனித்திருந்தார், கறுவலுக்கு உருக்கன் சோறு கொடுத்து இன்னொரு சுற்று உசுப்பிவிட வேண்டுமெனவும் எண்ணியபடியே சொற்ப நேரத்தில் உறங்கிவிட்டார். அடுத்து வரப்போகும் வேடிக்கைகளை அறியாமலே சொற்ப நேரத்தில் கொறட்டை விட ஆரம்பித்தார்.

## 06

## பிரியாமணியின் வீடுகாண் படலம்.

பிரியாமணி பல வீடுகளை ஏறி, இறங்கிப் பார்த்து மேலும் ஒரு வீட்டைப் பார்த்தால் நூறாவது வீட்டை தொட்டுவிடும் நிலைக்கு வந்துவிட்டாள். பார்த்ததில் எந்த வீடுமே அவள் மனதுள் நாடியதுபே-ால இருக்கவில்லை. பாம்புப் படத்தில் ஏறிப்போய் 99 வது பெட்டிக்குள் வர அதற்குள் வாயை நீட்டிக் கொண்டிருந்த அர்ச்சுணன் பாம்பு கடித்து மறுபடியும் பூஜ்ஜியத்துக்கே வருவது போல, ஐயாமுத்துவின் வீட்டிற்கு அருகில் உள்ள 1.3 மில்லியன் பெறுமதியான வீட்டின் முன்னாலேயே வந்து நின்றாள்.

எதிர்ப்புறமாக ஐயாமுத்து, தேவாரச்செல்வி குடும்பம் இருப்பது சிறிது ஆறுதலாக இருக்குமென நினைத்தாள். வீடு வாங்க கடன் எடுப்பது எப்படி, மாதாந்த கொடுப்பனவை எப்படி குறைத்துக் கட்டுவது போன்ற விடயங்களை அறிய விரும்பி அந்த வீட்டை

www.padippakam.com



விற்பனைக்குப் போட்டிருந்த நிறுவனத்திற்குப் போனாள். வீடு வாங்குவதில் உள்ள சூட்சுமங்களை எல்லாம் அங்கிருக்கும் டேனிஸ்காரன் ஒருவன் வண்ணமாக விளங்கப்படுத்தினான். அந்த வீட்டை அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு பக்கத்து வீடுபோல புழுகிக் கொண்டான்.

இது போதும், இது போதும் அக்கணமே வீட்டை வாங்கிவிடுவதென முடிவெடுத்தாள் பிரியாமணி. அருகில் இருந்த சிவபாலியின் கருத்துக்காக அவள் காத்திருக்கவில்லை.

“கோப்பி, ரீ... என்ன வேண்டும் சீமாட்டி?” ஆதரவாகக் கேட்டான் டேனிஸ்காரன்.

“டேனிஸ் கோப்பிதான் எங்களுக்கு விருப்பம்...” பிரியாமணி கொழுக்கென சிரித்த சிரிப்பால் அவளுடைய முன்வாயில் இருந்த கட்டுப்பல் வேரோடு ஓர் ஆட்டம் ஆடியது, சமாளித்துக் கொண்டாள்.

“சிரித்த முகம், கீழ்ப்படிவு... தமிழாக்களெண்டால் எங்களுக்கு வலு விருப்பம்.” ஆனால் துருக்கியாக்கள் அப்படியில்லை, இந்த நாட்டில கனகாலம் இருந்தும் அவர்கள் சரியாக டேனிஸ் கதைப்பதில்லை.., டேனிஸ்காரன் தமிழரின் மேன்மையைப் புகழ்ந்து கொண்டான்.

துருக்கியரை நம் முன்னால் கேவலப்படுத்தும் அவன் ஒரு நாள் நம்மையும் மற்றவரிடம் கேவலமாகத்தான் பேசுவான் என்பதை அறியாத பிரியாமணி சிறிது உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டாள்.

கடன் பத்திரங்களின் பிரதிகள் பற்பல வண்ணங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பெரியபுராணக் கதையில் ஆலாலசுந்தரரை சந்ததி சந்தியாக கொத்தடிமையாக்கிய ஓலை போல பரம்பரை அடிமைச் சீட்டாக அது கிடந்தது. ஏற்கெனவே இலங்கை

அரசியல்வாதிகளின் அறியாமையால் பல தலைமுறைக்கு கடனாளியாக்கப்பட்ட மக்களில் ஒருவனாக இருந்து, இங்கு தப்பிவந்து பெரு மூச்சு விட்ட சிவபாலி, மறுபடியும் கடனாளியாவதை உணர்ந்தார். மனித வாழ்வை மீள முடியாத கடன் சுமைக்குள் இறக்கிச் செல்கிறான் அவன் என்பதை அவரால் மெல்லியதாக உணர முடிந்தது.

www.padippakam.com


சொந்தப் பணத்தில் ஒரு இலட்சம் முற்பணமாகக் கட்டி, மிகுதிப் பணத்திற்கு வீட்டைப் பொறுப்பாக எழுதி... மாதாந்த கட்டுப்பணத்தை சிறிது குறைப்பதற்காக கடன் பருவத்தை மேலும் சில வருடங்கள் நீட்டிப்பு செய்து உதவுவது போல பாவனை காட்டினான் டேனிஸ்காரன்.

பிரியாமணி முன்னரே எடுத்து வைத்திருந்த ஒரு இலட்சத்திற்கான காசோலையை கையொப்பமிட்டு அவனிடம் கொடுத்தாள். சிவபாலி அவளுடைய துணிச்சலை மனதிற்குள் பாராட்டிக் கொண்டார். இருப்பினும் தான் மாடாக முறிந்து உழைத்த பணத்தை அவள் நுனி விரலால் வீசி எறிகிறாள் என்பதை வழமைபோல அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. சிவபாலி மனம்மாறி எல்லாவற்றையும் குழப்பியடிக்க முன்னர் அவள் விரைவாகக் கையொப்பமிட்டாள்.

அதே படிவத்தில் மூன்று தடவைகள் கையொப்பம் வாங்கி, தானும் கறார் கறாரென சிலந்திப் பூச்சிபோல ஒரு கையொப்பத்தைப் போட்டான். தடாலென ஓர் இறப்பர் ஸ்டாம்பை எடுத்து குத்தினான் அந்த டேனிஸ்காரன், அத்தோடு எல்லாமே முடிந்தது..

நீங்கள் பெரிய அதிர்'டசாலிகள் 16 வருடங்கள் 3 மாதங்களில் உங்களுடைய கடன் முடியும். அந்த வீடு உங்களுக்கே சொந்தமாகும். சிரித்தபடியே வீட்டுக்கான அத்தனை படிவங்களையும் அவர்களிடம் நீட்டினான்.பிரியாமணி எல்லாவற்றையும் எடுத்தாள், ஊரில் உள்ள கறையான் கட்டிய காணிக்கந்தோரிலிருந்து பழைய வீட்டு உறுதியை மடித்து வந்தது போல இதையும் குத்தென இரண்டாக மடித்து பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

“இந்தாருங்கோ துறப்பு வாருங்கோ அந்த அருமையான அதிஸ்டமான வீட்டுக்கு போவோம்.” அழைத்தான் டேனிஸ்காரன்.

பிரியாமணிக்கு மீண்டும் தேகம் புல்லரித்தது. ஊரில் அவளுடைய மாமி செல்லமுத்துக் கிழவி சாகக் கிடந்தபோது, அவளிடம் அலுமாரித் திறப்பைக் கொடுத்ததும், விளக்கேற்ற வந்த மகாலெட்சுமி என்று வாழ்த்தி சாவிக் கொத்தைக் கொடுத்ததும் இந்தச் சாவிக் கொத்தை வாங்கியபோதும் நினைவுக்கு வந்தது.

நினைவுகள் அவ்வளவோடு நிற்கவில்லை...

www.padippakam.com



பிறகு அடுத்த வாரமே உயிர் பிழைத்த மாமியார்க் கிழவி "போடி மூதேவி வெளியால.. " என்று இவளை நோக்கி விளக்குமாற்றை எடுக்க, இவள் தும்புத்தடியை எடுக்க மாமியும் மருமகளும் மோதி கிழவியின் மண்டை பிளந்த நிகழ்வும் அந்த நேரம் பார்த்து அபசகுனமாக வந்து போனது.

இப்படி ஏதேதோ நினைவுகளால் உலாஞ்சி விழப்போன பிரியாமணியை கையைப் பிடித்து, கொம்பனியின் றொயோற்றா வேனில் ஏற்றினான் அந்த டேனிஸ்காரன். சிவபாலி முன்புறமாக அமர்ந்து கொண்டார்.

றொயோற்றா வேனில் இருந்தபடியே மரங்கள் ஓடுவதைப் பார்த்துக் கொண்டார். நினைவுகளும் மரங்களைப் போல பின்நோக்கி ஓடின...

பிரியாமணியைக் கல்யாணம் கட்டிய இரண்டாவது நாளே அவருடைய மனதில் மெல்லிய அச்சம் படர ஆரம்பித்திருந்தது. அந்த மந்தாரம் இப்போதும் அவருடைய மனதில் கவிந்திருப்பது பிரியாமணிக்கு தெரியாது. கலியாணம் கட்டியதும் உலகம் தெரியாத இந்த முட்டாளை கட்டியடிச்சுப் போட்டாங்களே என்று யாருக்கும் தெரியாமல் கிணற்றடியில் குந்தியிருந்து அழுதார். அதை மற்றவர்கள் பார்த்து விசாரித்தபோது பிரியாமணியைக் கட்டியதால்

வந்த ஆனந்தக் கண்ணீர் என்று மழுப்பிக் கொண்டார்.அதனால் அவருக்கு ஊரில் ஆனந்தக் கண்ணீர் என்றுமொரு பட்டமிருந்தது.

யாராவது ஆனந்தக் கண்ணீர் வடித்தால் அவருக்கு தேகம் புல்லரித்து கண்ணீர் கசியும். இப்படி அடிக்கடி ஆனந்தக் கண்ணீர் வடித்துவந்த அவருக்கு பின்னர் அந்த வாழ்க்கையே பழக்கப்பட்டு விட்டது. இன்ஜினீயர் படிப்பு படித்த அவருக்கு ஐந்தாம் வகுப்பு

படித்த பிரியாமணி போடும் கட்டளைகளே வேத வாக்காக மாறியதும், அவளுடைய ஆணையை அன்னையின் ஆணைபோல சிரமேற் கொண்டு உடன் பிறப்பு மனோகரனை கொடுவாள் கத்தியால் வெட்டி விரட்டியதும், தாய்கு உதைத்து சபதம் முடித்ததும் பிறகு

படிப்பகம்

www.padippakam.com



நடந்த கதைகள்.

இப்படியே...

அவளுடைய கண்ணீரைத் துடைக்க எத்தனையோ பேருடன் மோதினார். இதனால் அவரைக் கண்டாலே மற்றவர்கள் ஓட்டமெடுக்கும் நிலை வந்ததும், அவர் தனிமைப்பட்டதும் அவர் வாழ்வின் அடுத்த அத்தியாயங்கள்.

இப்போது பிரியாமணியின் சொல் கேட்டு வீடு வாங்கப் புறப்பட்டபோதும் அவருக்கு திருமணம் முடித்த இரண்டாம் நாள் வந்த அச்சமே வந்தது. வெளியே பார்த்தார், வாகனங்கள் சாரி சாரியாக ஓடிக் கொண்டிருந்தன. வாழ்வும் வரலாறும் இதுதான் என்று எண்ணிக் கொண்டார்.

வாகனம் வீட்டு வாசலில் வந்து நின்றது. "கவனம் கவனம் வலது காலை எடுத்து வைச்சு..." பிரியாமணி வலது காலை எடுத்து வைத்தாள். மூவரும் உள்ளே சென்றனர்.

மூன்று அறைகள், ஒரு குசினி, விட்டாத்தியான மண்டபம், ஸ்டோர் ரூம், கார்விட கராஜ், பின்புறம் தோட்டம், சலவை இயந்திர அறை, பெரிய குளியலறை எல்லாமே பிரியாமணிக்கு திருப்தியாக இருந்தது.

"எப்படி வீடு பிடித்திருக்கா..." இது டேனிஸ்காரன்.

" இதோடை எட்டாவது தடவை இதே வீட்டைப் பார்க்கிறன்... ரெம்ப பிடிச்சிருக்கு... " பிரியாமணி சிரித்தாள். மூவரும் வீட்டை ஒரு சுற்று சுற்றினர்.

"ம் போகலாமே " சிவபாலி கேட்டார். டேனிஸ்காரன் அதைப் புரிந்து கொண்டான்.

"குட்லக் ! " அவன் வாழ்த்திவிட்டு மறுபடியும் அவர்களுடன் வேனில் ஏறினான்.

"மூண்டும்... மூண்டும் ஆறு..." பிரியாமணி மனதிற்குள் எதையோ கூட்டினாள்.

வாடகை வட்டி எல்லாவற்றையும் அவள் பக்காவாக கணக்குப் பார்க்கிறாள் என்று எண்ணி மனதிற்குள் நிறைவு கண்டார் சிவபாலி. இருந்தாலும் ஒரு பேச்சுக்காக அவளை சோதித்துப் பார்த்தார்.

www.padippakam.com



"என்னம்மா... ஏதோ... மனதுக்குள்ள கணக்குப் போடுறீர்..."

"இல்லையப்பா இண்டைய திகதியையும், ஆண்டையும் கூட்டினனான். மொத்தம் ஏழாம் நம்பர் வருது. நம்பர் சாத்திரப்படி எனக்கு எப்பவும் ஏழாம் நம்பர்தான் பொருந்தி வாறது. லக்கிசெவிண்."

அவள் மேலும் தொடர்ந்தாள், நான் பிறந்த கூட்டுத்தொகை, பிறகு சாமத்தியப்பட்டது, கலியாணம் கட்டினது, டென்மார்க் வந்தது, இப்ப வீடு வேண்டினது எல்லாமே ஏழாம் நம்பர்தானே. அது மட்டுமே கூட்டுத் தொகைக்கு ஏற்றபடி பெயரில் எழுத்துக்களை மாத்தினது, பிறகு அதற்கேற்ற கல்லில் மோதிரம் போட்டது... , எல்லாவற்றையும் விலாவாரியாக எடுத்துச் சொன்னாள்.

வரவு, செலவு, வாடகை, வட்டி, பதினாறு வருடக் கடன் எல்லாவற்றையும் லக்கி செவிணே முடித்து வைக்கும் என்ற உறுதி அவள் முகத்தில் மின்னியது.

சீனா கலண்டரின்படி மூண்டாம் திகதி, அதே நாள் இங்கிலீசுக் கலண்டரின்படி ஏழாம் திகதி, இஸ்லாம் கலண்டரின்படி பத்தாம் திகதி இதில எந்த நம்பருக்கையா அதிர்ஸ்டம் வேலை செய்யுது... நம்பர் சாத்திரம் பார்க்கிற எங்கடை சனத்துக்கு மண்டையிலை என்ன கிடக்கு என்று கம்யூனிஸ்ட் குணலிங்கம் வாத்தியார் மேடையில பேசினதும் அவருக்கு அந்த நேரம் நினைவுக்கு வந்தது.

பிறகு கம்யூனிஸ்ட் குணலிங்கம் வாத்தியாரே மொட்டையடிச்சு தூக்குக் காவடியிலை தொங்கினதும், கந்தப்புராண கதாப்பிரசங்கம் செய்து முருகப்பழமென்ற பட்டம் பெற்றதும் கூட அவருக்கு நினைவுக்கு வந்தது.

தன்னை அறியாமல் வாயைப் பொத்திக் கொண்டார்.

இவைகளை எல்லாம் எதிர்த்துப் பேசி வீணாக அகால மரண-மடையாமல் இருப்பதே நலமென எண்ணியவராக நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கூறி சிரித்துக் கொண்டார்.

இப்போது அவருக்கும் இலக்கம் ஏழு லக்கி செவிண் போலவே தெரிந்தது.

www.padippakam.com



கீழே இறங்கி டேனிஸ்காரனிடம் விடைபெற்றார்.

பிரியாமணியையும் அழைத்துக் கொண்டு நேரே ஐயாமுத்து வீட்டுக்கு விரைந்தார்.

அடுத்து வரப்போகும் கூத்தை அறியாமல் அவர்களுடைய கார் விரைந்தது.

## 07

ஐயாமுத்தர் வீட்டை நெருங்கினார்கள் சிவபாலியும், பிரியாமணியும்.

"உறலோ ..!" யாரோ ஒரு டேனிஸ் குரல் கேட்டதும் திரும்பிப் பார்த்தார் சிவபாலி.

குள்ளமாக நீல நிற விழிகளோடு ஒரு மிதிவண்டியை உருட்டியபடியே டேனிஸ்காரன் ஒருவன் அருகே வந்து கொண்டிருந்தான்.

"நீங்கள்..."

"என்னுடைய பெயர் கன்ஸ்கொல்பியா.. நீங்கள்தானா இந்த வீட்டை வாங்கியது?"

"யா.." சிரிப்போடு தலையசைத்தார் சிவபாலி.

"இந்த வீட்டில அறுபது வருடங்களுக்கு மேலாக இருந்தவன் நான்தான். என்னுடைய மனைவி போன வருடம் இறந்துவிட்டாள். என்னால் இந்த வீட்டைப் பராமரிக்க முடியவில்லை, அதுதான் விற்றுவிட்டேன், என்றான் கிழவன்.

"ஓ .. அப்படியா ... சந்தோசம் எப்படி இந்த வீடு ? " சிவபாலி கேட்டார்.

"வாங்கின வீடெல்லாம் நல்ல வீடுதான். பின் பக்கம் சுடலை இருப்பதால் எப்பவுமே அமைதி நில்வும். தூரத்தில் ஓர்

www.padippakam.com



அழகான ஏரி ... ஓ எவ்வளவு அழகு.. நீங்கள் சைலோனா?"

"ஓம்..! ஓம்..! நான் சிலோன்தான்.. "

"நான் இரண்டாம் உலக யுத்த காலத்தில் கப்பலில் வேலை செய்திருக்கிறேன். கொழும்புத் துறைமுகத்திற்கு பல தடவைகள் வந்திருக்கிறேன். சாய்... மற்றத் துறைமுகங்களோடு ஒப்பிட்டால் கொழும்புத் துறைமுகம் எவ்வளவு அழகானது... அது மட்டுமா மி-கவும் துப்பரவானதும் கூட.. ,

சிவபாலி சிரித்துக் கொண்டார். என்ஜினீயர் படிப்பைக் குழப்பிய பிறகு..வெளிநாடு போவதற்காக இரண்டொரு தடவைகள் கொழும்பு வந்திருக்கிறார். ஒரு வாடகை லொட்ஜில் தங்கி மூட்டைப் பூச்சிகள் கடிக்க, நரகலோகம் போன்ற மலசல கூடங்களின் நாற்றத்திற்குள் மூக்கைப் பொத்தியபடியே வாழ்ந்த அனுபவங்கள்தான் அவருக்குத் தெரிந்த கொழும்பு. இப்போது கொழும்பு அழகானது என்று ஒரு டேனிஸ்காரர் சொன்னது அவருக்கு சற்று வித்தியாசமாக இருந்தது. மேலும் அவர் துறைமுகத்திற்குள் கால் பதித்ததே கிடையாது, பொருளின்றிச் சிரித்துக் கொண்டார்.

சிவபாலியின் சிரிப்பு கொழும்புத் துறைமுகம் பற்றிய அறி வின் வெள்ளெழுத்தைக் காட்டியதால் கிழவன் கதையை வேறு ஓர் இடத்திற்கு மாற்றிப் போட்டான்.

"இந்த வீட்டிற்குள் நாங்கள் குடி வந்தபோது இந்த இடத்தில் ஒரேயொரு வீடுதான் இருந்தது. அதோ அந்தப்பக்கம் இருக்கிற பள்ளிக் கூடத்திலும், இந்தப்பக்கம் இருக்கும் ஆஸ்ப்பத்திரியிலும் ஜேர்மனியின் நாஜிப்படைகள் இருந்தார்கள்.

சிவபாலி கிழவனிடம் இருந்து தப்புவதற்கான தருணத்தைப் பார்த்துக் கொண்டே ஏதோ ஒப்புக்கு ஆமாம் போட்டுக் கொண்டிருந்தார்.

"ஜேர்மன் படைகள் எங்களோடு நல்லாத்தான் பழகினவர்கள். ஆனால் ஹிட்லர் நல்லவனில்லை. அவனுடைய வானொலிப் பேச்சுக்களை கேட்டவுடனேயே என்னுடைய தந்தை சொன்னார்

படிப்பகம்

இவனால் உலகம் அழியப் போகிறது என்று. அவர் சொன்னபடியே நடந்தது. , கிழவன் தீர்க்க தரிசிபோல ஒற்றை விரலை நீட்டியபடி அவர் முகத்தைப் பார்த்தான்.

சர் புர்ரென்று வரும் ஊறிட்லரின் மேடைப்பேச்சுக்களை சிவ-பாலியும் டென்மார்க் வந்த பிறகு சில தடைவகள் தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறார். அதனால் அவருக்கும் ஏதோ தெரியவரவே, தலையசைத்துக் கொண்டார். பின் , இந்த இடத்தில் கட்டப்பட்ட முதலாவது வீட்டை வாங்கும் சிறப்பு எங்களுக்குக் கிடைத்திருக்கு அப்படித்தானே?, சிவபாலி கதையை மாற்றி வீட்டைப் பற்றிய தகவல்களைப் பேச முயன்றார்.

“உண்மைதான் அந்தப் பெருமை உங்களையே சாரும். வீட்டை மட்டும் பாக்காதேயுங்கோ இதோ இந்தக் காகங்களையும் தொடர்ந்து கவனியுங்கோ.. உங்களுக்கு சில செய்திகள் தெரிய வரும், என்றான்.

திரும்பிப் பார்த்தார் சிவபாலி.. வீட்டைச் சுற்றி நிறையக் காகங்கள் நின்றன. பளபளப்பான கருமை குன்றி, வெளிறலாகி புலுண்டி வீரியம் குன்றிப்போன காகங்கள் அவை.

“இவைகள் எல்லாம் சுத்தமான டேனிஸ் காகங்கள். ஐம்பது வருடங்களாக சொந்தத்திற்குள்ளேயே கல்யாணம் செய்து, திறமை குன்றி பொடுகுகளாக வந்துவிட்டன. டேனிஸ் நாய்களைப் பாருங்கோ அதுகளும் இப்படித்தான்.”

கிழவன் என்ன சொல்ல வருகிறான் என்பது சிவபாலிக்கும், அருகில் நின்ற பிரியாமணிக்கும் புரியவில்லை. இருவரும் சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல நின்றார்கள்.

“நான் சொல்லுறது உங்களுக்கு விளங்க இல்லையோ? எதிர் காலத்திலே டென்மார்க்கில டேனிஸ் இனம் இருக்காது. ஒரு புதிய கலப்பினம்தான் இருக்கும். அப்ப நான் உயிரோட இருக்கமாட்டன்”.

இப்போது சிவபாலிக்கு அவர் சொல்ல வருவது ஓரளவு புரிந்தது.

www.padippakam.com



இந்தக் காகங்கள் போல டேனிஸ் சமுதாயமோ தமிழ் சமுதாயமோ வரக்கூடாது. எங்களுக்கு நீல வழிகள், உங்களுக்கு கறுத்த விழிகள். நீலமும் கறுப்பும் சேர்ந்து புதிய விழிகள் வரவேணும். அப்பதான் புதிய ஆற்றலுள்ள சமுதாயம் வரும்.

வீடு வாங்கி இந்த நாட்டிலேயே கரைந்து போய்விடும் மக்களாக தம்மை கிழவன் எண்ணிவிட்டதை இப்போது இருவரும் புரிந்து கொண்டனர். அப்பொழுதுதான் இலங்கையில் நடைபெறும் பிரச்சனைகள் பற்றி சிவபாலிக்கு நினைவு வந்தது. எதிர்காலம் பற்றிய கிழவனின் கணிப்பு சரியா, தமிழரின் கணிப்பு சரியா என்பதற்கு விடை தெரியாமல் சிறு பொழுது தடுமாறினார்.

"எங்களுக்கு நேரமாச்சு நாங்கள் இனி விடை பெறுகிறோம்"என்றாள் பிரியாமணி. சீமாட்டி சரியான நேரம் கோட-ாலியைப் போட்டாளென மனதில் மகிழ்ந்தார்.

"சந்தோசமாகப் போயிட்டு வாருங்கோ...! புது வீட்டுக்கு மறு-படியும் என்னுடைய வாழ்த்துக்கள்., இருவர் கைகளையும் பிடித்துக் குலுக்கினான் கிழவன்.

மிதிவண்டியில் ஏறப் போன கிழவன் சட்டெனத் திரும்பி, "அது சரி புய்க்க றலிமங் படிச்சனீங்களோ?" என்று கேட்டான். கிழவ-னின் வாய்க்குள் ஒரு நமட்டுச் சிரிப்பு நாட்டரிசிச் சோறு போல குழைந்து கிடந்தது.

"புய்க்க றலிமங்கோ?" அப்படியென்றால்...., சிவபாலி கலவரத்துடன் தலையைச் சொறிந்தார். வாசிப்பு என்றாலே அவருக்கு சிம்ம சொப்பனம்..

"மஞ்சள் நிறத்தில இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வெளிவருகிற புத்தகம்தான் அது. இந்த வருடம் ஒரு கட்டிடத்தை வைத்திருக்கிறதென்றால் அந்தக் கட்டிடத்துக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லும், வீடுகளுக்கான சட்டப்புத்தகம்தான் அது".

சிவபாலிக்கு தலை சுற்றுவது போல இருந்தது. வீட்டை

படிப்பகம்

வேண்டிய பிறகுதான் இதுபற்றிக் கேள்விப்படுகிறார். இங்கு வீடு வேண்ட ஓடிய போது வீடு வாங்கிய அனுபவமுள்ள ஒரு தமிழரும் இதுபற்றி சொல்லவில்லையே... வீட்டை விற்ற டேனிஸ்காரனும் சொல்லவில்லையே என்று யோசித்தார். மேலும் கிழவன் சும்மா சொல்லமாட்டான், அதற்குள் ஏதோ முடிச்சு இருப்பது போலவே தெரிந்தது. ஒருவேளை அதற்காகத்தான் கிழவன் வீட்டை விற்றானோ என்றும் அவருக்கு புதிய சந்தேகம் பிறந்தது.

“இனிய தமிழ் நண்பனே! அந்தப் புத்தகத்தைப் படித்து எல்லாவற்றையும் விளங்காமல் வீடு வேண்டக் கூடாது. வரப்போகும் பத்தாண்டுகளில் ஒரு வீட்டுக்கு என்னென்ன செலவுகள் வரும் என்ற விபரத்தை அதில் இருந்து அறியலாம்.. ஒரு வீட்டின் பெறுமதியையும் எதிர் காலத்தையும் கணிப்பிடும் அளவு கோல்தான் அது”என்றான்.

அருகே வந்த கிழவன் சிவபாலியின் முள்ளெலும்பையும், நாரிப்பூட்டுக்களையும் நடுங்கும் கரங்களால் நீவிப் பார்த்தான். சிறு பொழுது சிந்தித்தான், உன்னுடைய முள்ளெலும்பும், நாரியும் தேய்வு படாமல் நன்றாகத்தான் இருக்கின்றன. உன்னுடைய முள்ளெலும்பையும், நாரியையும், தோள் மூட்டுக்களில் உள்ள தேய்ந்து போகாத ஜவ்வுகளையும் டென்மார்க் அன்போடு வரவேற்கிறது. , என்றபடியே கிழவன் அலாதியாக மிதிவண்டியில் ஏறினான்.

சாகும்வரை உழைத்து இந்த வீட்டுக்கே கொட்டி மண்ணோடு மண்ணாகும் ஒரு வெளிநாட்டு முட்டாளைப் பார்ப்பது போல ஓரக்கண்ணால் ஒளி வீசி மறைந்தான்.

“விசர்க் கிழவன், அபசகுனம் பிடிச்ச மாதிரி, திட்டியபடியே. சிவபாலியும் பிரியாமணியும் ஐயாமுத்தர் வீட்டை நோக்கி நடந்தனர்.

## 08

ஈராக்கிற்குள் அமெரிக்கப் படைகள் புகுந்து தலைநகரைக் கைப்பற்றிக் கொண்டிருந்ததை தொலைக்காட்சியில் காட்டிக் கொண்டிருந்தார்கள். எங்கும் மோதலும், கரும் புகையும், ஊரி கலந்த மண்ணுமாக பழைய பாபிலோனியா மறுபடியும் சிதைந்து கொண்டிருந்தது.

இவன் ஏன் ஈராக்கிற்குள் போனான், இவனுக்கும் அவனுக்கும்

www.padippakam.com



என்ன பகை? இவங்கள் ஏன் சண்டை போட வேணும், என்று எதுவுமே தெரியாதவளாய் தேவாரச்செல்வி பயத்தங்காயை முறித்து வைத்துவிட்டு, வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தாள்.

செய்தி முடிய பாதாளம் வீடு தொடர் நாடகம் ஆரம்பித்துவிடும். அதில் வரும் கதாநாயகியை சிறையில் போடுகிறான் போலீஸ்காரன். அதற்கு பதிலாக வில்லியாக நடிக்கும் சீமாட்டி கணவனுக்குத் தெரியாமல் போலீஸ்காரனுடன் படுக்கையறைக்குப் போக வேண்டும். அவள் போவாளா இல்லையா என்பதை வைத்தே பத்து வாரங்கள் கதையை ஓட்டிவிட்டார்கள். இன்றாவது அந்தக் கேள்விக்கு விடை கிடைத்துவிட வேண்டுமென்று காத்திருந்தாள் தேவாரச்செல்வி.

எங்களப்போல தொலைக்காட்சி நடத்த வெள்ளைக்காரங்களுக்கு தெரியாதென்று மனதிற்குள் மார்தட்டிக் கொண்டாள். பல்லவி தொடரை மட்டும் வெள்ளைக்காரங்கள் பாத்தாங்களெண்டால் எங்கடை பெருமை விளங்குமென எண்ணி வருத்தப்பட்டாள். அவளால் ஈராக் அமெரிக்கப் போருக்குள் பிரவேசிக்கவே முடியவில்லை. சடக்கென அலைவரிசையை மாற்றினாள்.

குங்குமம் ஒரு சங்கமம்... சின்னத்திரையின் டைட்டில் பாடல் ஆரம்பித்தது...

“என்னடியம்மா இண்டைக்கு என்ன சமையல்? அட சின்ன வெங்காயம்... எங்கை வேண்டினாய்?” ஐயாமுத்து மத்தியானச் சாப்பாட்டிற்கு வந்துவிட்டது தெரிந்தது.

“உங்களுக்கு சோறு கறி முடிஞ்சுது...போய்ச் சாப்பிடுங்கோ.

டைட்டில் பாடல் முடிவதற்க்குள் அவர் பெற வேண்டிய தகவலைப் பெற்றுக் கொண்டார்.

சோற்றுக்காக அவளை நோக்கி குனிந்தவர் நிமிர மறந்து கூனியபடியே குசினிக்குள் ஓடினார். ஊரில் சல்லி வண்டில்காரன் வீட்டு வாசலில் குவியலாக சல்லியைக் கொட்டியது போல கோப்பையில் சோற்றை கோபுரமாகக் குவித்து, பிள்ளையாரின்

படிப்பகம்

www.padippakam.com



தலையில் பஞ்சாமிர்தத்தை ஊற்றியது போல உருளைக் கிழங்கு குழம்பை ஊற்றிவிட்டு, சாப்பாட்டுக் கோப்பையுடன் மண்டபத்திற்குள் வேகமாக வந்தார்.

நகரசபைகள், போலீஸ் கட்டிடங்கள், வைத்தியசாலைகளை கண்டாலே போதும் நாரியைப் பிடித்தபடி நொண்டி நொண்டிப் போ-கும் ஐயாமுத்து வீட்டிற்குள் மட்டும் ஆயிரம் யானைகளை அடித்து வீழ்த்திய அபூர்வ சிந்தாமணிபோல நடந்து வந்ததைக் கண்ட தே-வாரச் செல்வி, களுக், கென்று சிரித்துவிட்டாள்.

ஐயாமுத்தரோடு ஒன்றாகப் படித்த ஆறுபேர் அந்த நகரத்தில் இருந்தார்கள். நாற்பத்தைந்து வயதைத் தொட்டுவிட்ட அவர்கள் ஆறு பேருக்குள்ளும் யார் முதலில் பென்சன் எடுப்பதென போட்டி ஆரம்பித்திருந்தது. ஐயாமுத்துதான் முதலில் பென்சன் எடுத்து சாதனை படைப்பார் என்று அங்கு பேசிக் கொண்டார்கள். பென்சன் வழங்கும் நகரசபைக்கு முன்னால் அவர் நொண்டி நொண்டி நடப்பதைப் போல மற்றவர்களால் நடப்பது கடினம் என்று பலர் பேசிக் கொண்டார்கள்.

டென்மார்க் வந்த புதிதில் பஸ்காட் எடுக்க போட்டி போட்டு, பிறகு கார் வாங்கப் போட்டி போட்டு, பின் வீடு வாங்கப் போட்டி போட்டு, அவர் அந்தச் சமயம் மாறினால் இவர் இந்தச் சமயம் மாறி பதிலடி கொடுத்து, பின் சமயம் மாறும் ஆட்களை தடுக்க முருகன் கோயில் கட்டி, பிறகு கோயில் கொமிற்றிக் கூட்டச் சண்டையில் மண்டையைப் பிளந்து .. இப்படி பலவிதமான தடகள போட்டிகளை நடாத்தி, இப்போது பென்சன் எடுக்கும் இடத்திற்கு வந்திருந்தார்கள். பென்சன் போட்டி அந்த நகரத்தில் அகோரமாக நடந்து கொண்டிருந்தது.இதையெல்லாம் தொடர்ந்து பார்த்துக் களைத்த தேவாரச்செல்வி இனி மண்டையைப் போடும் போட்டி எப்போது ஆரம்பிக்கப் போகிறதோ தெரியவில்லை என நினைத்தாள்.

“பென்சன் எடுத்துவிட்டு பொழுது போகாமல் ஊர் கொந்தராத்துப் பார்த்து அடிபடுறதைவிட ஐயாமுத்துவைப் போல வெங்காயங்கள் மண்டையைப் போடுறது நல்லதென, கள்ள ரெலிபோனெடுத்து ஆரோ ஒரு செம்மறி திட்டியது தேவாரச்செல்விக்கு நினைவில் வந்தது.

எனினும் நாடகம் முடியும்வரை பொறுத்திருந்தாள்.

www.padippakam.com



இப்போதுதான் நாடகத்தில் அவள் எதிர் பார்த்த கட்டம் வந்தது...போலீஸ்காரன் சீமாட்டியின் சீலையைப் பிடித்து இழுத்தான்... தேவாரச்செல்வி பரபரப்பானாள். தில்லைக்கனக சபையில் சிவனின் தாண்டவம் காண மலையேறிவந்த மெய்யடியார் போல மெய் சிலிர்த்தாள்.

அந்த நேரம் பார்த்து... குங்குமம் அது சங்கமம் என்ற பாடல் ஆரம்பித்தது.. இனி அடுத்த காட்சி நாளைக்குத் தொடரும்... சலித்துக் கொண்டாள். அடுத்த நாடகம் தொடரமுன் வந்த விளம்பர இடைவேளையில் ஐயாமுத்தர் கதையைத் தொடங்கினார்.

“என்னடியப்பா அவன் விசரனையும், விசரியையும் உருவேத்தி ஒரு மாதிரி அந்த வீட்டை வேண்டப் பண்ணியிட்டாய்... ”

“அதுக்கென்ன எங்களாலைதான் முடியேல்லை அதுகளெண்டாலும் வாங்கட்டன்.”

“அதுக்காக சுடலைக்குப் பின்னாலை கிடக்கிற அந்தப் பேய்வீட்டை வாங்கிறதே அதுவும் ஒண்டு தசம் மூண்டு மில்லியன்... ,

“நாங்கள் வீட்டை வேண்டி லாப நட்டம் பாக்கிறதைவிட ஆரையும் கொம்பு சீவிவிட்டுப் பாக்கிறதுதானே நல்லது. எத்தினை பேரை வீடு வாங்கச் சொல்லித் தூண்டிவிட்டன். இப்ப பிரியாமணி-தான் மாட்டியிருக்கிறாள். இனிப் போகப் போகத்தானே கூத்து ஆரம்பிக்கும்..., சிரித்தாள். தொடர் நாடகத்தில் வரும் நாகநந்தினி போல ஒற்றைவிரலை வட்டமாகச் சுற்றி நாசில் ஏற்றி விரலை விசிறிக்காட்டினாள்.

அந்தக் கோலத்தைப் பார்த்ததும் ஐயாமுத்தர் கெலித்துப் போ-னார். தொடர் நாடகங்களைப் பார்த்துப் பார்த்து தேவாரச்செல்வியும் அது போலவே மாறிவருவதை அவதானித்துக் கொண்டார். திருமாங்கல்ய சுந்தரி தொடரில் வரும் மாமியார் போல இவளும் புருசனான தனக்கு எலிப்பாசாணம் வைத்துவிடுவாளோ என்று சி-றுபொழுது கலங்கினார்.

இருந்தாலும் அவரால் தொடர் நாடகத்திற்குள்யோ, சோறு

படிப்பகம்

கறிக்குள்ளோ ஐக்கியமாக முடியவில்லை. தொடர்ந்து கறுவலின் நினைவுகளே மனத்திரையில் ஓடின.. சிவபாலியை உருவேற்றி கறுவலை அடிப்பித்து வைத்தியசாலையிலும் போட்டாயிற்று, பின் ஒன்றுமே தெரியாத பேய்க்குஞ்சு போல நடித்து கறுவலுக்கே ஆத்ம நண்பனாகவும் மாறியாயிற்று. இனி சிவபாலிக்கும், கறுவலுக்கும் நடைபெறவுள்ள மூன்றாம் கட்ட நேரடி மோதலே இப்போது அவர் மனதில் சரடியது.

புத்தரின் சிலையுடைப்புடன் தொடங்கிய ஆப்கான் போர் இப்போது ஈராக்கிற்குள் புகுந்துள்ளது போல எத்தனையோ போர்க்களங்கள்.

“போர்க்களம் போர்க்களம் ... காதலென்னும் போர்க்களம்..., மனதிற்குள் பாடியபடி சோற்றை மண் வாரும் இயந்திரம் போல வாரிவாரி வாய்க்குள் இறைத்தார். மதமதவெனச் சப்பி வாய்க் கொடுப்பை அதக்கி இழுத்து மூக்கை நீவினார். கடைசியாக ஒரு மீட்டர் நீளமான ஏவறையுடன் மதிய போசனத்தை முடித்துக்கொண்டார்.

அந்த நேரம் பார்த்து வாசல் மணி அடிக்கும் சத்தம் கேட்டது சரேலென முகத்தைத் திருப்பினார். நகரசபை அதிகாரிகளோ தெரியாது என்று நினைத்தார். இழுப்பைப் பிடித்தபடி நொண்டி நொண்டி வாசல்புறமாக ஓடினார்.

## 09

ஆராரோ ஒருதன் ஆக்கின சோத்துக்கு அழிவு வைக்க வந்துவிட்டானென நினைத்தபடியே கதவைத் திறந்தார். அங்கே சிவ-பாலியும் பிரியாமணியும் நின்று கொண்டிருந்தனர்.

“வாங்கோ... வாங்கோ... வாங்...ங்...கோ... என்ன மத்தியான நேரம் வந்திருக்கிறியள்..., என்றபடி குசினிக்குள் தலையை நீட்டினார்.

“அம்மா சாப்பாட்டைப் போடணை...., கோலம் சாரிபோல குரலை நமட்டி ஓர் இழுவை இழுத்தார் ஐயாமுத்து.

www.padippakam.com



"சாப்பாடோ ? வேண்டாம், வீட்டை சாப்பாடு கிடக்கு.. , பிரியாமணி அவருக்குப் பதில் கொடுத்தாள்.

"உங்களுக்குத் தெரியும் இது அன்னமிட்ட கை! கொஞ்சமாகத்தன்னும் சாப்பிட வேணும்."ஐயாமுத்து வலது கையை உயர்த்தியபடி முழங்கினார். அப்போது குசினிக்குள் இருந்து , களுக், என்றொரு கெலிப்புச் சத்தம் கேட்டதை அவர் உணரவில்லை.

"ஓமண்ணே ! இவ்வளவு கேக்கிறியள் சரி.. சரி... சாப்பிடுவம். முதலிலை வந்த விசயத்தைப் பேசுவம். நீங்க சொன்னபடி அந்த வீட்டை வாங்கியாச்சு... இந்த நல்ல செய்தியை முதல் முதலாக உங்களட்டை சொல்ல வேணும், அதுதான் வந்தனான்... எங்கை தேவாரச்செல்வி அக்கா... , பிரியாமணி பரபரப்புடன் குசினிக்குள் பார்த்தாள்.

"வீடு வாங்கியாச்சே இந்தா வந்திட்டன்" என்றபடியே ஓடி வந்தாள் தேவாரம். அவள் பிரியாமணியைக் கட்டித்தழுவி தன்னுடைய அன்பைத் தெரிவித்துக் கொண்டாள். இந்த வீட்டை வாங்கியதால் பிரியாமணி நல்லா வந்துவிடுவாளோ என்ற அச்சத்தை வெளிக்காட்டாது கச்சிதமாக மறைத்துக் கொண்டாள்.

"அக்கா வாருங்கோவன் ஒருக்கா வீட்டைப் போய் பாத்து வருவம்." பிரியாமணி அழைத்தாள்.

"இண்டைக்கு வியாழன்... கள்ள வியாழன் கழுத்தறுக்கும். நாளைக்கு வெள்ளி நல்லநாள், வளர்பிறை வேறை முதல் முதல் வாறது நல்ல நாளா வரவேணும் அதுதான்... "

உந்தச் சீலம்பாய் வீட்டைப் பார்த்து தனக்கென்ன இலாபம் என்பதால் வியாழக்கிழமையின் தலையில் பழியைப் போடுகிறாள் தேவாரச்செல்வி என்பதை ஐயாமுத்து உணர்ந்து கொண்டார். அவளுக்கு ஏதாவது இலாபம் கிடைத்தால் நாளும் கோளும் நமையென்ன செய்யுமெனப் பாடியபடி ஓடுவதைப் பார்த்த அனுபவம் அவருக்கு உண்டு.

"அது சரி சிவபாலி... வீடு வாங்கிறது பெரிய விசயமில்லை.

படிப்பகம்

வாசலிலேயே கண்ணூறு படாமல் படமொண்டு போட வேணும்.,"என்றபடி பெரிய கண்கள், சுருள் சுருளான மீசை, வேட்டைப் பற்களோடு ஒரு அரக்கனின் படத்தை எடுத்து வந்து முன்னால் வைத்தார் ஐயாமுத்து.

"புது வீடு ேபோறாக்களுக்கெல்லாம் எங்கடை பரிசு இதுதான" லலிதாங்கி நகைக்கடை விளம்பரம் போல டாலடிச் சிரிப்புடன் தேவாரச்செல்வி சொன்னாள்.

சிவபாலி இது போல படங்களை நிறையத் தமிழ் வீடுகளில் பார்த்திருக்கிறார். இதில் அவருக்கு உடன்பாடில்லை.

"இந்தப் படத்தை வாசலில் தொங்கவிட்டால் வீட்டுக்கு வாற எல்லா மனிசரையும் எங்களைப் போல பொறாமை பிடிச்சவரா நினைக்கிறமெண்டெல்லோ அர்த்தம். இதைப் பார்த்தா என்னையும் மண்டை கழண்ட மனிசனெண்டுதான் டேனிஸ்காரன் நினைப்பான் " சிவபாலி ஐயாமுத்துவின் படத்தை வேண்டாது நிராகரித்தார்.

ஐயாமுத்துவுக்கு நறுக்கென்று நெருஞ்சி முள்ளு குத்தியது போல இருந்தது. அசடு வழிய படத்தைத் திரும்பிப் பெற்றுக் கொண்டார். இதற்குப் பழி தீர்க்க அவரை மேலும் ஒரு தடவை பழிவாங்க வேண்டுமென மனதுள் கங்கணம் கட்டினார்.

"வீடு வாங்கியிட்டியள் இனி அதுகளுக்கு காப்பற், தளவாடங்கள், அலுமாரியள், சாப்பாட்டு மேசை, கதிரை, சோபா, லைற் எல்லாம் போட வேணும். எப்ப வாங்கிறதா யோசனை." என்று கேட்டார்.

இப்படித்தான் வீட்டுத் தளவாடங்களை வாங்க உதவுவது, அதை ஒரு துரும்புச் சீட்டாக வைத்து தான் சொன்னபடிதான் நடக்க வேணுமென பிடிவாதம் பிடிப்பது. தானே பெரியவனென அதை வைத்துச் சதுராடுவது போன்ற கூத்தாட்டங்கள் பலதை நேரடியாகப் பார்த்த காரணத்தால் சிவபாலி தளவாடம் என்றதும் முதலில் சிறிது கலக்கமடைந்தார்.

அவரின் மனவோட்டங்களைப் புரியாத பிரியாமணி , கையிலை இருந்த காசெல்லாம் முடிஞ்சுது.. இனிப் பையப் பையத்தான் வாங்க வேணும். , என்று சொன்னாள்.

www.padippakam.com



"அட... இவ்வளவு செலவழிச்சாச்சு" இனி இந்தச் சின்னச் செலவைப் பாத்து என்ன புண்ணியம் இருக்கு... அற மிஞ்சிப் போ-னால் ஒரு லட்சம் குறோணர் வரப்போகுது. ஜன்னல் கேட்டினிலை இருந்து காப்பற், ரெலிபோன்வரை எல்லாமே ஒரே நிறத்திலை வாங்க வேணும். பையப்பைய வாங்கினால் கலர் கொம்பினேசன் சரியா வராது, என்றார் ஐயாமுத்து.

"அவர் சொல்லுறதும் சரிதான்.. "மதிமுகராசாவின்ரை மனிசி காப்பற் கலருக்கு ஏற்ற நிறத்திலதான் கால் சப்பாத்தும் போடுறவ. அவவின்ரை எடுப்பும் குதிப்பும். அவளுக்கு நாங்களென்ன குறைவே., என்று தேவாரச்செல்வி கூறியதைப் பார்த்து, அவளை நான் பெத்த சீமாட்டி என்று மனதிற்குள் பாராட்டினார் ஐயாமுத்து.

"ஆர் மதிமுகராசா பெண்சாதியைச் சொல்லுறியளோ? அவையள் சற் ரீவீ குறூப்பெல்லோ ? நாங்கள் சபை சந்திக்குப் போனால் அந்த ரீவீ பாக்கிற ஆக்களோடை சேருறதில்லை. எங்கடை சினி ரீவீ குறூப் பெண்டுகளெல்லாம் வேறையாகத்தான் இருக்கிறனாங்கள்., இது பிரியாமணி.

தமிழரின் சாதிப் பிரிவுகள் ஒரு பக்கம் கிடக்க, இப்போ ரீவி பிரிவு, றேடியோ பிரிவாக புதுப்புதுச் சாதியள் வந்திருப்பதும், அவை வானலைகளில் சதுராடுவதும் கண்டு சிவபாலி முன்னர் பலதடவைகள் மெய் சிலிர்த்துள்ளார். புது வீட்டில் சினி ரீவி எடுத்துப் பூட்டி அதன-ால் மேன்மை கொள்ள ஆசை கொண்டார்.

இப்படியே பலவாறு பேசி, பின் வீட்டிற்குள் எல்லாவற்றையுமே பச்சை நிறத்தில் போடுவது என்று முடிவு செய்தனர். பிரியாமணி மேலும் கடனாளியாகப் போவது தேவாரச்செல்விக்கு மகிழ்வு தந்தது.

"நீங்கள் சொல்லுறதும் சரிதான்.. நாங்கள் மட்டமாக குறைஞ்ச விலைக்கு தளவாடம் எடுத்தால் பிறகு சற் ரீவீ குறூப்புக்கு கெப்பராப் போவிடும்.... இருந்தாலும் காசுதான்..., என்று இழுத்தாள்".

ஒண்டுக்குமே கவலை வேண்டாம். பழைய கான்ஸ்டபிள் ஒராள் வட்டிக்கு விடுறார். மனிசன் இஞ்சையும் பென்சன் எடுக்குது, சிறீலங்காவிலையும் பென்சன் எடுக்குது. காசு மெத்தி வட்டிக்கு

படிப்பகம்

www.padippakam.com


விடுகுது. வேணுமெண்டால் வேண்டித்தாறன். பையப் பைய ஒரு சீட்டைக் கட்டினியளெண்டால் அவர் வட்டியோடை அதைப் பிடிச்சுக் கொள்ளுவார்.

கான்ஸ்டபிள் லேசுப்பட்ட ஆளில்லை.. மனிசியை அடிச்சு ஊருக்குக் கலைச்சுப் போட்டு ஒரு டேனிஸ்காரியோடு இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறார் சிவபாலி. இருப்பினும் இது பிரியாமணியின் ரீ.வி தொடர்பான விவகாரம், அவளுடைய கௌரவப் பிரச்சனை என்பதால் அவர் தலை சாய்ந்தார். அன்று மாலையே வட்டிக்கு பணம் எடுப்பதற்காக கான்ஸ்டபிளை சந்திப்பதாக முடிவாகியது.

“அப்ப பின்நேரம் சந்திப்பம்... ”சிவபாலி எழும்பினார்.

“சாப்பாடு!”

“சீச்சீ பிறகு பாப்பம்.”

“எங்க வீட்டை மத்தியான நேரம் வந்து சாப்பிடாமல் போற முதல் ஆள் நீங்கள்தான், ஐயாமுத்து கவலையுடன் கூறினார்.”

“இனி பக்கத்திலைதானே குடி வரப்போறம்... அப்ப அடிக்கடி வாறமே , பிரியாமணி சொல்ல எல்லோரும் சிரித்துக் கொண்டனர்.

“சிவபா... லி... ” ஐயாமுத்து சிவபாலியைப் பார்த்து ஓரக்கண்ணை ஒரு வெட்டு வெட்டினார்.

“என்ன விசயம் ? ”குசு குசுத்தபடி சிவபாலி அவருக்கு அருகே போனார்.

“கறுவலைப் போய் ஆஸ்ப்பத்திரியிலை பாத்தனான். அடி அந்தமாதிரி... முழங்கியிருக்கிறீர்... நல்லவேளை செத்திருப்பான்.”

“மெதுவாகக் கதையும் அதுக்கு இப்ப என்ன ? ”

“முகமூடி போட்டு அடிச்சனீர் கூடவே ஒரு பெரிய பிழையையும் விட்டுவிட்டீர்.. ”

www.padippakam.com



" என்ன... என்ன..."சிவபாலி பரபரத்தார்.

"அடிக்கேக்கை உணர்ச்சி வசப்பட்டு உம்முடைய குர லைக் காட்டிப் போட்டீர். அவன் குரலை வைச்சு ஆளைப் பிடிச்சுப் போட்டான் போல.. எதுக்கும் கொஞ்சம் கவனமா இரும்.. "

" வரட்டும் ஒரு கை பார்க்கிறன்.. " சிவபாலி உணர்ச்சிவசப்பட்டு மனைவியுடன் எகிறி வெளியேறினார்.

அவர்கள் போகும்வரை கைகளை ஆட்டிவிட்டு, போன பின் தேவாரச்செல்வியும் ஐயாமுத்துவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

, க்ளுக் ! இந்த முறை கையால் வாயைப் பொத்தியபடி அவள் சிரித்தாள். அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருப்பதை ஐயாமுத்து புரிந்துகொண்டார்.

## 10

இலங்கையிலும் இப்போது ஒரு யுத்த நிறுத்தமும் அமை தியும் நிலவ ஆரம்பித்திருந்தது. அதனால் நிறையத் தமிழர்கள் பல நாடுகளிலிருந்தும் ஊர் பார்க்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

பிராங்போட், பாரீஸ், உஸீத்ரு விமான நிலையங்களில் இருந்து புறப்படும் எயார்லங்கா விமானங்கள் பயணிகளால் நிறைத்து வழிந்தன. ஒரு காலத்தில் தீபாவளிக்கும், பொங்கலுக்கும் நிறைந்து வழியும் யாழ்தேவி ரயில் வண்டி போல இப்போது எயார்லங்கா நிறைந்து வழிந்தது. தேவாரச்செல்வியுடன் எயார்லங்காவில் உட்கார்ந்து கொண்டிருந்தார் ஐயாமுத்து.

ஈராக்கோடு சண்டைபோடும் நாடுகளின் பிளேன்களில் ஏறுவதுதான் பயம், அந்த வகையில் ஏயார்லங்காவில் பாதுகாப்பு அதிகம் என்று யாரோ தமிழ் அறிவுஜீவி கடையில் வைத்து பேசிக்கொண்டது அவருடைய காதுகளுக்குள் இன்னமும் கிடந்தது. ஆகையால் மத்திய கிழக்கைத் தாண்டிப் பிளேன் அப்பால் போகும்வரை மெல்லிய வயிற்றுக் கலக்கம் இருக்குமென்றே நினைத்துக் கொண்டார் ஐயாமுத்து.

படிப்பகம்

www.padippakam.com


இருந்தாலும் அவருடைய எண்ணத்தில் கறுவலும், சிவபாலியும் இப்போது என்ன செய்வார்கள் என்ற கவலையே தூக்கலாக நின்றது. தான் இல்லாத நேரம் இருவரும் உறவுபட்டு நடுவில் தான் ஆடி வைத்திருக்கும் கூத்தைக் கண்டு பிடித்துவிடுவார்களோ என்று இரகசியமாக அஞ்சினார்.

குடித்து வெறித்துத் திரியும் பழைய போலீஸ் கான்ஸ்டபிள் கனகரெத்தினத்தைப் பணக்காரனாகக் காட்டி, அவருடைய பெயரில் தானே ஒரு இலட்சம் பணத்தை சிவபாலிக்கு வட்டிக்கும் விட்டுவிட்டார். இந்த நிலையில் ஈராக்கின் பக்கமாகப் பறக்கும்போது விமானம் சிதறிவிட்டால் பினாமிகள் பேரில் வட்டிக்குக் கொடுத்திருக்கும் பணமெல்லாம் நாசமாகிவிடும். என்று பயந்தார்.

இருந்தாலும் அமைதி ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி ஒரு தடவை நாட்டைச் சுற்றிப் பார்த்துவருவது அவசியமென நினைத்துக் கொண்டார். தேவாரச்செல்வியின் தாய் அகிளான் கிழவி படுத்த படுக்கையாய் கிடந்தாள். மகளைப் பார்க்காமல் உயிர் போக மறுக்கிறது என்று தொலைபேசி வந்த காரணத்தால் திடீரெனப் பயணம் புறப்பட்டுவிட்டார்.

ஓர் இருக்கை கூட வெற்றிடமில்லாத நிலையில் ஏயார் லங்கா சர்ரென ஓடி வேகமெடுத்து வானத்தில் சடசடவென தவழ்ந்து ஏறியது. விமானம் முகில்களைக் கிழித்தபடி ஓட ஓட ஐயாமுத்தருக்கு டென்மார்க் நினைவுகள் மெல்ல மெல்ல மறக்கலாயிற்று.

தனது இளமைக்காலம், பாடசாலை நண்பர்கள் எல்லாம் நினைவிற்குள் வரக்கண்டு மெய் சிலிர்த்தார். அதேவேளை அகிளான் கிழவி மண்டையைப் போட முன்னரே டென்மார்க் திரும்பிவிட வேண்டுமென ஆண்டவனை வேண்டினார். ஊர் போய் விசர்க் கூத்தாடித் திரியும் அகிளான் கிழவியின் செத்தவீட்டு செலவைப் பார்த்ததுதான் மிச்சமென்று கையைத்தட்டியபடி திரும்ப அவருக்கு விருப்பமில்லாமல் இருந்தது.

“க்ளுக்”மெல்லிய சத்தம் திரும்பிப் பார்த்தார். தேவாரச்செல்வி எதையோ நினைத்து தன்பாட்டில் சிரிப்பது தெரிந்தது.

www.padippakam.com



"என்னடியம்மா சிரிப்பு?" கோபமாகக் கேட்டார்.

"சிவபாலியும் பிரியாமணியும் இப்ப வீடு மாறிக் கொண்டிருப்பினம் அதை நினைச்சன்..,"

"அதுக்கென்ன ?"

"இந்த நேரம் நாங்க அங்கை நிண்டால் எல்லாச் சாமான் சக்கட்டுக்களையும் நாங்கள்தான் தூக்கிப் பறிக்க வேணும். காப்பற் அடிச்சு, தளவாடங்களைப் பூட்டி சீ யெண்டு போயிருக்கும்.... நல்ல வளை திடீரெண்டு ஊருக்குப் புறப்பட்டிட்டம் அதுதான் சிரிச்சனான்"

"பாவம் வீடு வாங்காவிட்டால் அவனும் என்னோடை வந்திருப்பான். என்னம் பத்து வருசத்துக்கு சிவபாலி நம்ம நாட்டிலை கால் வைக்க ஏலாது. கடன், வட்டி எண்டு டென்மார்க்கிலேயே கிடந்து அழுந்த வேண்டியதுதான்." சிரித்தார் ஐயாமுத்து.

அந்த நேரம் பார்த்து முன் வாய்ப்பற்கள் விழுந்து, தலை வழுக்கையாகிப் போய், நெத்தலிக் கருவாடு போல ஒரு தமிழன் எதிரே வருவது தெரிந்தது. விமானத்தில் ஒவ்வொரு சீட் சீட்டாகப் பிடித்தபடி வந்தவன் ஐயாமுத்துவைப் பார்த்து சிரித்தான்.

ஐயாமுத்துவுக்கு ஆளை அடையாளம் தெரியவில்லை. கூர்ந்து கூர்ந்து பார்த்தார். ஆளைத் தெரியவேயில்லை, அவனுடைய வியர்வை நெடியில் வொட்கா விஸ்க்கி கலந்து வந்தது.

"என்னைத் தெரியேல்லையோ?" ஐயாமுத்து அவனைப் பார்த்தபடி மூளையைக் குலுக்கு குலுக்கென்று குலுக்கினார் விடை கிடைக்கவில்லை.

"தேவாரச்செல்வி அக்கா உங்களுக்கும் என்னைத் தெரியேல்லையோ ? உங்கடை கலியாண வீட்டிலை பந்தல் போட்டனே என்னை மறந்திட்டியளோ?, தேவாரச்செல்வியும் அவனை அடையாளம் காண முடியாது தவித்தாள்.

"நான்தான் சரோஜாதேவி சண்முகம்..." குப்பெனச்

படிப்பகம்

www.padippakam.com



சிரித்தான்.

"எட தாலியக்கட்டு... ஆள் என்னமாய் மாறிப் போனாய்... அது சரி எங்கை இருக்கிறாய்... என்ன செய்யிறாய்.... , ஐயாமுத்து பாய்ந்து எழும்பினார்.

"நான் ஜேர்மன் சுக்காட்டிலை இருக்கிறன். இப்பதான் காட் கிடைச்சது அதுதான் ஊருக்குக் கிளம்புறன்." என்று கூறினான். பிள்ளை, குட்டி, சுகசெய்திகளை இருவரும் வேகமாகப் பரிமாறிக் கொண்டனர்.

"கொழும்பில இருந்து என்னத்தில போறீர்?"

"அங்கை போய் ஒரு வான் பிடிச்சுப் போகலாமெண்டிருக்கிறன். நீங்களும் வந்தால் ஒரே வானிலேயே போகலாம்... செலவு மிச்சம்.,"

, சரி கட்டுநாயக்கா போனதும் யோசிப்பமே.. , சண்முகம் தள்ளாடியபடி தன்னுடைய இருக்கைக்குப் போனான்.

சண்முகத்தை நினைக்க நினைக்க ஐயாமுத்துவுக்கு ஒரு தடவை அடி வயிறு கலங்கியது. அவர் பாடசாலை படிக்கும் காலங்களில் கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி முதல்தர நடிகையாக இருந்தார்.

சினிமா விசர்க் காய்ச்சல் பிடிச்சு, சரோஜாதேவியைத் தான் காதலிப்பதாக பாடசாலை முழுவதும் கற்பனையில் கதையைப் பரவ விட்டார் ஐயாமுத்து.

தனக்கு முந்தியே சண்முகம் சரோஜாதேவியைக் காதலிக்கும் செய்தி அவருக்குத் தெரியவே தெரியாது. விசயம் தெரியவர இருவருக்கும் மோதல் வெடித்தது. கந்தவனக் கோயில் திருவிழாவில் களம் குறித்து சரோஜாதேவி யாருக்குச் சொந்தமென மோதுவதாக முடிவாயிற்று.

நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் கந்தவனக் கோயில் வீதியில் வைத்து சண்முகமும் வேறு சிலரும் ஒன்று சேர்ந்து ஐயாமுத்தருக்கு செமையடி போட்டார்கள்.

www.padippakam.com



அடி அகோரம் தாங்க முடியாத நிலையில் கனவிலும் சரோஜாதேவியை நினைப்பதில்லை என்று சண்முகத்தின் காலில் விழுந்து சத்தியம் செய்து தப்பியோடினார் ஐயாமுத்து. திடீரென இப்போது ஒரு தடவை சரோஜாதேவியையும் சண்முகத்தையும் நினைத்துப் பார்த்தார். தன்னையறியாமல் சிரித்துக் கொண்டார்.

அதற்குப் பிறகு வரிசை வரிசையாக பல பெண்கள் நினைவிற்குள் வந்தனர். ராசம்மா, ஜெயலட்சுமி போன்றவர்களின் பின்னால் பல வருடங்கள் ஓடித்திரிந்து அவர்களுக்காக உயிர் கொடுப்பதாக அலைந்து ஏமாந்திருக்கிறார்.

இப்போது அவர்கள் எல்லாம் நரை கிழவிகளாக நடமாடுவதைப் பார்த்தபோது காதல் மீது அவருக்கு வெறுப்பு வந்தது. மசிரைப் பிடுங்கின காதலென்று மனதிற்குள் காறி உமிழ்ந்தார். தன்னைப் போல விசர்க்கீறு பிடித்து அழகான பெண்களைக் கண்டால் உயிர் கொடுக்க ஓடும் இளைஞர்களை ஒரு தடவை எண்ணிச் சிரித்தார். அவர்களை நிலத்தில் போட்டு முழங்காலால் குடல் வெளி வருமளவிற்கு கடாச வேண்டுமென நினைத்துக் கொண்டார். காதலி கிழவியானால் காதலன் என்ன செய்வான்... என்று தனக்குத்தானே கேட்டார் சிரித்தார். இப்படி ஏயார் லங்காவில் ஏறியதால் அவர் மூளையிலும் சில சிந்தனை முத்துக்கள் உதிர்ந்தன.

“இப்ப டென்மார்க்கில என்ன நேரமப்பா.., தேவாரச்செல்வி கேட்டாள். அதனால் ஐயாமுத்துவின் கற்பனைச் சங்கிலி படீரென அறுந்துவிட்டது.

“இரவு பதினொரு மணியிருக்கும்”

“சிவபாலியும் பிரியாமணியும் இப்ப புது வீட்டிலை குடியேறியிருப்பினம் என்ன...., அவசரமாக வினவினாள் தேவாரச்செல்வி.

விமானம் மேலும் சில கி.மீ உயரமெடுத்தது. ஏவுகணையால் தாக்க முடியாதபடி உயரமெடுக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டார். விமா

படிப்பகம்

www.padippakam.com



னம் விறுவிறென முகில்கள் இல்லாத நட்சத்திர வானத்திற்குள் நகர்ந்து கொண்டிருந்தது. அந்த நேரம் காது கிறுகிறுப்பது போலிருந்ததால் கண்களை மூடிக் கொண்டார். அதற்குள் மெல்லியதாக ஒரு கள்ள உறக்கம் கண்களில் கவிந்தது.

கனவில் படீர் என்றொரு சத்தம் கேட்டது. சிவபாலியின் வீட்டின் சன்னல் கண்ணாடி மீது கறுவல் கல்லால் எறிந்துவிட்டு ஓடுவது போல அந்தக் கனவு வளைந்து ஓடியது, திடுக்கிட்டு விழித்தார். அருகில் தேவாரச்செல்வி நல்ல உறக்கத்தில் கிடந்தாள். அவள் என்ன கனவு காண்கிறாளோ.. நிச்சயம் பிரியாமணியைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டார்.

சில வேளைகளில் கனவுகள் போலவே நிஜத்திலும் நடப்பதுண்டு என்பார்கள். அவர் கனவு கண்டது போலவே அந்த நேரம் யாரோ ஒருவன் சிவபாலியின் வீட்டுக் கண்ணாடி ஜன்னலை நிஜமாகவே உடைத்துவிட்டு ஓடிக் கொண்டிருந்தான்.

யார் அவன்... ஏன் கண்ணாடி ஜன்னலை உடைத்தான்....

## 11

“பளீர்.... ”என்று கண்ணாடி உடைந்து கொட்டுப்பட்ட சத்தம் கேட்டதும் சிவபாலி துடிதுடித்து எழும்பினார். மின் விளக்கைப் போட்டுவிட்டு ஓடிப்போய்ப் பார்த்தார்.

பின்புறம் சுடலை ஓவென வெறிச்சோடிக் கிடந்தது. யாரோ ஒருவன் கல்லறைகளைத் தாண்டித் தாண்டியபடி ஓடி மறைவது மங்கலாகத் தெரிந்தது...

அது பேயா அல்லது மனிதனா என்று ஒரு கணம் தடுமாறினார். உடைந்திருப்பது சாதாரண கண்ணாடியல்ல மூன்று மீட்டர் நீளம் இரண்டு மீட்டர் அகலமான இரட்டைப்பட்டுக் கண்ணாடி. அதை மீண்டும் போடுவதானால் பத்தாயிரத்திற்கு மேல் பணம் தேவை.

இன்றுதான் பால் காய்ச்சி புது வீடு புகுந்திருந்தார். இன்னமும் வீட்டை இன்சூரன்ஸ் செய்யவில்லை. நாளைதான் அந்த வேலையைப் பார்க்க இருந்தார். அதற்குள் யாரோ கைவரிசையைக்

www.padippakam.com



காட்டிவிட்டார்கள்.

“இந்தப் பக்கமா தமிழர் வாறது பிடிக்காமல் ஆரும் டெனிஸ்காரன்தான் பொறாமையிலை எறிஞ்சானோ” பிரியாமணி அவரிடம் கலக்கத்துடன் கேட்டாள்.

“இது டெனிஸ்காரன்ரை வேலை இல்லை...ஊரிலை நாயளுக்கு கல்லெறிஞ்சு பழகின எங்கடை ஆக்கடை வேலைதான்... ம்... யாரா இருக்கும்... ” கடுமையாக யோசித்தார். கறுவல் நேற்றுத்தான் அடி காயம் ஆறி வைத்தியசாலையால் வந்திருந்தான். ஒருவேளை இது அவனுடைய கூத்தோ என்றும் சந்தேகப்பட்டார்.

புது வீட்டுக்கு வந்த முகூர்த்தம் ஆரம்பமே பிழைத்துவிட்டதால் அவர் முற்றிலும் குழம்பிப்போனார். விடிந்ததும் போலீசில் முறைப்பாடு செய்ய எண்ணியபடியே இரவு முழுவதும் சுடலைப்பக்கமாகப் பார்த்தபடியே தூங்காமல் இருந்தார்.

வீடு வாங்குவது இலகு, அதைக் காமாந்து பண்ணுவது பெரிய கஸ்டம் என்ற விடயத்தின் முதலாவது சங்கீதம் பிரியாமணிக்கு அந்தக் கல்லெறியில் இருந்து விளங்கியது. கொடிகாமம் தேங்காய் போல அந்தக் கல் மண்டபத்தின் நடுவே கிடந்தது. அதைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

விடிந்ததும் விடியாததுமாக இன்சூரன்ஸ் கம்பனிக்குப் போய்க் கதைத்து, ஏதாவது வழியில் பணத்தை எடுத்து கண்ணாடியைப் போட்டுவிட வேண்டுமென முயற்சித்தார், முடியவில்லை.

காசு வசூலிப்பதில் கில்லாடிகளாக இருக்கும் இன்சூரன்ஸ் கம்பனிகள் பணத்தைக் கை விடுவதில் அதைவிடக் கில்லாடிகள் என்பதைப் புரிந்துகொண்டார். இன்சூரன்சிற்குள் ஒரு தொகை சட்டங்கள் எழுதப்பட்டிருப்பதை அப்போதுதான் அறிந்து கொண்டார். அதையெல்லாம் படிக்கப் படிக்க அவருக்கு கண்ணைக்கட்டி காட்டிற்குள் விட்டது போல இருந்தது. எல்லாமே ஏமாற்றிப் பணம் பறிக்கும் கூட்டமென்று சலித்துக் கொண்டார். வீட்டை விற்றவன் யாரோ கண்ணாடியை உடைத்த காரணத்தால் அது ஆறு மாதக் கியரண்டிக்குள் வராது என்றுவிட்டான். அவனுடைய சட்டங்கள் வேறு

படிப்பகம்

www.padippakam.com



ஐம்பது பக்கங்களுக்கு மேல் இருந்தன. கடைசியில் கந்துவட்டிக்கு பத்தாயிரம் கடன் வேண்டி கண்ணாடியைப் போட்டு முடித்தார்.

புதுக்கண்ணாடி ஜொலிப்பாக இருந்தது. சூரிய வெளிச்சம் ஒரு கற்றை கூடுதலாக ஊடுருவி வருவது போல இருந்தது. கண்ணாடிக்கு முன்னால் அழகான கேட்டினும் தைத்துப் போட்டுவிட்டாள் பிரியாமணி.

புதிதாகக் கண்ணாடி போட்ட விடயத்தை அந்த அநாமதேய உருவம் அறிந்துவிட்டது. அன்றைய இரவு மீண்டும் சிவபாலிக்கும் பிரியாமணிக்கும் இடியாக இறங்கியது. , பளீர் , என்றொரு சத்தம் ... துடித்துப் பதைத்து, அல்லாடி விளக்கைப் போட்டுப் பார்த்தார். மறுபடியும் கண்ணாடி உடைந்து தூள் பெறியாகக் கிடந்தது. கல்லெறிந்த அதே உருவம் சுடலைப் பக்கமாக தாவித்தாவி ஓடிக் கொண்டிருந்தது.

ஓடிய உருவம் சட்டென நின்றது. கைகளை வீசி நடனமாடியது. கூர்ந்து பார்த்தார் வெள்ளை வெளேரென்ற துணி போர்த்திய உருவம் அது. மோகினிப் பேயோ ? சிவபாலி திடுக்கிட்டார். பயத்தினால் சிலுசிலுவென்று காலால் மூத்திரம் வழிந்தோடியது.

பிரியாமணி மார்பில் குத்தி ஒப்பாரி வைத்து அழுதாள். ஓடிப்போன சிவபாலி உளறும் குரலில் போலீசிற்குப் போன் செய்தார். அவர்கள் நெடு நேரத்தின் பின் வந்து, டோர்ச் லைற் அடித்து வளவிற்குள் தேடினார்கள். பிறகு ஏதோ சில குறிப்புக்களைக் கிறுக்கிக் கொண்டு போனார்கள்.

மறு நாள் வேலைக்கு லீவு போட்டுவிட்டு மறுபடியும் இன்சூரன்ஸ் கம்பனிப் பக்கமாக ஓடினார். இம்முறை அவர்களுடைய செலவிலேயே கண்ணாடியைப் போட முடிந்தது சிறிது ஆறுதலாக இருந்தது. இனி கண்ணாடியை இன்சூரன்ஸ் கொம்பனி பார்க்குமென எண்ணிக் கொண்டார்.

வெள்ளை நிற உருவத்தைப் பார்த்த காரணத்தால் பிரியாமணி பயந்து குலப்பன் காய்ச்சலில் விழுந்துவிட்டாள். அவளுக்கு விபூதி போட்டு, நூல்கட்டி, வீட்டிற்கும் மந்திரிச்சு காவல் வைக்க ஒரு வாரம்

www.padippakam.com



கடகடவென ஓடிவிட்டது.

இந்த நேரம்தான் கோடாலித் தலையன் என்று அப்பகுதியில் அழைக்கப்படும் மாதம்பைச் சிவத்தின் மகளின் பூப்புனித நீராட்டு விழா நடந்தது. இலண்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா முதல் பல நாடுகளில் இருந்தும் அவருடைய உறவினர் வந்திருந்தனர். ஆயிரத்திற்கு மேற்பட்டவரை அழைத்து வைத்துக் கொண்டு ஓடித் திரிந்தார். சனக் கூட்டம் பிதுங்கி வழிந்தது, வந்தது யார் போனது யார் என்பது தெரியாமல் அல்லாடினார்.

நானூறு பேருக்கு மேல் ஒருவர் கூட இருக்க முடியாத மண்டபத்தை எடுத்து, மூவாயிரம் பேருக்கு அழைப்பிதழ் கொடுத்து, ஆயிரம் பேரை அழைத்து வைத்து அவர் ஆடிய ஆட்டத்தில் வந்த சனம் சோறும் இன்றி, தண்ணீரும் இன்றி தெருவில் நின்றது.

அந்த நெரிசலிலும் பலர் சிவபாலி பேய்வீடு வேண்டி ஏமார்ந்த கதையையே பேசிக் கொண்டனர். பாவம் இனி ஆருக்கு இந்த வீட்டை விக்கப் போறானோ தெரியேல்லை.. எல்லாம் கொழுப்பு என்று ஒரு கிழவன் பணிகாரத்தைக் கொதப்பியபடியே கூறினார்.

ஆரோ ஒரு வெளிநாட்டுக்காரன் பெண்சாதியை அடித்துக் கொன்ற பின் கட்டித்தூக்கிய வீடென்றும் அதில் சிலர் பேசிக் கொண்டனர்.

கூட்டத்தோடு கும்பலாக நெரிபட்ட சிவபாலியின் காதுகளிலும் இந்தப் பேச்சுக்கள் விழுந்தன.. அவருடைய மண்டைக்குள் இனம் புரியாத அச்சம் பரவியது..

# 12

சிவபாலி தங்க மூலாம் பூசிய தகட்டில் அந்த வீட்டிற்கு தாய்வீடு என்று பெயர் சூட்டி மகிழ்ந்திருந்தார். ஆனால் என்று அந்த வீட்டின் ஜன்னலில் கல்லெறி விழுந்ததோ அன்றிலிருந்து மற்றைய

படிப்பகம்

www.padippakam.com


தமிழரிடையே அது பேய்வீடு என்றே பிரபலமாகத் தொடங்கியது. அந்த வீட்டின் பக்கமாக யாரோ சில தமிழ் இளைஞர்கள் காரை வேகமாக ஓடியபோது பின்னாலிருந்து யாரோ இழுத்தாக பேசிக் கொண்டார்கள்.

சிவபாலி இப்போது கருணை உட்பட தனது பகைவர்கள் எல்லோரையுமே தீர மறந்துவிட்டார். வெள்ளைச் சீலை குலுங்க குதியாட்டம் போட்ட அந்த மோகினிப் பேயை மட்டும் அவரால் மறக்கவே முடியாமலிருந்தது.

அப்பொழுதுதான் புலம் பெயர் தமிழரில் சிலருக்குப் பிடித்த பில்லி, சூனியங்கயை இறக்க தமிழகத்தில் இருந்து காளி அருள்பெற்ற மலையாள மந்திரவாதி ஒருவர் வந்திருக்கும் செய்தி வானொலி விளம்பரம் ஒன்றில் இருந்து கிடைத்தது.

அதைக் கேட்டதும் சிவபாலி புதுத் தெம்பும் நம்பிக்கையும் பெற்றார். அவரை வரவழைத்துத்தான் இந்தப் பிரச்சனையையே ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென நினைத்தார். வெறும் டோர்ச் லைற் அடித்துப் பார்க்கும் டேனிஸ் பொலிஸ்காரனுக்கு மோகினிப் பேய் அடங்கக் கூடிய ஒன்றாக அவர் நினைக்கவில்லை. பல

நாட்கள் முயற்சியெடுத்து, பல இடங்களுக்கு தொலைபேசி செய்து ஒருவாறு மந்திரவாதியைக் கண்டு பிடித்துவிட்டார். இலண்டனில் இருக்கும் பல தமிழருக்கு பேயிறக்கி சுகம் வரச்செய்த அவரை இலண்டனுக்கு விமானச் சீட்டு அனுப்பி டென்மார்க் வரும்படி அழைத்தார்.

மந்திரவாதி வரும் கதையை இரகசியமாக வைத்துக் கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி மந்திரவாதி வரும் நாளும் வந்தது. தலைநகருக்குப் போய் அவரை அழைத்துவந்து தனது வீட்டிலேயே தங்க வைத்துக் கொண்டார். மறுநாள் அதிகாலையே வீடு, சுடலை எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்த மந்திரவாதி மோகினிப் பேயைப் பிடிக்கும் வேலையை ஆரம்பித்தால் சிவபாலியிடமிருந்து எவ்வளவு கறக்கலாமென எடைபோட்டுக் கொண்டார். வீடு, கார், பிரியாமணியின் அறுபது பவுண் தாலிக்கொடி, குளிர்சாதனப் பெட்டி, தளவாடங்கள்

www.padippakam.com



எல்லாவற்றையும் கணக்கெடுத்து, உருவக் கூடிய தொகையை மனதில் கணித்துக் கொண்டார். அதற்கு ஏற்ப மெல்ல மெல்ல காரியத்தை முடுக்கிவிட்டார்.

மச்சம் மாமிசம் கண்ணிலும் படக்கூடாது என்று முதலிலேயே ஆணையிட்டார். எறிமாடன், குறத்தலையன், ஊத்தைகுடியன் போன்ற தமிழ் பேய்களுடன் டெனிஸ்மாடன், ஓநாய் மூக்கன், வெறிக்குட்டி நாயன் போன்ற டெனிஸ் பேய்களின் நடமாட்டமும் இருப்பதாக அவர் கூறிக்கொண்டார். சிறப்பாக யாழ்ப்பாணத்து ஒடியல் கூழ் கனவிலும் காய்ச்சக் கூடாது என்று கட்டளையிட்டார். இலண்டனில் ஒடியல் கூழ் குடித்து வயிற்றால் அடித்து படுத்த படுக்கையாகக் கிடந்தது நினைவுக்கு வந்தது.

நீண்ட தாடி, தீட்சண்யமான கண்கள், சிரித்த முகம், கையில் ஒரு மந்திரக்கோல் இவைகளுடன் காட்சிதரும் அவர் தனக்கு பிரமானந்த முனியாண்டி சாமி என்று கூறிக்கொண்டார். அவர் படித்த பல்கலைக்கழகங்கள், எடுத்த டாக்டர் பட்டங்கள் எல்லாவற்றையும் சிவபாலிக்குக் காட்டியபோது அவர் பயந்துவிட்டார்.

எத்தனையோ மந்திரிகள் அவருடைய காலில் விழுவது போன்ற புகைப்படங்களை எடுத்து மேசையில் போட்டார். கவர்ச்சி நடிகை ஜில் ஜில் சிறீ அவருக்கு மாலை போடுவது போலவும் ஒரு படம் இருந்தது. மந்திரவாதி இரண்டு வாரங்கள் தங்கியிருந்து பேயோட்ட வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறிக்கொண்டார்.

அதற்குள் அங்கு நோய்வாய்ப்பட்ட மற்றவர்களுக்கு வைத்தியமும், வேறு சிலருக்கு சாத்திரமும் பார்த்துக் கொண்டால் பொழுது பயனுள்ளதாகப் போகும் என்றும் கூறினார். அடுத்த நாளே சிவபாலியின் வீட்டில் மெல்ல மெல்ல சனம் நிறைய ஆரம்பித்தது.

"டேனிஸ்காறங்களட்டை வைத்தியம் செய்து என்ன புண்ணியம்... ஆர் தப்பினான்?" சாமியைப் போல ஒரு ஆள் இந்த நாடு வந்தது வந்தது பெரிய பாக்கியம், என்று கூறி பல பெண்கள் சாமியாரை முகம்மலர வரவேற்றார்கள். வெளிநாடு வந்து நம்ம சனம் அறிவு பெற்றிருக்கும் என்று பயந்தபடி வந்த சாமியாருக்கு அவர்களுடைய அறிவின் ஆழத்தைப் பார்த்தவுடன் புதுத் தெம்பு

படிப்பகம்

www.padippakam.com


பிறந்தது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா என்று மனதில் நினைத்துச் சிரித்தார்.

இமய மலையின் உச்சியில் இருக்கும் வெள்ளைக் காகத்தைப் பிடித்து அதன் இரத்தத்தில் களிம்பு செய்து நாக்கில் தடவினால் சுகம் வருமெனப் பலருக்குக் கூறி ஆளுக்கு பத்தாயிரம் குறோணர்கள் வீதம் வசூலித்துக் கொண்டார். வாய் பேசாதோரை வாய் பேச வைத்தல், கண் தெரியாதவருக்கு பார்வைதர கவரி-மான் மயிர் பிடுங்கப் பணம் என்று மந்திரவாதி ஒரு வாரத்திலேயே இலட்சாதிபதியாகிவிட்டார்.

டாக்டர் படிப்புப் படித்தாக போலியான சான்றிதழ் எடுத்து இலண்டன் போய், ஏதாவது ஓட்டலில் சர்வராக வேலை செய்யலாமெனப் புறப்பட்ட சாமியார் தனக்கு அடித்த குரு சந்திரயோகத்தை எண்ணி புளகாங்கிதமடைந்தார். தனக்கு முந்தியே எம்.ஏ, பி.எச்.டி சான்றிதழ்கள் செய்து கொண்டுபோய் சர்வர் வேலை பார்த்து மாடாக முறியும் நண்பர்களை எண்ணிச் சிரித்தார், மெல்ல உறங்கினார்.

அவர் ஒரு மணி நேரம் உறங்கியிருக்கமாட்டார், பளீர் ! , என்ற பலத்த சத்தம்.

கனவு கலைந்தது. கண்களைத் திறந்தார். கண்ணாடி ஜன்னல் மறுபடியும் உடைந்து கிடந்தது. அந்த ஓட்டை வழியாக சாமியார் வெளியே எட்டிப் பார்த்தார். அங்கே மோகினிப் பேய் போல ஒரு உருவம் வெள்ளைச் சேலை கட்டி ஆடிக் கொண்டிருந்தது.

ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு சாமியார் ஓலமிட்டபடி ஓட ஆரம்பித்தார். சிவபாலியும் பிரியாமணியும் ஓடிவந்து நடுநடுங்கியபடியே நின்ற அவரைப் பிடித்துக் கொண்டனர்.

எல்லாமே மேகினிப் பேயின் வேலைதானென சாமியார் நடுநடுங்கியபடியே கூறினார். மந்திரக் கோலை எடுக்க முன்னர் காரியம் நடந்துவிட்டதாகச் சொன்னார். கோபம் கொண்டு சிவபாலி போலீசுக்குப் போன் செய்யப் போனபோது சாமியார் தடுத்தார். இது போலீஸ் பிடிக்கக் கூடிய பேயல்ல என்றார். தாடியும், மந்திரக் கே-ாலும், போலிக்கடவுச்சீட்டும், போலிச் சான்றிதழ்களுடனும் நிற்கும் தன்னைக் கண்டால் போலீசுக்கு பேயைப் பிடித்ததைவிட பெரிய

www.padippakam.com



விடயமாகிவிடுமென்ற இரகசியத்தை அவர் மட்டுமே அறிவார். எனினும் வாழ்க்கையில் முதல் முதலாக பேயைக் கண்ட கலக்கத்தால் ஆடிப் போன அவர் அங்கிருந்து விரைவாக ஓடிப்போக மனதுள் திட்டமிட்டார்.

ஓடுவதற்கு முன் சிவபாலியின் காதில் பூச்சரத்தை சுற்றிவிட்டு ஓட வேண்டும். இல்லாவிட்டால் சாயம் வெளுத்துவிடும், பணத்தையும் வாங்க முடியாது என்று உணர்ந்து கொண்டார். பேயே நேரடியாக வந்துவிட்டதால் அடுத்தநாள் மதியமே பூசைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். உடைந்த ஜன்னல் கண்ணாடியில் மெழுகு சீலையைப் போட்டு மூடியிருந்தார் சிவபாலி.

"அடியேய் பூமரம் ஏழு மலையேறி இங்க வந்திட்டாயோ... மலையாள பகவதி... இறக்கிறன்டி ... " சாமியார் ஆக்ரோசமாக ஓலமிட்டார். மந்திரக் கோலால் தலையில் ஓங்கியோங்கி அடித்தார்.

அவர் பேசிய வசனங்களில் பாதி ஏதோ ஒரு தமிழ் திரைப்படத்தில் கேட்டது போலவும், கேட்காதது போலவும் இருந்தது. மோகினிப் பேயைப் பிடிக்க வேண்டுமென்று எழுந்த ஆத்திரம் அவருடைய அறிவை மழுக்கிவிட்டது.மறுநாள் கும்பம் வைக்க சகல ஏற்பாடுகளும் செய்தார். அந்த நாள் அவருடைய வாழ்வில் மறக்க முடியாத அனுபவங்கள் எல்லாம் நடந்தன... பேய்களின் ஓலங்களை நேரடியாகக் கேட்டு கலங்கிய நிகழ்வுகளும் நடந்தது... அது மட்டுமா இன்னும் பல நடந்தன...

## 13

மண்டபத்தின் நடுவே ஓம குண்டம் தகதகவென எரிந்து கொண்டிருந்தது. அதற்குள் கிடந்த சுள்ளிகள் கடகடவென வெடித்து எரிந்தன. எங்கும் புகை மூட்டமாக இருந்தது. அதைப் பார்க்க சிவபாலிக்கு பயமாக இருந்தது. முன்பு வாடகைக்கு இருந்த வீட்டில் வெள்ளிக்கிழமை தோறும் பிரியாமணி சாணத் தண்ணீர் தெளித்து 25.000 குறோணர் தெண்டம் கட்டிய கொடுமை மெல்ல நினைவுக்குள் வந்து போனது.

சாமியார் தலைவிரி கோலமாகி, சிவப்பு நிற அங்கியால் தேகத்தை மூடியிருந்தார். முகத்தில் பல்வேறு சாயங்களைப் பூசி பெரும் பரபரப்பாகக் காணப்பட்டார்.

படிப்பகம்

www.padippakam.com



பிரியாமணியும், சிவபாலியும் கொலைக்களம் கொண்டு போகும் ஆடுகள் போல இருந்தார்கள். நெஞ்சிற்குள் உலக்கையால் குத்தினது போன்ற அடி இறங்கின ஓசைகள். நாங்கள் யார்... ஏன் இந்த நாட்டிற்கு வந்திருக்கிறோம் என்பதெல்லாம் மறந்து, மோகினிப் பிசாசைப் பார்க்கும் ஆவலில் மாந்திக் கிடந்தனர்.

இருவருமே எதிர்பாராத நிலையில் சரேலெனப் பாய்ந்த மந்திரவாதி ஒரு நெருப்புக் கொள்ளியை ஓம குண்டத்தில் இருந்து எடுத்து, தீச் சுவாலையை நக்கி, கபக்கென வாயில் வைத்து அணைத்தார். விசுக்விசுக்கெனப் பல்டியடித்து ஜன்னலில் வெளவால் போல தொங்கினார். விசர் நாய் போல அவருடைய நாக்கு வீணத்துடன் வெளியில் ஆடியது. பின்னர் கலீரெனச் சிரித்தபடி மேசை மீது குதித்து அதே வீச்சில் ஐகாவாங்கித் திரும்பி, இடுப்பைக் கெம்பி ஒரு முசுறல் பாய்ச்சல் பாய்ந்து சிவபாலியின் உச்சந்தலையைப் பிடித்தார்.

"பூமரம்ம்ம்ம்...."என்று உரக்கக் குரலெடுத்துக் கூவினார். சிவபாலி பூமரத்தைத் தேடி அங்கும் இங்கும் பார்வையை வீசினார்.

"பூமரம் நான் சொல்லுறதைக் கேள்?" என்று மந்திரவாதி அவரைப் பார்த்துச் சொன்னபோதுதான் அந்தப் பூமரம் தான்தான் என்று புரிந்து கொண்டார்.

"பூமரம், குஞ்சு இரண்டு பேரும் நான் சொல்லுறதைக் கேளுங்கோ.." நீங்களோ நானோ மோகினிப் பேயை கண்ணால பார்த்தால் இரத்தம் கக்கிச் செத்துப் போடுவம். பூமரம் இந்தா இந்தச் சேலைத் துண்டால் குஞ்சுவின் கண்களைக் கட்டிவிடு., என்று ஒரு துணியைக் கொடுத்தார்.

குஞ்சு என்பது பிரியாமணியை என்பதைப் புரிந்து கொண்ட சிவபாலி, பிரியாமணியின் கண்களை அந்தச் சீலைத்துண்டால் இறுக்கிக் கட்டினார். பின்னர் மந்திரவாதி இன்னொரு சீலைத்துண்டைக் கொடுத்து தன்னுடைய கண்களையும் கட்டிவிடும்படி கூறினார்.
அவரின் கண்களையும் கட்டியபிறகு, சிவபாலியின் உள்ளத்தில் மெல்லிய பயம் படர்ந்தது. தான் மட்டும் கண்ணைக் கட்டாமல் இருந்ததால் அவருக்கு மெதுவான அச்சம் இருந்தது.

www.padippakam.com



அந்த நேரம் கும்பத்தில் கட்டியிருந்த சால்வையை எடுத்து சிவபாலியிடம் நீட்டிய மந்திரவாதி அவருடைய கண்களையும் கட்டச் சொன்னார். சிவபாலி அதனால் கண்களைக் கட்ட மந்திரவாதி தடவித் தடவி வந்து அதை இறுக்கிவிட்டார். தனக்கு முந்தியே கண்களைக் கட்டிய மந்திரவாதியின் நேர்மையை மெச்சினார் சிவபாலி.

“பூமரம், குஞ்சு இரண்டுபேருமே கவனமாகக் கேளுங்கோ நான் சொல்லாமல் கண்கட்டை ஒருதரும் அவிழ்க்கக் கூடாது. அவிழ்த்து ஏதாவது நடந்தால் நான் உயிருக்குப் பொறுப்பில்லை, மந்திரவாதி கனத்த குரலில் கூறினார். அவருடைய குரல் இப்போது அடியோடு மாறி பாதாளத்தில் இருந்து கேட்பது போலக் கேட்டது.

“இல்லைச் சாமி ! செத்தாலும் அவிழ்க்க மாட்டம்” சிவபாலியும் பிரியாமணியும் நடுங்கும் குரலில் கூறினார்கள். திருப்தியுடன் தலையாட்டிய மந்திரவாதி அவர்களுக்கு தெரியாமலே தனது கண்களைக் கட்டியிருந்த சேலைத் துண்டை அவிழ்த்து ஓர் ஓரமாக வைத்துக் கொண்டார்.

மடியில் இருந்த லைற்றரை எடுத்து , சடீர் ! சடீ, ரென காஸ்சை அடித்து இருவரின் நாசிகளிலும் புரையேற்றினார். போதைப் புகையால் இருவரையும் மயங்கியும், மயங்காததுமான ஒரு குழைவான பதத்தில் வைத்துக் கொண்டார். அந்த இருவரும் கண்ணிருந்தும் குருடராகிவிட்டதை எண்ணியபோது மந்திரவாதிக்கு சிரிப்பு சிரிப்பாக வந்தது. கடகடவென ஓங்கிச் சிரித்துக் கொண்டார்.

ஒரு மணி நேரத்திற்கு மேலாக மந்திர ஒலிகள் வானைப் பிளந்தன. பேய் போல உறுமல், கரடிச் சத்தம், வெளவால் ஒலி, நாய் ஊளையிடும் ஓசைகள் எல்லாம் கேட்டன. திடீரென தாம்பாளம் புரளும் ஓசை.. உஹு...உஹு.... சினிமா நடிகை ஒருத்தியின் குரலில் சிரிக்கும் ஓசை... சிவபாலி காதுகளை கூராக்கிக் கொண்டார்.

“டேய்... ஏன்டா என்னை.. அழைச்சாய்...” மோகினி அக்கினிக்குண்டத்தால் எழுந்து வருவதுபோல சத்தம் கேட்டது. சிவபாலிக்கும், பிரியாமணிக்கும் தேகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

“மலையாள மோகினி... நான்தாண்டி தாண்டவச் சிங்கம்... ஏனடி

www.padippakam.com



குழந்தைகளின் ஜன்னலை உடைச்சாய்?" மந்திரவாதி கத்தினான். "டேய் சிவபாலி உனக்கு முள் முருக்கடி சிவன் கோயில் தெரியு-மாடா... " மோகினி கேட்டது. முள்முருக்கடி சிவன் கோயில் என்றதும் எங்கேயோ கேட்ட பெயர் போல இருந்தது. அதுதான் அவர் போன பிறவியில்மணியமாக இருந்த கோயிலென்று காண்டம் வாசித்தவன் சொன்னதும் சட்டென நினைவுக்கு வந்தது.

"டேய் நீதாண்டா போன பிறவியிலை முள்முருக்கடி சிவன் கோயில் மணியமா இருந்தனீ ?" மோகினி அழுதது.

அதைக் கேட்கக் கேட்க சிவபாலிக்கு கைகள், கால்களெல்லாம் மூட்டு மூட்டாகக் கிடுகிடுத்தது. அவர் காண்டம் வாசித்து அறிந்த உண்மை மோகினிக்கும் தெரிந்திருப்பதை அறிந்து ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு "ஐயோ ! " என்று ஓலமிட்டார்.

"பளீர்!" பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமானுக்கு முதுகில் விழுந்த அடி போல முதுகில் ஒரு பிரம்படி விழுந்தது, துடிதுடித்துவிட்டார்.

"பூமரம் கதைக்காதை நீ வாயைத் திறந்து பேசினால் மோகினி பிரம்பாலை அடிக்கும், என்ன நடந்தாலும் நடக்கட்டும் வாயை மட்டும் திறவாதே.. , என்றார் மந்திரவாதி.

"அடியேய் ஏலா சொல்லாமல்" கோபம் கொள்ளாமல் உன் பேரைச் சொல்லடி... ,

"என் பேரா ... இரத்தினம்.... "

"ஐயோ ! பல்லாங்குழி ஆட்டக்காரி, பால்போல வெள்ளைக்காரி.. ஐயோ நீயேன் வந்தாய்... " மந்திரவாதி அலறினார்.

"போன பிறவியில முருகன் கோயிலிலை வைத்து சத்தியம் செய்து கடைசியிலை கையை விட்டானே... நினைவிருக்கா" மோகினி அழுதது.

, நீலி... அகங்காரி.. பொத்தடி வாயை.. உனக்கு என்ன வேணும் ஆடா, மாடா, கோழியா எது வேணுமென்றாலும் தருவேன்டி.. தொலைத்து போடி... , மந்திரவாதி கத்தினான்.

www.padippakam.com



"நான் போகமாட்டன்... " மோகினி அழுதது.

"போடி.. போடி... " மந்திரவாதி மோகினிக்கு ஓங்கியோங்கி அடித்தான்.

"ஐயோ அடிக்காதே ! அடிக்காதே ! " என்று மோகினி மேலும் அழுதது.

காண்டம் வாசித்த பரதேசி போன பிறவியில் இப்பிடியொரு காதலி இருந்த கதையை சொல்லவில்லையே என்று மறுபுறம் சிவ-பாலி துடித்தார். அந்த அழகிய தேன் ஒழுகும் குரலுடைய பால் வெள்ளை நிற இரத்தினம் யாராக இருப்பாள் என்று தன்னுடைய ஊனக் கண்களால் பார்க்க முடியவில்லையே என்று துருதுருத்தார்.

சிறு பொழுது அமைதி...

திடீரென ஒரு மின்னல் வெட்டு ஒலி...

"விலகடா பூசாரி நாயே... " மோகினி தள்ளி விழுத்த மந்திரவாதி அலறியபடி கீழே விழுகிறான். மோகினி பாட்டுப் பாடத் தொடங்கியது.

"என் மேனி உருகுதே... "

ஏதோ ஒரு திரைப்படத்தில் கவர்ச்சி நடிகை ஒருத்தியின் நடனம் போல மோகினியின் நடனம் ஆரம்பித்தது.. சிவபாலிலை-யத் தடவியது.. கால்களை அவருடைய தோள்களில் போட்டு கிளுகிளுப்பூட்டியது.. அவருடைய தேகத்தை வருடியது..

பிரியாமணியை கட்டின நேரம் இப்பிடியொரு இரத்தினத்தைக் கட்டியிருக்கலாமே என்று கவலைப்பட்டார். தன்னை அடியோடு மறந்து மோகினியைக் கட்டிப்பிடித்து அதற்கே அடிமையானார்... பெருங்குரலெடுத்துப் பாட ஆரம்பித்தார்..

"அத்தை மகள் இரத்தினத்தை அத்தான் மறக்கவில்லை.. அன்ன நடை சின்ன இடை எல்லாம் வெறுக்கவில்லை.. " என்று ஒரு சினிமாப்பாடலை எடுத்து நீட்டினார்..

படிப்பகம்

"தாயே நீ எத்தனை தரம் வேண்டுமொனாலும் ஜன்னலை உடை நான் கவலைப்படமாட்டன்... காதலுக்காக தாஜ்மகாலைக் கட்டினான் ஷாஜகான் இந்த சிவபாலி காதலிக்காக ஜன்னலைக் கட்டினானெண்டு என் கல்லறையில் எழுதப்படட்டும்... ,

சட்டென மோகினி சிவபாலியின் குரல்வளையைப் பிடித்தது. வலியினால் வாயைத் திறந்தார். அந்த நேரம் பார்த்து அவருடைய வாய்க்குள் ஏதோ ஒன்று விழுந்தது... அதை விழுங்காது ரேஸ் ஓடும் குதிரை கஞ்சா உருண்டையை விழுங்காமல் தொண்டைக்குள் வைத்திருப்பது போல விழுங்காமல் வைத்திருந்தார்... மீண்டும் பளீரென சுள்ளிடும் அடி! ஆ ! வென்றபடியே அதை விழுங்கினார்... அத்தோடு மோகினி மறைந்துவிட்டது...

சொற்ப நேரத்தில் "கர்ர்ர்... " என்ற உறுமல் சத்தம் வானைப் பிளந்தது...

"ஐயோ..." என்று மந்திரவாதி அலறினான்...

"பாதாளச் சாக்கடையா ஏன் வந்தாய்... போடா போ... , மந்திரவாதி பயத்தால் கத்தினான்.

"முடியாது ! ஆடியேய் குளுகுளு சிங்காரி பிரியாமணி உன்னை விடமாட்டன்... " பாதாளச்சாக்கடையன் கத்தியது. மந்திரவாதியை ஓங்கியோங்கி அறைந்தது. அவன் , ஐயோ ! ஐயோ ! , என்று மறுபடியும் அலறி விழுந்தான்.

பாதாளச் சாக்கடையனின் நடனம் அகோரமாக நடப்பது தெரிந்தது. தரையே கிடுகிடுத்து ஆடியது...

"பாதாளச் சாக்கடையா ! எங்கடை குஞ்சு பிரியாமணி நல்லவள் அவளை நெருங்காதே.. " மந்திரவாதி ஓலமிட்டான்.
அவனை சிறிதும் அசட்டை செய்யாது பாதாளச் சாக்கடையன் பிரியாமணியின் கைகளை முத்தமிட்டது... அவளுடைய தேகமெல்லாம் கட்டித்தழுவிப் புரண்டது, தலைமயிரைப் பிடித்து இழுத்தது... கன்னத்தை பிய்த்து பிராண்டியது.

"பிரியாமணி விடடா நாயே"என்று அலறினாள்.

அந்த நேரம் பளீரென்று சிவபாலிக்கு விழுந்த அடி அவளுக்கும்

www.padippakam.com



விழுந்தது.. "ஐயோ.. !"என்று கத்தினாள்.

"அம்மா குஞ்சு என்ன நடந்தாலும் வாயைத் திறவாதை நான் தான் கடைசியில் வெல்லுவேன்.. " மந்திரவாதி ஈனமாக முனகினான்.

திடீரென பாதாளச் சாக்கடையன் பிரியாமணியை உவிந்து முத்தமிட்டது...

வாழ்க்கையில் அறிந்திராத பாதாளச் சாக்கடை நாற்றமடிக்கும் அதனுடைய வாய் நாற்றத்தால் அவளுக்கு வயிறே குமட்டியது...

"ஐயோ" என்றபடி கீழே விழுந்தாள்...

பாதாளச் சாக்கடையன் ஓநாய் போல ஊளையிட்டபடி அவளுடைய உடலையே பார்த்தது....

# 14

சிறு பொழுது மயான அமைதி...

பிரியாமணியை அதற்குமேல் எதுவும் செய்ய முடியாதெனக் கருதித்தான் மந்திரவாதி அமைதியாக இருந்தார் என்பது சிவபாலிக்குத் தெரியாது.

சட்டென சிவபாலியினதும், பிரியாமணியினதும் கண்களைக் கட்டியிருந்த சேலைத்துண்டை அவிழ்த்துவிட்டார் மந்திரவாதி.

சிவபாலிக்கு தலை சுற்றி, கண்கள் இருள்வது போல இருந்தது. நீண்ட நேரம் கண்கள் கட்டப்பட்டிருந்ததால் எல்லாம் இருட்டாகவே தெரிந்தது.கமேரா லென்சை துல்லியமாக்கும்போது வரும் தெளிவான படம் போல, மங்கலான புகைக்குள் இருந்து மந்திரவாதியின் தோற்றம் மெல்ல வெளியே வந்தது.

வாய் முழுவதும் இரத்தம், பிறாண்டல் காயம், மாடு சூப்பிய பனங்கொட்டை போல தாறுமாறாகக் கிடந்த தலைமுடியென்று அலங்கோலமாகக் காட்சி தந்தார்.

"சாமீ ... சா...சா... மீ..." சிவபாலி மெல்ல குரல் கொடுத்தார்.

www.padippakam.com



"ம்... முனகல் சத்தம் ... பட்டீர்... பட்டீர் என்று தேகத்தை முறிக்கும் ஒலி" எலும்புகள் கடகடத்தன.. மந்திரவாதி மெல்ல தன்னிலைக்கு வந்தார். இருவரையும் கூர்ந்து பார்த்தார்...

குஞ்சுகளே.. நலமாக இருக்கிறீர்கள்தானே... " அமைதியாகக் கேட்டார்.

"ஓம் சாமி... "

"சத்தமெல்லாம் கேட்டதுதானே.. எத்தனை விதமான பேய்கள் எல்லாம் இந்த வீட்டில் இருந்திருக்கு அப்பப்பா... பார்த்திருந்தால் செத்திருப்பீர்கள்... எதுக்குமே பயப்படாத நானே ___ போனேன்... ,"என்றார்.

"இல்லைச்சாமி .. நாங்களும் எல்லாச் சத்தங்களையும் கேட்டனாங்கள்.. ஐயோ எல்லாமே துர்த்தேவதைகள்... " பிரியாமணி பக்தியுடன் கன்னத்தில் போட்டாள்.

"பூமரங்களே அச்சம் வேண்டாம் ! எல்லாப் பேய்களுமே ஆறு, மலை தாண்டி ஓடிவிட்டன.. ஆ பாதாளச் சாக்கடையன் மட்டும் போக மறுக்கிறான்... "

"பாதாளச் சாக்கடையனோ..." பிரியாமணிக்கு வயிறு குமட்டி தேகமெல்லாம் நடுங்கியது.

"அந்தப் பேய் சிறீலங்காவில இருந்து வந்த பேயென்றுதான் நினைத்தேன்.." ஆனால் அதனுடைய வாயிலிருந்து வீசிய பயறியா நாற்றம் சந்தேகம் தந்தது.. டென்மார்க் பேயள் ஆடின கூத்தால நோர்வேயில இருந்து வந்ததுதான் பாதாளச் சாக்கடையன். சாதாரண பேயில்லை கெட்ட சாமான்.. வீரிஜந்து.. , என்றார் மந்திரவாதி. அவருடைய கணிப்பில் அது ஒரு வெள்ளைக்கார பேயாக இருக்கலாமென சிவபாலி நினைத்தார்.

"ஐயா இதைவிட டென்மார்க் வெறிக்குட்டி மாடன் காரங்குறைஞ்ச பேயெல்லோ.. "சிவபாலி நாலு பக்கமும் பார்த்துவிட்டு அடக்கமாகக் கேட்டார்.

ஆ... , மந்திரவாதி அலறியபடியே இறப்பர் பந்து போல எகிறி பிரியாமணியின் தொண்டையைப் பிடித்தார். அவள் கலங்கிவிட்டாள்...

www.padippakam.com



இரு கன்னங்களாலும் தாரை தாரையாக நீர் வடிந்தது.

"மகளே இந்தப் பூமரத்தின் வயிற்றில் இந்தக் கருங்காலிக் கட்டையால் ஓங்கியோங்கி அடி.. பாதாளச் சாக்கடையனை இறக்க வேற வழியில்லை.. "

இப்பொழுது பிரியாமணியின் தொண்டைக் குழியை விட்டுவிட்டு சிவபாலியின் உச்சந்தலையைப் பிடித்துக் கொண்டார்.

தேகம் புடைக்க நரம்புகள் கட்டுமீறித் தெறிக்க பிரியாமணி அகிலம் போற்றும் அகிலாண்டேஸ்வரியாய் எழும்பினாள். கருங்காலிக் கட்டையால் கட்டாக்காலி மாட்டுக்கு வாத வருத்தமின்றி வீசியடித்தது போல சிவபாலியின் வயிற்றில் ஓங்கியோங்கி அடித்தாள்.

ஏற்கெனவே கண்ணைக் கட்டிவிட்டு மோகினிப் பேய் போட்ட ஏதோ ஒரு பொருள் வயிற்றுக்குள் போய் வயிறு புரட்டிக் கொண்டிருந்தது. கூவில் கள்ளில் செல்லமாக வளர்ந்து அவருடைய பானை வயிறு சாப்பாடின்றி நொய்ந்து கிடந்தது. அந்த எக்கிய வயிற்றில் பிரியாமணி அடித்த அடியில் கமறிக் கமறி சத்தியெடுத்தார்.

துர் நாற்றத்துடன் கரிக்கரியாக சத்தி கொட்டுப்பட்டது. தேவர்கள் வானில் இருந்து பூமாரி பொழியக் கூடியளவிற்கு

அவருடைய ஓங்காள ஓசை வானைப் பிளந்தது.. கடையிசியில் பித்தக்கட்டியும், இரத்தமும் சொடக்கென வெளியே கொட்டுப்படும்வரை அடிபோட்டாள் பிரியாமணி. சிவபாலி சுழன்று கீழே விழுந்தார், அத்தோடு பாதாளச்சாக்கடையன் மலையேறியது.

அரைமணி நேரம் பரவசத்தின் பின்னர்தான் சிவபாலியும், பிரியாமணியும் சாதாரண நிலைக்கு வந்தனர். சாமியார் ஒன்றும் தெரியாத மனிதர் போல சிரித்துக் கொண்டிருந்தார். இப்போது அவர் சாதாரண மனிதர்.

சிவபாலி , தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போய்விட்டது என்று வயிற்றைத் தடவியபடியே கூறினார். செய்வினை செய்து சாப்பாட்டோடு கலந்து கொடுத்ததால் வந்தவினை என்றும் சாமியார் ஒரு போடு போட்டுவைத்தார். இவ்வளவு கரி கக்கியிருக்கிறீர் எல்லாம் வினை என்று அவர் எடுத்த சத்தியை தடியால் கிண்டிக் கிண்டிக் காட்டினார்.

“எல்லாச் சூனியங்களையும் கரிக்கரியாகக் கக்க வைத்துவிட்டேன் இனி பாதாளச் சாக்கடையன் நெருங்காது”என்று புது நம்பிக்கை கொடுத்தார். வீட்டைத் துப்புரவு செய்து எல்லாவற்றையும் ஒரு பையில் போட்டு கட்டி முடிக்க ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. மோகினிப் பேயையும், பாதாளச்சாக்கடையனையும் மந்திரக் கோலுக்குள் அடக்கி வைத்திருப்பதால் இனி தான் அந்த வீட்டில் ஒரு கணமும் இருக்கக் கூடாது என்று மந்திரவாதி ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

“சாமி ஒரு நாளைக்கு ஆறுதலாக நின்று போகலாமே.. ”

“பூமரம் ஒரு நாளல்ல ஒரு வருடம் நிற்க ஆசை.. ஆனால் துட்டதேவதைகளை மந்திரக் கோலில் அடைத்தால் அதற்குப் பிறகு அந்த வீட்டில் நிற்கக் கூடாது என்பது ஐதீகம். நான் நின்றால் மோகினி திரும்பி வரும், வந்தால் இதேபோல இன்னொரு பூசை செய்ய வேணும்..”

“வேண்டாம் ! வேண்டாம் ! ” சிவபாலி வயிற்றைத் தடவிக் கொண்டார்.

அவருக்கு பேசியபடியே கொடுக்க வேண்டிய எல்லாவற்றையும் கொடுத்து நடுச்சாமம் புறப்படும் புகைவண்டியில் ஏற்றி வைத்தார். சுவிஸ் பக்கம் போனால் நல்லதென யாரோ சொன்னதால் முதலில் புகை வண்டி வழியாக ஜேர்மனிக்குள் நுழைந்தார் சாமியார். ஜன்னலில் நின்று ஆடிய மோகினியை நினைக்க நினைக்க அவருக்கு வயிறு கலக்கியது... அவரை அனுப்பிவிட்டு சிவபாலி நம்பிக்கையுடன் வீடு வர நேரம் இரவு ஒரு மணியாகிவிட்டது..

உடைத்த கண்ணாடிக்கு இனி இன்சூரன்ஸ் கம்பனி ஒரு

www.padippakam.com



சதமும் தரமாட்டான் என்பது அவருக்குத் தெரியும். மோகினிப் பேயை சாமியார் பிடித்துக் கொண்டு போய்விட்டதால் இனி கண்ணாடிக்கும் ஜன்னலுக்கும் பழுதில்லை என்று நினைத்துக் கொண்டார். நாளைக்கே வட்டிக்கு விடும் பிள்ளைபுத்திரனிடம் கடப்பாரை வட்டிக்குத்தன்னும் கடனெடுத்து ஜன்னலுக்கு மீண்டும் புதிய கண்ணாடி போட எண்ணிக் கொண்டார்.

கொட்டாவி விட்டபடியே படுக்கையில் சரிந்தார். ஐயாமுத்து வீட்டில் சாப்பிடப் போய் சன்னதமேறி வீடு வாங்கி, கறுவலுக்கு அடித்த குற்றங்களுக்கெல்லாம் இப்போது நல்ல தண்டனை கிடைத்துவிட்டதென நினைத்து வருந்தினார்... கண்கள் மெல்லக் கயர்ந்தன.. அவருடைய கொறட்டைச் சத்தமே அவருக்குக் கேட்குமளவிற்கு தூக்கம் மரியானா அகழிக்குள் இறக்கியது போல அவரை ஆழஆழ இறக்கியது...

அடுத்தநாள் அதிகாலை அவர் வாழ்வில் காணாத விளையாட்டெல்லாம் நடக்கப்போவது தெரியாமல் ஆழ்ந்து உறங்கினார்...

அந்தப் பொன்னான நேரம் அவரை நெருங்கிக் கொண்டிருந்தது....

## 15

ஆப்கானிஸ்தான் டோராபோரா மலையின் மீது பின்லாடனைத் தேடி அமெரிக்கர்கள் காப்பற் குண்டுகளை வீசிக்கொண்டிருந்த காட்சிகளைக் காட்டி தொலைக்காட்சியில் யாரோ இருவர் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அதைப்பார்க்க சிவபாலிக்கு மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது எப்படியென்ற கேள்விக்கு பதில் கிடைப்பதைப் போலிருந்தது.

பருந்துத் தலை விமானங்கள் மாறிமாறிக் குண்டுகளை கொட்டக் கொட்ட மலைச்சாரலே புழுதிக்காடாகிக் கொண்டிருந்தது. பின்லாடனைப் பிடிக்கப் புறப்பட்ட அமெரிக்காவின் கதையுடன் மந்திரவாதி மோகினிப் பேயைப் பிடிக்கப் புறப்பட்ட கதையை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டார். அப்படியே முட்டைக் கோப்பியை ஒரு வாய் இழுத்திருக்கமாட்டார், விசுக் ! , கென வயிற்றில் ஒரு குத்து...

www.padippakam.com


வலி சுளீரென ஏறி முள்ளந்தண்டு வழியாக பிடரியில் இடித்தது. மறுபடியும் ஒரு வாய் கோப்பியை இழுத்தார் மீண்டும் அதே வலி...

மந்திரவாதி கொடுத்த கருங்காலிக் கட்டையால் பிரியாமணி வயிற்றில் ஓங்கியோங்கி அடித்தது நினைவுக்கு வந்தது. அடியா அது... வீட்டு அத்திவாரக் கற்களை அமத்த மொங்கான் போட்டது போல இருந்தது. , கலியாணம் கட்டின நாளில் இருந்து அவர் மீது வைத்திருந்த கறளை எல்லாம் இப்படி அடியாக இறக்கிவிட்டாளே பாவி , என்று வருந்தினார்.

"பிரியாமணி !" என்னால ஒண்டுமே ஏலாமல் கிடக்கு... முள்ளந்தண்டிலிருந்து உச்சந்தலைவரை நடுக்கமும் வலியுமாகக் கிடக்கு... , ஓங்கிக் குரல் கொடுத்தார். அதைக் கேட்டதும் பிரியாமணி பயந்துவிட்டாள்.

"ஐயோ மந்திரவாதியும் போயிட்டார் இப்ப நான் என்ன செய்ய... " என்றபடி படியால் சறுக்கி விழுந்து ஓடி வந்தாள்.

"அடிச்ச அடி விடியக் காலத்தாலேயே வேலை செய்யுமெண்டுதான் அவன் பாவி இரரவோட இரவாக தப்பி ஓடினானோ தெரியாது" என்று மனதில் இரகசியமாக நினைத்தார். பிறகு மந்திரவாதிக்கு எதிராக ஏதாவது அறிவுபூர்வமான கருத்து சொன்னால் பூசையின் பலனே சித்திக்காது என்று பிரியாமணி சொன்னதால் நல்ல மந்திரவாதி என்று மனதில் ஒரு தடவை வாழ்த்திக் கொண்டார்.

"டொக்டருக்குப் போன் செய் என்னால ஒண்டும் ஏலாமல் கிடக்கு" மீண்டும் சிவபாலி வலியால் அலறினார். பிரியாமணி டொக்டருக்கு போன் செய்தாள். அவர்கள் அடுத்த வாரம்தான் நேரம் இருக்கிறது என்று மறுமுனையில் இருந்து கூறினார்கள்.

"அடுத்த வாரம் காத்திருந்தால் நான் செத்துப் போடுவன்.. உடன நேரம் வேணுமெண்டு கேள்" என்று அலறினார்.

அவர்கள் மறுமுனையில் இருந்து வருத்தத்தைக் கேட்க, பிரியாமணி மந்திரவாதியின் கதையை விட்டு மற்றையதை எல்லாம்

www.padippakam.com



ஒன்று விடாமல் விளக்கினாள். தொலைபேசியில் கதைத்த டொக்டரின் காரியாலயப் பெண்மணி அவளின் பதட்டத்தைப் பார்த்துப் பயந்துவிட்டாள். சொற்ப நேரத்தில் வைத்தியரே நேரடியாக வருவார் என்று தெரிவித்தாள்.

நேரம் ஆக ஆக சிவபாலிக்கு வயிற்று வலியும் முள்ளந்தண்டு அலறலும் மண்டை சிதறுவது போன்ற வேதனையை மேலும் அதிகரித்துக் கொண்டு சென்றது.

பிரியாமணி இந்த நேரம் பார்த்து மந்திரவாதியை கைவிட்டுவிட்டோமே என்று கலங்கினாள். அங்கும் இங்குமாக ஓடி-னாள். சிவபாலியைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு பயப்பிராந்தி அதிகரிக்கத் தொடங்கியது.

“கிளிங்... கிளிங்... ” வாசற்கதவுப் பெல்லை யாரோ அழுத்தும் சத்தம் கேட்டது. ஓடிப்போய் கதவைத் திறந்தாள் பிரியாமணி.

டொக்கடர்தான் வந்திருந்தார். அவசர அவசரமாகக் கூட்டிக் கொண்டு சோபாவில் விழுந்து துடித்துக் கொண்டிருந்த சிவபாலி-யக் காட்டினாள்.

டாக்டர் சிவபாலியின் கண்கள், காதுகள், அடித் தொண்டை முதலியவற்றைப் பார்த்து, இது சாதாரண இன்புளுயன்சா அண்டப்பத்திர ஆளப்பத்திர கொய் கொய் என்று வழமையான பல்லவியை நீட்டிவிட்டு ஓடலாமென நினைத்து வந்திருந்தார், சிவ-பாலியைப் பார்த்ததும் பயந்துவிட்டார்.

கைக் கடிகாரத்தை பார்த்தார் நேரம் ஒன்பது மணி.. இத்துடன் அவருடைய கடமை முடிவடைகிறது. காதலி அனேற்றாவுடன் கடைக்குப் போக வேண்டும். தாமதித்துப் போனால் விடயம் விவாகரத்துவரை போய்விடுமென மனதில் பயந்தார்.

இருப்பினும் அதைவிட பெரிய பயம் அவருக்கு சிவபாலியைப் பரிசோதித்தபோது வந்தது. இது சாதாரண வருத்தமல்ல என்பதைக் கண்டுகொண்டார். சட்டென எழும்பினார் அவருக்கு தேகமெல்லாம்

படிப்பகம்

வியர்த்தது.. கைகள் நடுங்கின.

பிரியாமணி "என்ன டாக்டர் என்னவென்று துடித்தாள்.." பாதா-ளச் சாக்கடையன்தான் ஏதாவது கோளாறு செய்துவிட்டதோ என்று பயந்தாள்.

டாக்டர் கையிலிருந்த தொலைபேசி மூலம் யாருடனோ கதைத்தார். பலத்த குரலில் எதையோ சொன்னார். அவர் தொலைபே-பசியை கட் பண்ண முன்னரே அம்புலன்ஸ் வந்துவிட்டது.

பாய்ந்து ஓடிவந்த நாலைந்து வைத்தியசாலை ஊழியர்கள் ஸ்ரெச்சரை வேகமாக உருட்டியபடி வந்து சிவபாலியைத் தூக்கிப் போட்டபடியே வேகமாக நகர்ந்து சென்று அம்புலன்சில் ஏற்றினார்கள்.

பிரியாமணி , ஐயோ , என்று அலறினாள். அவளுக்கு ஏதோ தமிழ் படத்தில் வரும் எழுத்தோட்டக் காட்சி போல இருந்தது அது.

"கோலட் டீன் கெப்ற் !" டேனிஸ் மொழியில் வாயைப் பொத்து என்று கூறிவிட்டு டொக்டர் பாய்ந்து வெளியே ஓடிப்போய் சிவபாலி-யுடன் அம்புலன்ஸ் வண்டியில் ஏறினார்.

"படீர்.. ! படீர் !" கதவுகள் சாத்தப்பட்டன. அம்புலன்ஸ் வண்டி காற்றாகப் பறந்தது.

அதனுடைய அலாரச் சங்கு ஊரே திரண்டு வரும்படியாக பெரிய ஒலியில் கேட்டது. டாக்டர் தான் வந்த காரையும் மறந்து ஓடிய ஓட்டத்தைப் பார்த்ததும் நிலமை பாரதூரமானது என்பதைப் பிரியாமணி புரிந்து கொண்டாள்.

அவளின் மனதில் சாப்பறையொலி கேட்டது...

"சிவபாலி செத்து அவள் இன்னொருவனை இரடண்டாந்தாரமாக கலியாணம் கட்டுவதுபோல ஒரு நினைவு அதற்குள் சுழன்று போனது. அந்த நினைவு மறைவதற்குள் அம்புலன்ஸ் சத்தம் மறைந்துவிட்டது...

www.padippakam.com



சிவபாலி என்னவானார். அவருக்கு நடந்தது என்ன.. இன்புளுயன்சாவைத் தவிர வேறு எதையும் அறியாதவர் என்று அவள் கருதிய டாக்டர் ஏன் கலங்கினார்.

உடுப்பை மாற்றிக் கொண்டு வைத்தியசாலையை நோக்கி ஓடினாள்...

அங்கு போகப் போகத்தான் கதை போகாத இடத்திற்குள் போய்விட்டதைக் கண்டு கொண்டாள்..

## 16

காதில் தோடும், கழுத்தில் தாலிக்கொடியும், கையில் குறைந்தது நாலு சோடி தங்கக்காப்பும் இல்லாமல் தெருவில் இறங்கமாட்டேன் என்று மாமிக்காரி இடியப்பச்சின்னிக்கு சத்தியம் செய்து கொடுத்து டென்மார்க் வந்த காரணத்தால் பிரியாமணியால் வைத்தியசாலைக்கு உடனடியகப் புறப்பட முடியாமல் போய்விட்டது. நல்லவேளை அவள் நகைப்பெட்டியைப் பார்த்திருந்தால் கிறுதி வந்தே விழுந்திருப்பாள். மந்திரவாதியின் திருவிளையாடலை அப்பொழுதே கண்டும் பிடித்திருப்பாள்.

தலைக்குக் கீழ் மடித்து வைத்திருந்த நகைகளைப் போட்டபடி வைத்தியசாலை போய்ச் சேர ஒருமணி நேரம் தாமதமாகிவிட்டது. நல்லவேளையாக அவள் பிடவை கட்டி மெனக்கடவில்லை. அப்படிச் செய்திருந்தால் அவள் சிவபாலியை கண்ணாலும் பார்த்திருக்க முடியாது. அவள் போக வைத்தியசாலையில் ஒரு இராணுவக் ஹெலிகொப்டர் பயங்கரமாக காற்றாடி சுழல யாருக்காகவோ தயாராகிக் கொண்டிருந்தது.

விசவாயு பரவுமிடத்திற்குப் பாதுகாப்பாகப் போவது போல உடலை மூடிய உடையணிந்த சிலர் வேகவேகமாக சிவபாலியை

ஹெலிகொப்டரில் ஏற்றுவதைக் கண்டாள். மந்திரவாதிக்குள்ளும் காண்டம் வாசித்தலுக்குள்ளும் வாழும் அவளால் அங்கு என்ன நடக்கிறதென்பதையே விளங்கிக்கொள்ள முடியவில்லை.

படிப்பகம்

www.padippakam.com


திடீரென யாரோ ஒருவன் ஓடி வந்து அவளைக் "கிட்டவராதே என்று விரட்டினான்.

ஹெலிகொப்டர் பலமாக சிறக்கையை சுழற்றியபடி கீழே இருந்த குப்பை கூளங்களை எல்லாம் சுளகால் அடித்தது போலக் மேலே கிளப்பி வேகமாகப் பறந்தது, எங்கோ மறைந்தது.

அவ்வளவுதான் "அத்தான் என்னை விட்டுப் போனியளோ..." என்றபடி பிரியாமணி நிலத்தில் விழுந்து அழுதாள். அவளைப் பொறுத்தவரை ஹெலிகொப்டரில் ஏற்றியதால் சிவபாலியின் கதை முடிந்துவிட்டது என்றே முடிவு செய்து கொண்டாள்.

அங்குவந்த மருத்துவத்தாதி ஒருத்தி அவளை ஆதுரமாகத் தடவி தன்னோடு அழைத்துச் சென்றாள். அவளை ஒரு தனியான அறையில் அமர வைத்தாள். கண்களை ஒற்றிக்கொள்ள ஒரு சீலைத்துண்டைக் கொடுத்தாள். குடிக்க என்ன வேண்டுமென்று கேட்டாள். பிரியாமணி அழுகையை நிறுத்தவில்லை எதுவுமே வேண்டாமென்றுவிட்டாள்.

ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், டாக்டர் வருவார். எல்லாம் விபரமாக சொல்லுவார், என்று அன்போடு கூறினாள். ஒரு பிளாஸ்டிக் கப்பில் குளிர்ந்த நீரைக் கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு மூக்கைச் சீறி கண்களைத் துடைத்துக் கொண்டாள் பிரியாமணி.

சுவரில் இருந்த கடிகாரம் பேய்ப்படங்களில் வருதுபோல "டிக் டிக்" என்று அபசுரமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஐயோ ராசா... எப்பிடியெல்லாம் இருந்தம்... ஆமிக்கும் சண்டைக்கும் பயந்து ஓடிவந்து கடைசி பேயடிச்சுச் செத்தானெண்டு வரவோ? எத்தினையோ நாட்டுப் பேயெல்லாம் இருக்க கடைசி அந்த பாழாய்ப்போன நோர்வேப் பேயோ உன்னை அடிச்சது" என்று அழு-தாள்.

ஒருவேளை மந்திரவாதிதான் ஏதாவது செய்து போட்டானோ என்று முதற்தடவையாக சந்தேகப்பட்டாள். அசோகவனத்தில் இருந்து அவலப்பட்ட சீதைபோல எதையெதையோ நினைத்து அங்கலாய்த்தாள். மாரீச மாயமானைப் பிடிக்கப்போய் ராமன் சிக்குப்பட அலமந்த சீதையாக அழுதாள்.

www.padippakam.com



"நாடு வேணுமெண்டு கேட்டு ஐயா நாங்கள் நாட்டை விட்டே வந்தம்" வீடு வேணுமெண்டு கேட்டதாலே ஐயா நீங்கள் வீட்டை விட்டே போனியளோ... , மருத்துவத்தாதிக்கு அவளின் ஒப்பாரி எதுவுமே புரியவில்லை.

தாதி திடுக்கிட்டுத் திடுக்கிட்டுப் பார்த்துக் கொண்டாள்... , நீயொரு முஸ்லீமோ , என்று பிரியாமணியைப் பார்த்துக் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

"ஐயா நான் மாடு செத்துப்பேச்செண்டு அழுறன் நீயோ கொழுப்பில்லை எண்டு அழுகிறியே!" என்று மருத்துவத்தாதியைப் பார்த்து அழுதாள் பிரியாமணி.

அந்த நேரம் ஒரு டாக்டர் அறைக்குள் வந்தார். மருத்துவத்தாதி அங்கிருந்து மெல்ல வெளியேறினாள். டாக்டர் பிரியாமணியை சி-றுபொழுது அன்போடு நோக்கினார். பிரியாமணி சிறிது அமைதியா-னாள்.

"பிரியாமணி அழ வேண்டாம்.. சிவபாலிக்கு ஒண்டுமில்லை."டாக்டர் சொல்ல அவளுக்கு மனதில் பால் வார்த்தது போல இருந்தது. வேண்டாத தெய்வங்களை எல்லாம் வேண்டினாள்.

"பிரியாமணி உங்களிடம் சில கேள்விகள் கேட்க வேணும்..?" டாக்டர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"உங்களுக்கு H5n1 என்றால் என்னவென்று தெரியுமா ?"

"பிரியாமணி தனக்கு எதுவுமே தெரியாதென்றாள். பெரியபிள்ளையான கையோடு ஆய்ச்சி படிக்க விடவில்லையென்றும் தனக்கு கணிதப்பாடம் ஓடாது என்றும் சொன்னாள். அதன் பிறகு வேறு வழியில் கேள்விகளை அவர் கேட்டார். சிவபாலியின் வயிற்றில் பச்சையாக ஒரு சாமான் இருக்குது... அதிலதான் H5n1 வைரஸ் இருக்கிறதா என்று சந்தேகப்படுகிறோம்.

அதெல்லாம் பாதாளச் சாத்தனின் வேலையென்பதையோ,

படிப்பகம்

www.padippakam.com



மந்திரவாதி வந்த கதையையோ சொன்னால் விடயம் விவகாரமா கிவிடுமெனப் பயந்து அதையெல்லாம் அடியோடு மறைத்துவிட்டாள். தனக்கு அதுபற்றி எதுவும் தெரியாதென்று கூறினாள்.

"பி... ரி... யா... மோனி அதுதானே உம்முடைய பெயர்.."

"ஓம் பிரியாமணி .. "

"நல்லது டாக்டரட்ரிடம் ஒரு காலமும் உண்மையை மறைக்கக் கூடாது. நேற்று இரவு அவர் ஏதோ ஒரு சாப்பாடு சாப்பிட்டிருக்கிறார். அதில நாங்க இதுவரை கேள்விப்படாத ஒரு கிருமி இருக்கு அந்தச் சாப்பாட்டை கண்டு பிடித்தால் கிருமியை அடையாளம் கண்டு பிடித்து சிவபாலியைக் காப்பாற்றிப் போடுவம்.."

பிரியாமணி அழுதாள் தனக்கு எதுவுமே தெரியவில்லை என்றாள்.

"பிரியாமணி உமக்கு பறவைக்காய்ச்சல் என்றால் என்னென்று தெரியுமா ? "

"ஓம் ! "

ஆசியாவில இருந்து வாற பறவைக் காய்ச்சல் இருக்கிற பறவைகள் கழிக்கிற மலத்தில அந்தக் கிருமி இருக்கும்.
சிவபாலியின் வயிற்றில் மாட்டின் சாணம் இருப்பதாக நாங்கள் சந்தேகப்படுறம் அதுதான் குழப்பம்.

மாட்டுக்கும் குருவிக்கும் சம்மந்தமில்லை.. ஆனால் H5n1 வைரஸ் இருக்கிற பறவை எச்சம் போட அதுக்கு மேல மாடு சாணம் போட இரண்டையும் குழைத்து காயவைத்து யாரோ சிவபாலியின் வாய்க்குள் போட்டிருக்க வேணும். சிவபாலி இந்தியா இலங்கை போன்ற நாடுகளுக்கு போயிருக்கிறாரா ? ,

பிரியாமணி வி'யம் அம்பலமாகப் போவதாக பயந்தாள். என்மேனி உருகுதே என்று மோகினியின் சத்தம் கேட்க சிவபாலி ஆவென வாயைத் திறக்க அவர் வாய்க்குள் விழுந்த பொருள்தான் அந்தச் சாணம் என்பதோ அது மந்திரவாதியின் வேலையென்பதே அவளுக்குத் தெரியாது.

"ஐயோ " என்று அலறியபடியே மயங்கி விழுவதுபோல விழுந்தாள்.

www.padippakam.com



## 17

மயங்கி விழுந்த பிரியாமணி அவித்த உருளைக்கிழங்கும், மாட்டிறைச்சிப் பெரியலும் சலாட்டும் கலந்த வாசனை வர கண்களைத் திறந்தாள். அது கண்ணாடி அறையாக இருந்தது. உடலிருக்க தலையைச் சுழற்றும் ஆந்தைபோல தலையை வட்டமாகச் சுழற்றினாள். மடியில் துப்பாக்கியுடன் ஒரு போலீஸ்காரன் நின்று கொண்டிருந்தான்.

"பயப்பிட வேண்டாம் நீர் ஓடிப்போகாமல் இருக்கத்தான் என்னைக் காவலுக்குப் போட்டிருக்கிறார்கள்.. இதைச் சாப்பிடும் , போலீஸ்காரன் சாப்பாட்டுக் கோப்பையைக் காட்டினான்.

"ஏன் என்னை பிடிச்சு வைச்சிருக்கிறியள்... எனக்கு சாப்பாடு வேண்டாம்.. நான் வீட்டை போகவேணும்.. "பிரியாமணி அவனுடன் ஆத்திரமாக டேனிசில் பேசினாள்.

"ஒரு பிரச்சனையும் இல்லை.. உங்க வீடு முழுவதும் சோதனை நடக்கிறது.. ஏதாவது கிருமிகளின் தாக்குதல் இருக்கா என்று சோதிக்கிறார்கள். அவர்களுடைய சோதனை முடிந்ததும் நீர் போகலாம்.. அதுவரை கொஞ்சம் அமைதியாக இரும்.."

பிரியாமணியை வைத்தியசாலையிலேயே காவல் வைத்துவிட்டு வீடு முழுவதும் சோதனை நடாத்தினார்கள். மந்திரவாதி வளர்த்த ஓமம்.. விறகு சுள்ளிகள், அறுகம் புல் தொடங்கி சிவபாலி கமறிக்கமறி எடுத்த சத்திவரை ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் எடுத்துவிட்டார்கள்.

சகல பொருட்களும் பரிசோதிக்கப்பட்டன...

கரும் பச்சை நிறமான அந்தச் சத்திதான் தொடர்ந்து சந்தேகத்தை ஏற்படுத்தியது. பல்கலைக்கழக வைத்தியசாலை ஆய்வு கூடத்திற்கு அது உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டது. அதில் ஒரு பகுதி பேர்ளின், இங்கிலாந்து ஆகிய இடங்களுக்கும் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

தலைநகரில் உள்ள றீஸ் வைத்தியசாலையில் சிவபாலிக்கு தொடர்ந்து வைத்தியம் நடைபெற்றது. அவரைப் பார்க்க யாருமே

படிப்பகம்

www.padippakam.com


அனுமதிக்கப்படவில்லை. எத்தனையோ விதமான வைத்தியங்கள் எல்லாம் செய்யப்பட்டு, காதில் இருந்து போத்தல் போத்தலாக இரத்தம் இழுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டது.

சோதனைகள் முடிந்தபாடில்லை தொடர்ந்து கொண்டே இருந்தன..

வயிற்றுக்குள் வயர் விட்டு குடலின் மடிப்புக்களை தனியாக பரிசோதனை செய்தபோது சிவபாலி துடிதுடித்துப் போனார்.

ஒவ்வொரு டாக்டர் வரும்போதும் அவர்களை சிவபாலி அச்சத்துடன் பார்த்துக் கொண்டார். சிங்கள ஆஸ்பத்திரியொன்றில் மருத்துவத்தாதிமாருக்கு அஞ்சி ஒடுங்கிக் கிடக்கும் ஆதரவற்ற தமிழ் நோயாளிபோல கட்டிலில் பயந்து கிடந்தார். ஒவ்வொரு வைத்தியரைப் பார்த்ததும் வைத்தியம் பழக ஆளில்லாமல் கிடந்தவர்களுடைய கையில் வசமாக மாட்டிவிட்டோமோ என்று எண்ணிக் கலங்கினார்.

அந்த நேரம் அவருக்கு வேலையிடத்து டேனிஸ் நண்பன் ஜொகான்ஸ் வேடிக்கையாக சொன்னதெல்லாம் நினைவிற்கு வந்தது.

“விபச்சாரியிடம் போகாதே - அங்கே உனக்காக எயிட்டஸ் காத்திருக்கிறது”

“சிகரட் புகைப்பவனுக்கு பக்கத்தில் இருக்காதே - உனக்காக புற்றுநோய் காத்திருக்கிறது”

“சபைகளில் சாப்பிடாதே கொலஸ்ரோல் கூடும் - உனக்காக மாரடைப்பு காத்திருக்கிறது”

“இவையெல்லாவற்றையும் விட முக்கியம் எங்கட ஆஸ்பத்திரிகளில் போய் மாட்டுப்படாதே - எயிட்சில இருந்து தப்பலாம், புற்றுநோயில இருந்து தப்பலாம், ஆஸ்பத்திரியில இருந்து உருப்படியாக தப்பி வர ஏலாது”

“ஆஸ்பத்திரியில மாட்டுப்பட்டு உருப்படியாக தப்பி வந்த

www.padippakam.com



ஒருவனுடைய பெயரைச் சொல்லு பார்ப்பம்... ”என்று அவன் கேட்டதும் ஞாபகத்திற்கு வந்தது.

இவைகளை எல்லாம் அங்கு நடமாடும் டாக்டர்களோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கலங்கினார். அவர்களைப் பார்க்கப் பார்க்க எமலோகத்தில் பாவிகள் என்ற பழைய கலண்டரில் நினைவுகளே அவருக்கு வந்தன..

பாலில் தண்ணீர் கலந்ததால் கொதி எண்ணெயில் வீசப்படும் ஒருவன் துடிதுடிக்கும் காட்சி நினைவுக்கு வந்து அச்சமூட்டியது...

அந்த நேரம் வழமைபோல அவருடைய மூளை திடீரென வே-றொரு பக்கமாக வேலை செய்தது..

சுவர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போகாதவங்கள் விட்ட சுருளி வாணங்களை எல்லாம் உண்மையென நம்பி ஏமார்ந்து, வாழ்க்கையை சீரழித்துவிட்டோமே என்று வீறு கொண்டார்.

இந்த ஆஸ்ப்பத்திரியில் இப்படியே இரத்தம் கொடுத்துக் கொடுத்து சீரழிவதைவிட சிறையில் இருந்து கம்பி எண்ணுவது இலகுவானது என்று நினைத்துக் கொண்டார்.

கடைசியில் தன்னுடைய வீட்டுக்கு மந்திரவாதி வந்த கதைதை-யச் சொல்லி வாய்க்குள் சாணக்கட்டியை அவன்தான் போட்டானென்ற உண்மையையும் அங்குள்ள வைத்தியர் ஒருவரிடம் கக்கி வைத்தார்.

அதற்குப் பிறகு அவருக்கு விரைவான வைத்தியம் நடைபெற்றது. பல்கலைக்கழக ஆய்வுகூடம் அது பசுமாட்டுச் சாணகம் என்று ஆய்வு அறிக்கை கொடுத்திருந்தது. அதுவும் டேனிஸ் இயந்திரங்களால் கண்டு பிடிக்க இயலாது போய் அனுபவம் பெற்ற பிரிட்டன் வைத்தியர் ஒருவரே கண்டு பிடிததததாகக் கூறப்பட்டது.

சிவபாலி வைத்தியசாலையில் வைத்து வேறு வழியில்லாமல் உண்மையைக் கக்கியதும் பிரியாமணி விடுதலையானாள்.

www.padippakam.com



அடுத்த வாரம் அவளுக்கு போலீசில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் விசாரணைக்கு வரும்படி அவளும் சிவபாலியும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதைப்பார்க்க மகேந்திர மலையை மத்தாக்கி அதில் பாம்பாகிய ஆதிசேடனை கயிறாக சுற்றி தேவரும் அசுரரும் பாற்கடலை கடைந்த போது முறுகிச் சுழன்ற பாற்கடல் போல அவளுக்க வயிறு சுழன்றது.

## 18

பாதாளச் சாக்கடையனைப் பிடித்தாலும் பிடிக்கலாம் மந்திரவாதியை மட்டும் பிடிக்க இயலாது என்பதை இப்போது சிவ-பாலி புரிந்து கொண்டார்.

ஊரில் உள்ள குண்டுமணியின் பாண் போறணைக்குள் றோஸ் பாயை நுழைத்தது போல அவரைச் சுற்றிக்கட்டி எம். ஆர்.ஸ்கனானருக்குள் விட்டபோது ஆடிப்போனார்.

இவ்வளவு மோசமான கிருமி வயிற்றுக்குள் போனதை நினைத்தபோது அவருக்கு விசர் விசராக வந்தது. என் மேனி உருகுதே என்ற பாட்டு நடந்தபோது காய்ந்த மாடு கம்பில் விழுந்தது போல ஆ.. ஆ... என்று வாயைத் திறந்தால் வந்த வினையென நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டார்.

ஐரோப்பா வந்து, அங்கிருக்கும் முன்னேற்றமான விடயங்களை அறியாமல் விட்டதை நினைத்து அழுதார். மந்திரவித்தை, மந்திரக்கோல், திருநீறு கொட்டுப்படல், மதம் மா-றுதல், சுவர்க்கத்திற்கு வழிகாட்டுதலென்று ஐரோப்பா முழுவதும் அலையும் தமிழ் சனங்களை அவர் கணக்கில் எடுக்காவிட்டாலும் இப்போது தானும் அதில் ஒருவனாகிவிட்டேனே என்பதை நினைத்து இரகசியமாக வெட்கப்பட்டார்.

ஏழெட்டு நிறங்களில் மாத்திரைகள் கொடுத்து அவரை வைத்தியசாலையில் இருந்து துண்டு வெட்டினார்கள்.

www.padippakam.com



"சிவபாலி உமக்கு சிறுநீர்க் காய் மாத்துறதென்றால் என்ன தெரியுமோ ?"

"ஓம் தெரியும் "

"ஒரு மனிதனின் உடம்பில் புது உறுப்பை வைத்தால் அதை முதலில் உடம்பு ஏற்றுக்கொள்ள வேணும். அதுக்குக் காரத்திலும் காரமான மாத்திரைகளை உட்கொள்ள வேணும் , டாக்டர் பீடிகை போடப்போட சிவபாலிக்கு இதயம் படபடவென அடித்தது. விழுங்கின சாணி கடைசயில் சலப்பையைத் தின்றுவிட்டதோ என்று கிலி கொண்டார்.

"சலப்பையும், நுரையீரலும் பாதி பழுதாய்போச்சுது..." அது ரெண்டையும் உடம்பு ஏற்க மறுக்குது.. அதுதான் இவ்வளவு காரமான மாத்திரைகளைத் தாறம்.. உடம்பில் சின்ன மாற்றம் தெரிந்தாலும் உடனே வைத்தியசாலைக்கு பறந்து வரவேணும்.. , என்று கூறி அவருக்கான விசேட வைத்திய அட்டையையும் கொடுத்தார்கள்.

ஏதோ உயிர் போகாமல் இந்தளவில் தப்பியது பெரிய விடயமென மனதில் நினைத்துக் கொண்டார். தன்னுடைய உயிரைக் காப்பாற்றியமைக்காக டாக்டர்களுக்கு நன்றி கூறிக்கொண்டார்.

"சிவபாலி உமக்கொரு எச்சரிக்கை இப்ப உலகத்தில துப்பாக்கிக் குண்டுகளை விட ஆபத்தானது சாப்பாடுதான். உமக்குத் தெரியாத எந்தவொரு பொருளையும் வாயிலை போட வேண்டாம். மாடுகளால் வரும் மூளைக்காய்ச்சல், பறவைகளால் வரும் பறவைக்காய்ச்சல் என்று ஏராளம் விசயங்கள் இருக்கு, கவனமாக நடக்க வேணும். " டாக்டர் கை கொடுத்து மருந்துப் பெட்டிகளுடன் அவரை அம்புலன்சில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினார்.

அம்புலன்சில் போகும்போதே அவர் மனதில் ஏராளம் எண்ணங்கள் கரைபுரண்டன.. கோதாரித் தேவியை கலியாணம் செய்து... அவள் ஆட்டிறைச்சியை மலிவு விலையில் வேண்டி வருடக்கணக்கில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துச் சமைத்து ஆலடிச் சிதம்பரத்தார் சிவலோகம் போன கதையும் ஒரு திரைச் சி-தறல் போல எண்ணங்களில் வந்து போனது.

www.padippakam.com



அவர் வீடு வரவும் போலீசின் கடிதம் அவருக்காகக் காத்திருந்தது. திகதியைப் பார்த்தார், இரண்டு நாட்கள் ஓய்வெடுத்துப் போக அவகாசமிருந்ததால் சிறிது ஆறுதலடைந்தார். அதற்குள் பிரியாமணி கடப்பாரை வட்டிக்குக் கடனெடுத்து புதிய சன்னல் போட்டிருந்ததால் வீடு குளிரில்லாமல் இருந்தது.

நாற்பது வயது போனால் தமிழரெல்லாம் பென்சன் எடுப்பது அவர் வாழும் நகரத்தில் வழமையாகியிருந்தது இதைச்சாட்டி பென்சனை எடுக்கும்படி பலர் அவருக்கு யோசனை சொன்னார்கள். பென்சன் எடுத்துக்கொண்டு சிங்கப்பூர் போய் நகை கொண்டுவந்து வியாபாரம் செய்தால் நல்லா இருக்கலாம் என்று பலர் யோசனை கூறினார்கள்.

பென்சனுக்காக நாரியைப் பிடித்துக் கொண்டு பொய் நடை நடந்து இப்ப ஐயாமுத்துவுக்கு உண்மையாகவே நாரிப்பிடிப்பு வந்துவிட்டதை நினைத்தபோது சிரிப்பும் வந்தது. ஐயாமுத்துவுக்கு முன்னரே பென்சன் எடுத்தால் அந்தாள் எங்கே கொண்டுபோய் மாட்டி ஆரை வைச்சு என்னென்ன பட்டம் கட்டுமோ தெரியாது என்றும் பயந்தார்.

ஹெலிகொப்டரில் போன சிவபாலி வீடுவந்த செய்தி அறிந்து சுகம் விசாரிக்க பலர் வந்தனர். ஒவ்வொருவரும் ஆளுக்காள் ஒவ்வொரு நோயும்.. ஆளுக்காள்... ஒவ்வொரு வைத்தியமுமாக வந்து புலம்பினர்.

அவருக்காக ஆண்டவனை மண்டாட சிலர் பைபிளோடு வந்து அதனுடைய பக்கங்களை வாசித்துக் காட்டினார்கள். அவருக்கு நோய்வரப்போவது முன்னரே எங்கோ சில வரிகளில் சொல்லப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

வெகு விரைவில் கடவுள் வரப்போவதாகவும் சிவபாலி மனம் மாறினால் கடவுளின் ரதத்தில் ஏறி பரடைஸ் செல்லலாம் என்றும் சொன்னார்கள். தமது பேச்சைக் கேட்டால் உலகத்தின் தீயவர்கள் எல்லாம் ஒரு நாள் அழிய, அவர் மட்டும் தப்புவார் என்றும் சொன்னார்கள். அதில் சில டேனிஸ்காரரும் தமிழரும் கலந்திருந்தனர்.

www.padippakam.com



அவர்கள் போக வேறு சில தமிழர்கள் வேறு சில பைபிள் உதாரணங்களுடன் வந்தனர். அவர்கள் வேறு சில சங்கீதங்களை படித்துக் காட்டி சிவபாலி சுவர்க்கம் போக வழி காட்டினார்கள். அப்பிள் பழங்களும், மலைகளும், சோலைகளுமாக சுவர்க்க லோகம் உல்லாசப் பயணிகளின் தீவு போல இருந்தது.

வேறு சிலர் இந்தியாவில் உள்ள அப்பலோ வைத்தியசாலை போனால் நல்லதென்றார்கள். இன்னும் எத்தனையோ ஆலோசனைகள்... சிவபாலி எதற்கும் எதிர்த்துப் பதில் கூறாமல் சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். எதிர்த்துக் கதைத்தால் வரக்கூடிய சிக்கல்கள் பற்றி அவருக்குத் தெரியும்.

“இருக்கிற உலகம்தான் சுவர்க்கம். இந்த உலகத்தில இருக்கிற எல்லா சுகங்களையும் தாங்கள் சுரண்டிக்கொண்டு உன்னைமாதிரி விடுகாயள் அதில உரிமை கேட்காமல் இருப்பதற்காக விட்ட பம்மாத்துத்தான்டா சுவர்க்கம், மற்றப்படி சுவர்க்கமென்று ஒரு சாம்பலும் கிடையாது. நீ உன்னுடைய உரிமையைக் கேட்டுப்பார்... சுவர்க்கம் பற்றி றீல் விடுற அதிகார வர்க்கம் கொலைஞராக மாறும். அவர்கள் சுவர்க்கம் இருக்கிறதா நம்பிருந்தால் ஒருகாலமும் கொலைஞரா மாறமுடியாது கண்டியோ ? கொலைகார அரசுகளும், அவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும் மதங்களும் உலகில் எவ்வளவு பெரிய பம்மாத்து, என்று ரஸ்யக்கம்யூனிஸ்ட் லெனின் மாஸ்டர் சொன்னது நினைவுக்கு வந்தது. திடீரென்று சிவபாலி கோபமடைந்தார்.

“எடியேய் பிரியாமணி ஒருத்தனையும் இனி வீட்டுப் பக்கம் வரவிடாதை, எல்லாரும் புத்தி சொல்லுறானுகள். எவனாவது புத்தி கேட்க வாறானோ சொல்லு பாப்பம்.” தொலை பேசியையும் கழற்றிவிட்டு விட்டு, வீட்டையும் பூட்டிக் கொண்டு அமைதியாக இருந்து தொலைக்காட்சியைப் போட்டார். அங்கேயும் ஒருவன் பரலோகத்துக்கு வழி காட்டுவதாக ஓலமிட்டுக் கொண்டிருந்தான், அதையும் அடித்து நூர்த்தார்.

“நான் போலீஸ்காரனின்ரை விசாரணையை நினைத்து கலங்கிக் கொண்டிருக்க அதுக்குள்ளை எல்லாரும் சேர்ந்து என்னை பைத்தியக்காரனாக்கிப் போடுவாங்கள் போலை ” என்று கத்தினார்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் போலீஸ் ஸ்டேசன் போகும் நாள் வந்தது. பிரியாம ணியுடன் இணைந்து போலீஸ் ஸ்டேசனுக்கு இறங்கினார்.

அங்கு போனதும் அவருக்கு வேறு பல விடயங்கள் விளங்க ஆரம்பித்தன..

இதுவரை காலமும் விசரனாகவில்லை என்று நினைத்திருந்த அவர் இப்போது தான் விசரனாக்கப்பட்டிருப்பதை கண்முன்னாலேயே கண்டு கொண்டார்.

## 19

போலீஸ் நிலையம் இப்போது அடியோடு மாறியிருந்தது. அங்கு உலகத்தைக் காப்பாற்ற வந்த வீரர்கள் போல ஓடித்திரிந்த வெத்துவேட்டு போலீஸ்காரர் சிலரின் கிறுக்குப் போக்குகளுக்கு செப்.11 றே காரணமென்று அருகில் இருந்த ஈரானியர் ஒருவர் கூறினார். முன்னர் சிரித்து வரவேற்கும் போலீஸ்காரன் இப்போது செப்டெம்பர் மிடுக்கு மிடுக்கினான். சிவபாலியின் கடிதத்தை வெடுக்கெனப் பறித்துப் பார்த்தான். அருகில் இருந்த கதிரையில் அமரும்படி கூறிவிட்டு எங்கோ சென்றான்.

சொற்ப நேரத்தில் அங்கு வந்த போலீஸ்காரன் தன்னை அறிமுகம் செய்து கொண்டு, அவர்களை தனது அறைக்கு அழைத்துச் சென்றான்.

அந்த அறை சற்று விசாலமாக இருந்தது. சிறிய படம் காட்டும் திரை, கதைப்பதற்கு வசதியாக மேசை, கதிரை என்று அமர்க்களமாக இருந்தது.

“கோப்பி... ரீ..., இந்தப் போலீஸ்காரன் சிறிது தாழ்மையாகக் கேட்டான்.

“ஒண்டுமே வேண்டாம்... ” சிவபாலி சிரித்துக் கொண்டே கூறி-னார், அவர் முன்னரே டாக்டரிடம் எல்லாவற்றையும் கக்கிவிட்டது நினைவிற்கு வந்தது. அதனால்தான் இந்த விசாரணை வந்திருக்கிறது என்பதும் தான் விரைவில் கம்பியெண்ண வேண்டிய நிலை வரும் என்றும் நினைத்துக் கொண்டார்.

“சிவபாலி உங்க வீட்டு ஜன்னலை உடைச்ச ஆளை நாங்கள் பிடிச்சிட்டம்” போலீஸ்காரன் சிரித்தபடி கூறினான்.

www.padippakam.com



, ஹ...! ஹ ... ! ஹ ...! , என்று அவனைவிட பெரி-தாக சிவபாலி சிரித்தார். அவருக்குக் கண்களால் நீரே வந்துவிட்டது. மோகினிப் பேயை நீங்கள் எப்படிப் பிடிக்க முடியும். பிரியாமணியும் அவரோடு சேர்ந்து சிரித்தாள்.

சிவபாலி உம்முடைய வீட்டு ஜன்னல் இரண்டாவது தடவை உடைந்தவுடனேயே சுடலைப்பக்கமாக நாங்கள் இரகசியமாக ஒரு கமேராவைப் பூட்டி வைத்துவிட்டோம். நீர் தேடும் மோகினிப் பேயை கமேரா தெளிவாகப் படம் பிடிச்சிருக்கு..

“அப்படியா!” சிவபாலி சிலிர்த்தார்.

“என் மேனி உருகுதே !” என்ற பாடலை வாய்க்குள் முணுமுணுத்தபடியே மோகினிப் பேயை வீடியோ படத்தில் பார்க்க ஆசைப்பட்டார்.

“கெதியாக படத்தைப் போடுங்கோ எனக்கு அதைப் பார்க்க ஆவலாயிருக்கு” பிரியாமணி துடித்தாள்.

“சிவபாலி மோகினியைக் காட்டலாம் ஆனால் ஜன்னலை உடைத்த ஆளைக் காட்ட ஏலாது. அந்த ஆளை உமக்குக் காட்டினால் தான் தமிழ் சமூகத்தில வாழ ஏலாது என்று என்னுடைய காலில் விழுந்து அழுகிறார், என்று போலீஸ்காரன் கூறினான்.

“ஆளைத்தன்னும் அறியலாமோ ? ” பிரியாமணி டேனிஸ் மொழியில் இரங்கிக் கேட்டாள்.

“இல்லை , என்று திட்டவட்டமாக தலையசைத்தான் போலீஸ்காரன். ஆனால் அந்த ஆள் நீங்கள் நினைக்கிறமாதிரி பேயில்லை ஒரு தமிழ் ஆள்... ” கிணற்றடித் துலா முறிந்து தலையில் விழுந்தது போல இருந்தது சிவபாலிக்கு.

“என்ன ... தமிழ் ஆளோ ? ” கதிரையை உதைந்தபடி ஆவேசமாக எழுந்தார் சிவபாலி. அவருடைய கை, கால்களெல்லாம் பரபரத்து முறுக்கேறி தினவெடுத்தன.

www.padippakam.com



"அமைதி சிவபாலி! அமைதி ... "அவன் பாவம்... மூளையில மெல்லிய கிறாக் இருக்குது. ஜன்னலை உடைத்த பணத்தையெல்லாம் முறைப்படி கட்டுவதாக சொல்லியிருக்கிறான். நீதி மன்றம் அவனுக்கு சில மாதங்கள் சிறைத்தண்டனை வழங்கும்... போதும்தானே ? , போலீஸ்காரன் இருவரையும் அமைதிப்படுத்தினான்.

"ஆராயிருக்கும்.. ஆரோ ஒரு தமிழ்ப்பரதேசியாம் " பலருடைய பெயர்கள் சிவபாலி மனதில் ஓடின..

"அவனைத் தவிர பாதாளச்சாக்கடையன், மோகினி எல்லாவற்றையும் கூட கமேரா படம் பிடித்திருக்கு இதோ பாரும்"போலீஸ்காரன் படத்தை திரையில் போட்டான்.

ஜன்னலை உடைக்க வந்தவனை பிடிக்க வைத்த கமேரா ஜன்னலின் ஓட்டை வழியாக அவர் வீட்டில் நடைபெற்ற மந்திரவாதியின் பூசையையும் படமெடுத்திருந்தது. பிரியாமணியும், சிவபாலியும் அதைப் பார்த்தவுடனேயே புரிந்து கொண்டனர்.

இருவருடைய கண்களையும் கட்டிய பின் மந்திரவாதி தன்னுடைய கண்களைக் கட்டியிருந்த சேலைத் துண்டை மெல்ல அவிழ்க்கிறான்... அட மடப்பயல் மவனே ! இதை நீ முந்தியே நினைக்கவில்லையே என்று தன்னைத்தானே மனதிற்குள் பேசிக்கொண்டு தலையில் ஒரு தட்டுத் தட்டினார்.

படம் ஆரம்பித்தது...

என்மேனி உருகுதே என்ற பாடலைப் பாடியபடி சிவபாலியின் தேகத்தை உராய்கிறான் மந்திரவாதி. சிவபாலி ஆ..ஆ..என்று வாயைத் திறந்தபடி எத்தனைதரம் மோகினி ஜன்னலை உடைத்தாலும் காரியமில்லை என்று அலறுகிறார். அத்தருணம் அவருடைய வாய்க்குள் மந்திரவாதி எதையோ போடுகிறான்.

பிரியாமணிக்கும், சிவபாலிக்கும் அவனே அவ்வப்போது மோகினியின் பெயரில் பிரம்படி போடுவதையும் இருவரும் கண்டு துடிக்கிறார்கள். கடைசியாக பாதாளச்சாக்கடையனாக குரலை மாற்றி மந்திரவாதியே ஆடுவதும், பின் அவனே அதைத் தடுப்பதைப் போல

www.padippakam.com



இன்னொரு குரலில் பேசுவதுமாக மிமிக்கிரி செய்து கடைசியில் பிரியாமணிக்கு இச்சென முத்தமிடுகிறான். அத்தோடு அவள் அலறியபடியே கீழே விழுவதும் தெரிகிறது.

பாதாளச்சாக்கடையன் நோர்வேப் பேயல்ல மந்திரவாதிதான் என்பதையும் அப்போதுதான் பரிதாபமாக பிரியாமணி புரிந்து கொள்கிறாள்.

கடைசியாக புதுமைப் பெண் ஒருத்தி பாய்ந்து பாய்ந்து மண்வெட்டியால் மண்ணைத் தோண்டி சாத்திரங்களைப் புதைப்பதைப்போல பிரியாமணி சிவபாலியுடைய வயிற்றில் கருங்காலித் தடியால் ஓங்கியோங்கி அடிக்க அவர் கமறிக்கமறிச் சத்தியெடுத்ததுவரை வந்து படம் முடிகிறது.

படம் முடிந்ததும் போலீஸ்காரன் சிறுபொழுது அமைதியாக இருந்தான். சிவபாலிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மூச்சுத் திணறினார், படீரென நிலத்தில் சரிந்தபடி விழுந்தார். லபோ லபோவென ஏதோ ஒரு புரியாத மொழியில் கதைத்தார். ஓங்கிப் பலமாகச் சிரித்தபடி தலைதலையென அடித்தார். பின் அழுதார்.. சிரித்தார்... வாயிலிருந்து வீணம் வடித்தார்... உருண்டு புரண்டார். வீமன் நாய் கடித்தது போல மேசையின் காலை கடித்து சிலுப்பினார்.

சிங்கம்போல பிடரியைக் குலுக்கினார்.

அவரைப் பார்க்கப் பார்க்கப் பிரியாமணிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அதைவிட பாதாளச்சாக்கடையன்தான் மந்திரவாதி என்பதை நினைக்க நினைக்க அவளுக்கு வயிறு புரட்டிக் கொண்டு வந்தது. எல்லாவற்றையும் விட பெரிய ஆபத்து அவன் முத்தமிட்டதால் கற்பு பறிபோய்விட்டதாகக் கூறி சிவபாலி தன்னை விவாகரத்து பண்ண இடமிருந்ததை நினைத்தாள். விவாகரத்துக்கு சரியான பொயின்ற் கிடைக்காமல் திரியும் அவர் இதைச்சாட்டி, வேறு யாரும் டேனிஸ்காரியை இரண்டாந்தாரமாக விவாகம் செய்யக்கூடிய அபாயமும் இருந்தது. புலம்பெயர் புண்ணியபூமியில் வந்து தமிழர்களில் பலர் ஆடும் கூத்து அவளைப் மிகப்பலமாக அச்சமடையச் செய்தது.

www.padippakam.com



பேயப்படங்களில் வருவதுபோல அக்கணமே நிலமை அடிதலையாக மாறியது.

திடீரென வீறுகொண்டு எழுந்தார் சிவபாலி... உருக்குத் துண்டுபோல அவருடைய தேகம் பலம் பெற்றது. அருகில் இருந்த கதிரையை எடுத்து கர்லாக்கட்டைபோல கன வேகத்தில் சுழற்றியபடி அதை அவளுடைய மண்டையில் போட வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தார்.

அந்த அடி இறங்கினால் யானைகூட உயிர் தப்பாது. காட்டெருமை முசிறியது போல முசிறி கதிரையை பிரியாமணியின் மண்டையை நோக்கி இறக்கினார்...

அந்தோ பிரியாமணியின் உயிர்....

## 20

சிவபாலி கதிரையால் அடிக்க ஓடிவர அருகில் இருந்த போலீஸ்காரனும் இன்னொரு கதிரையைத் தூக்கிக் கொண்டு அவளை அடிப்பது போல எதிர்ப்பக்கமாக ஓடி வந்து கொண்டிருந்தான்.

“ஆயிரம் இருந்தாலும் போலீஸ்காரனும் ஓர் ஆம்பிளைதானே.” எப்பவும் ஆண் வர்க்கமே இப்படித்தானே , என்று நினைத்தாள் பிரியாமணி.

மந்திரவாதி யாரென்றே தெரியாதவன், அவன் கண்ணைக் கட்டி ஏமாற்றிவிட்டு முத்தமிட்டால் அதற்கு ஆண் வர்க்கமே இப்படி திரண்டுவருவதா என்று அழுதாள்.

ஒரேயொரு நொடிக்குள்....

கற்புக்கரசி கண்ணகிபோல சீறி எழுந்து இருவரையும் சங்காரம் செய்து, கண்ணகி மதுரையை எரித்ததுபோல போலீஸ் நிலையத்தையும் எரித்து ஓர் ஆட்டம் ஆட எழும்பலாமா என்றும் யோசித்தாள். ஆனால் அதற்கெல்லாம் இடமே இல்லாமல் இரண்டு

www.padippakam.com



கதிரைகளும் நூற்றிலொரு விநாடி நேரத்திற்குள் அவள் தலையை நெருங்கிவிட்டன.

கண்கள் இரண்டையும் மூடியபடி“ஐயோ !”என்று அலறினாள் பிரியாமணி.

தமிழ் சினிமா முறைப்படி அந்த நேரம் எங்கிருந்தோ ஒரு தெய்வம் வரவேண்டும் என்று எண்ணினாள். அவள் எண்ணியது வீண் போகவில்லை. கதிரையுடன் ஓடிவந்த போலீஸ்காரன் சிவபாலியின் கதிரையை நோக்கி தனது கதிரையை வீசினான்.

“சர்... சர்....”சரீரென வானத்தில் பல்டியடித்துப் போனது போலீஸ்காரன் வீசிய கதிரை. அது பலத்த ஒலியுடன் சிவபாலியின் கையில் இருந்த கதிரையுடன் மோதியது. இரண்டு கதிரைகளும் சுக்கு நூறாகி சிலோ மோ‘னில் வானத்தில் சிதறிப்பறந்தன.

அவ்வளவுதான்... சிதறவிருந்த பிரியாமணியின் தலையும், பறக்கவிருந்த உயிரும் ஒரு நொடியில் பிழைத்தன.வெறுங்கையை வீசியபடி சிவபாலி மூச்சிரைக்க இரைக்க அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். போலீஸ்காரன் பல்டியடித்து குப்புற நிலத்தில் படுத்தான். சிதறிப்பறந்து அவனுடைய தலையை பதம் பார்க்க கதிரைக்கால் அருகில் இருந்த கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு வீதியில் விழுந்தது.

பாய்ந்து எழுந்த போலீஸ்காரன் ஆகாசப் பல்டியொன்று போட்டு, நீச்சல் குளத்தில் தலைகுப்புற குதித்தது போல குதித்து சிவபாலியின் கால்களைப் பிடித்து இழுத்து விழுத்தினான். புளி மூட்டையால் குத்தியது போல ஒரு இறக்கமான குத்துவிட்டான். அப்படியே அவருடைய உச்சந்தலை மயிரைக் கோலிப்பிடித்துத் தூக்கி குத்தெனக் கதிரையில் இருத்திவிட்டு, ஏதோ தூ‘ண வார்த்தைகளால் திட்டினான்.

பின் பிரியாமணியையும் அழைத்துவந்து இருத்தினான். சில நிமிடங்கள் இருவரையும் கூர்ந்து பார்த்தபடியே நின்றான். விநாடிகள் நிமிடங்களாகி, நிமிடங்கள் அரை மணி நேரத்தைத் தொட்டன. அதன் பிறகு போலீஸ்காரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். இருவருக்கும் தேநீரை இரண்டு கப்களில் ஊற்றிவந்து கொடுத்தான்.

படிப்பகம்

www.padippakam.com



தேநீரைக் குடித்தபடி இருவரும் சிறிது ஆறுதலடைந்தனர்.

“சிவபாலி, பிரியாமணி நீங்கள் இருவரும் எப்படி ஏமாற்றப்பட்டிருக்கிறீர்கள் என்பதை இப்பொழுது விளங்க முடியுதா ? என்று கேட்டான். இருவரும் பதிலின்றி வெங்கலச் சிலைகள் போல இருந்தனர்.

“அந்த மந்திரவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் ?”

ப....த்...தா..யி..ர..ம் குறோணர் ! , பிரியாமணி தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

“அந்த ஆள் இப்ப எங்கே இருக்கிறான் என்பது தெரியுமா?”

“தெரியாது !” சுவிஸ் போனதாக அறிகிறோம், சிவபாலி சொன்னார்.

“ஓ.. கே.. நீர் ஏன் பிரியாமணியை கதிரையால் அடிக்கப் போனீர் ?”

“இந்தமாதிரி மந்திர தந்திர, சாத்திர சம்பிரதாயங்களால் என்னுடைய வாழ்க்கையை நாசமாக்கியதே இவள்தான். அதுதான் கோபம் தாளாமல் அடிக்கப் போனனான் !” சிவபாலி அழுதபடி சொன்னார்.

“அப்ப மந்திரவாதி முத்தமிட்டதற்காக அடிக்கப் போகவில்லை..” போலீஸ்காரன் ஏளனத்துடன் கேட்டான்.

“இல்லை ”

“அதை நீர் பெரிதாக எடுக்கவில்லை .. ஒப்புக் கொள்கிறீரா ?”

“பிரியாமணியின் குற்றமில்லை... ” சிவபாலி தலையைக் குனிந்தபடியே சொன்னார். என்மேனி உருகுதே பாடல் அவருடைய மண்டைக்குள் குளவி போல சுற்றியது.

“சந்தோசம் இனி உங்களுடைய வீட்டு ஜன்னல் உடையாது.

www.padippakam.com



நீங்கள் செய்த தவறுகளும் கொஞ்சம் இருக்குது. அது பிறகு காலம் போகப் போகத் தெரியவரும். இனி சந்தோசமாக வாழ்க்கையை ஆரம்பியுங்கோ" என்று கூறினான்.

காந்தாமணி தொடர் நாடகத்தில் வருவதைப் போல சிவபாலியும், பிரியாமணியும் சிறு பொழுது கட்டிப்பிடித்து அழுதனர்.

"நீங்கள் ரெண்டுபேரும் உண்மையைச் சொன்னபடியால் வழக்கு இல்லாமல் தப்பியிருக்கிறியள். இல்லாவிட்டால் மந்திரவித்தை, பேயாட்டம் எல்லாம் இந்த நாட்டில் சட்டப்படி குற்றம்" என்றான் போலீஸ்காரன்.

இருவரும் எழுந்து நடந்தனர். அப்போது சிவபாலி மனம் கேளாமல் போலீஸ்காரனைப் பார்த்து, , அந்தக் கண்ணாடி உடைத்த தமிழனின் பெயரை... , என்று இழுத்தார்.

"கடைசி வரைக்கும் அந்தப் பெயரை வெளியே சொல்லமாட்டோம்" என்று போலீஸ்காரன் மறுத்துவிட்டான்.

அத்தோடு சிவபாலியும், பிரியாமணியும் விடைபெற்றனர். அவர்கள் போலீஸ் நிலையத்தின் வாசலுக்கு வந்தபோது காரியாலய அறையில் இருந்த போலீஸ்காரன் அன்போடு முகமலர்ந்து அவர்களை அழைத்தான். தனது வீட்டின் சன்னல் கண்ணாடியை உடைத்த தமிழனின் பெயரைத்தான் சொல்லப் போகிறானென நினைத்து விரைவாக ஓடிப்போனார் சிவபாலி.

அங்கே போலீஸ்காரன் தபால் கந்தோரில் பணம் கட்டும் ஜீரோ அட்டை ஒன்றைக் நீட்டினான். அதில் 7000 குறோணரை அடுத்த மாதம் முதலாம் திகதிக்குள் கட்ட வேண்டும் என்று எழுதியிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க சிவபாலிக்கு தலை சுற்றியது.

"ஏன் இந்தப் பணத்தைக் கட்ட வேண்டும் ?" என்று கோபத்துடன் வினவினார் சிவபாலி.

, உன்னால் போலீஸ் நிலையத்தின் இரண்டு கதிரைகள் உடைந்திருக்கு, ஒரு ஜன்னல் கண்ணாடி சிதறியிருக்கு. இவற்றினுடைய விலை 7000 குறோணர். முதலாம் திகதிக்கு

www.padippakam.com



பிந்தினால் 10 வீத வட்டியோடு கட்ட வேண்டி வரும். கதிரை- களையும், ஜன்னலையும் உடைத்துப்போட்டு நீ சும்மா போக இது உன்னுடைய அம்மா வீடில்லை, என்று கூறினான்.

போகுமிடமெல்லாம் ஜன்னலுக்கு பணம் கட்டவேண்டி வருகி- றதே என்று ஓங்கி அழுவதற்கு எண்ணினார். முற்பிறவியில் ஜன்னல் உடைத்த ஜம்புலிங்கமாக பிறந்திருந்தேனோ என்னவோ என்று கலங்கினார்.

இந்த புலம் பெயர் வாழ்க்கையை வாழப்புறப்பட்ட அவர் எத்தனை தரம்தான் பைத்தியக்காரன் போல சிரிப்பது. தண்டப் பண அட்டையுடன் முருங்கை மரத்தால் குதித்து கிலீரிட்டு ஓடிய விக்கிரமாதித்தன் கதை வேதாளம் போல வெளியே ஓடினார்.

இந்தப் பணத்தை கட்ட கந்து வட்டிக்கு எடுப்பதா அல்லது கடப்பாரை வட்டிக்கு எடுப்பதா என்று தெரியாமல் அவர் பின்னால் ஓடினாள் பிரியாமணி.

இவர்கள் இப்படி ஓடிக்கொண்டிருக்க ....

படீரென பாசமலர் படத்தில் காட்சி மாறியது போல நமது கதையிலும் காட்சி மாறியது...

நாட்டுக்கு புறப்பட்ட ஐயாமுத்தர்... ஆடிய கூத்து வந்தது..

ஐயா இது ஐயாமுத்து புரடக்சன் காத்தவராயன் கூத்தா அல்லது தேவாரச்செல்வி புரடக்சன் அல்லிராணி கூத்தா என்று கூறமுடியதளவுக்கு ஐயாமுத்து கதை சிலுசிலுப்பி ஆடியது..

அதோ....

சோதனைச் சாவடியில் ஒரு ஆமிக்காரன் ஐயாமுத்துவின் தலையில் துப்பாக்கியை வைத்து .. தட்டுவதற்காக இலக்கத்தை எண்ணி.. ஒன்று.. இரண்டு... மூன்று... என்று சொல்லியே விட்டான்..

www.padippakam.com



படீர்.... பலத்த வெடியோசை...

21

ஐயாமுத்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை நெருங்கும்போதே மிகவும் களைத்துப் போய்விட்டார். எரிந்து கிடந்த விமானங்களின் சிதைவுகளைத் தேடி நாலாபுறமும் நோட்டம் விட்டார். அவைகளை ஐயாமுத்து வந்து பார்த்து அதிசயப்படும்வரை அவர்கள் வைத்திருக்க விரும்பவில்லை போலும் முற்றாக அப்புறப்படுத்திவிட்டார்கள்.

இருந்தாலும் முன்னர் அவர் அந்த விமான நிலையம் மூலமாக நாட்டை விட்டு வெளியேறியபோது நடந்த நிகழ்வுகள் கண்முன்னே ஒரு தடவை கண்டிப்பெரகரா போல அசைந்த அசைந்து ஊர்வலம் போயின.

அன்றயதினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை அவர் நெருங்கியபோது வாசலில் இருந்த சோதனைச்சாவடியில் அவரை ஓர் ஆமிக்காரன் மறித்தான். இன்று துப்பாக்கியை தலையில் வைத்தது போலவே அன்றும் வைத்து மறித்திருந்தான். நீயொரு புலி, நீ மண்ணுக்குள் போக வேண்டிய ஆளென அவன் கூச்சலிட்டதை அவர் மறக்கவில்லை.

பிறகு மஞ்சள் நிறமான நூறு ரூபா நோட்டை கொடுத்தபோது அவன் அவரை புலி இல்லையென்று முடிவு செய்து அனுப்பி வைத்தான். பின்னர் சுங்கப்பகுதியில் அவரை மறித்த ஒரு சுத்தத் தமிழன் பலத்த கூத்தாடி, அவரிடமிருந்த சில்லறைகளையும் உருவியெடுத்து நிஜ அகதியாக்கி அனுப்பியதை நினைத்துக் கொண்டார். இப்போதும் கொண்டு போகும் பொருட்களை எல்லாம் பறி கொடுத்து கோவணாண்டியாகத்தான் நாட்டிற்குள் போக நேருமோ என்று பயந்தார்.

பிறகு மனதைத் தேற்றினார். இதெல்லாம் பழைய கதை... உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. சிறீலங்கா மட்டும் மாறா

www.padippakam.com


மல் இருக்கப் போகிறதா. என்று மனதுள் ஓர் ஆறுதல் நதியை செயற்கையாக ஓடவிட்டார். புதுத் தெம்பு பெற்றார், மீண்டும் நடந்தார்.

“மனிதன் எவ்வளவுதான முன்னேற முடியாத வலது குறைந்தவனாக இருந்தாலும் அவனுக்குள்ளும் ஒரு முன்னேற்றம் நடைபெறும், காலம் அதை சிறிது சிறிதாக அவனுள் ஏற்படுத்தும்” என்று அவரைப் பரிசோதித்த உளவியல் வைத்தியர் சொன்ன வசனம் நினைவுக்கு வந்தது. தன்னைப் போல ஒரு திருந்த முடியாத கேசாக சிறீலங்காவும் இருக்குமென தனக்குள் அவர் நினைத்தாலும், காலத்தினால் அதுவும் சிறிது முன்னேறியிருக்கும் என்று எண்ணிக் கொண்டார்.

அந்த அசட்டு நம்பிக்கையுடன் மெல்ல மண்ணில் காலை வைத்தார். அப்போது அவர் கால்களிரண்டும் படபடவென்று நடுங்கின. சின்னக்குட்டி வாத்தி தேவாரம் பாடமாக்காமல் போன போது அடித்த அடியில் நடுங்கத் தெடங்கிய அவரது தொடைகள் இப்படித்தான் ஆபத்து வந்தால் நடுங்குவது வழமை. அது தெரிந்தோ என்னவோ தேவாரச்சொல்வி அவரை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

பாம்பாக நீண்டு கிடந்த வரிசையில் மாந்தி மாந்திச் சென்று தனது பாஸ்போட்டை நீட்டினார். கவுண்டரில் இருந்தவன்

அவருடைய பாஸ்போட்டையும் அவரையும் பார்த்துப் பார்த்து யோசித்தான். ஏதோ அணு குண்டைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்தவன் போல இருந்தது அவன் பார்த்த பார்வையும், தேடிய தே-டலும். மடமடப்பான ஐம்பது டொலரை கீழ்ப்பக்கமாக இறக்கினார். அவன் முகத்தில் மத்தாப்பு வெடித்தது. படார் படாரென இறப்பர் ஸ்டாம்பை எடுத்து கடகடவெனக் குத்தினான்.

வழிவழியே பணம் கேட்கும் அடையாளம் தெரியாத வெங்காயங்களுக்கு கொடுத்துவிட்டு மாறுவதற்காக புத்தகக் கடையில் ஒரு கட்டு விளையாட்டு டொலர்களை வாங்கிவந்திருந்தார். அவனைப் பார்த்த நடுக்கத்தில் அதிலிருந்து ஒரு நோட்டை இழுத்து விட்டிருந்தார்.

www.padippakam.com



பின் புறம் பொக்கற்றில் போலி நோட்டுக்களை அடசி ஒரு மணிப்பேசை வைத்திருந்தார். கொழும்பிலோ யாழ்ப்பாணத்திலோ பிற்பொக்கற் அடிப்பவர்களுக்காக அது. கத்தியைக் காட்டி பணம் கேட்பவனின் காதில் பூச்சுற்ற தேவாரச்செல்வியின் கையில் விளையாட்டு டொலர்கள் வைத்த கைப்பை ஒன்றும் கொடுத்திருந்தார்.

அவன் பார்த்த மலாரடிப்பில் நல்ல டொலர் எது விளையாட்டு டொலர் எதுவென்பது அவருக்கு தெரியாமல் போய்விட்டது.

கவுண்டரில் இருந்தவன் நாலு பக்கமும் பார்த்துவிட்டு, கசகசவென போலி டொலரை மடியில் திணித்துக் கொண்டான். இனி அவன் வீடுபோய் அதை மாற்றப்புறப்பட்டு, உண்மையை அறிய முன் ஐயாமுத்து கம்பி நீட்டிவிடுவார். கோயில்களில் தாலிக்கொடி அறுத்துக் கொண்டு ஓடுவேரை மகிழ்விக்க இரண்டு ரெடிமேட் ரோல்கோல்ட் தாலிக்கொடிகளும் அவர் செய்து வந்திருந்தார். அவை லக்கேஜ்சில் வந்து கொண்டிருந்தன. அவனிடமிருந்து விடை பெற்று நடந்தபோது தீர்வையற்ற கடைப்பகுதி வருவதாக யாரோ சொன்னார்கள்.

வாங்கையா.. வாங்க.. ,

வாங்க வாங்க மலிவு விற்பனை ,

அந்தச் சத்தங்களைக் கேட்டதும் ஐயாமுத்து அடியோடு பயந்தேபோய்விட்டார். எங்கே கறிக்கடைக்குள் வழிமாறிப் புகுந்துவிட்டோமோ என்று அஞ்சினார். அங்கிருந்து தப்பியோடி கீழே லக்கேஜ் எடுக்கும் வார்ப்பட்டி சுழலும் இடத்திற்குள் நுழைந்தார்.

ஆர் செய்த புண்ணியமோ அவருடைய சூட்கேஸ்கள் தொலையாமல் வந்து சேர்ந்தன. அவற்றை வண்டிலில் ஏற்றிக் கொண்டு வெளியே வர சுங்கத்தீர்வை விதிப்போர் மடக்கினார்கள். அவர்களையும் உரிய முறையில் கவனித்து அங்கிருந்து விடுபட்டு வெளியே வந்தார்.

அடுத்து பல பெயர்களில் வங்கிகளை வைத்திருப்பவர்கள் ஓடிவந்து வழி மறித்தார்கள். முதலில் வந்த மக்கள் வங்கயிடம் நிஜமான 1000 குறோணர் தாளைக் கொடுத்து மாற்றிக் கொண்டார். கை நிறைய பணம் கிடைத்தது. அவற்றை மடித்தவாறே வாசலை நோக்கி வண்டியை உருட்டினார்.

வாசலில் ஒரு தொகை சனம் நின்றது. அவர்களுக்குள் மருமகன் சேகரத்தை தேடி ஒரு நோட்டம் விட்டார், ஆளைக்காணவில்லை.

ஒரு நிமிடம் ஓடியிருக்காது"நீங்கள்தானே .. ஐயாமுத்து மாமா ? யாரோ ஓர் இளைஞன் அருகில் வந்து கேட்டான்.

"ஓமோம்... நீர்.. "

"நான் சேகரத்தின் நண்பன் அருமை, அவரோடை துணைக்கு வந்திருக்கிறன்"

"சேகரம் எங்கே?"

"வானை எடுத்துவரப் போயிருக்கிறார்... வாங்கோ றோட்டுக்குப் போவம்.. "

ஐயாமுத்து அந்த இளைஞனுடன் போனார். அவரையும், தேவாரச்செல்வியையும் அங்கேயே நிறுத்திவிட்டு இளைஞன் வீதியைத் தாண்டி வேகமாக நடந்தான். சொற்ப நேரத்தில் சேகரம் ஒரு வெள்ளை நிறமான கயஸ் வானுடன் அங்கு வந்து சேர்ந்தான்.

ஐயாமுத்தர் டென்மார்க் வந்தபோது சேகரத்திற்கு ஐந்து வயது. இப்போது ஆள் நல்ல ஆஜானுபாகுவாக வளர்ந்துவிட்டான். வெள்ளை நிறம் கறுத்தத் தலைமுடி சுருள்சுருளாக... பார்க்க வடிவு போல தோன்றியது. அவன் ஓடிவந்து ஐயாமுத்துவைக் கட்டித் தழுவினான்.

கொழும்பில் அவருக்கு யாரும் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்திற்கு நேரடியாகப் போகலாமென்று நினைத்து யாழில் இருந்தே வானை வரவழைத்திருந்தார். விமான நிலையத்தில் இருந்தே ஐயாமுத்து, தேவாரச்செல்வி இருவருடைய இரண்டாம் கட்டப் பயணம் ஆரம்பித்தது. விமானப் பயணத்தைவிட மோசமான பயணம் அது என்பதை அறியாத காரணத்தால் ஒய்யாரமாக முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டார்.

அதிகாலை ஆறுக்கு வந்திறங்கியவர் வெளியால் வர நேரம்

www.padippakam.com



பத்து மணியாகிவிட்டது, சிறீலங்காவின் சூரியஒளி டென்மார்க்கைவிட வித்தியாசமாக இருந்தது. வியர்வை தேகத்தில் இருந்து பற்பல கிளை நதிகளாக வடிய ஆரம்பித்திருந்தது. சேகரம் வானை வேகமாக ஓட முயன்று கொண்டிருந்தான்.

சமாதானம் வந்தவுடன் அந்த வானை எடுத்துக் கொடுத்து, ஏதோ ஒரு தொழிலை ஆரம்பிக்கும்படி கூறி அவனுக்கு பணத்தைக் கொடுத்தவர் ஐயாமுத்துதான். முதல் தடவையாக தான் அனுப்பிய பணம் பயனுள்ள வகையில் வெலவழிந்திருப்பதைப் பார்க்க அவருக்கு சிறிது மன ஆறுதல் கிடைத்தது.

கலியாணம் கட்டுறதும்... பிறகு வீடு கட்டுறதும் ... பிறகு ஆமி வர ஓடுறதும், அதாலை மாப்பிளை வேலையை விட்டுப் போட்டு வெளிநாடு போகப் போகிறாரென போன்பண்ணிக் காசு கேட்கிறதும், பிறகு அடுத்த பிள்ளைக்கு கலியாணம் கட்டி பின் வீடுகட்ட அத்திவாரம் போடுவதும் பிறகு ஆமி வருவதும்...

இப்பிடியே மாறி மாறி மயிர்க் கூத்தாடுறதுதான் உவளுகளுக்கு வேலை என்று தனது குடும்பத்தவரை திட்டிக்கொண்டு, அதை வெளியில் சொல்லாமல் கோபத்தில் வந்தவருக்கு சேகரத்தின் சுய தொழில் முயற்சி பெரிதும் ஆறுதல் தந்தது. சிறிது நேரம் அவர் எதுவும் பேசவில்லை. கொழும்பு எப்படி மாறியிருக்கிறது என்பதை விண்ணாணம் பார்த்தபடி வந்து கொண்டிருந்தார்.

இங்கிலாந்துக்காரன்தான் அந்த நாட்டை ஆண்டவன் என்பதை அந்த வீதிகளின் நெரிசலும், சனங்களின் பிதுங்கலும் காட்டியது. மறுபுறம் அது போர் நடக்கும் நாடுதானா அல்லது எங்காவது வழிமாறி வேறு நாட்டுக்குள் வந்துவிட்டேனா என்று தடுமாறினார். தான் நினைப்பது கனவில்லை என்பதை உறுதி செய்ய கையை மெல்லக் கிள்ளிப்பார்த்தார்.

“என்ன மாமா கடுமையாக யோசிக்கிறியள்..” சேகரம் கேட்டான்.

“ஒண்டுமில்லை கொழும்பு நிறைய மாறியிருக்கு..”
அமைதியாகச் சொன்னார்.

“கோப்பி ரீ ஏதாவது?” படிப்பகம்

www.padippakam.com


"முதலிலை எங்கையாவது ஒரு லொட்ஜிலை போய் நிண்டு கை, கால் முகத்தைக் கழுவிக் கொண்டுதான் கோப்பி, ரீ குடிக்க வேணும்" என்றார்.

"எனக்கு தெரிஞ்ச ஒரு குடும்பமிருக்கு அங்க போய் நிண்டு கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு புறப்படுவம்... இரவு பத்துமணிக்கு புறப்பட கணக்காயிருக்கும்... " என்றான் சேகரம்.

அந்த வீடுபோய் பொருட்களை இறக்கி, உடுப்பை மாற்றிக் கொண்டார். தேவாரச்செல்வி பவுண் நகைகளை பையில் வைத்துவிட்டு ரோல்ட் கோல்ட் நகைகளைப் போட்டுக் கொண்டாள்.

இரவு பத்துமணிக்கு புறக்கோட்டையில் இருந்து அவர்களுடைய வான் புறப்பட்டது. ஐயாமுத்துவுக்கு வெடிவைக்குமளவிற்கு அது பாரதூரமான பயணமாக இருக்குமென அவர் நினைக்கவில்லை. நினைத்திருந்தால் ஏ 9 வழியைத் தவிர்த்து விமானத்தில் ஏறியிருப்பார்.

வான் சர்ரென இரைந்து புறப்பட்டது.

பன்றித்தலைச்சியாளே நீதான் துணை.. தெருவில் ஒரு தேங்காயை எறிந்து உடைத்துவிட்டு வானை ஓடவிட்டு பாய்ந்தேறி யாழ். பயணத்தை முறைப்படி ஆரம்பித்தார்.

பன்றி அடிக்கும் தொழிற்சாலையில் சிலகாலம் வேலைசெய்து பன்றிகளுக்கு மண்டையில் மின்சாரம் பாய்ச்சி சிவபதம் கொடுக்கும் வேலையை அவர்தான் செய்து வந்தார். அந்த வேலையை அவர் விட்டு ஐந்து வருடங்களாகிவிட்டன. ஆனால் அந்தப்பாவம் முகமாலை-லயில் ஒரு துப்பாக்கிக் குண்டுக்குள் துடிதுடித்துக் கொண்டிருந்ததை யாரறிவார்.

## 22

இதுவரை அந்த நாட்டில் போர்தான் நடக்கிறதென்று நினைத்துக் கொண்டிருந்த ஐயாமுத்து வானில் ஏறி கொழும்பின் எல்லையைத் தாண்டத் தாண்டத்தான் வரக்கூடாத ஒரு நாட்டுக்குள் விசயம் தெரியாமல் வந்துவிட்டதை உணரத் தொடங்கினார்.

www.padippakam.com



அங்கு நாட்டுக்கு ஓர் அரசு, றோட்டுக்கு ஓர் அரசுமாக இரண்டு வேறு அரசுகள் இருப்பதைக் கண்டு கொண்டார். அந்த கும்மிருட்டு வழிகளில் ஏறத்தாழ ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு சோதனைச்சாவடி போடப்பட்டிருந்தது. ஒவ்வொரு இடத்திலும் அவர்களை மறித்தார்கள். சில்லறையாக மாற்றி வைத்திருந்த பணத்தை ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் கொடுத்துக் கொண்டே அப்பால் போகவேண்டியிருந்தது.

வானில் இடமிருப்பதாகக் கூறி ஏற்கெனவே சேகரம் கொழும்பில் வைத்து ஐந்துபேரை ஏற்றியிருந்தான். அவர்களை ஏற்றமுன்பே பணத்தை வாங்கியபோது சேகரத்தின் கெட்டித்தனத்தை மனதில் மெச்சியவர், இப்போது சிறிது கலங்கினார். அவர்கள் யாரோ என்ன கொண்டு வருகிறார்களோ என்பது தெரியாமல் அவர்களை அடிக்கொருதரம் பார்த்துக் கொண்டார். அந்த நேரம் அவர் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இடையில் ஒரு சோதனைச்சாவடி வந்தது. ஒரு போலீஸ்காரன் அனுராதபுரம் போக இருப்பதாகவும் வானில் வர இடமிருக்கிறதா என்றும் கேட்டான். விடுமுறையில் வீட்டிற்கு போகும் போலீஸ்காரர் ஓசியில் பயணம் செய்ய இப்படியான வழியைப் பயன்படுத்துவது தெரிந்தது. சேகரம் சிரித்த முகத்துடன் அவனை வரவேற்றான். போலீஸ்காரன் ஐயாமுத்துவுக்கு அருகில் அமர்ந்து கொண்டான், பயணம் தொடர்ந்தது.

போலீஸ்காரன் எத்தனைபேர் வருகிறீர்கள், எங்கிருந்து வருகிறீர்கள், எங்கே போகிறீர்கள் என்பதையெல்லாம் விலாவரியாகக் கேட்டுக்கொண்டே வந்தான். வழி நெடுக பிட்டிகள் போடப்பட்ட சாலையில் வான் துள்ளித்துள்ளி ஓடிக் கொண்டிருந்தது.

தாலாட்டுவது போலவும் துள்ளுவது போலவும் ஓடிய வானில் ஐயாமுத்து ஒடுங்கியபடி இருந்தார். போலீஸ்காரனை ஏற்றினால் வழியில் சிறிது பாதுகாப்பு அதிகம். லைசென்ஸ் பார்ப்பது போல தொல்லை கொடுக்கும் போலீஸ்காரருக்கு கப்பம் கட்டாமலே ஓடிவிடலாம் என்பது சேகரத்தின் அனுபவம். சொற்ப நேரத்தில் போலீஸ்காரன் உறங்கிவிட்டான். அவன் ஐயாமுத்துவின் தோளில்

www.padippakam.com



உறங்கிக் கொண்டிருந்தான். கோழித்தூர்க்கம் போட்டுக் கொண்டிருந்த ஐயாமுத்துவின் மண்டையில் சதக்கென யாரோ அடிப்பது போல ஒரு கனவு வரவே விழித்துக் கொண்டார்.

அப்போதுதான் வான் ஏதோ ஒரு இடத்தில் இருந்த தேநீர் கடைக்கு முன்னால் நின்றிருந்தது. அது ஒரு சிங்களத் தேநீர்க்கடை என்பது தெரிந்தது. ஆனால் தமிழ் பாடலைப் போட்டு வைத்திருந்தார்கள். வெளிநாடுகளில் இருந்து வருவோரை மகிழ்விக்க போடப்பட்ட அந்தப் பாட்டு முத்தமிழின் பெருமையைப் பேசிக்கொண்டிருந்தது. எல்லாம் காசு செய்யும் கூத்தென்பதை உணர்ந்து கொண்டார்.

சிறுநீர் கழிக்க வேண்டும் போலிருந்ததால் கடையின் பின்புறமாகப் போய்ப் பார்த்தார். குமட்டிக் கொண்டு வரவே திரும்பி ஓடிவந்தார்.

“ஏன் சேகரம் இவ்வளவு பயணிகள் போற ஏ 9 றோட்டிலை தேத்தண்ணிக்கடையளைப் போல மலசலகூடங்களும் வேணுமெண்டு ஒருதரும் நினைக்கேல்ல?”

சேகரம் சிரித்துக் கொண்டான்.

“உலகத்தில எந்த நாட்டிலையும் இல்லாத அதிசயம் இந்த நாட்டிலைதான் இருக்கு. 200 மைல்வரை ஓடிப்போற இந்த றோட்டில எந்த ஓர் இடத்திலயாவது ஒரு ஒழுங்கான மலசலகூடம் கிடையாது. பெடியளின்ரை பகுதியிலை இருக்கு, இருந்தாலும் அதுவும் போதியதில்லை” என்றான்.

ஒரு பிரதான சாலையின் இலட்சணமென்ன, அதில் என்னென்ன இலட்சணங்கள் இருக்க வேண்டுமென்ற நியதி எதுவுமே இல்லாமல் இப்பிடி காசு புடுங்கும் இடமாகக் கிடக்கிறதே என்று வேதனைப்பட்டார். நாட்டைத் திருத்தவேணுமெண்டால் முதலிலலை றோட்டைத் திருத்த வேணுமென்ற பழமொழியை நினைத்துப் பார்த்தார். இப்போதே டென்மார்க் ஓடிப்போக நினத்தார். அதற்கு வழி இல்லாமல் மாட்டிக் கொண்டோமே என்று மனதிற்குள் இரகசியமாக நினைத்துக் கொண்டே ரீயை எடுத்துக் குடித்தார். கண்ணாடிப்

www.padippakam.com



பெட்டியில் இருந்த லெவரியாவை எடுத்து கூடவே கடித்தார்.

எங்கேயுமே சிறு நீர் கழிக்க ஆனமான ஓர் இடம் இல்லாமையால் தேவாரச்செல்விக்கு அடி வயிற்றியில் வலி ஏற்பட்டிருந்தது. ஒடுக்கமான அந்த வானுக்குள் காலை மடக்கி வைத்திருந்ததால் கால்கள் கொழுக்கட்டை போல வீங்கியிருந்தன.

“எத்தினை மணிக்கு யாழ்ப்பாணம் போய்ச் சேருவம்?” சேகரத்திடம் கேட்டார்.

அவன் சிரித்தான் பயணத்தில் அப்பபடிக் கேட்கக் கூடாது என்பது ஒரு பழக்கமாக உள்ளதை அவன் சொல்லவில்லை. , எப்பிடியும் காலையில பத்துப் புதினொரு மணிக்குப் போயிடலாம் , என்றான்.

“என் தம்பி நாப்பது வருசத்துக்கு முந்தி கரிக்கோச்சி ஓடின காலத்திலேயே பின்நேரம் கொழும்பு கோட்டையில் ஏறினால்
காலையில ஐஞ்சு மணிக்கு கொடிகாமம் போயிடுவம்.. இருபத்தோராம் நூற்றாண்டு வந்தும் இப்பிடியே போகுது வாழ்க்கை?”இலங்யையில் பாலும் தேனும் ஓடுறதா வெளிநாடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் வந்து பேசுறவங்களை நிலத்தில் போட்டு மிதிக்க வேண்டுமென்று எரிச்சலுடன் மனதுள் நினைத்தார். மற்றத் தமிழரைப் போலவே மனதில் நினைப்பதை வெளியில் சொல்லாது வாழும் பேதையாக தானும் இருப்பதை அக்கணமே எண்ணினார். தன்னைப்போல ஆட்கள் இருக்கும் வரை இந்த நாடு உருப்படாது என்பதையும் தெளிவாக உணர்ந்து அமைதியானார்.

அவருடைய மனதின் எண்ண ஓட்டங்களையும், இறுதியில் வந்த விரக்திச் சிரிப்பையும் சேகரம் புரிந்து கொண்டான்.

“நீங்கள் கிளாலியால பயணம் செய்து பாத்திருந்தால் இப்பிடிக் கதைக்கமாட்டியள். மாமா நீங்கள் டென்மார்க்கில இருந்து கொழும்பு வந்தது பெரிய விசயமில்லை, கொழும்பில இருந்து யாழ்ப்பாணம் வாறதுதான் பெரிய விசயம்” என்று சொன்னான்.

“இனி ரெண்டு இடத்தில சாமான் இறக்கி சோதனை இருக்கு... அதெல்லாம் தாண்டி அங்கால போகவேணும்.. ” ஐயாமுத்துவுக்கு

www.padippakam.com



தலை சுற்றியது, வானில் ஏறிக் கொண்டார்.

அதற்குப் பிறகு ஐயாமுத்துவுக்கு உறக்கமே வரவில்லை. ஐந்து வருடமாகக் காசைச் சேர்த்து இந்த அல்லோலத்தைப் பார்க்கவோ வந்தோமென தலையை அடித்துக் கொண்டார். காடுகளுக்குள்ளால் ஓடிய வான் அனுராதபுரத்தை நெருங்கும்போது சிறிது வெளிச்சமாக இருந்தது. அங்கிருந்த பெரிய கடையோரமாக வானை நிறுத்தச் சொன்ன போலீஸ்காரன் கீழே இறங்கிக் கொண்டான்.

"மாமா பாஸ்போட்டுகளை எடுத்து ஆயுத்தமா வையுங்கோ.. மற்றாக்களும் அடையாள அட்டையளை எடுத்து வையுங்கோ" சேகரம் சொன்னான்.

"ஏன் பாஸ்போட்டுகளை எடுத்து வைக்க வேணும்.. " ஐயாமுத்து கேட்டார்.

"பெடியளின்ரை கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் போறம், எல்லாற்றை தகவலும் விபரமாகக் கொடுக்க வேணும் " சிறிது நேர ஓட்டத்தின் பின்னர் ஒரு கடையின் ஓரமாக வானை நிறுத்தினான். எல்லோருடைய அடையாள அட்டைகளையும், பாஸ்போட்டுக்களையும் ஒரு படிவத்தில் ஒழுங்காகப் பதிந்து கொண்டான் கிளீனர் அருமை.

ஐயாமுத்துவின் மனம் "திக்திக்,"கென்றது. அதற்குள் பொழுது புலர்ந்துவிட்டது..

அந்தக் காலைப் பொழுதில் புழுதியும், வெக்கையுமாக இருக்குமிடத்தில் வாகனங்கள் குழு மாடுகளாய் புரள்வது தெரிந்தது. லொறிகள், ஆட்டோக்கள், வான்கள் என்று இராணுவத்தின் சோதனைச் சாவடியைத் தாண்டிக் கொண்டிருந்தன.

சேகரம் வானை நிறுத்தினான், ஐயாமுத்து வந்த வாகனத்தை விட்டு இறங்கினார்.

எல்லோரும் வரிசையாக அந்தச் சோதனைச் சாவடிக்குள் போக வேண்டும். ஒவ்வொருவராக ஆயுதம் இருக்கிறதா என்பதை தடவித்தடவிப் பார்த்தார்கள். அந்த இடத்தில் மனித வாழ்வென்பது காச்சல்லி பெறாத விடயம் என்பதை அவர் கண்டு கொண்டார்.

www.padippakam.com



அங்கு வாழும் ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு நாளும் மரணப் பரீட்சையில் சித்திபெற்றால்தான் வாழ முடியுமென்ற வேதனையில் வாழும் செய்தி அவர்களுடைய முகத்தில் எழுதி ஒட்டப்பட்டிருப்பதை அவரால் வாசிக்க முடிந்தது.

சீலைத்துணியால் மூடப்பட்டிருந்த அந்த இருட்டறையில் ஒரு பெண் போலீஸ் ஐயாமுத்துவின் பாஸ்போட்டை வாங்கிப் பார்த்தாள். அதைப் பார்த்ததும் அவள் முகத்தில் கலவரம் ... துருவித்துருவிப் பார்த்தாள். கைகள் நடுநடுங்க லாச்சியில் இருந்த ஒரு புகைப்படத்தை வெளியே எடுத்தாள். அது இளமைக்காலத்தில் ஐயாமுத்து இருந்த தோற்றத்தைப் போல இருந்தது.

திரும்பத் திரும்பப் பார்த்தாள். ஐயாமுத்துவை ஏற இறங்கப் பார்த்தாள். பிறகு படத்தைப் பார்த்தாள். அவளுடைய முகம் அச்சத்தால் பேயறைந்தது போல மாறியது. போரின் உளவியல் ஒருத்தியை எப்படி ஒரு கணத்தில் பைத்தியக்காரியாக்கும் என்பதை ஒவ்வொரு நொடியிலும் உணர முடிந்தது.

அவளை ஏற இறங்கப் பார்த்த ஐயாமுத்து ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பதைப் புரிந்து கொண்டார். தேகத்தால் வியர்வை கடகடவென வழிந்தது... அவருடைய காற்சட்டைக்குள் இருந்த லேஞ்சியை எடுக்க பொக்கற்றுக்குள் கையை வைத்தார்.

எந்த நேரம், எந்தச் சூழ்நிலையில் எங்கு நின்று காற்சட்டைப் பைக்குள் கையை விடக்கூடாது என்று தெரியாமல் அவர் செய்த தவறு,
சட்டென நிலமையைத் திசை திருப்பியது. அவர் பொக்கற்றுக்குள் கையை வைக்கவும், துப்பாக்கியை எடுக்கப் போகிறார் என்று தப்புக் கணக்குப் போட்ட அவள் சிங்களத்தில் பலமாக ஏதோ சொல்லி அலறினாள்.

அவ்வளவுதான்...
ஒரு நொடி போயிருக்காது பாய்ந்துவந்த ஒரு கொமாண்டோ எகிறிப்பாய்ந்து அவருடைய தலையில் துப்பாக்கியை வைத்தான். அங்கு

ஒருவரைக் கொலை செய்வது பாரதூரமான சட்டப்பிரச்சனையல்ல என்று கருதிய ஐயாமுத்து, , ஐயோ, என்றார்.

அவருடைய காற்சட்டையால் இதுவரை அடக்கி வைத்திருந்த சிறுநீர் முழுவதும் கொள கொளவென வடிய ஆரம்பித்தது.

ஐயாமுத்துவின் அலறல் சத்தம் கேட்டதும் தேவாரச்செல்வி தாய்ப்பசுவின் குரல் கேட்ட கன்றுபோல , எந்தை ராசா.. , என்றபடி ஓடிவந்தாள்...

டுமீல்....!

வானமே அதிர்ந்தது...

மரத்தில் இருந்த அண்டங்காக்காய் கூட்டம் வானில் எகிறிப் பறந்தது...

சேகரம் மாமா என்று அலறினான்... அவன் குரல் பல அதிர்வலைகளைக் கிளப்பியது.

"ஐயோ! பேசாமல் டென்மார்க்கிலேயே கிடந்து செத்துப் போகாமல் இந்த மயிரிலு நாட்டுக்கு ஏன் வந்தாய்" என்று ஆத்திரத்துடன் பேசியபடியே அருகில் நின்ற பெண் போலீஸ்காரியை தள்ளிவிட்டுவிட்டு உள்ளே ஓடினாள் தேவாரச்செல்வி.

## 23

வெடிச்சத்தம் கேட்டதும் தேவாரச்செல்வி இப்படி கண்ணகியாக மாறுவாள் என்று அங்கிருந்த இராணுவத்தினன் எவனும் நினைக்கவில்லை.

ஐயாமுத்துவின் தலையில் துப்பாக்கியை வைத்த ஆமிக்காரன் அடியும் தெரியாமல் தலையும் தெரியாமல் சிலையாகி நின்றான். என்ன நடந்ததென்று அவனால் உடனடியாக ஊகிக்க முடியவில்லை.

www.padippakam.com



ஒரேயொரு வெடிதான் ஐயாமுத்து அப்படியே நிலத்தில் விழுந்துவிட்டார். வெடிச்சத்தம் கேட்க முன்னரே அவர் விழுந்துவிட்டாரா அல்லது கேட்ட பின் விழுந்தாரா என்பதுதான் திரும்பத் திரும்ப அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"எந்தை ராசா! என்னைவிட்டுப் போனியோ?" கத்திக் கத்திக்காலைச் செய்தியிலை சொன்னான் காதுக்கொடுக்காமல் வந்தாய்... ஐயோ மாலைச் செய்தியை மதிக்காமல் மாடுபோல படுத்திருந்தாய்... அட ... இரவுச் செய்தியைக் கேட்டிருந்தாலும் இந்த இளவிலை இருந்து தப்பியிருப்பியே!, தேவாரச்செல்வி ஐயாமுத்துவை தூக்கி வைத்துக் கொண்டு அழுதாள்.

தேவாரச்செல்வியின் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர் ஐயாமுத்துவின் முகத்தில் கோழி முட்டைபோல விழுந்து உடைந்து தெறித்தது. அவருடைய உடலில் இருந்து எங்காவது இரத்தம் வடிகிறதாவென்று தடவிப் பார்த்தாள். அவளுடைய கணிப்பின்படி தலையில்தான் சூடு விழுந்திருக்க வேண்டும். ஆனால் தலையில் காயம் எதுவும் இல்லை.

மூக்கில் விரலை வைத்துப் பார்த்தாள் இளஞ்சூட்டுடன் மெல்லிய காற்று வந்தது.

"ஐயா ... ஐயா... " என்று அவருடைய தேகத்தை அசுரப் பிடிபிடித்து உலுப்பினாள்.

ஐயாமுத்து மெல்லக் கண்களைத்திறந்து பார்த்தபடி, பேய்க்குஞ்சு போல மலங்க மலங்க விழித்தார். ஒரு கையை ஊன்றியபடி மெல்ல எழுந்து இருந்தார்.

"ஐயோ என்ரை ராசா சாகேல்லை.. தாலிகாத்த வேலியம்மா,"என்றபடி மண்ணை அள்ளி மேலே வீசினாள்.

"ஏனடியம்மா ... என்ன நடந்தது.. " ஏதுமறியாதவர் போல கேட்டார் ஐயாமுத்து. சிறுவயதில் செங்கமாரி நோய் வந்து அது மங்கமாரியாக்கி பிறகு புங்கமாரியாக்கினபோது மூளை கெட்டுப்

படிப்பகம்

www.padippakam.com


புலம்பியது போல ஏதோ புலம்பினார்.

"ஐஞ்சியேத்துக்கு கொஞ்சலாம் பெண்ணை" என்றார். ஆமிக்காரி அவரையே பார்த்தாள்.

,"இல்லைப் பிள்ளை ஐஞ்சியேம் குடுத்தால் கொஞ்சமாய்த்தான் லாம்பெண்ணை கிடைக்கும் " என்றார். பிறகு சிரித்தார்.

சேகரம் ஒரு போத்தலில் தண்ணீரைக் கொண்டுவந்து அவருடைய முகத்தில் தெளித்தான். அவரை தூக்கிவந்து மரத்தடியில் ஒரு காற்றோட்டமான இடத்தில் உட்கார வைத்தார்கள். நிதானம் வந்து தான்தான் ஐயாமுத்து என்பதை அவர் உணர பத்து நிமிடங்களாகிவிட்டது.

தான் சுடமுன்னரே ஐயாமுத்து கீழே விழுந்தது ஏன் என்று புரியாமல் விசர்ப்புங்கன் ஒருவன் வருவது போல தயங்கித் தயங்கி அவர் அருகில் வந்தான் ஆமிக்காரன். அவரைச் சோதனை செய்த ஆமிக்காரியும் பின்னால் வந்தாள்.

எல்லாம் அவளால் வந்தவினை...

ஐயாமுத்துவையும் புகைப்படத்தையும் பார்த்தபடி அவள் ஏதோ சிங்களத்தில் சத்தம் போட, கொமாண்டோ படை வீரன் இதுதான் சந்தர்ப்பம் என்று தாய்க்குலத்தைக் காக்க பல்டியடித்து ஓடிவர... ஏதோ விபரீதம் நடந்துவிட்டதென எண்ணிய இன்னொரு ஆமிக்காரன் சத்தவெடி வைத்திருக்கிறான். அந்தச் சத்தத்தில்தான் ஐயாமுத்து கீழே விழுந்திருக்கிறார் என்பதை ஏறத்தாழ இப்போது எல்லோருமே மெல்ல மெல்லத் தெரிந்து கொண்டனர்.

அந்த அல்லோல கல்லோலத்திற்குள் காரியாலயத்தில் இருந்த இராணுவக் கொமாண்டர் அங்கு வந்துவிட்டான். அவனிடம் கையில் இருந்த புகைப்படத்தைக் கொடுத்து ஏதோ வதவதவென சிங்களத்தில் சொன்னாள் அந்த ஆமிக்காரி.

எல்லாவற்றையும் கேட்டு கோபமாகத் தலையாட்டினான்

www.padippakam.com



கொமாண்டர். பின் இழுத்துவிட்ட பெல்லிப் பேய்போல வேகமாக தேவாரச்செல்விக்கு அருகில் வந்தான்.

அந்த நேரம் ஒரு வயதுப் பிள்ளை போச்சியில் பால் குடிப்பதுபோல தண்ணீர்ப் போத்தலில் மெல்லமெல்ல தண்ணீரை உவிந்து கொண்டிருந்தார் ஐயாமுத்து.

இராணுவக் கொமாண்டர் அந்தப் புகைப்படத்தையும் ஐயாமுத்துவையும் கூர்ந்து கூர்ந்து பார்த்தான். பம்பரமாய்ச் சுழன்றான்.. திரும்பி வந்து பார்த்தான்... அசப்பில் படத்தில் இருப்பவனைப் போலவே ஐயாமுத்துவும் இருப்பதை உணர்ந்தான். இருந்தாலும் படத்திற்கும் ஐயாமுத்துவிற்கும் இடையில் ஒரு சின்ன வேறுபாடு இருந்தது. படத்தில் இருந்தவனின் வலுது கன்னத்தில் ஒரு வாள் வெட்டுப் காயம் இருந்தது. அது ஐயாமுத்துவுக்கு இல்லை.

"அடோ இதிங் நீ தானே?"

படத்தை வாங்கிப் பார்த்தார் ஐயாமுத்து. அதில் இருப்பது யாரென்றே அவருக்குத் தெரியவில்லை. ஆனால் நீரும் நெருப்பும் படத்தில் வந்த டபிள் அக்டிங் எம்.ஜி.ஆர் போல இதுவும் இருந்தது. ஒருவேளை இது டபிள் அக்டிங் ஐயாமுத்துவோ என்று யோசித்தார்.

ஐயாமுத்துவின் மண்டைக்குள் இப்போது ஒரு செலுலாயிட் படம் ஓடியது.ஐயாமுத்துவின் தாய் தகப்பன் இருவரையும் கொள்ளைக்காரர் சுட்டுக் கொல்ல ஐயாமுத்துவும் தம்பியும் உடரட்டமெனிக்கா புகைவண்டியில் தப்பி ஓடுகிறார்கள். பொல்காவல ரெயில் ஸ்டே-சனில் ஐயாமுத்துவுக்கு தாகம்வர அவருடைய தம்பி போத்தலுடன் தண்ணீர் எடுக்கப் போகிறான். அந்த நேரம் பார்த்து வழமைபோல புகையிரதம் புறப்படுகிறது. தண்ணீர்ப்போத்தலுடன் அவருடைய தம்பி ஓடி வருகிறான். அந்தோ ... அவனால் புகையிரதத்தைப் பிடிக்க முடியவில்லை. ஐயாமுத்துவும் தம்பியும் பிரிகிறார்கள். இப்படியொரு கற்பனை ஐயாமுத்துவின் நினைவில் ஓடியது.

ஐம்பது வருடங்களாக ரெயினில் தண்ணீர் எடுக்கப் போவதும்,

www.padippakam.com



ரெயின் புறப்பட சகோதரங்கள் பிரிவதும் போன்ற கதை ஏதாவது தனது வாழ்விலும் இருக்கிறதா என்று தேடிப்பார்த்தார்.

அவர் நினைப்பது ஆமிக்கொமாண்டருக்கு விளங்க நியாயமில்லை. அவன் பழைய காமினி பொன்சேகா படங்கள் போல அந்தப் புகைப்படத்தில் இருப்பவனைப் பிடித்துக் கொடுத்தால் ஒரு இலட்சம் ரூபா சன்மானம் கிடைக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

ஆறு ஆமிக்காரரை கள்ளுப்பிளாவில் விம் தடவிக் கொடுத்துக் கொன்ற குற்றத்திற்காக தேடப்படும் ஆலையடிச் சத்தியன்தான் அந்தப் படத்தில் இருந்தான். அவன்தான் ஐயாமுத்துவென ஆமிக்காரன் நினைத்தான்.

“அடோ நீதானே கள்ளுலை விம் போட்டுக் கொடுத்த ஆள்?”

“அவர் கள்ளுக்குடிக்கிறதில்லை.. இந்த ஆள் ஆரெண்டே அவருக்குத் தெரியாது. அவர் டென்மார்க்கில இருந்து வாறார்.. ” சேகரம் சொன்னான்.

“டென்மார்க்... ” கொமாண்டர் கடுமையாக யோசித்தான்.

ஆமிக்காரி கையில் இருந்த ஐயாமுத்துவின் பாஸ்போட்டைக் கொடுத்தாள். கொமாண்டர் முகத்தில் கலவரம் பரவியது. அதையும் எடுத்துக் கொண்டே வேகமாகக் காரியாலயத்திற்குள் ஓடினான். அவசரமாக தொலைபேசியை சுழற்றினான். யாரோ ஒருவனுடன் சிறிது நேரம் கதைத்தான். அவனுடைய கதையில் நாலாவது மாடி, விசாரணை என்ற சொற்கள் அதிகமாகப் புரண்டுவந்தன.

சென்ற வருடம் கள்ளில் விம் கலந்த கதைக்கும், இருபது வருடங்களுக்கு முன் டென்மார்க் போன ஐயாமுத்துவிற்கும் ஒரு தொடர்பும் இல்லையென்பதை கொழும்பில் இருந்த யாரோ ஒரு தமிழன் விளங்கப்படுத்திய பின்னர் ஆமிக் கொமாண்டர் தெளிவாகப் புரிந்து கொண்டான்.

“மிச்சங் கவனங்... ” என்று எச்சரித்து பாஸ்போட்டைக் கொடுத்து அவர்களை போகும்படி சொன்னான்.

www.padippakam.com



எம கண்டத்தில் இருந்து தப்பியது போல இருந்தது ஐயாமுத்துவிற்கு. பக்கத்தில் நின்றவர்கள் எல்லாம் ஐயாமுத்துவையே திரும்பித் திரும்பிப் பார்த்தனர். தேவாரச்சொல்வி அவரை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றாள். எல்லோரும் வானில் ஏறிக் கொண்டார்கள்.

“எங்கை போனாலும் மூதேவி பிடிச்சது போல ஆமியட்டைப் பிடிபட வேண்டிக்கிடக்கே, என்று கவலைப்பட்டுக் கொண்டே வானில் ஏறினார். அவர்களோடு வந்தவர்களும் ஆளுக்கு ஆள் ஏதோ பேசிக்கொண்டே ஏறினார்கள். அவர்கள் ஆரைப் பேசுகிறார்கள் என்பதையே அறிய முடியாதிருந்தது.

ஆரென்று அடையாளம் பிடிக்க முடியாதபடி திட்டித்திரியும் தமிழொன்று அங்கு புதிதாக வளர்ந்திருப்பதை தேவாரச்செல்வி புரிந்து கொண்டாள்.

வான் குலுங்கி ஆடி மெல்ல பிரதான வீதியில் ஏறியது.

சிறிது தூரம் போக மெல்லிய சோளகம் முகத்தை வருடியது.

பாலைப்பழ மரங்கள் சோளகப் புழுதியில் தோய்ந்து கிடந்தன. ஏதோ சொந்தக்கார வீடு போல ஒரு சுகம்.

“இனி பெடியளின்ரை இடம் வரப்போது... ” சேகரம் ஒரு பீடிகை போட்டபடி வானில் தமிழ்ப் பாட்டைப் போட்டான்.

“நான் பட்டகடன் எதுவுமில்லை பூமியில் பிறந்து - அடை
பட்ட கடன் எதுவுமில்லை ஆயிரம் இருந்தும் செல்வம் ஆயிரமிருந்தும்.. ” பாடல் ஆரம்பித்தது.

“ஐயோ கடவுளே... ” என்று பின்புறமிருந்து யாரோ ஒரு கிழவி புறுபுறுப்பது தெரிந்தது.

ஐயாமுத்து அடுத்த பரீட்சைக்கு தயாரானார்.

www.padippakam.com



## 24

ஐயாமுத்துவிற்கு பெடியளின் சோதனைச்சாவடி பற்றி டென்மார்க்கிலேயே பல தகவல்கள் கிடைத்திருந்தன. அவை உண்மையோ பொய்யோ அவர் அறியார். வெளிநாடுகளில் உள்ள தமிழரிடையே அது செவிவழிச் செய்திபோல பரவியிருந்தது.

இவ்வளவையும் தலையில் சுமந்தபடி படபடத்த நெஞ்சுடனும் அவை உண்மைதானா என்பதை அறியும் ஆவலுடனும் வாகனத்தில் இருநதபடியே சோதனைச் சாவடியைக் கூர்ந்து பார்த்துக் கொண்டார். சனத்தின் கதையைக் கேட்டு உணர்ச்சிவசப்படக் கூடாது என்று நினைத்துக்கொண்டார்.

சிங்கள ஆமியை அடிக்க வேண்டும், கொல்ல வேண்டும் கணப்பொழுதும் தாமதிக்காமல் போரைத் தொடுக்க வேண்டும் என்றெல்லாம் வெளிப்படையாக ஓலமிடுவார். கல்யாணவீடு, பூப்புனித நீராட்டு விழாக்களுக்குப் போனால் தன்னையொரு விடுதலை வீரன-ாக பிரஸ்தாபித்துக் கொள்ளாவிட்டால் ஐயாமுத்துவிற்கு சாப்பிட்டது செமிக்காது.

நாலுபேர் கூடுமிடம் போனால் தேசியத் தொலைக்காட்சி அது இது என்று பலமாக ஊளையிடுவார். எங்காவது யாராவது சொன்ன செய்திகளை காதில் போட்டுக் கொள்வார். பின்னர் அந்த நிகழ்ச்சிகளை தானே நேரில் பார்த்தது போல தமிழ்க் கடையின் முன்னால் நின்று ரீல் விடுவார்.

அவர் கூறும் தேசியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிபற்றி யாராவது குறுக்குக் கேள்வி கேட்டால் அரைவாசிதான் பார்த்ததாகவும், மிகுதியைப் பார்க்க நேரமில்லாமல் போய்விட்டதாகவும் கூறித் தப்பிவிடுவார். தன்னைப் போல அரைவாசி பார்த்த, அரைவாசி வாசித்த பேர்வழிகள் ஐரோப்பா முழுவதும் நிறைந்து கிடப்பதை அறியாத பேதையாகப் புலம்புவது அவருடைய குணம். அதேவேளை ஐயாமுத்து இரகசியமாகப் பார்ப்பது இன்னொரு தொலைக்காட்சி

www.padippakam.com



என்பது பலருக்குத் தெரியாது.

இப்படி தன்னைப் போன்ற எத்தனையோ பித்தம் சுழன்ற பேர்வழிகளை அந்தச் சோதனைச் சாவடியால் வடிகட்டி விட வேண்டும் என்பதை ஒரு தடவை நினைத்துப் பார்த்தார். அதேவேளை பயணிகடே-ளாடு பயணிகளாக எதிரிகள் ஊடுருவிவிட்டால் அங்கு நிற்பவர்களே பொறுப்பேற்க வேண்டுமென்பதையும் எண்ணிப் பார்த்துக்கொண்டார். அங்கு நிற்பவர்கள் ஐரோப்பிய ஒன்றிய போடர்களில் நிற்கும் போலீஸ்போல சும்மா நிற்க முடியாது என்பதையும் புரிந்து கொண்டார்.

“மாமா இறங்குங்கோ.. ” சேகரம் இறங்கிவந்து அவருக்காகக் கதவைத் திறந்தான். ஏதேதோ நினைவுகளில் கிடந்தவர் திடுக்கிட்டு விழித்துக் கொண்டே கீழே இறங்கினார்.

“நீங்கள் வெளிநாட்டுக்காரர் பக்கம் போங்கோ.. ” ஐயாமுத்துவும், தேவாரச்செல்வியும் அவன் காட்டிய பக்கமாகப் போய் ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டார்கள். மற்றவர்கள் இன்னொரு பக்கமாகப் பிரிந்து போக வான் இன்னொரு பக்கம் சோதனைக்காகப் போனது.

ஐயாமுத்து தனது முட்டைக் கண்களை ஒரு தடவை சுற்றிச்சுழலவிட்டு நோட்டம் பார்த்தார். அங்கிருப்பவை எல்லாமே ஓலைக் கொட்டில்களாக இருந்தன. கல்லால் ஆன கட்டிடம் எதை-யும் காண முடியவில்லை. முழு இடங்களையும் துப்புரவாக வைத்திருந்தார்கள். ஆண்களும், பெண்களும் சாதாரண சிவில் உடையில் நிற்பதையும் கண்டு கொண்டார்.

அதை எல்லாம் பார்க்கப் பார்க்க ஐயாமுத்தருக்கு சிறிது ஆச்சரியமாக இருந்தது. சோதனைச்சாவடி என்றால் ஐரோப்பாவில் கூட துப்பாக்கியுடன்தான் போலீஸ்காரன் நிற்பான். ஆயுதபாணிக-ளாக அங்கு எவரையும் காண முடியவில்லை. மனதில் சிறிய தெம்பு உண்டானது. சும்மா சொல்லக்கூடாது எங்கட பெடியளெண்டால்... என்று சிறிது மகிழ்ந்து கொண்டார்.

அப்போது ஒவ்வொருவராக விசாரணைக் கூடத்திற்குள் போனார்கள். ஐயாமுத்துவின் தலைமை வரவே மெல்ல உள்ளே போ

னார். அவரை வரவேற்ற இளைஞன் ஒருவன் முன்னால் இருந்த கதிரையில் இருக்கும்படி சொன்னான்.

"எப்பிடி உங்கடை நாட்டிலை அமைப்பின் தொழிற்பாடுகள் இருக்குது?"

"வலு விசேசம்" என்றார். டென்மார்க்கில் தாறுமாறாகப் பேசித்திரியும் அவர் இங்கு அதற்கு முற்றிலும் எதிர்மாறாகக் கதைத்தார். ஐயாமுத்தர் ஆளுக்கு ஆள் தாளம் போடும் பேர்வழி அவர் என்பதை கண்டு பிடித்துவிட்டவன் போல தலையாட்டிக் கொண்ட அந்த இளைஞன் அமைதியாக அடுத்த கேள்விக்குப் போனான்.

"உங்கடை பங்களிப்பு.. "

"தெரியும்தானே தம்பி நாரிப் பிரச்சனை... பென்சனுக்கு எழுதிப் போட்டிட்டு இருக்கிறன். என்னைப்பற்றி விசாரிச்சுப் பாருங்கோ.. கையில இருந்தால் அள்ளி எறிஞ்சு போட்டுத்தான் அடுத்த வேலை பாப்பன். பணமென்ன பணம்.... "

பதினைந்து வருடங்களாக ஒரு சதமும் கொடுக்காமல் இருந்து .நாடு போகத் திட்டமிட்டவுடன்தான் அவருக்கு தாயகப் பாசம் பொங்கி வழிந்ததும், கடந்த ஆறு மாதங்களாக நூறு குறோணர் கொடுத்து வருவதும் தனியான கதை. பதினைந்து வருடங்களாக எல்லாவற்றையும் எதிர்த்து இப்போது ஆதரித்து முழங்கும் தன்னைப் போன்றவர்களுடைய கூத்து அந்த இளைஞனுக்கு தெரிந்திருக்குமோ என்று யோசித்தார்.

அதற்கு மேல் பேசாது ஒரு குடும்பத்திற்கு கட்டவேண்டிய ஆயிரம் ரூபாவைக் கட்டினார். செஞ்சோலைக்கு ஒரு டிக்கட் எடுத்தார். பின் அதிகம் கதைக்காது விடைபெற்று எழுந்தார். புறப்படும்போது மூன்று நாட்களுக்குள் கோண்டாவிலில் இருக்கும் நந்தவனத்திற்குப் போக வேண்டும் என்றும் கூறினான் அந்த இளைஞன்.

வெளிநாடு போய் எவ்வளவு பணத்தை நாசமாக்கினேன், வரியாக் கட்டினேன். என்னுடைய நாட்டுக்கு என்ன கொடுத்தேன்

www.padippakam.com



என்பதை எண்ணி சிறிது வெட்கப்பட்டுக் கொண்டார்.

வெளியே வந்து பார்த்தார். வாகனத்தோடு மற்றவர்களும் சோதனை முடித்துவிட்டு அவருக்காகக் காத்திருந்தார்கள். கடைசியாக ஐயாமுத்துவின் கைப்பையை ஒரு யுவதி சோதனையிட்டாள். அந்த நேரம் பைக்குள் இருந்த சிடி ஒன்றை மெல்ல பொக்கற்றுக்குள் ஒழித்தார். அதை ஓரக்கண்ணால் அந்த யுவதி பார்த்துவிட்டாள். அதை எடுத்து வைக்கும்படி வெடுக்கெனக் கூறினாள். அவளுடைய கண்களின் கூர்மையையும், அவதானிப்பையும் மனதில் மெச்சினார்.

அந்தச் சினிமாப்பட சி.டியை அருகில் இருந்த இன்னொரு இடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தார். அவர்கள் அதைப் போட்டுப் பார்த்துவிட்டுக் கொடுத்தார்கள். இதற்குள் அவர் சிறுநீர் கழித்ததால் தோய்ந்து கிடந்த காற்சட்டை காய்ந்து மடமடத்தது. அதிலிருந்து வீசிய நெடி அவருக்கு சிறிய கூச்சத்தைக் கொடுத்தது.

எல்லோரும் ஐயாமுத்துவுக்கும் தேவாரச் செல்விக்குமாகக் காத்திருந்தார்கள். வான் புறப்படும் முன்னர் எல்லோரையும் ஒவ்வொருவராக எண்ண வேண்டியது மரபு, எண்ண ஆரம்பித்தார்கள். விழுந்தது இடி... வானில் இருந்த 12 பேரில் யாரோ ஒருவரைக் காணவில்லை.

"யார் அது ?"

ஐயாமுத்துவின் வானில் சிங்கள உளவாளியும் ஒருவன் வந்திருந்தானா? அப்படியானால் அவன் பெடியளின் பகுதிக்குள் ஊடுருவிவிட்டானா?

"எங்கையப்பா ஒராள்"சேகரம் ஓடியோடித் தேடினான் யாரும் அகப்படவில்லை. அவனுடைய முகம் ஒரு நொடியில் பேயறைந்த முகமாக மாறியது.

காசுக்கு ஆசைப்பட்டு பெரிய ஆபத்தில் மாட்டிவிட்டதை ஐயாமுத்து உணர்ந்து கொண்டார். அந்த வாகனத்தைச் சோதிக்க சிலர் வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தனர்.

www.padippakam.com



"யார் அந்தக் கறுப்பு ஆடு..."

ஐயா கடவுளே என்ன நடக்கப் போகுதோ...

ஐயாமுத்துவின் தேகம் சில்லென்று விறைத்து தேகமெல்லாம் பயத்தில் மயிர்க்கூச்செறிந்தது...

## 25

வாகனத்தில் இருப்போரின் எண்ணிக்கையில் ஒருவர் குறைந்தாலும் அங்கிருந்து வாகனத்தை நகர்த்த முடியாது என்ற விடயம் ஐயாமுத்துவுக்கு அப்போதுதான் தெரிந்தது.

வாகனத்தைச் சோதிக்க ஓடி வருவோரின் வேகத்தை விட அவருடைய எண்ணங்கள் வேகமாக ஓடின...

அந்தக்காலத்தில் இ.போ.ச பஸ் வண்டியில் ஏறி , நெக்ஸ்ற் கோல்ற் , என்று கூறியபடியே பணம் கொடுக்காமல் ஒவ்வொரு பஸ் வண்டியாகத் தாவித்தாவி ஏறி ஓசியிலேயே யாழ்ப்பாணம் போய் அதேபோல திரும்பியும் வருபவர் ஐயாமுத்து.

புகையிரதம் என்றால் டிக்கட் இல்லாமல் பயணம் செய்யும் இரதம் என்பது அவருடைய கருத்து. பல தடவைகள் காங்கேசன்துறையில் இருந்து கொழும்புவரை பணம் கொடுக்காமலே பயணம் செய்து பழகியவர். டிக்கட் பரிசோதகர் வந்தால் புகைவண்டியின் பின்பக்கமாக ஓடி முதல் வரும் ஸ்டேசனில் இறங்கியோடுவது அவருடைய குணம். ஒரு தடவை கனேமுல்லையில் இறங்கி ஓடி அனுராதபுரம் வரை மீன் லொறியில் தாவியும் வந்திருக்கிறார்.

சேகரத்தின் வாகனத்தில் வந்து இறங்கி ஓடியவன் ஒருவேளை தன்னைப் போல ஒரு டிக்கட் இல்லாத பேர்வழியோ என்றும் எண்ணினார்.

டென்மார்க் வந்த காலம் தொடக்கம் டிக்கட் எடுக்காமல்தான் பயணம் செய்துவருகிறார். அவருக்கு டிக்கற் பரிசோதகர் ஏறும் இடமும் இறங்குமிடமும் தெரியும். அதற்கு அமைவாக அவர் ரயில் வண்டி மாறி

www.padippakam.com



அற்புதமாக பயணம் செய்வதில் வல்லர். யாழ்தேவிக்கே மிளகாய் அரைத்த அவரை ஐரோப்பிய ரயில்களில் வரும் பரிசோதகர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திடீரென இந்தச் சோதனைச் சாவடிகளுக்கு எப்படி டிமிக்கி கொடுப்பது என்று சிறிய திட்டமும் போட்டுக் கொண்டார்.

திடீரென வாகனத்தைச் சோதிக்க ஓடி வருபவர்கள் யாரென்று சேகரத்தை ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டார். அவர்கள் போரா-ளிகள் அல்ல அங்கு பணியாற்றும் சாதாரண ஊழியர்கள் என்பதை அவன் மூலம் உறுதி செய்து கொண்டார்.

விரைந்துவந்த ஊழியர்கள் வேகமாக வந்து ஆட்களை எண்ணினார்கள். யாரோ ஓராள் குறைவது தெரிந்தது. அவர்கள் சந்தேகத்துடன் ஐயாமுத்துவைப் பார்த்தார்கள். ஐயாமுத்து விழித்துக் கொண்டார்.

"ஆரப்பா அது ? "முதலிலை வாயைத் திறவுங்கோ உங்களிலை ஆருக்கோ பக்கத்திலதான் அந்தாளும் இருந்திருக்க வேணும். மரியாதையாச் சொல்லுங்கோ இல்லாட்டி தம்பிமார் பேசமாட்டாங்கள் இந்த ஐயாமுத்தன் பேசுவான் , என்று உரத்த குரலெடுத்துக் கத்தினார்.

"ஒண்டு.... ரெண்டு ... மூண்டு... மயிர எங்கையப்பா ஓராள்?" வாகனத்தின் பின் பக்கமாக எண்ணினார். பின் முன் பக்கமாக எண்ணினார். கடைசியாக நடுப்புறத்தில் இருந்து எண்ணினார். எப்படி எண்ணினாலும் ஒரு தொடர்ந்து ஒரு தலை குறைந்து கொண்டேயிருந்தது.

"என்னென்ன ஆயுதங்களோடை ஆர் ஆர் வந்தாங்களோ? "கடவுளே எனக்கேன் இந்தச் சோதனை... சீட்டுப்போட்டு, வட்டிக்கு விட்டு சேத்த காசோடை வந்தன். கிடைச்ச விடுமுறையை நின்மதியா அனுபவிக்க முடியுதே... தூத்தேறி காசைக் குடுத்து வம்பையெல்லோ விலைக்கு வேண்ட வேண்டிக் கிடக்கு, என்று இரகசியமாக எண்ணிக் கொண்டார். இருப்பினும் ஒரு பாதுகாப்புக்காக தன்னுடைய பத்தாம்பசலித்தனமான பழைய சதுராட்டத்தை அரங்கேற்ற எண்ணினார். பிரச்சனைகள்

www.padippakam.com



வரும்போது இப்படித்தான் ஒரு சிறிய கலவரத்தை உண்டுபண்ணி, வம்பிலிருந்து தப்பிக் கொள்வது அவருடைய தனிவழி.

அவர் குழம்பினால் தொங்கல்வரைக்கும் போய்த்தான் நிறுத்துவார் என்பது தேவாரச்செல்விக்குத் தெரியும். மற்றவரை மாட்டிவிட்டு தான் மட்டும் தப்பத்தான் அவர் இந்த நாடகத்தை அரங்கேற்றுகிறார் என்பது தெரியாமல் குறுக்கிட்டாள் தேவாரச்செல்வி.

“எணேய் எப்பன் பொறணை... பிறசர் ஏறப்போகுது.., என்றபடி அவருடைய கையைப் பிடித்து இழுத்தாள். இதற்கு முன்னர் சிங்கள இராணுவ முகாமில் ஐயாமுத்து மயங்கி விழுந்தபோது தேவாரச்செல்வி கண்ணகியாக மாறி, ஆமிக்காரரையே தள்ளி விழுத்திவிட்டு உள்ளே வந்தவள். இதனால் அவள் மீது சிறிய மரியாதை வைத்திருந்தார். இப்பொழுது அதையெல்லாம் ஒரே நொடியில் மறந்தார்.

“நீ பொத்தடி வாயை பரதேசி... எல்லாம் உன்னால் வந்தவினை.. சும்மா கிடந்த என்னை இஞ்சை கூட்டிவந்து ஒரு நாளைக்குள்ளை எத்தினை கோதாரியளிளை மாட்டிப் போட்டாய்... உனக்கு மிதிச்சால்தான் என்ரை மனம் ஆறும்.”

சரேலெனப் பாய்ந்து தேவரச்செல்வியின் தலைமயிரை வழமைபோல இன்றும் கோலிப் பிடித்தார். காலை ஓங்கி பாதத்தைத் தீ மிதிக்கப் போனவன் உதறியது போல உதறி அடாத்தனமாக வீசினார். அந்த நேரம் பார்த்து காலின் பெருவிரல் பின்புறம் கிடந்த பிரயாணப் பையின் பட்டியில் சிக்குப்பட தலைகுப்புற விழுந்தார். பொதக்கென விழுந்த அவருடைய தேகம் ஆசனங்களின் இடுக்கில் மாட்டிக் கொண்டது. நாரியில் பலத்த அடி.. வந்தவர்கள் எல்லாம் ஆட்களை எண்ணுவதை விட்டுவிட்டு சீற்றுக்குள் மாட்டுப்பட்டுக் கிடந்த ஐயாமுத்துவை இழுத்தெடுக்க படாதபாடு பட்டுவிட்டார்கள்.

அந்த நேரம் பார்த்து வானத்தில் கேட்ட அசரீரி போல ஒரு குரல்...

“ஓடினவனைக் கண்டு பிடிச்சிட்டேன் ! ஆளைக் கண்டு பிடிச்சிட்டேன் , சேகரத்தின் நண்பனும் வானின் கிளீனருமான அருமை

www.padippakam.com



பலமாகச் சத்தமிட்டான்.

எல்லோரும் அவனையே கூர்ந்து பார்த்தனர்.

, எங்கையடா ... எங்கை .. ஐயாமுத்து நோவை மறந்து எகிறிப் பாய்ந்தார். டென்மார்க்கில் உள்ள நகரசபையை ஏமாற்றி

பென்சன் எடுப்பதற்காக நாரியைப் பிடித்து நொண்டி நொண்டி நடந்து நாடகம் போடும் அவர் இன்று நாரியில் பலத்த அடி விழுந்தும் அதையெல்லாம் பொருட்படுத்தாது பாய்வது தேவாச்செல்விக்கு சிரிப்பாகக் கிடந்தது. ஆனானப்பட்ட அருச்சுணனெல்லாம் இருக்க இந்த வேதாளத்தைக் கட்டினனே என்று அவரைப் பார்த்து நினைத்துக் கொண்டாள்.

“ஆரடா அந்தாள்..., ஐயாமுத்து அருமையைப் பிடித்தார்.

அந்த ஆள் நான்தான் என்றான் அருமை.

“நீயோ... ”

”எங்கை... ஒருக்கா என்னையும் சேர்த்து எண்ணுங்கோ பாப்பம்?”

மறுபடியும் சேகரத்தையும் சேர்த்து ஆட்களை எண்ணினார், எண்ணிக்கை சரியாக இருந்தது. எல்லோரையும் எண்ணின கி-ளீனர் தன்னை எண்ணாமல் விட்டதால் வந்தவினை என்பதைப் புரிந்து கொண்டார். தேவையில்லாத ஒரு விடயத்திற்கு பேயாட்டம் ஆடிவிட்டதால் ஐயாமுத்துவின் முகத்தில் அசடு வழிந்தது.

“சரி... சரி என்னவோ பிரச்சனை முடிஞ்சுது.. எல்லாரும் இடங்களிலை இருங்கோ , என்றான் சேகரம். அவன் குரலில் சலிப்பும் களைப்பும் இருந்தது. அதற்குப் பிறகு வாகனம் புறப்பட அனுமதி கிடைத்தது. எல்லாமே அருமை செய்த கூத்தால் வந்தவினையென்று சலித்தார்.

படாத பாடுபட்டு கயஸ்வான் புறப்பட நேரம் பன்னிரண்டைத் தாண்டிவிட்டது. மேலும் எத்தனையோ சோதனைச் சாவடிகள்

படிப்பகம்

www.padippakam.com



இருந்தன.

என்ன நடந்தாலும் இனி கூடுதல் நிதானம் கடைப்பிடிப்பதாக முடிவெடுத்துக் கொண்டார் ஐயாமுத்து. இடையில் ஏதோ ஓர் இடத்தில் கிழவன் ஒன்று இறங்கியது.

"பானையுக்கை தலையை விட்டிச்சாம் மாட்டுக்கண்டு. பானையை உடைக்காமல் மாட்டைக் காப்பாற்ற தலையை வெட்டினானாம். பிறகு தலையை எடுக்க பானையை உடைச்சானாம் ஆரோ ஒருதன். அது போலதான் கிடக்கு உவங்கடை வேலை என்று" ஐயாமுத்துவைப் பார்த்து கெக்கலித்துச் சிரித்தபடியே இறங்கிப் போனது அந்தக் கிழவன்.

"இறங்கும்வரை சும்மா இருந்த கிழவன் வீடு வந்தவுடனை விடுற குசும்பைப்பார் "என்று ஐயாமுத்து சலித்துக் கொண்டார்.

அடுத்த நகரம் கொடிகாமம் என்று சேகரம் சொன்னான்.

அந்தக்காலத்தில ரெயில் வண்டி வந்தவுடன் வேகமாக இறங்கி ஓடிவந்து காத்து நிற்கும் பஸ்சில் பாய்ந்து ஏறி கோணர் சீற் பிடித்து ஊர் போகும் நாட்கள் நினைவிற்கு வந்தன.

கொடிகாமம் பருத்தித்துறை வீதி முழு இராணுவக்காடாகக் கிடந்தது. பளை தொடங்கினதும் வரும் தென்னை மரங்களின் தோட்டங்களும் அழிந்து போயிருந்தன. முழத்திற்கு ஒரு இராணுவ கடவையாகக் கிடந்தது. அழகு குலைந்துகிடக்கும் அந்த வீதியை கவலையோடு பார்த்துக் கொண்டார்.

ஊர் போய் இறங்கினால் எல்லாம் மறந்துவிடுமென நினைத்தார். அங்கு தேவாரச்செல்வியின் தாய் சுள்ளிபொறுக்கிக் கிழவி ஆடப்போற கூத்தை அறியாதவராய் கானல் நீர் தெறிக்கும் முள்ளி றோட்டை ஆவலோடு பார்த்தார்.

www.padippakam.com



# 26

வாகனம் கொடிகாமம் றோட்டால் ஓடி பருத்தித்துறை வழியாக இறங்கும்போதே ஐயாமுத்து தவறான ஓர் இடத்திற்குள் வந்துவிட்டதைப் புரிந்து கொண்டார்.

ஒவ்வொரு நூறு மீட்டர் இடைவெளியிலும் மண் சாக்குகள் போடப்பட்டு நடுவில் ஒரு துவாரம் விட்டு அதற்குள்ளால் துப்பாக்கியை நீட்டியபடி இராணுவம் நின்றது. எங்கும் பாதுகாப்பு வலை விரிப்புக்களும், கொத்தி விடப்பட்ட வீதிகளுமாக காட்சிகள் நீண்டன... கூட்டம் கூட்டமாகக் குளிக்கப் போகும் இராணுவத்தினரும், துப்பாக்கிகளுடன் நடமாடும் இராணுவத்தினருமாக ஒரே இராணுவ மயமாக இருந்தது.

"சிறீலங்காவில பசுமைப்புரட்சி ஒண்டு வரப்போகுதெண்டு அந்தக்காலத்தில சில அரசியல்வாதியள் சொன்னவங்கள், அவங்கள் சொன்னபடியே பசுமைப்புரட்சி வந்திட்டுது... " என்று சேகரத்தைப் பார்த்தபடி சொன்னார் ஐயாமுத்து. அவனுக்கோ அவர் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை.. நெற்றியில் இருந்த கரிய புருவங்களை மேலே உயர்த்தினான்.

"இல்லையப்பா சனம் பட்டினியிலை கிடக்கு... நாடு முழுதா பச்சை உடுப்புக்களோடை ஆமி மயமாக்கிடக்குது.." அதுதான்.. பசுமைப் புரட்சி என்றனான் ,

"உஸ்... வாயைத் திறக்காதையுங்கோ.. இது இராணுவ தேசம்.. நாங்களெல்லாம் கன காலமாக மௌனமாக இருக்கிறம்.. கவனம் கதைக்க முந்தி அக்கம் பக்கம் பாத்துக் கதைக்க வேணும்.."

"ஏன் இப்ப சமாதானம் நிலவுதுதானே.. கதைச்சால் என்ன.. " அதைக் கேட்டதும் சேகரம் சிரித்தான். அவன் சிரிப்பில் ஈரலிப்பிழந்த வரட்சி தெரிந்தது.

படிப்பகம்

"வாகனத்தின் உட்புறமாக ஒரு தடவை பார்வையை

ஓடவிட்டான். அதில் வந்த எல்லோரும் கொடிகாமத்தோடு இறங்கிவிட்டார்கள். அதனால் சிறிது தெம்புடன் பேசத் தொடங்கினான்.

“இந்த நாட்டில வாழ வேணுமெண்டால் சில எழுதப்படாத நிபந்தனையள் இருக்கெண்டு என்ரை சினேகிதர் சிலர் வேடிக்கையாகச் சொல்லுவினம் ” உங்களுக்கு அது தெரியுமோ சேகரம் அவரைப்பார்த்தபடி கேட்டான்.

“தெரியாது.. ”

“தவறா நினைச்சுப் போடாதையுங்கோ சும்மா பகிடிக்காகத்தான் இப்பிடிக் கதைக்கிறனாங்கள்... ” சேகரம் மெல்ல இழுத்தான்.

“அட சொல்லப்பா.. ”

“இஞ்சை வாழுறதெண்டால் ஒண்டு நரைச்ச தலையுள்ள கிழவனாயிருக்க வேணும்.. பெறுமதி இல்லாத மனிதனா இருக்க வேணும்... ஒரு துப்பாக்கிக் குண்டைவிட பெறுமதி குறைந்த மனி-தனா இருக்க வேணும்.. ” ஐயாமுத்தர் , உம்..! , கொட்டினார், சே-கரம் தொடர்ந்தான்.

“கையில ஒரு சதம் இருக்கக் கூடாது. அண்டாடங்காய்ச்சியா அலை மோத வேணும்.. குடி ஒரு முக்கிய விசயம். குடிச்சுப் போட்டு மனுசிக்கு அடிச்சு, சட்டி பானையளை உடைச்சு, அடிக்கடி கல-வரம் விளைவிக்க வேணும். அடிக்கடி மாறாட்டக் கதை கதைக்க வேணும்..,

”ஏன்... ”

, எல்லாம் காரணத்தோடைதான்... மிச்சதையும் கேளுங்கோவன்... காலையில கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டு நெற்றியில் சந்தனம், திருநீறை அப்ப வேணும். மத்தியானம் கள்ளுக்குப் போக வேணும், பின்நேரம் நித்திரை, பிறகு இரவுக்கள்ளு ..

இப்பிடியே காலத்தைக் கடத்த வேணும்.., ஆற்றல்

www.padippakam.com



உள்ளவரெல்லாம் திட்டமிட்டு அகற்றப்படுவதால் இப்படியொரு நாடகம் அவசியம் என்று அவன் சொல்லவருவது ஐயாமுத்தருக்கு விளங்கவில்லை. அவர் வேறு கோணத்தில் கேள்விகளை வீசினார்.

“இப்பிடியெல்லாம் நடந்தால் வருமானத்திற்கு என்ன செய்யிறது.. அப்ப வேலை வெட்டிக்குப் போறதில்லையே.. ”

“வேலை வெட்டிக்குப் போய் ஒழுங்கா வாழுறவனுக்கு இங்கை பாதுகாப்பில்லை.. அகதி நிவாரணத்தில வாழுறதுதான் பாதுகாப்பு.. ”

“அப்ப நாட்டை எப்படியப்பா முன்னேற்றுறது.. ” ஐயாமுத்தர் கேட்க, பக்கத்தில இருந்த அருமை கிலீரிட்டுச் சிரித்துவிட்டு, ஏதுமே தெரியாதவன் போல வெளியில் பார்த்துக் கொண்டிருந்தான்.

“கேக்க நல்லாத்தான் இருக்குது... இவ்வளவு சனம் நிவாரணம் பெற வரிசையில நிக்குதுகள்.. ஏலுமெண்டால் அதில
ஒரு பத்துப்பேரை சம்பளத்துக்கு வேலை செய்ய பிடிச்சு வாருங்கோ பாப்பம், சேகரம் கேட்க ஐயாமுத்துவுக்கு இதுவரை புரியாத எதோ ஒன்று புரிவதைப் போல இருந்தது.

“ஒவ்வொரு தரமும் ஆமிவர அகதிகளாக ஓடுறதும், பிறகு திரும்பி வாறதுமா வாழ்க்கை அழியுது... உழைப்பையே மூலதன-மாகக் கொண்டிருந்த யாழ்ப்பாண சமுதாயம் இப்ப உழைப்பையே இழந்திட்டுது.”

மீன் பிடிக்கத்தடை..
வயலில் நிலக்கண்ணி வெடி...
பயணத்தடை..
நோய்வந்தால் மருந்துத் தடை..
தொழில் செய்ய முடியாமல் மின்சாரத் தடை..
பங்கர் வாழ்வு..
பாம்புக்கடி..
விமானக் குண்டு வீச்சு..
கடற்படையின் செல்லடி...

என்று நீட்டிக்கொண்டே போகலாம். இவ்வளவு தொல்லைகளையும்

படிப்பகம்

www.padippakam.com



தோளில் சுமந்து, உழைப்பாளியாகவும் இரு என்று சொன்னால் அதில என்ன நியாயமிருக்கு.. , சேகரம் கேட்டான். ஐயாமுத்து பதிலின்றி மௌனமாக இருந்தார். ஒரு காலத்தில கல்வியில் முதலிடத்தில நிண்ட யாழ். குடாநாடு இப்ப கடைசிக்கு முதலாவது இடத்திலை நிக்குது அது உங்களுக்குத் தெரியுமோ.?,

“இதையெல்லாம் பாத்துக் கொண்டு உலக நாடுகள் என்னப்பா செய்யுது ?” தலையை மசமசவென்று வறுகியபடியே ஐயாமுத்தர் கோபமாகக் கேட்டார்.

அந்தக் கேள்வியை அவர் தன்னைப் பார்த்துக் கேட்டது சேகரத்திற்கு எரிச்சலூட்டியது. டென்மார்க்கில இருக்கிற நீங்கள்தானே இந்த அவலத்தை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சொல்ல வேணும்.. என்று அவனுடைய பார்வை எதிர்க் கேள்வி எழுப்பியது.

“உறு... உறு... ” கையில் தடியுடன் ஒரு மனட்சாட்சி ஐயாமுத்தர் மனத்திரையில் ஓடிவந்தது. அடிக்கடி அது வருவதும் ஐயாமுத்தரை கேள்வி கேட்பதும், தடியால் அடிப்பதும் வழமை.. இன்றும் அது அவரின் முன்னால் வந்துவிட்டது.

“டே.... ஐயாமுத்து இந்த நாட்டில நடக்கிற போராட்டம் நியாயமானதுதான் என்று ஒரு டேனிஸ்காரனுக்காவது சொல்லியிருக்கிறாயா... இருபது வருசமா அங்கைபோய் என்னடா செய்தாய்... தமிழரே தமிழரின் போராட்டத்தை கொச்சைப்படுத்திறபோதெல்லாம் சும்மா இருந்தியே.. நீயெல்லாம் ஒரு மனிசனோ...”அந்த மனச்சாட்சி ஐயாமுத்தரின் உச்சந்தலையில் கருங்காலித் தடியால் அடிஅடியென அடித்துவிட்டு மறைந்தது... அது போனாலும் ஐயாமுத்தரின் தேகமெல்லாம் வியர்த்துக் கொட்டுவது மட்டும் நிற்கவில்லை.

“இதுதான் மனச்சாட்சி இல்லாத மனிதருக்கெல்லாம் இறைவன் படைத்த இறுதி மனச்சாட்சி.. ” ஐயாமுத்தர் தன்னை மறந்து புலம்பினார்.

“என்ன சொல்லுறியள்.. ” சேகரம் கேட்டான். தன்னுடைய மனச்சாட்சிக் கதையை அவனுக்கும் சொல்லி சிரிப்பாய் சிரிக்க வைக்காமல் மறைத்துக் கொண்டார் ஐயாமுத்து.

www.padippakam.com



அந்தச் சூழலில் உயிர்வாழ வேண்டுமானால் போராட்டம் தவிர்க்க முடியாதது...

போர் அந்த மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டிருக்கிறது..

போராட்டமே வாழ்க்கை... வாழ்க்கையே போராட்டம் என்பதை அங்கு போனபின்தான் கண்டு கொண்டார்.

அவர் இதையெல்லாம் கணக்குப் போட்டு முடிக்கவும் வீடு வந்து சேரவும் சரியாக இருந்தது.

சேகரம் இறங்கிவந்து வானின் கதவைத்திறந்து விட்டான்.

"என்னைப் பெத்தராசா ஐயோ... " சுள்ளி பொறுக்கிக் கிழவி ஓலமிட்டபடியே ஓடிவந்து தேவாரச்செல்வியைக் கட்டிப்பிடித்து பலத்த குரலெடுத்தபடி ஒப்பாரியை ஆரம்பித்தாள். அவளைக் கண்டதும் "ஐயோ என்ரையம்மா ... " என்றபடியே பாய்ந்து பிடித்தாள் தேவாரச்செல்வி. இருவரும் நிலத்தில் விழுந்து காட்டுக் கூச்சல் போட்டனர்.

"எடி கோதாரியில போவாளுவளே.. ஏனடி ஒப்பாரி வைக்கிறியள்.. " என்றபடி ஐயாமுத்தர் தேவாரச்செல்வியின் பி-டவையைப் பிடித்து இழுக்க, அது துகிலுரிபடலமாகியதும் தெரியாது பாவாடையுடன் கிடந்து மண்ணள்ளி எறிந்து அழுதாள் தேவாரச்செல்வி.. அதைக்கேட்டு ஊர்ச்சனமெல்லாம் அந்த இடத்தில் கூடிவிட்டது.

"போங்கோடா துலைவாரே.. , என்று சனத்தின் மீது மண்ணை வாரி வீசினாள் சுள்ளிபொறுக்கிக் கிழவி.

அவர்கள் அழும் அழுகையைப் பார்த்தால் ஏதோ பாரதூரமாக நடந்திருக்க வேண்டும் என்று தெரிந்தது.. அதை இவ்வளவு நேர-மும் தனக்குத் தெரியாமல் மறைத்துவிட்டார்கள் என்று ஐயாமுத்தர் உணர்ந்து கொண்டார். யார் செத்தது... ஐயாமுத்தர் நடுங்கும் மன-துடன் சுள்ளி பொறுக்கிக் கிழவியைப் பார்த்தார்....

செத்தவரின் பெயரைக் கேட்டதும் ஐயாமுத்தருக்கு மாரடைப்பே வந்துவிடும் போலிருந்தது..

www.padippakam.com



# 27

சுள்ளி பொறுக்கிக் கிழவியும், தேவாரச்செல்வியும் கட்டிப்புரண்டு அழுது ஒரு சீருக்கு வர அரைமணி நேரம் ஓடிவிட்டது.

எழும்படி பிள்ளை என்ரை ராசாத்தி மெலிஞ்செல்லோ போ-னாய்.. , கிழவி மகளை எழுப்பினாள். அப்போதுதான் பிடவை இல்லாமல் பாவாடையோடை நிற்பதை உணர்ந்தாள் தேவாரச்செல்வி. ஐயாமுத்துவிடமிருந்து சேலையை வெடுக்கெனப் பிடுங்கி உடலில் சுற்றிக் கொண்டாள்.

"என்னடா பாக்கிறியள் போக்கறப் போவாரே!" சுற்றவர வேடிக்கை பார்த்தவர்களை கிழவி விரட்டியடித்தாள். சனம் கலைந்து போ-னது. ஐயாமுத்து வந்த செய்தி ஊர் முழுவதும் பரவுவதற்கு அந்த ஒப்பாரி நாடகமே போதியதாக இருந்தது. ஐரோப்பாவில் வானொ-லி, தொலைக்காட்சியென்று எத்தனை விளம்பரங்கள் போட்டாலும் கூட்ட முடியாதளவு சனத்தை ஓர் ஒப்பாரியில் கூட்டிவிட்ட கிழவியின் கூத்தை மனதிற்குள் மெச்சிக் கொண்டார்.

"சேகரம் நீயும் ஒண்டும் சொல்லேல்லை.. இனிமேல்தன்னும் சொல்லு ஆர் மண்டையைப் போட்டது" ஐயாமுத்து அச்சத்துடன் கேட்டார். கிழவியின் ஒப்பாரி அவர் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது. தேவாரச்செல்வியும் எதையோ மறைத்துவிட்டாளோ என்று சந்தேகப்பட்டார்.

"அப்பிடி ஒருதரும் செத்ததாகத் தெரியேல்லை... "
"அப்ப ஏன் இந்தமாதிரி கட்டிப் பிடித்து அழுகிறாளுகள்.. "

"சரி.. சரி.. நடவுங்கோ எல்லாம் வீட்டைபோய் கதைப்பம்,"சேகரம் எல்லோரையும் வீட்டிற்குள் அழைத்துச் சென்றான். அருமை வா-னில் இருந்து பெட்டிகளை இறக்கி ஒவ்வொன்றாக வீட்டிற்குள் கொண்டுபோய் வைத்தான்.

ஐயாமுத்தர் யாராவது செத்துக்கிடக்கிறார்களா என்று வீட்டை ஒரு தடவை நோட்டம் விட்டார். அங்கே யாரையுமே காண முடியவில்லை. படுத்திருந்த நாயொன்று ஓடிவந்து ஐயாமுத்தர் மேலே

www.padippakam.com



பாய்ந்து வராண்டியபடி வாலை ஆட்டியது.

"சீ... அடி... அடி... இதாற்றை நாய்... "

"அது எங்கடை நாய்தான் வீமன்.. பொல்லாதவன் ஒருதரையும் வீட்டுக்கை விடமாட்டான். அவன் லேசுப்பட்ட ஆளில்லை.."கிழவி நாயின் புகழை ஒரு பாட்டம் பாடி முடித்தாள்.

"என்ன சேகரம் நாயைப்பற்றி மனிசி இந்தப் புகழ் புகழுது.. "

"ஓராளைப் புகழ்ந்தால் மற்றாளுக்குப் பிடிக்காது.. அதாலை வேறை பெரிய ஆபத்துக்கள் வந்தாலும் வரலாம்.. அதைவிட நாயளை, பூனைகளைப் பற்றிக் கதைக்கிறது வலு பாதுகாப்பு.. நாயளின்ரை கதையைப் புழுகிறது இஞ்சையொரு கலாச்சாரமா வளர்ந்திருக்கு கவனம் நாய்களின் புகழ் கேட்டு உங்களுக்கு காதடைக்கப் போ-குது.. " சேகரம் சிரித்தான்.

ஐயாமுத்து போன நாள் வீடு எப்படியிருந்ததோ அதைவிட சிறியதாகிவிட்டது போல பார்வைக்கு தெரிந்தது. அங்கிருக்கும் றோடுகளும் கையொழுங்கை போல தெரிந்தன. ஐரோப்பவின் அகன்ற றோடுகளை பார்த்துப் பார்த்துப் பழகியதால் அங்குள்ள வீதிகள் ஒடுங்கித் தெரிந்தன..

வீட்டை ஒரு தடவை சுற்றி நோட்டம் விட்டார். அதுவும் ஏதோ ஒரு பாழடைந்த மண்டபம் போலவே தெரிந்தது. ஆங்காங்கு பற்றைகளும், கொத்தித்திரியும் கோழிகளும், களினிப்பானையுமாகக் கிடந்தது முற்றம். திடிரென கோடாலிப் பாம்பொன்று தலையை நீட்ட வீமன் கலைத்துக் கொண்டோடியது. அதற்குள் விசுக்கென ஈட்டி போல மாறிய கோடாலிப் பாம்பு ஓடி எங்கோ மறைந்தது.

"நீங்கள் எல்லாம் போனாப் போலை இந்த இடம் முழுக்க பாம்புக்காடா மாறியிட்டுது."கிழவி ஒரு கதிரையைத் தூக்கி முற்றத்தில் போட சேகரம் இன்னொரு கதிரையைத் தூக்கிப் போட்டான். அங்கே யாரும் சாகவில்லை என்பதை வீட்டிற்குள் எட்டிப்பார்த்து உறுதி செய்து கொண்டார்.

"அது சரி நீ ஏன் தெருவில ஒப்பாரி வைச்சு அழுதனீ ,"தேவாரச்செல்வியிடம் கேட்டார்.

"அம்மா அழுதா அதுதான் நானும் அழுதனான்... அம்மாவைப் பாத்து எத்தினை வருசம்.. "
"அதுக்கு ஏன் தெருவிலைதான் ஒப்பாரி வைக்க வேணுமோ?"கிழவியிடம் கேட்டார்.

"என்ன கேள்வி இது.. நீங்கள் வெளிநாடு போனாப்போலை மாறியிட்டியள்... பத்து வருசத்துக்கு முந்தி செத்த என்ர மனிசனை நினைச்சுத்தான் அழுதனாங்கள். அந்த நேரம் சண்டை நடந்ததால உங்களால வர ஏலாமல் போச்சுது.. அதுக்குத்தான்... ஆயிரம் இருந்தாலும் அவற்றை நினைவு போகுமே... "

பத்து வருடங்களுக்கு முன் செத்த வல்லூறுக் கிழவனுக்காகவே இந்தக் கூத்து போட்டவளுகள்.. என்று மனதுள் சலித்துக் கொண்டார். தேவாரச்செல்வியை நிலத்தில் போட்டு சப்பாத்துக்காலால் நச்சு நச்சென மிதிப்பதுபோல கற்பனை செய்து மனதை ஆறுதல்படுத்திக் கொண்டார்.

"வந்தனீங்கள் உடுப்பை மாத்தி குளிச்சுக்கிளிச்சு கொஞ்சம் ஓய்வெடுங்கோ.. "சேகரம் கூறினான். ஐயாமுத்தருக்கும் சிறுநீர்கழித்து காய்ந்த காற்சட்டையை கழற்றி வீசவேண்டும் போல இருந்தது. அதற்குள் அங்கு நின்ற ஒரு சிறுமி எவர்சில்வர் கிளாசில் தேநீர் கொண்டுவந்தாள்.

"உவளார் பொடிச்சி... "

"என்ரை கடைசித் தங்கைச்சி " சேகரம் சிரித்தபடி சொன்னான்.

"எட நாங்கள் வந்தாப்பிறகு பிறந்தவள்... என்ன பேர்... காயத்திரியெல்லோ.. "

"இல்லை கஸ்தூரி " சிறுமி தனது பெயரை அவசரமாகத் திருத்திக் கொண்டாள்.

ஐயாமுத்து சிரித்தபடியே தேநீரை எடுத்துக் குடிக்க முயன்றார். சாயம் குறைவாகப் போட்டு, சீனியை அதிகமாகக் கொட்டி, பாலையும் ஊற்றிக் கலந்திருந்த அந்தத் தேநீர் அவருக்கு

www.padippakam.com



அவ்வளவாகப் பிடிக்கவில்லை. சலரோகக்காறனுக்கு சீனி ஒத்துவராது என்பதை அவர் சொல்ல மறந்ததால் வந்தவினை.

தேநீரை பல்லைக்கடித்துக் கொண்டு குடித்துவிட்டு, அருகில் கிடந்த சூட்கேசைத் திறந்து பற்பசையை எடுக்கப் போனார். அந்த நேரம்தான் வாசலில் இருந்த போட்டிக்கோவைப் பார்த்தார். சீமந்தை அள்ளி அப்பி, கொத்திக் குதறி இரண்டு தூண்களில் ஏதோ ஒரு தட்டியை நிறுத்தியது போல நிறுத்தியிருந்தார்கள்.

வல்லூறுக்கிழவன் செத்தபோது தேவாரச்செல்வி ஒப்பாரி வைத்து ஒன்றரை இலட்சம் ரூபாவை கிழவிக்கு அனுப்பி வைத்திருந்தாள். அதை வைத்து என்ன செய்வதென்று தெரியாத கிழவி யாருடைய பேச்சையோ கேட்டு சும்மா கிடந்த தலைவா-சலை உடைச்சு போட்டிக்கோ கட்டினதும், பிறகு அடுத்த மாதமே காசு பத்தாதென்று கிளாலியைத் தாண்டி கொழும்பு வந்து, போன் எடுத்ததும் நினைவுக்கு வந்தது.

மூன்று இலட்சத்திற்கு கட்டி வைத்திருக்கும் போட்டிக்கோவைப் பார்க்க அவருக்கு பிறசர் ஒரு சுற்று வேகமாகியது.

"என்ன மாமா போட்டிக்கோவைப் பார்க்கிறியள்.. ?"

"இது எந்த மேத்திரி கட்டினது.. "

"முதலிலை ஓடாவி மேத்திரி கம்பி வைக்காமல் கட்டிப்போட்டான். றோட்டிலை கண்ணிவெடி வெடிக்க இஞ்சை போட்டிக்கோ இடிஞ்சு விழுந்து போச்சுது. பிறகு மணிராசு மேத்திரி கட்டி,. வழமைபோல நடுவழியிலை விட்டுவிட்டு ஓட கடைசியாக முருகேசு மேத்திரிதான் ஒட்டிக்கிட்டி நிமிர்த்தி வைச்சிருக்கு. அதுவும் எப்ப விழுமோ... "

"முருகேசெண்டு... முந்தி பானை புரட்டி மேத்திரியோடை முட்டாள நிண்டவனெல்லோ.. என்ரை பழைய கூட்டாளி. இவனும் இப்ப மேத்திரியாகியிட்டானே.. என்னப்பா வீடுகளுக்கை சனம் குடியிருக்கிறதில்லையே.." போட்டிக்கோவையும், கிழவி

www.padippakam.com



ஞயயும், உணர்ச்சிக் கடலாய் கொப்பளித்து பணத்தை அனுப்பிய தேவாரச்செல்வியையும் பார்த்துச் சிரித்துக் கொண்டார்.

“சேகரம் குளிச்சிட்டு வாறன்.. சாப்பிட்டிட்டு ரெண்டு மூண்டு பேரைப் போய்ப் பார்க்க வேணும்.. ”

“ஆரைப் பாக்கப் போறியள்.. ”

”என்னோடை படிச்ச நந்தகுமார், பந்தடிச்ச வேலுப்பிள்ளை மற்றது ஏரம்புக் கிழவன், சாவித்திரிஅக்கா.. ”

“ஒருடமும் போகக் கூடாது.. ” கர்ணகடூரமாக ஒரு குரல் கேட்டது. கிழவி குசினிக்குள் இருந்து சிட்டாய் பறந்து வந்தாள்.

“அவன் நந்தகுமார் வீட்டுப் படலையை மிதிச்சால் பிறகு என்ரை படலையை மிதிக்கக் கூடாது. ஏரம்பனைப் பாத்துச் சிரிச்சால் உங்களோடையும் உறவில்லை. சாவித்திரி வீட்டை போய் ஒரு செம்பு தண்ணி குடிச்சியளோ பிறகு இஞ்சை வரப்படாது. கிழவியின் தேகமெல்லாம் நடுங்கியது.

“என்ன சேகரம் சண்டை போட்டது நீங்கள் இப்ப சும்மா கிடந்த எங்களையும் கதைக்கக் கூடாதெண்டால் இதென்ன நியா-ாயம்... ஏன் இப்படி ஆளையாள் சண்டை பிடிக்குதுகள்.. ”

“ஒரு காலத்தில மின்சாரத்தடை இருந்தது.. ஏழு மணிக்கே எல்லாரும் படுத்திட வேணும். ஒரு பொழுது போக்குமில்லை.. இப்பிடி ஆளையாள் சண்டைபோட்டு” உருவேத்தி இவரை அவர் குறை சொல்லி, அவரை இவர் குறை சொல்லி அந்த டென்சனிலேயே எல்லாத்தையும் மறந்து காலத்தை ஓட்டினால்தான் சரி. அப்பதான் வாழ்க்கை ஒரு கிக்கா போகும். ஒழுங்கைக்கு ஒழுங்கை சண்டை வர இதுதான் காரணம்.

வெளி நாடுகளில் தமிழர் போடும் கூத்துக்களுக்கு இவை ஒன்றும் குறைந்ததில்லை என்று நினைத்துக் கொண்டார்.

“நந்தகுமார் என்னோடை ஒண்டாப் படிச்சவனெல்லோ

www.padippakam.com



அவனுக்கும் இந்த மனிசிக்கும் என்ன பிரச்சனை.. ”

“பத்துவருசத்துக்கு முந்தி ஒரு நாள் நந்தகுமார் அண்ணை இஞ்சை வந்தவர். அந்த நேரம் முன் வாய்ப் பல்லாலை விரல் நகத்தைக் கடிச்சு முற்றத்திலை துப்பிப் போட்டார்.”

”அதுக்கென்னப்பா.. ”

“நகத்தைக் கடிச்சு முற்றத்திலை துப்பினால் வீட்டுக்காரருக்கு தரித்திரம் பிடிக்குமாம்.”நந்தகுமார் வேணுமெண்டுதான் நகத்தைக் கடிச்சுத் துப்பினவன் என்று மனிசி நினைக்குது. அந்தாள் நகத்தைத் துப்பின அடுத்த கிழமையே போட்டிக்கோவும் இடிஞ்சு விழுந்திட்டுது. அதிலை இருந்து தொடங்கின சண்டை சாவுக்கும் இல்லாதளவுக்கு போயிட்டுது.. ,

“போட்டிக்கோ இடிஞ்சதுக்கும் நகம் கடிச்சு துப்பினதுக்கும் என்ன சம்மந்தம்”

“நகம் கடிச்சு துப்பினதாலைதான் போட்டிக்கோ இடிஞ்சதா மனிசி நினைக்குது.. ”

“அவ்வளவுக்கு சாத்திர சம்பிரதாயம் பாக்குதுகளோ.. ”

“இதை விட்டால் வேறை என்ன பொழுது போக்கு, சாத்திர சம்பிரதாயங்கள், சடங்குகள், மூட நம்பிக்கைகள் எல்லாம் காடாய் பெருகிக் கிடக்கு... எல்லாம் போகப் போகத் தெரியும் ” என்றான் சேகரம்.

எல்லாவற்றையும் கேட்க அவருக்கு விசர் ஏறியது.. கிணற்றடிக்கு வேகமாக ஓடினார். அந்த நேரம் யாரோ அவருக்காகக் குரல் கொடுப்பது கேட்டது. கட்டில்லாத கிணறென்பதால் அவதானமாக நின்று கொண்டார்.

“ஐயாமுத்து.... ஐயாமுத்து .... ”

கேட்ட குரலாக இருந்தது. கிணற்றைச் சுற்றி அடைத்திருந்த கிடுகு வேலிக்கு மேலால் கொக்குப் போல தலையை நீட்டிப்

www.padippakam.com



பார்த்தார்.

அட பிலபங்கத் துவாரம் வாத்தியார். அவரைப் பார்த்ததும் ஒரு கணம் ஆடிவிட்டார் அவ்வளவுதான் சரக்கெனக் கால் சறுக்கியது.. கப்பிக்கயிறு கலிரென்று சுழன்றது.. ஓவென்றபடி பாதாளக் கிணற்றுக்குள் பிடரிப்பக்கமாகச் சரிந்தார் ஐயாமுத்து.

நீந்தத் தெரியாத அவருடைய உடல் பாதாளக் கிணற்றுக்குள் தலைகீழாக இறங்கியது. மலிவு விலையில் பறக்கும் விமானமொன்று பொறுப்பில்லாமல் குத்தென இறங்கியது போல தலை குத்தென கிணற்றுக்குள் பயணித்துக் கொண்டிருந்தார் ஐயாமுத்து.

## 28

"பொதா" ரென கேட்ட சத்தத்தில் கிபீர் விமானம்தான் கிணற்றுக்குள் குண்டை வீசித் தொலைத்துவிட்டதோ என்று கிழவி பயந்தாள். ஐயாமுத்து கிணற்றுக்குள் விழுந்த விழுகை அப்படி இருந்தது. தண்ணீர் கிணற்றுக்கு மேலால் பறந்து தெறித்தது.

"ஐயோ... ஓ... "ஐயாமுத்தரின் மரண ஓலம் பாதாள ஒலியாகக் கேட்டது.

நல்ல வேளையாக அங்கு சேகரமும் மற்றவர்களும் இருந்ததால் ஐயாமுத்தர் பிழைத்துக் கொண்டார். அவருக்கு தண்ணீரிலும், துப்பாக்கியிலும் கண்டம் இருப்பதாக முன்னரே சாஸ்த்திரி சொன்னது நினைவிற்குள் வந்தது. இருபது வருடங்கள் டென்மார்க்கில் கிடந்தவனை இந்தத் தத்துத்தான் நாட்டுக்கு அழைத்து வந்ததோ என்று நினைத்தார்.

தலைப்பில் படு முடிச்சுப் போடப்பட்ட கயிறு கப்பியில் சிக்கிக் கிடந்த காரணத்தால் அதை இழுத்து கிணற்றில் வீசினான் சேகரம். தத்தளித்து இரண்டு தடவைகள் பட்டைக் கிடங்கிற்குள் படுத்தெழும்பிய ஐயாமுத்தர் மூன்றாவது தடவையும் மூழ்கி சிவ-பதமடைய முன்னர் அந்தக் கயிற்றின் தொங்கலைப் பிடித்துக் கொண்டார்.

www.padippakam.com



கயிற்றைப் பிடித்தபடியே கிணற்றில் கிடந்த சிறிய படிகளில் காலை வைத்து ஏற முயன்றார், அவரால் முடியவில்லை. பாதம் சதசதவென சறுக்கியது.

கடைசியாக வாளிக்குள் ஏறி நிற்கும்படி சொல்லி கப்பியில் சாம்பி, அயலவர் எல்லாம் கூடி, யானைக்குட்டியைத் தூக்கியது போல அவரை மேலே இழுத்தார்கள்.

வேகமாக ஓடிவந்த கிழவி, "எல்லாம் அந்த காத்திலிங்கசாமியின்ரை வேடிக்கை.. கிணத்திலை விழுந்து குளிக்க வேணுமெண்டு பலனிருந்திருக்கு. வாற வெள்ளி காத்திலிங்க சாமிக்கு பொங்கல் வைக்கவேணும் "என்று சட்டென நேர்ந்து வைத்தாள் கிழவி.

"வாயிலை அலகு நாடகம் பூட்டி, முதுகிலை செடில் மாட்டி காத்திலிங்க சாமிக்கு கரகமெடுக்கிறதா பழைய வேண்டுதலும் கிடக்கு, பொங்கலோடை சேர்த்து அதையும் முடிச்சிடுவம்" என்றாள் தேவாரச்செல்வி.

எல்லாவற்றையும் நினைக்க நினைக்க ஐயாமுத்தருக்கு விசர் ஏறியது. சுள்ளி பொறுக்கிக் கிழவி மூன்றரை இலட்சத்தில் போட்டிக்கோ கட்டிச் சீரழிந்ததை விட கிணற்றுக்கு ஒரு கட்டு கட்டியிருந்தால் இப்பிடி விழுந்திருக்கமாட்டனே என்று நினைத்தார். போனவருடம் கிழவி சாகக்கிடந்தபோது ஐயாமுத்துவுக்கு அல-குநாடகம் குத்தி, சாட்டையடி போட்டு காத்தவராயருக்குக் கரகமெடுப்பதாக தேவாரச்செல்வி வைத்த நேர்த்திக்கடன்தான் அது என்பதும் அவருடைய நினைவுக்கு வந்தது.

யாரோ செத்துத் தொலையாமல் இருக்க தன்னைப் பிடித்து கழுமரம் ஏற்றிவிட்டாளே தேவாரச்செல்வி என்று வருந்தினார். டென்மார்க்கில் இருக்கும் வெங்காயங்களான சிவபாலியையும், கறுவலையும் கொம்பு சீவி மோத விட்டதால் வந்த வினையோ இதுவென்றும் கலங்கினார்.

அதற்குள் அவருடைய ஈரத்தைத் துவட்டிவிட்டாள் தேவாரச்செல்வி. பிலபங்கத்துவாரம் வாத்தியாரை ஒரு தேநீர்

www.padippakam.com



கொடுத்து இருக்கச் சொல்லிவிட்டு வேகமாக உடுப்பை மாற்றினார். கிழவி சமைத்த சோறு கறியை ஆடு பச்சைப் புல்லை சவட்டி இழுத்ததைப் போல வேகமாக இழுத்து வாயில் அடைந்து முடித்தார். கையைக் கழுவிவிட்டு வெளியே ஓடிவந்தார்.

அதற்குள் சேகரம், அருமை இருவரும் குளித்துவிட்டு வருவதாகக் கூறி வானுடன் வீட்டுக்கு போய்விட்டார்கள். வாத்தியார் மட்டும் வாசலில் கிடந்த கதிரையில் இருந்தார்.

"என்ன சேர் எப்படியிருக்கிறியள்... உங்களைப் பாத்தாப்போலை கால் சறுக்கியிட்டுது"தாழ்மையாகத் தொடங்கினார்.

"பிலபங்கத்துவாரம் கணேசு வாத்தியாருக்கு அவர் சேர் போட்டு கதைச்சது கொஞ்சம் குளிர்மையாக இருந்தது."

"தம்பி இது உங்கடை காலமில்லை.. வாத்திமாரை மதிக்காத கட்டாக் காலியளுந்தை காலம்... உம்மட்டை இருக்கிற மரியாதையைப் பார்த்தால் அந்தக் காலம் வலு திறம் எண்டு எண்ணுறன்."

"ஓம் வாத்தியார் எங்கடை பெரிய பள்ளிக்கூடத்திலை படிச்ச பெடியளிலை கொஞ்சப்பேர் போன வருசம் வெளிநாடு வந்தவங்கள். அவங்களை ஒரு கலைவிழாவிலை பாத்தனான். நரிபோல ஊளையிட்டு என்ன கூத்தாடினாங்கள். நல்ல பணிவான மாணவரை உருவாக்கிற விடயத்தில யாழ்ப்பாணத்துப் பாடசாலையள் கோட்டை விட்டிட்டுதோ எண்டு எனக்கொரு சந்தேகம்.. "

கணேசு வாத்தியார் சிறு பொழுது ஐயாமுத்துவையே பார்த்துக் கொண்டார்.

"தம்பி மாணவர் மட்டுமில்லை இப்ப இருக்கிற வாத்திமாரும் பெரும்பாலும் அப்பிடித்தான். வாத்திமார் செய்யிற கூத்தைப் பாத்தால் கிட்டடியிலை வெளிநாடு வந்த இளைஞர்கள் ஏன் அப்பிடி ஊளையிடுறாங்கள் எண்டது உமக்கு விளங்கும்."

"செல்வி... , கனிவாகக் குரல் கொடுத்தார் ஐயாமுத்து.

அவருடைய குரல் செண்பகம் போல ஒருவிதமான கேவல்

ஒலி எழுப்பினால் கொடுக்க வேண்டியதை கொடு என்பது அர்த்தம். வாத்தியாரைப் போன்ற ஆட்களுக்காக வேண்டிவந்த மலிவு விலைச் சேட்டையும், ஆயிரம் ரூபா நோட்டையும் எடுத்து வந்தாள்.

"இதெல்லாம் ஏனப்பா...மகாலட்சுமி நல்லா இரம்மா" என்று கூறியபடியே ... வேண்டிக் கொண்டார்.

"அதுசரி சேர் நான் வாறது எப்பிடி உங்களுக்கு தெரியும், முதலாவது ஆளா வந்திருக்கிறியள்" ஆச்சரியத்துடன் வாத்தியாரைப் பார்த்தார்.

"சந்தையிலை சனம் கதைச்சுது.. அதுதான் உடனை ஓடிவந்தனான்" தேவாரச்செல்வியும், கிழவியும் வைத்த ஒப்பாரி சந்தைவரை போய்விட்டதை உணர்ந்து கொண்டார் ஐயாமுத்து.

"எப்பிடித் தம்பி வெளிநாட்டு வாழ்க்கை.. அங்கை பிள்ளை குட்டியெல்லாம் வாள் வெட்டும், கோஸ்டிச் சண்டையுமாக் கிடக்குதுகளாம்... உண்மையோ.. "

"இடைக்கிடை நடக்கிறது உண்மைதான்... நாலு பேர் செய்யிற கூடாத செயல்கள்தான் வெளியில வருகுது.. நல்லவனா இருக்கிற பெடியளைப்பற்றி ஒருதரும் கதைக்கிறதில்லை..."

"முயற்சியும், ஊக்கமும், அறிவுமுள்ள பெடியள் இஞ்சையும் ஏராளம் பேர் இருக்கிறாங்கள். அங்கையும் ஏராளம் பேர் இருக்கக் கூடும், அவங்களைப்பற்றி ஒருத்தரும் கதைக்கிறதில்லை. இதுதான் உண்மை , வாத்தியார் இரண்டு பக்கமும் பிரச்சனையில்லாமல் ஒரு சமரசம் கண்டு விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

மாணவர்களின் திறமைகளைப் பாராட்டாமல் எப்போதுமே குறைகளைக் கூறி, பிரம்பால் அடித்து சுய இன்பம் காணும் பிலபங்கத் துவாரம் வாத்தியாரின் பழைய காலம் அவருடைய நினைவிற்குள் வந்தது.

ஐயாமுத்து தன்னுடைய அறிவின் போதாமையையும், காச்சல்லிக்கு பெறுமதியில்லாத படிப்பித்தலையும் எடைபோடுவதையும் பிலபங்கத்துவாரம் கணேசு வாத்தியார் புரிந்து கொண்டார்.

www.padippakam.com



காசையும், உடுப்பையும் தந்துவிட்டு பழைய கோபத்தில் ஐயாமுத்து எதையாவது ஏடாகூடமாகப் பேசி விடலாமோ என்று பயந்தார்.

“வந்தவுடனை எல்லாத்தையும் கதைக்கிறது நல்லாயில்லை.. போகக்கிடையிலை ஒருக்கா வந்து பாக்கிறனே.. ம்.... முக்கியமான விசயமொண்டு கதைக்கக் கிடக்கு.. அது சரி எப்ப வெளிக்கிடுறியள்... ”,

“ஒரு மாசம் நிப்பம்... அடுத்த மாதம் பதினேழாம் திகதி வெளிக்கிடுறம்.. ” பதினைந்தாம் திகதியே அங்கிருந்து தப்பியோட திட்டமிட்டதை வெளியில் சொல்லாமல் மனதில் அமுக்கிக் கொண்டார்.

அப்போது ஒரு நாட்டார் பாடல் எங்கிருந்தோ கேட்டது.. “வே‘ம் போடுறானே.. வே‘ம் போடுறானே ... ” என்று கிழவி வீமன் நாயைப் பார்த்து பாட்டுப்பாடியபடியே அதற்கு சோறு போட்டாள்.

அவளுடைய நாட்டார் பாடல் வீமன் நாய்க்கல்ல, ஐயாமுத்துவை எச்சரிக்கையாக இருக்கத் தூண்டும் பாடல் என்பதை அனைவரும் புரிந்து கொண்டனர்.

மகளுடைய திருமணத்தைச் சாட்டி, ஐயாமுத்துவிடம் ஐம்பதாயிரமாவது கறந்துவிட வேண்டுமென்று வந்த வாத்தியாரின் திட்டம் கிழவியின் பாடலால் சிறிது தடைப்பட்டது. யார் வெளிநாட்டால் வந்தாலும் பணத்தைச் செலவிட முன்பே போய், மகளின் திருமணத்தைச் சொல்லி பணம் கறப்பது அவருடைய விளையாட்டு.

ஆளுக்காள் பொய்களைச் சொல்லி பணத்தை வாங்கும்போது தான் மட்டும் நீதியாக நடந்து என்ன பயன் என்பது வாத்தியாரின்

எண்ணம். மறுபடியும் ஐயாமுத்து வெளிநாடு போய்விட்டால் சுளீ-ரென வாலை நீட்டிவிடுவார் என்பது வாத்தியாருக்கு தெரியும். ஐம்பதாயிரத்துக்குக் கீழே இறங்கக் கூடாது என்று மனதில் எண்ணியபடி விடைபெற்றார்.

அவர் போனதும் ஐயாமுத்து விழுந்து விழுந்து சிரித்தார்.

www.padippakam.com



“பிலபங்கத் துவாரத்தில் வாழ்ந்த பதுமன் என்ற நாகம் எங்கே” என்று தேவாரச்செல்வியிடம் கேட்டார். அவளுக்கு அடியும் விளங்கவில்லை நுனியும் விளங்கவில்லை.

“பாம்பும், பிலபங்கத் துவாரமும்! விசர்ப்பயலுகள்... ஐயோ... கம்பமேவிய உம்பர் நாயகர்பால் காதல் கொண்டு .... , ஐயாமுத்தர் அழுதார், சிரித்தார், விக்கினார்... பாட்டுக்குள்ளே வாற குழகம் எண்டால் என்னடியென்று கேட்டார்... போச்சு.. போச்சு.. வாழ்க்கையே நாசம் ஏன்று கதிரையைத் தூக்கி நிலத்தில் அடித்தார்.

அவருக்கு கிணற்றுக்குள் விழுந்ததால் நீர்க் கோர்த்து சன்னி பிடித்துவிட்டதோ என்று யோசித்தாள் கிழவி. மிளகாய்ப் பழத்தை முறித்து அவருடைய மூக்கிற்குள் தீத்தி சுய நினைவு பெற வைக்க எண்ணி மிளகாய்ப்பழத்தை தேடி குசினிக்குள் ஓடினாள். செத்தல் மிளகாயை நெருப்பில் போட்டு நாசியில் புரையேற்றலாமோ என்றும் ஓடும்போது யோசித்தாள்.

மிளகாய்ப்பழத்தின் அருமை மறந்த ஐயாமுத்தர் சிரிசிரியென சிரித்தார். அவருடைய மனக்கண்ணில் சரேலென ஒரு பிலபங்கத் துவாரம் தோன்றியது...

## 29

ஐயாமுத்துவின் நினைவுகளில் கணேசு வாத்தியாரின் படிப்பித்தலும் அவர் படித்த அந்தக்காலத்துப் பாடசாலையும் வந்து சேர்ந்தன...

“டே ஐயாமுத்து பிலபங்கத் துவாரமெண்டால் என்ன ?” கணேசு வாத்தியார் ஐயாமுத்துவைப் பார்த்துக் கேட்டார். ஏதுமறியாதவராய் எங்கோ கனவுலகில் சஞ்சாரித்த ஐயாமுத்தர் மலங்க மலங்க விழித்துக் கொண்டார்.

அன்றும் வழமைபோல கணேசு வாத்தியார் தான் வாலயம் பண்ணும் பெரிய புராணத்தின் திருக்குறிப்பு தொண்டநாயனார் புராணத்தை படிப்பித்துக் கொண்டிருந்தார். அந்தக் கதையில் வரும் பிலபங்கத் துவாரத்தில் இருந்துதான் பதுமன் என்ற நாகம் வெளிவந்ததாகவும், அது சிவபெருமானுடைய திருவிளையாடல்களில்

www.padippakam.com



ஒன்றெனவும் கணேசு வாத்தியார் கூறியதை அவர் கவனிக்கவில்லை. ஆயிரம் தடவைகளுக்கு மேல் பிலபங்கத் துவாரத்தையே கேட்டுக் கேட்டு சலித்ததால் அவர் அப்படியிருந்தார்.

பரீட்சைக்காக எத்தனையோ புத்தகங்கள் படிக்கக் கிடக்க கணேசு வாத்தியார் இரண்டு வருடங்களாக திருக்குறிப்பு தொண்டநாயனார் புராணத்தை விட்டபாடில்லை. அதிலிருக்கும் பாடல்களை இடைக்கிடை பாடுவார், தானாகச் சிரிப்பார். சிலபாடல்கள் குழகமாக வந்ததாகப் புகழ்வார்... பாடத்திட்டத்தில் என்ன இருக்கிறது.. பரீட்சைக்கு மாணவர்களை எப்படி தயார் செய்வதென்ற எந்தத் திட்டமிடுதலும் இல்லாமல் செக்கு மாடுபோல சுற்றி வந்து கொண்டிருந்தார். ஐயாமுத்து முதலாவது கேள்விக்கு பதில் கூறாத காரணத்தால் இரண்டாவது கேள்வியை எடுத்து வீசினார்.

“டேய்... உன்னைத்தான்.. கம்பமேவிய உம்பர் நாயகர் மேல் காதல் கொண்டது யாரடா?” மாணவராக இருந்த ஐயாமுத்து பதில் தெரியாமல் மீண்டும் யோசித்தார்.

“உலக்கையா... கம்பத்தையே மேவி நின்ற அந்த உம்பர் நாயகராம் சிவபெருமானைக் காதலித்த உமாதே
வியாரைத் தெரியாவிட்டாலும் மன்னிப்பன்.. ஆனால் உம்பர் நாயகராம் சிவபெருமானை தெரியாத உனக்கு நரகம்தான் முடிவு.. வாடா இஞ்சாலை”

ஐயாமுத்து நடுங்கி நடுங்கிப் போனார்... கணேசு வாத்தியார் வாய்க்குள் வைத்திருந்த தென்னந்தும்பை எடுத்து நாசிக்குள் விட்டு ஒரு தும்மல் போட்டார். அவர் தும்மினால் வகுப்பறையே ஒரு கலங்கு கலங்கப் போவதாக அர்த்தம் உண்டு. ஐயாமுத்துவின் இரண்டு கைக ளையும் ஒன்றாகக் கூட்டி தனது இடது கையால் பூட்டுப் போட்டுப் பிடித்துக் கொண்டார்.

“உம்பர் நாயகரை தெரியாத என்ரை செல்வம்..., என்று ஐயாமுத்துவின் இரு கன்னங்களையும் தடவினார்.”

“எடேய்.... ஐயாமுத்தா நீ கொடுத்து வைச்சனியெடா... ,

கன்னத்தில் முதலாவது அடி இறங்கியது. ஐயாமுத்து அதிர்ந்துவிட்டார், நட்சத்திரங்கள் சுழன்றன.

"டேய் ! ஐயாமுத்து நீ புண்ணியம் செய்தனீ ஏன் சொல்லு பாப்பம்"

"தெரியாது சேர்..., ஐயாமுத்துவின் கண்களால் திருஞானசம்பந்தர் ஞானப்பாலுக்கு அழுதது போல நீர் தாரையாகச் சொரிந்தது.

"கி..கி..கீ எருமையா.. எருமையா... என்ரை மனைவி ஆரடா.. அவ உனக்கு என்ன பாடமடா எடுத்தவ... "

"ச.. ம..ய..ம் "

"அ... அப்பிடி வா வழிக்கு ... உலக்கையா... உலக்கையா... அவ ஆற்ரை பேத்தி தெரியுமே ?, மீண்டும் கெக்கலிப்புச் சிரிப்புடன் கேட்டார். ஐயாமுத்து கடுமையா யோசித்தார். மொட்டை போட்டு கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையில் ஏற்றி அனுப்ப வேண்டிய கோமாளியான சிவராணி டீச்சரின் பேரன் யாரென்று தெரியாமல் திக்கு முக்காடினார்.

"டேய் உனக்கு அது கூடத்தெரியாதே.. அப்ப ... பண்ணாகம் பரமசாமிப் புலவரைத் தெரியுமே.."

"தெ.... தெரியாது... " அவ்வளவுதான், கணேசுவாத்தியாருக்கு கோபம் சிரசில் ஏறியது.

"உனக்கு அவரையும் தெரியாதோ.. அவற்றை பேத்திதானடா என்ரை மனிசி...,"

தொடர்ந்து ஐந்து தடவைகள் கன்னத்தில் பளார் பளா-ரென அடிகளை இறக்கினார். ஐயாமுத்துவுக்கு மாணவப் பருவத்தில் இரண்டு கன்னங்களிலும் மெத்தைபோல சொக்குகள் உப்பியிருந்தன. நல்ல சொக்குகள் இருப்பவர்களில் எல்லாம் குற்றம் பிடித்து கணேசு வாத்தியார் கன்னங்களில் அடித்து வருவதை பட்டியலிட அன்று அவருடைய அறிவுக்கு போதிய வலு இருக்கவில்லை. மற்றவர்களைப்

www.padippakam.com



போல அவரும் அறிவைப் பாதிக்காது ஓலமிட்டு அழுதார்.

இந்த அவலத்தில் இருந்து யார் தன்னைக் காப்பாற்றப் போகிறார்களென்று மூளையை கோடானு கோடி திசைகளில் சுழலவிட்டார். அவருக்காக வர யாருமே இந்த உலகில் இல்லையென்று புரிந்து கொண்டார்.

தகப்பன் சிங்காரி தேங்காய் விற்பதும் குடிப்பதுமாய் காலம் கழிக்கிறார். தாய் வெங்காயச் செல்லாச்சிக்கு உலகம் தெரியாது. அவள் மழைக்கும்கூட பள்ளிக்கூடத் தாவாரத்தில் ஒதுங்கியறியாத பேதை.

அப்போது அந்த வழியாக மரவேலை வாத்தியார் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவரிடம் அவலமாகக் குரலெழுப்பி உதவி கேட்டார்.

அந்த வாத்தியார் மரவேலை அறைக்குள் படுத்துறங்க அதிபர் வருகிறாரா என்பதைப் பார்ப்பதே ஐயாமுத்து போன்ற மாணவர்களின் வேலை. ஆகவே அதற்காகவேனும் உதவுவாரா என்று பார்த்தார். அவரும் பார்த்தும் பார்க்காததுமாகப் போய்விட்டார்.

கன்னத்தில் விழுந்த அடிகளோ இருபத்தைந்தையும் தாண்டிப் போய்க் கொண்டிருந்தன. எப்போது அடி முடியும் என்பதோ கணேசு வாத்தியாரின் அறளை எப்போது இறங்குமென்பதோ தெரியாமல் இருந்தது.

அந்த நேரம்தான் ஐயாமுத்து திடீரென விழித்துக் கொண்டார். கைகளை பிடுங்கிக் கொண்டு வகுப்பை விட்டு தப்பி ஓடலாமா என்று யோசித்தார்.

அப்படி ஓடினால் அதிபரிடம் மாட்டுப்பட வேண்டி வரும். அவர் பிரம்பின் நுனியில் இறப்பர் மாட்டி வைத்திருக்கிறார். அவர் சரியாக இருந்திருந்தால் பாடசாலை உருப்பட்டிருக்கும். படிக்கிறதல்ல பிரச்சனை இந்தப் பைத்தியக்காரக் கூட்டத்திடமிருந்து தப்புவதே பெரிய பிரச்சனையென மாணவர் கலங்குவதையும் அவர் அறிந்திருந்தார்.

“போடா போயிரு...” கணேசு வாத்தியார் அடியை நிறுத்தி அவரை விரட்டினார். அழுதபடியே போய்க் கதிரையில் இருந்தார். கண்கள் இரண்டும் கொவ்வைப்பழம் போலச் சிவந்துவிட்டன. கேவிக்

www.padippakam.com



கேவி அழுதார். சக மாணவர்கள் அவரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டார்கள். ஒரு நிமிடம் போயிருக்காது மறுடியும் இரண்டாவது இடி இறங்கியது.

"டேய்... ஐயாமுத்து .... பிலபங்கத் துவாரமெண்டால் என்ன இப்ப சொல்லு... " வாத்தியார் மீண்டும் கேள்வியை வீசினார். ஐயாமுத்துவுக்கு அவர் அடித்த அடியில் எல்லாமே மறந்துவிட்டது, மௌனமாக இருந்தார்.

"இஞ்சை வாடா... , மீண்டும் கூப்பிட்டார்."

"ஐயாமுத்து தயங்கித் தயங்கிப் போனார். கணேசு வாத்தியார் மறுபடியும் அவருடைய கையைக் கோலிப் பிடித்தபடி தென்னந்தும்பை மூக்கில் விட்டு காட்டுத் தும்மல் ஒன்று போட்டார். இம்முறை அவர் போட்ட தும்மல் பண்டிதர் நடராசா வாத்தியார் போல சிவதாண்டவமாடப் போகிறார் என்பதைக் காட்டியது.

"படீர் ! , அங்கு நடக்கக் கூடாதது நடந்தது.
அதைப் பார்த்ததும் முழு வகுப்புமே ஒரு நொடி அதிர்ந்து திக்கிட்டு நின்றது. கேட்கப் பார்க்க ஆளில்லாத ஐயாமுத்து படும் அவலத்தை நினைத்து மனதில் கண்ணீர் சொரிந்த மாணவரெல்லாம் திகைத்து

எழுந்தனர்.

கணேசு வாத்தியாரின் கன்னத்தில் மாணவனான ஐயாமுத்து போட்ட அடி இரும்புக் குண்டு இரும்புக் குண்டு விழுந்தது போல கணேசு வாத்தியாரின் கன்னத்தில் இறங்கியது. அப்படியொரு நிகழ்வு நடக்குமென அவர் கனவிலும் நினைக்கவில்லை. கதிரையில் இருந்து சுழன்று நிலத்தில் விழுந்தார். தொடர்ந்து இருபத்தைந்து அடிகள் அவருடைய வலது இடது பக்கக் கன்னங்களில் விழுந்தன. கணேசு வாத்தியாரால் சுதாகரித்து எழும்பவே முடியவில்லை. அவருடைய சேட்டைக் கோலிப் பிடித்தான். ஐயாமுத்துவின் தேகம் கோபத்தில் இரும்பு உருக்குபோல புடைத்து நின்றது.

"டேய்... உன்னைமாதிரி வக்கிர மூளை பிடிச்ச வாத்திமார்தானடா இண்டைக்கு முழுப்பள்ளிக் கூடங்களிலையும்

www.padippakam.com



நிறைஞ்சு கிடக்கிறாங்கள். இப்படி எல்லாத்துக்குமே அடிதான் முடிவெண்டால் இந்த நாடே வன்முறை நாடாத்தானடா மாறும். அதுக்கு ஆர் காரணம்.. உன்னைப்போல உளவியல் நோய் பிடித்த மிருகங்கள் தானடா காரணம்." மறுபடியும் காலால் எட்டி உதைத்தார். கணேசு வாத்தியார் சுழன்று ஆடி கதிரையில் விழுந்தார். கதிரை சுக்கு நூறாக உடைந்தது. பெரியபுராணத்தை நாலாகக் கிழித்து அவருடைய தலையில் அபிசேகம் செய்தார்.

"இந்தப் பிலபங்கத் துவாரத்தையும், பதுமன் நாகத்தையும், உம்பர்நாயகரையும் வைச்சு என்னடா கூழ்காய்ச்சிக் குடிக்கிறதோ.. பள்ளிக்கூடங்களும், பல்கலைக்கழகங்களும், கல்வியமைச்சும்... எனக்கு வாயிலை வருது.. கோமாளிப்பயலுகளே... " ஆவேசமாகப் பேசினார். எங்கும் மயான நிசப்தம் ஓடிவந்த மற்றைய வாத்திமாரும் வாயடைச்சு நின்றார்கள்.

"அடிச்சு வாறதில்லையடா படிப்பு... தானாகக் கனிஞ்சு வாறதுதானடா படிப்பு... டேய் மற்றவனுக்கு அடிக்க உனக்கு உரிமையில்லை! அதுகூடத் தெரியாத உன்னைமாதிரி வாத்திமாரை திருந்தச் சொல்லு... இந்தா இந்த உதையையும் திண்டு பார்... ஓங்கி அவருடைய கள்ளு வண்டியில் உதைத்தார். இந்த உதை ஏன் தெரியுமோ... படிக்கிற பிள்ளையளட்டை உன்ரை பெண்டிலைப் புழுகுறதை முதலிலை நிறுத்து...,

எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

அவ்வளவுதான் ஐயாமுத்து வேகமாகப் பாய்ந்து மதிலேறிக் குதித்து பாடசாலையென்ற பெயரில் இருந்த சிறைக்கூடத்தை விட்டு தப்பியோடினார். அன்றோடு அவருடைய பாடசாலை வாழ்வு முடிந்தது. அதற்குப் பிறகு கட்டுவேலைக்குப் போய் தேவாரச்செல்வியை காதலித்து, அவளுக்குத் தாலிகட்டின ஓடாவி சிவலிங்க மேத்திரிக்கு மட்டக்கம்பால் அடித்து மண்டை பிளந்து, முதலிரவு தொடங்க முன் தேவரச்செல்வியை இழுத்துக்கொண்டு ஓடியதெல்லாம் பிறகு நடந்தவை.

பிலபங்கத் துவாரங்களையும், பதுமன் நாகங்களையும் பற்றி ஒழுங்காகப் படித்து முடித்திருந்தாலும் அவற்றை வைத்து

www.padippakam.com



ஐரோப்பாவில் எதுவுமே செய்திருக்க முடியாது என்பதை நினைத்தார். அந்தப் படிப்பை நினைத்தபோது அவருக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. அதனால்தான் தன்னை மறந்து சிரித்து, அழுது நிலத்தில் புரண்டு கொண்டிருந்தார்.

அந்தச் சிரிப்புக்கும் ஒரு முடிவு வந்தது. பிலிப்பைன்சில் உள்ள எரிமலை கக்கி லாவாக் குழம்பு வழிவது போல பெரும் வெக்கை முகத்திலும் மூக்கிலும் இருந்து கிளம்பியது.

தாங்க முடியாது , ஐயோ , என்று பெருங்குரலெடுத்து அலறினார்.

சுள்ளி பொறுக்கிக்கிழவி பச்சையும் பழுத்தலுமாகக் கிடந்த காரமான காரைதீவுப் பச்சை மிளகாயை முறித்து அவருடைய நீர்க்கோர்த்த தடிமன் மூக்கிற்குள் இடித்துச் செருகியதால் ஏற்பட்டதே அந்த எரிமலை நெருப்பு.

தணலை எடுத்து மூக்கிற்குள் கொட்டியது போல கிழவி செய்த வேலையால் ஐயாமுத்தர் சகல நினைவுகளும் அறுந்து நிஜ வாழ்விற்குள் வந்தார். அவருடைய அலறல் சத்தம் டென்மார்க்கிற்கும் கேட்டதோ என்னவோ பறவைக்காய்ச்சலில் இருந்து தப்பிய சிவபாலி அந்த நேரம் கட்டிலில் இருந்து உருண்டு கீழே விழுந்தார். கறுவலும், சிவபாலியும் ஆடிய அடுத்தகட்ட கூத்துக்கள் டென்மார்க்கில் ஆரம்பமாகியிருந்தன..

## 30

ஐயாமுத்து சிறீலங்கா போனவர் போனதுதான், டென்மார்க்கில் இருக்கும் சிவபாலியுடன் தொலைபேசி வழியாக ஒரு தடவை கூடதொடர்பு கொள்ளவில்லை. அதற்குள் சிவபாலியின் வாழ்வு திசைமாறி ஓடத் தொடங்கியிருந்தது..

தின்னாமல் குடியாமல் பணத்தைச் சேர்த்து ... உலோபிகளுக்கெல்லாம் உலோபிகளாகி பணத்தைத் திரட்டும் சனம் சிறீலங்கா போய் ஒரு மாதம் மட்டும் கர்ணன் போல

படிப்பகம்

கொடை வள்ளலாக மாற ஆசை கொள்வது ஏனென்று தனக்குள்ளேயே கேட்டார்.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் எல்லாம் பணக்காரர் என்றும், காசு மெத்தையில் படுத்திருக்கிறார்கள் என்றும் அங்கிருக்கும் குடும்பத்தினர் பாமரத்தனமாக எண்ணி, காசு காசென்று கூத்தாட இந்தக் கோமாளித்தனங்கள்தான் காரணமென மனதிற்குள் விடை கண்டார் சிவபாலி.

மந்திரவாதியை நம்பி ஏமார்ந்து, பணத்தைக் கொட்டியிறைத்த தன்னைப் போல ஒரு மூடன் இந்த உலகத்தில் இருக்க முடியுமா என்றும் யோசித்தார். மதங்களின் பிரசங்கங்கள், வைத்தியர்களின் போதனைகள் என்று மலிந்து கிடக்கும் சில தொலைக்காட்சிகளைப் பார்த்தபோது, ஐரோப்பா முழுவதுமே மூடத்தனங்கள் கங்கு கரையின்றி பெருகிச் செல்வதை அவரால் எளிதில் உணர முடிந்தது. தன்னைப் போல ஏமாறும் மூடர்களும், மத ஏமாற்றுப் பேர்வழிகளுமே உலகில் அதிகமாக இருப்பது போல மனதில் ஒரு பிரமை உண்டானது.

மேசையில் கிடந்த கடைசி எச்சரிக்கையுடன் வந்திருந்த கடிதத்தைப் பார்த்தார். பிரியாமணிக்கு அடிக்கப் போய் போலீஸ் நிலைய கதிரைகளை உடைத்ததற்கான பணத்தை உடனே கட்டும்படி வந்திருந்த எச்சரிக்கைக் கடிதம்தான் அது. யாரையும் ஏமாற்றலாம் போலீஸ்காரனுடன் விளையாட ஏலாது என்று எண்ணியவராக வீட்டை விட்டு வெளியே வந்தார்.

ஒரு மணிநேரம் காரோடி ஓகூஸ் நகரில் இருந்து வட்டிக்கு விடும் சீனிக்குட்டியிடம் போய் 5000 குறோணர் கேட்டு கையேந்தினார். சீனிக்குட்டி அவரை உச்சி முதல் உள்ளங்கால்வரை நோட்டம் விட்டான். வீடை வாங்கின கையோடு அவர் தன்னுடைய இடத்திற்கு வந்துவிட்டதால் சீனிக்குட்டிக்கு பரம திருப்தி. சிவபாலி கடன்பட்ட கதையைச் சொல்லி ஒரு வாரம் பொழுதை ஓட்டலாமென்று நினைத்துக் கொண்டான்.

“என்ன வீடு வாங்கியாச்சுப் போல .. ”

“நான் வீடு வாங்கினது உனக்கு எப்பிடித் தெரியும்”

www.padippakam.com



"இது பெரிய விசயமே... வீடு வாங்கின ஆக்கள் கடை சியிலை என்னட்டைத்தானே வரவேணும்... அதுசரி எப்பிடி வீடு மலிவோ..? "

"ஓம் நல்ல மலிவா வந்திச்சு மடக்கியிட்டன்... 1.3 மில்லியனுக்கு வாங்கினனான் இப்ப கொஞ்ச நாளையிலேயே 1.6 மல்லியன் கேட்கிறாங்கள். நல்ல வீடு, ரெண்டு மில்லியன் கேட்டாலும் விக்கிறதா இல்லை.., சிவபாலி, மற்றவர்கள் தங்களுடைய வீடுகள் பற்றி நீல் விடுவதைப் போல ஒரு பழைய இற்றுப்போன புழுகுணிக் கயிற்றை சீனிக்குட்டியின் பக்கம் உருட்டிவிட்டார்.

"அ.. அப்பிடியே... அண்டைக்கு செத்தவீட்டிலை சனம் முழுதும் பேய் வீடெண்டு கதைச்சுதுகள்... " சீனிக்குட்டி எல்லாம் தெரிஞ்சு கொண்டுதான் கதைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டார்.

"செத்த வீட்டிலை போயும் சீரழியுதுகளெண்டால் மூதேவியளை நான் என்ன செய்யிறது. பேய் என்னப்பா பேய்... மனிசன்தான் பேய்.." மந்திரவாதியின் பேயாட்டத்தால் பட்ட பாட்டின் வயிற்றெரிச்சலோடு பெருங் குரலெடுத்துப் பேசினார். வெகு அலட்சியமான தோரணையுடன் கார் சாவியால் காதைக் குடைந்து கொண்டிருந்த சீனிக்குட்டி அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"இப்ப நீரும் மனிசியும் வேலை போலை.. "

"ஓம்... "

"அப்ப நீங்க ரெண்டுபேரும் என்ன உழைப்பியள் ஒரு இருபது கையிலை தேறுமே.. "

தன்மானத்தைச் சீண்டிப்பார்த்து மகிழும் சீனிக்குட்டியின் குசும்புத்தனத்தால் சிறிது கோபப்பட்டுக் கொண்டார். என்ன செய்வது கடனுக்கு போனால் இதையெல்லாம் சந்திக்கத்தானே வேண்டுமென்று தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டார். கறுவலுக்கு முகமூடி போட்டு அடித்தது போல அடிக்க இப்போது அவருடைய தேகத்தில் வலுவில்லை என்று நினைத்துக் கொண்டார்.

www.padippakam.com



"உனக்கேன் அந்தக்கதை நீ என்னை ஐயாயிரம் குறோனுக்கு நம்பேல்லையோ?" கோபத்துடன் கேட்டார் சிவபாலி.

கடன் வாங்க முன்னரே இந்த எகிறு எகிறும் சிவபாலி, கடனை வாங்கிவிட்டால் என்ன எகிறு எகிறுவார் என்பதைப் புரிந்து கொண்டான் சீனிக்குட்டி. தனது பரீட்சையில் அவர் தோல்வியடைந்து விட்டதால் அவரைப் பார்த்து மெல்லச் சிரித்தான்.

"என்ன சீனிக்குட்டி சிரிக்கிறாய்?"

"ஒண்டுமில்லை உமக்குக் கோலாட்டம் தங்கராசாவைத் தெரியுமே , தெரியாது... "

"ஐஞ்சு லெச்சம்... ம்.... வாங்கின காசைத் தராமல் சுத்திப்போட்டான்..."

"சீனிக்குட்டி செத்தவீடு போனால் பேய் வீட்டுக்கதை, தண்ணிவாப்பு வீடு போனால் சலரோகக் கதை, கடை தெருவிலை போனால் கடனைத் தராமல் ஓடினவன்ரை கதை... இதெல்லாம் தேவையே.. சீனிக்குட்டி உன்னட்டை ஒரு கேள்வி கேக்கட்டே... "

"கேள்வியோ... ம்... கேளும்.. "

"இந்த நாட்டின்ரை கல்வி அமைச்சருந்தை பேர் என்ன?"அவர் கேட்க உடனே சீனிக்குட்டி பலமாகச் சிரித்தான்.

"இந்தக் கேள்விக்கு பதில் தெரிஞ்ச ஆராவது ஒரு தமிழன் இந்த நாட்டிலை இருந்தால் அவனைக் கூட்டிவாரும்.. நீர் கேட்ட கடனை வட்டியில்லாமலே தாறன்... , சீனிக்குட்டி மீண்டும் உறுதியாகச் சொன்னான்.

அவன் கோலாட்டம் தங்கராசாவைப் பற்றிச் சொல்லி, கடைசி முடிவாகக் கையை விரிக்கப் போகிறான் என்பதை உணர்ந்து கொண்டார் சிவபாலி. அவன் இல்லையென்று சொல்ல முன்னரே எதுவும் பேசாமல் வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

இனி கடுமையாக உழைப்பது, கையில் நாலு பணத்தைச் சேர்ப்பது.. செத்தாலும் தமிழரட்டை வட்டிக்கு கடன் வேண்டாமல் வாழ்ந்து சாவது என்ற புதிய சத்தியத்தை போகும் வழியிலேயே எடுத்துக் கொண்டார்.

www.padippakam.com



"சிவபாலியண்ணே.. " அது எங்கோ கேட்ட குரல் போல இருக்க திரும்பிப் பார்த்தார். அவருடைய கண்களையே சிறுபொழுது நம்ப முடியாமல் தவித்தார். அவர் பின்னால் நின்று கொண்டிருந்தது வேறு யாருமல்ல கறுவல்தான்.

"எப்பிடியிருக்கிறியள்... "கனிவுடன் கேட்டான்.

"நல்ல சுகம்... "சிவபாலிக்கு எல்லாமே குழப்பமாக இருந்தது.

"நீங்கள் எங்கை போவிட்டு வாறியளெண்டு விளங்குது... போன காரியம் எப்பிடி காயோ பழமோ?"கறுவல் சிரித்தபடி கேட்டான்.

எந்த நேரமும் போதையில் ஆடியபடி நிற்கும் கறுவல் இன்று நிதானமாக நின்றான். அவன் கோட்டும் சூட்டுமாக மடிப்புக் குலையாத ஆடை அணிந்தபடி நின்றான். கையில் ஒரு கறுத்த ஜேம்ஸ் பொண்ட் சூட்கேஸ் இருந்தது.

கோட், ரை கட்டுமளவிற்கு அவன் பெரிய உத்தியோகத்திற்கு போயிருக்கிறானோ என்று யோசித்தார். அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டார். மனதில் எண்ணற்ற உணர்ச்சிகள்.

அந்த இடைவெளியில் சூட்கேசை தொடையில் வைத்துத் திறந்தான் கறுவல். அதற்குள் இருந்த கவரிலிருந்து பத்து ஆயிரம் குறோணர் நோட்டுக்களை இழுத்தெடுத்தான். பின் கவரை பெட்டியில் வைத்து மூடினான்.

"இந்தாருங்கோ அண்ணே இதில பத்தாயிரம் குறோணர் இருக்கு இதை வைச்சுக் கொள்ளுங்கோ.. வட்டி, கிட்டி எதுவுமே வேண்டாம்". மூண்டு வருசத்துக்குப் பிறகு தந்தாலே போதும். , பணத்தை நீட்டினான்.

சிவபாலி வாங்குவதா விடுவதா என்பது தெரியாமல் தடுமாறினார்.

"யோசியாதையுங்கோ அண்ணே.. " நாங்கள் எல்லாம் தமிழர் ஒராளுக்கு ஒராள் உதவியாக இருக்க வேணும், பணத்தைப் பலவந்தமாக கையில் திணித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



இப்பொழுதுதான் சிவபாலி கடவுளின் சோதனையை எண்ணி வேதனைப்பட்டார். சற்று முன்புதான் தமிழரிடமே கடன்படுவதில்லை என்று மனதில் சத்தியம் பூண்டிருந்தார். அதற்குள் தமிழன் ஒருவனின் கையில் பத்தாயிரத்தைக் கொடுத்து அனுப்பியிருக்கும் ஆண்டவனின் கூத்தை எண்ணி வியந்தார்.

"கேட்டதுக்கு நன்றி... வேண்டாம்... "

"அண்ணே நீங்கள் நினைக்கிறது எனக்கு விளங்குது... தமிழனட்டை கடன் வாங்கி கடைசியிலை அவமானப்பட வேண்டி வருமெண்டு பயப்பிடுறியள் போலை "

" உண்மைதான் கடன் வாங்கி, சண்டை போட்டு ... இதெல்லாம் ஏன்? வீட்டை நல்ல விலைக்குக் கேட்கிறாங்கள், வித்துப்போட்டு பழையபடி நிம்மதியா வாடகை வீட்டிலேயே வாழப்போறன்" என்றார். அவர் சொல்வது போல வீட்டை யாருமே விலைக்குக் கேட்கவில்லை என்பதையோ இவையெல்லாம் தனது மனதில் தானே உருவாக்கி வைத்திருக்கும் கற்பனைக் கதையென்பதையோ அவர் உணரவில்லை. மந்திரவாதி வாய்க்குள் போட்ட சாணகத்தை விழுங்கின நாளில் இருந்து, தனக்குள்ளேயே சம்மந்தா சம்மந்தமில்லாமல் புலம்புவது அவருடைய பழக்கமாக இருந்தது. அவருடைய வீட்டை விற்கும் புழுகை கறுவலும் காதில் எடுக்கவில்லை.

"அதெல்லாம் பிறகு பாப்பம்.. முதலிலை பணத்தைப் பிடியுங்கோ.." கையில் பணத்தைக் கொடுத்தான் அவன். அந்தப் பணத்தைப் பார்த்தபோது பணத்தைக் கொடுத்து எந்தப் பொறிக்குள் விழுத்தப் போகிறானோ தெரியவில்லையே என்று சந்தேகித்தார்.

"அது சரி கறுவல் எனக்கு ஐயாயிரம் போதும் ஏன் பத்தாயிரம் கனக்க.."

"ஓர் அடிக்கு ஓராயிரம் குறோணர்... அப்பிடிப்பார்த்தால் நீங்கள் எனக்கடிச்ச பத்து அடிகளுக்கும் பத்தாயிரம் வரும்... "

"நான் உனக்கடிச்சனானோ... எப்ப... , சிவபாலி தான் முகமூடி போட்டு கறுவலுக்கு அடித்த கதை தெரியாதது போல கேட்டார்.

"அண்ணே நீங்கள்தான் எனக்கு முகமூடி போட்டு அடிச்சதெண்டு

www.padippakam.com



எனக்குத் தெரியும்..., கறுவல் சிரித்தபடியே சொன்னான்.

சிவபாலிக்கு தலையெல்லாம் சுற்றியது. மந்திரவாதியிடம் பட்ட பிரம்படியை விட இது பல மடங்கு அதிகமாக வலித்தது. உதைத்த காலையே முத்தமிடுகிறானே... ஏன் என்று யோசித்தார்.

"உங்கடை அடிதான் என்னை சரியான வழிக்கு திருப்பியிருக்கு... இப்ப நான் கறுவலில்லை கன்ஸ் பிரடிறிக் பீற்றர்சன்.. நீங்கள் முதலி-லை வீட்டை போங்கோ எல்லாம் பிறகு வந்து பேசுறன். தேவனின் ஆசீர்வாதங்கள்... "என்றான்.

சிவபாலி அவனையே திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே வீடு நோக்கி ஓடினார்.

கறுவலிடமிருந்து இலவசமாக பத்தாயிரம் கிடைத்தது ஏன் என்பதை மறுநாள் அறிந்தபோது அவர் தள்ளாடி மயக்கம் போட்டே விழுந்துவிட்டார்.

## 31

கறுவல் சிவபாலிக்கு கொடுத்தனுப்பியது வெறும் பத்தாயிரம் குறோணர் மட்டுமல்ல, பத்தாயிரம் சம்மட்டி அடிகள் போலிருந்தது..

பணத்தைப் பார்க்கப் பார்க்க வெட்கத்தினால் தேகம் விறுவிறுத்து, வியர்வை கொட்டியது... வீட்டிற்குள் வந்தும் என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தார்.

தீமைசெய்த தனக்கு கறுவல் நன்மை செய்து பதிலடி கொடுத்துவிட்டானே என்று வேதனைப்பட்டார். எதற்காக கறுவலுக்கு அடித்தார் என்பதை மீண்டும் ஒரு தடவை அசைபோட்டுப் பார்த்தார்.

ஐயாமுத்தர் கொம்பு சீவிவிட தான் புறப்பட்டு போய் ஆடிய கூத்தும், கறுவலுக்கு முகமூடி போட்டு அடித்த கேவலமும் சரியா-னதுதானா என்று எண்ணினார்.

அப்பொழுதுதான் அவருடைய மரமண்டையில் ஒரு சிறிய வெளிச்சம் தெரிந்தது. கறுவல் அப்படிச் சொன்னது உண்மைதானா என்பதை விசாரித்துப் பார்க்காமல் தாக்குதல் நடாத்திய தனது அறிவீனத்தை விளங்கிக் கொண்டார்.

அடித்ததை தெரிந்துவிட்ட கறுவல் ஏன் அடித்தேன் என்பதையும் தெரிந்திருப்பானா என்று யோசித்துப் பார்த்தார். எப்படியோ கறுவல் பின்னேரம் வரத்தான் போகிறான் அப்போது வி-வரமாகக் கேட்கலாமென்று எண்ணியபடி வீட்டிற்கு வெளியே வந்தார். போலீஸ் ஸ்டேசனுக்கு கட்டவேண்டிய பணத்தை தபாற்கந்தோர் வழியாக கட்டலாமென எண்ணி காரில் ஏறினார்.

தபாற்கந்தோர் வழமைபோல கூட்டமாக இருந்தது. தனக்குரிய இலக்கத்தை எடுத்துக் கொண்டு காவல் நின்றார்.

“சிவபாலி... ” யாரோ முதுகில் தட்டுவது தெரிந்தது. திரும்பிப் பார்த்தார். காஞ்சோட்டி கனகு நின்று கொண்டிருந்தார்.

“என்ன கனகு திடீரெண்டு ?” மெதுவாகக் கேட்டார்.

“ஒரு சின்னப்பிரச்சனை உன்னோடை கதைக்க வேணும் வெளியில வா ?” காஞ்சோட்டியின் குரலில் மரியாதைக் குறைவு இருந்தது. அவனுடன் வெளியில் போனார்.

“என்ன கனகு ஏதாவது பிரச்சனையோ...?”

“பிரச்சனையோ என்னடா கதைக்கிறாய்... எல்லாத்தையும் கெடுத்துப் போட்டியேடா பாவி... ” கனகு கோபமாகக் கத்தினான். அவனுடைய தேகமெல்லாம் காத்தவராயருக்கு கரகமெடுத்தது போல உருவேறி ஆடியது. கண்கள் இரண்டும் சொற்ப நேரத்தில் கோவைப் பழத்துண்டுகளாக மாறின.

“கொஞ்சம் பொறும்.... ஏன்... என்னப்பா.. ” சிவபாலி அமைதியாகக் கேட்டார்.

“பொறுக்கிறதோ ஐயா.. ஐயோ... சந்தோசமா இருந்த என்ரை வாழ்க்கையைக் கெடுத்தவன் நீதான்ரா.. திருட்டு நாயே.. என்னடா துருவித் துருவிப் பாக்கிறாய்... உன்னை கனநாளா அவதானிச்சு வாறன்.. ”

சிவபாலிக்கு அடியும் விளங்கவில்லை தலையும் விளங்கவில்லை.. குழப்பத்துடன் நின்றார். ஏற்கெனவே கறுவலுக்கு அடித்ததுபோல கனகுவுக்கும் கையை வைச்சால் அதனால் என்னென்ன தொல்லை வருமோ என்று பயந்தார்.

“நீ யெல்லாம் ஒரு காற்சட்டை போட்டுத் திரியிறியோ பேடி.. தூக்கிப் போட்டு மிதிச்சுப் போடுவன்ரா ... ” காஞ்சோட்டி வாய்க்கு வந்தபடி எல்லாம் தாறுமாறாகத் திட்டினான்.

“உன்னைக் கவனிக்கிற இடத்தில கவனிக்கிறன்ரா... ” என்று கூறிவிட்டு வேகமாக நடந்து மறைந்தான்.

சிவபாலி கோபமும் கவலையும் கலக்க சுரீரென கருந்தேள் ஒன்று கொட்டிய வேதனையுடன் தபாற்கந்தோருக்குள் நடந்தார். அப்போதுதான் அவருக்கு அவ்வையாரின் மகிமை தெரிந்தது.

தென்னையின் வேருக்கு தண்ணீர் ஊற்றினால் அந்த நீர் அதனுடைய தலையிலிருந்து இளநீராக மாறி வரும் என்று அவ்வை சொன்னது நினைவுக்கு வந்தது.

அவரைத் திட்டியிருக்க வேண்டிய கறுவல் பத்தாயிரம் குறோணர் தந்திருக்கிறான். அவன் பேசியிருக்க வேண்டிய பேச்சை இப்ப சம்மந்தா சம்மந்தமில்லாத காய்ஞ்சோட்டி கனகு பேசியிருக்கிறான். அன்று அவர் கறுவலென்ற வேருக்கு ஊற்றிய பாவ நீர் இப்போது கனகு என்ற தேரை மேய்ந்த தேங்காயால் புளித்த இளநீராக ஒழுகியிருப்பதைக் கண்டு கொண்டார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து அவ்வையை மெச்சினார். படித்த படிப்பை பயன்படுத்தத் தெரியாது வெறும் பரீட்சை மாணவனாக வாழ்ந்த அவருக்கு இப்போதுதான் படித்த படிப்பு வாழ்க்கையை ஒப்பிட்டுப்பார்க்க சிறிது உதவியது.

www.padippakam.com



பணத்தைக் கட்டிவிட்டு அருகில் இருந்த கடைக்குப் போய் அடுத்த வாரத்திற்கான உணவுப் பொருட்களை வாங்க ஆரம்பித்தார். பணத்தட்டுப்பாடு காரணமாக மூன்று வாரங்களாக வெறும் உருளைக் கிழங்கோடு வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இப்போது கறுவலின் உதவியை மெச்சியபடியே அவன் புண்ணியத்தில் நாலைந்து இறைச்சிப் பக்கட்டுக்களை எடுத்துப் போட்டபடி வெளியே வந்தார்.

அப்பொழுதான் கடையின் வலதுபுற வாசலைக் கூர்ந்து பார்த்தார். அங்கே காஞ்சோட்டி கனகு நின்று கொண்டிருந்தான். அவனுடைய கையில் ஒரு கிரிக்கட் மட்டை இருந்தது.

சிவபாலிக்கு தேகமெல்லாம் மறுபடியும் வியர்க்க ஆரம்பித்தது. அவனிடமிருந்து எப்படித் தப்புவதென பல தடவைகள் யோசித்துவிட்டு, அருகில் இருந்த பாண் கடையைப் பார்ப்பதைப்போல பார்த்துக் கொண்டே இன்னொரு வழியால் வெளியே நடக்கப் போனார். அப்போதும் கனகு விடவில்லை அவனும் அடுத்த வாசல் பக்கமாக நகர்ந்தான். அவரையே பார்த்தபடி கிரிக்கட் பாட்டை கைகளில் இலாவகமாக உருட்டிக் கொண்டான்.

“ஆண்டவனே என்னையேன் சோதிக்கிறாய்... முன் பின் தெரியாத நாய் என்னை வழி மறிக்குதே ” என்று கடவுளை நொந்து கொண்டார்.

கனகு ஏதோ நாசகார எண்ணத்துடன்தான் வந்திருக்கிறான் என்பது தெரிந்தது. கறுவலுக்கு அடித்த அடி இப்போது கனகுவின் கரங்களால் தன்னை வந்தடையப் போவதைத் தெரிந்து கொண்டார்.

ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் சமன் என்ற நியூட்டன் விதி இப்போது அவருடைய மண்டைக்குள்ளும் சுழன்று வந்தது. நியூட்டனோடு அவ்வையாரும் சேர்ந்தே வந்தார். அப்பிள் மரத்தை வைத்து உலகிற்கு விளக்கம் தந்த நியூட்டனுக்கு முன்னரே தென்னை மரத்தை வைத்து அவ்வை ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் சமம் என்பதை விளக்கிவிட்டதைப் புரிந்து கொண்டார். அவ்வையார் சொன்னதை அறியாமல் நியூட்டனின் விதிபற்றி புலம்பித்திரிந்த தன்னுடைய அறிவின் போதாமையை எண்ணி அந்த

www.padippakam.com



நேரத்திலும் நொந்து கொண்டார்.

சட்டென மூளையில் ஒரு எண்ணம் உதிக்கவே பாண் கடையில் அவசர அவசரமாக ஒரு போத்தல் பியரை வாங்கிக் கொண்டார். கனகு அடித்தால் அவனுடைய தலையில் பியர் போத்தலால் ஒரு போடு போட்டு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடிவு செய்து கொண்டார்.

கனகு அவருடைய நடையின் வேகத்தையே பாயும் புலிபோல அளவெடுப்பது தெரிந்தது. கையில் இருந்த பியர் போத்தலை இறுகப் பற்றிக் கொண்டார். தேகத்தை வலிந்து புடைத்துக் கொண்டார். கனகு பூனை போல பின்னங்கால்களை வறுகிக் கொண்டான். சடசடவென்ற சத்தத்துடன் அவரை நோக்கி இப்போது வேகமாக ஓடி வந்தான்.

யுத்தம் வெடிக்க ஒரு நொடிதான் பாக்கி....

ஒன்று....
இரண்டு....
மூன்று....

சிவபாலி சாமான் பையை அலாக்காகத் தூக்கி வீசினார். இறைச்சிப் பக்கட்டுக்கள் காற்றில் பறந்து நிலத்தில் விழுந்தன. பியர் போத்தலுடன் அருகில் இருந்த வாங்கில் பாய்ந்து ஏறினார். சரக் ... பரக்கெனத் அரை வட்டத்தில் திரும்பினார். முதலில் கனகுவின் முகத்தில் இடக்காலால் உதைந்து, அப்படியே எகிறி மேலே இருந்த கம்பிக் கேடரை இடது கையால் பற்றியபடியே வலது கையில் இருக்கும் போத்தலால் கனகுவினுடைய மண்டையைப் பிளந்து போரை வெற்றிகரமாக முடிக்க எண்ணினார்.

கனகு ஆகாயத்தில் பறக்க... சிவபாலி அதைவிட மேலே பறந்து கிளம்பினார்...

“காய்ஞ்சோட்டி நா.... ஏ.......ஏஏஏஏ.... ”

“அண்ணே... வேண்டாமண்ணே வேண்டாம்... , கனகு அவரை நோக்கி அன்பாகக் குரல் கொடுத்தான்.

படிப்பகம்

மூன்று...
இரண்டு...
ஒன்று....

சிவபாலி கோபம் இறங்கி மீண்டும் பழைய நிலைக்கு வந்தார்.
, எப்பிடியண்ணே இருக்கிறியள்... அக்கா சுகமோ.. , கனகு கனிவாகக் கேட்டான்.

சிவபாலிக்கு தலைகால் புரியவில்லை.

“அண்ணே ! நேரமிருந்தால் எங்கவீட்டை ஒரு நாளைக்கு சாப்பிட வரவேணும்... , கனகு அவரிடம் மன்றாட்டமாக இரங்கினான்.

சிவபாலி அவனையே பார்த்தபடி அமைதியாக இருந்தார். அவர் சுழற்றி வீசிய இறைச்சிப் பக்கட்டுக்கள் அருகில் இருந்த குப்பைத் தொட்டிக்குள் விழுந்துவிட்டதைப் பார்க்கப் பார்க்க அவருக்கு அழுகையே வந்தது.

கையில் இருந்த பியர் போத்தலை வாயால் கடித்து மூடியைத் திறந்து சடசடவென வாய்க்குள் வார்த்தார்.

“அண்ணே எனக்கொரு உட்டண வாய்வு கிடக்குது.. ஒரு நாளைக்கு பதினாறு குளிசையள் போடுறனான். நான் ஒருதரையும் பேசுறதில்லை குளிசை போட்டால் மட்டும் பேசுவன்... எல்லாம் குளிசையின்ரை வேலை , என்றான்.

சிவபாலி சிரித்தார்... அழுதார்... லபோ லபோ என்று தனது அனவாயில் தானே அடித்தார். பழைய விசர்க்குணம் வர குப்பையில் கிடக்கும் இறைச்சியை எடுத்து கனகுவின் வாய்க்குள் திணிக்கலாமா என்றும் ஒரு கணம் நினைத்தார், ஏனோ பின் அமைதியானார்...

மேற் கொண்டு அவனோடு எதுவுமே கதைக்காது காரில் ஏறி-னார். புலம் பெயர் வாழ்வு இப்படி எத்தனையோபேரின் மூளைகளைச் சுட்டுத் தீர்த்துவிட்டதையும் வைத்தியம் இல்லாத பைத்தியங்களாக கனகு போல பலர் அலைவதையும் அவரால் விளங்கிக் கொள்ள

www.padippakam.com



முடிந்தது.

எரிமலை போல வெடிப்பதும் பின் அன்பாக அணைப்பதுமாக மூளைக்குள் உட்டண வாய்வேறிச் சனம் படும் பாட்டை நினைத்து வருந்தினார். அவர்கள் போடும் தில்லையாட்டங்கயோடு ஒப்பிட்டால் தனது ஆட்டங்களும் குறைந்தவையல்ல என்பதையும் புரிந்துகொண்டார்.

தான் வாழ்வது பைத்தியக்கார உலகமா அல்லது வேதாள உலகமா என்பது தெரியாமல் சிறு பொழுது தடுமாறினார்.

வீடு வந்து சேர்ந்தார், அங்கே கறுவல் அவருக்காக காத்திருந்தான். சிவபாலியின் வீட்டுக்குள் சுனாமி அடிக்க ஆரம்பித்தது.

## 32

சிவபாலி வீட்டுக்குள் நுழைந்தபோது அங்கே கறுவல் இருந்தான்...

"பின்னேரமா வாறதாகச் சொன்னீர் இப்ப மத்தியானமே வந்திட்டீர்.. " சிவபாலி சற்று மரியாதை கலந்த வெட்கத்துடன் கேட்டார்.

"இல்லை பின்னேரம் வேறையொரு வேலையிருக்கு அதுதான் வெள்ளண்ணவே வந்திட்டன்.. "தொலைக்காட்சியில் ஈராக் போரில் வெற்றிபெற்றுவிட்டதாக அமெரிக்க அதிபர் முழங்கிக் கொண்டிருந்தார்.

"சதாம் உசேன் தப்பிவிட்டார்... கட்டுறன் பந்தயம்.. அந்தாளைப் பிடிக்க ஏலாது! " என்று கூறியபடியே தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அதற்குள் பிரியாமணி தேநீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டு அருகில் அமர்ந்து கொண்டாள்.

தேநீரை ஒரு மிடறு இழுத்தார் , இப்ப எங்கே வேலை.. கோட், ரை எண்டு உருவமே மாறியிருக்கு , கறுவலிடம் மெதுவான குரலில் கேட்டார்.

"எல்லாம் அந்த ஆண்டவன் அருள்... "

கறுவல் திடீரென ஆண்டவனைப் பேசுவதால் சிறிது

www.padippakam.com



குழப்பமடைந்தார் சிவபாலி. முனியப்பருக்கு ஆடு வெட்டுவதைத் தடுக்கக் கூடாது என்று அடிபட்டு இரண்டு பேருக்கு வாளால் வெட்டிய கறுவல் இப்போது எந்த ஆண்டவரைச் சொல்கிறான் என்று அவருக்கு விளங்கவில்லை. அவன் ஏதாவது மதப் பிரசங்கம் வைக்க முன்னரே கதையை மாற்ற முடிவு செய்தார்.

"அது சரி நான்... உமக்கு அடிச்சதாக சொன்னீர் ... அது எப்பிடி உமக்கு... "

"அண்ணே நான் அதைத் தீர மறந்திட்டன்.. அதை விட்டிடுங்கோ... "

"இல்லைக் கறுவல் இனியும் உண்மையை மறைக்க ஏலாது" நான்தான் உனக்கு அடிச்சனான்... என்னை மன்னிச்சிடு.. , சிவ-பாலி அடிச்சதாக சொன்னதும் பிரியாமணி அவரையே கூர்ந்து பார்த்தாள். பறவைக்காய்ச்சல்தான் சிரசில் அடித்துவிட்டதோ என்று சந்தேகப்பட்டாள். இருப்பினும் குறுக்கே கதைத்தால் சிவபாலி டென்சனாகிவிடுவார் என்பதால் அமைதியாக இருந்தாள்.

"சீச்சீ ... நீங்கள் எனக்கு வயதுக்கு மூத்த ஆள்.. மன்னிப்பு கின்னிப்பெண்டு.. எல்லாம் பேசாதேயுங்கோ எல்லாம் ஆண்டவன் செயல்.. நீங்கள் அடிச்ச அடியாலதான் ஆஸ்பத்திரி போனனான். அங்கே ஆருமே இல்லாத எனக்கு ஜெபம் செய்தார் ஒராள் அவரால ஆண்டவன் பக்கமே சேர்ந்திட்டன்.. சரியான தேவனைக் கண்டு கொள்ள உங்கடை அடிதான் உதவினது..." கறுவல் சிரித்துச் சிரித்துக் கதைத்தான்.

"எல்லாம் சரி நானே முகமூடி போட்டுத்தான் அடித்தனான்.. அந்த விசயம் என்ரை மனிசிக்கே தெரியாது... அதை உமக்கு ஆர் சொன்னது.. ,

"யாருமே சொல்லேல்லை நீங்கள்தான்..."

"நானோ ? "

"ஓம்.. !"

கறுவல் உறுதியாகச் சொன்னதைக் கேட்க சிவபாலிக்குக் குழப்பமாக இருந்தது. மந்திரவாதி அடித்த அடியில் யாருக்காவது உளறினேனோ என்று யோசித்தார்.

"எனக்கு அடிச்ச உடனே ஆருக்குப் போன் பண்ணினனீங்கள் யோசிச்சுப் பாருங்கோ.. "

"ம்... ம்.. ஐயாமுத்துவுக்குத்தான் போன் பண்ணினனான்... அவர் சொல்லியிருப்பரோ.. "சிவபாலி குழம்பினார்.

"நான் ஆஸ்பத்திரியில இருக்க ஓடிவந்து பார்த்த முதலாவது ஆள் ஐயாமுத்தர்தான்... எத்தினையோ சத்தியம் வாங்கிப் போட்டுத்தான் அந்த ஆள் உங்கடை பேரைச் சொல்லித்தந்தது.. தயவுசெய்து கேட்டுப்போடாதையுங்கோ.., கறுவல் அமைதியாக சொன்னான்.

சிவபாலிக்கு கோபம் எரிமலைக் குழம்பாக மனதில் தகித்தது. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழனாக இருந்திருக்கிற ஐயாமுத்துவை என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார்.

"அதுசரி ... நான் ஏன் அடிச்சனான் எண்டும் ஐயாமுத்தர் சொன்னவரோ ? சிவபாலி கேட்டார்.

"இல்லை... நீங்கள் அடிச்சதைப் பார்த்துப் போட்டு ஓடிவந்ததாகத்தான் சொன்னவர்.." நீங்கள் முகமூடியைக் கழற்றினபோதுதான் முகத்தைப் பார்த்திருக்கிறார்... உண்மையைச் சொல்லுங்கோ.. ஏன் அடிச்சனீங்கள்.. அடிச்சதுக்கொரு காரணம் இருக்க வேணும்.." கறுவல் விநயமாகக் கேட்டான்.

சிவபாலி மௌனமாகவே இருந்தார்.

"நீங்கள் காரணத்தைச் சொன்னால் உங்க வீட்டு ஜன்னலை உடைச்ச ஆளை எனக்குத் தெரியும்அந்த ஆளைச் சொல்லுவன்..."

அதைக்கேட்க சிவபாலிக்கு புதிய ஆவல் பிறந்தது. எல்லாவற்றையும் தீர மறந்தார்.

“கறுவல் நீர்தான் எனக்கொரு டேனிஸ்காரியோட தொடர்பிருக்கிறதாகக் கூறியிருக்கிறீர்.. எனக்கொரு பிள்ளை இருக்கிறதாகவும் சொல்லியிருக்கிறீர்.. அதுதான் அடிச்சனான்.. ”

“ஆருக்குச் சொன்னனான் ? அப்படி நான் சொன்னதாக உங்களுக்கு ஆர் சொன்னது... ” கறுவல் கேட்டான்.

“ஐயாமுத்தர்தான் சொன்னது.. ”

கறுவல் சிரித்தான், அவனுக்கு இப்போது எல்லாமே விளங்கியது. ஐயாமுத்து தர வேண்டிய பணம் கிடைக்காத காரணத்தால் தான் அவரைப் பேசியதற்காகவே சிவபாலியை ஏவிவிட்டிருக்கிறார். அதற்குத்தான் ஐயாமுத்தர் சிவபாலியை வைத்து தன்னைப் பழிக்குப் பழிவாங்கியிருப்பதாக உணர்ந்து கொண்டான் கறுவல்.

“அண்ணே எனக்கும் உங்களுக்கும் பகை கிடையாது.. ஆனால் எப்பிடி மோதியிருக்கிறம் பாருங்கோ.. இதுதான் புலம் பெயர் வாழ்க்கை.. இப்பிடி ஆளையாள் தூண்டிவிட்டுத்தானே தமிழ்ச் சமுதாயம் பிரிஞ்சு கிடக்கு.. ” கறுவல் சிரித்தபடி வேதனையை மட்டும் வார்த்தைகளில் கலக்கவிட்டான். அதைக் கேட்கக் கேட்க சிவபாலிக்கும் வெட்கமும் வேதனையுமாக இருந்தது.

“அது சரி எங்க வீட்டு ஜன்னலை உடைச்சது ஆர்.. அதைச் சொல்லு.. அறிய ஆவலா இருக்கு.. ” சிவபாலி இரந்து கேட்டார்.

கறுவல் தயங்கினான்...

“பயப்பிடாமல் சொல்லும், பெத்தவளாணை ஒருதருக்கும் சொல்ல மாட்டன் ”சிவபாலி தாய் மீது சத்தியம் செய்தார்.

“அந்தாள் இப்ப திருந்தியிட்டுது.. உங்களுக்கு பத்தாயிரத்தை

www.padippakam.com



அன்பளிப்பாகத் தந்ததும் அந்தாள்தான்... ”

“கறுவல் சுத்தி வளைக்காமல் ஆளைச் சொல்லு.. ”

“சொல்லுவன் நீங்கள் அந்தாளை மன்னிக்க வேணும்.. ”

“சத்தியமா மன்னிப்பன் ஆளைச் சொல்லு.. ”

“போலீசில போய் வழக்கை வாபஸ் வாங்கச் சொல்லித்தான் அந்தாள் உங்களுக்குப் பத்தாயிரத்தையே தந்திருக்கிறார்... அந்த நல்ல மனிதரைச் சொல்லுவன் அவர் மீதிருக்கிற வழக்கை வாபஸ் வாங்குவியளோ” கறுவல் கேட்டான்.

“சத்தியமா வழக்கை வாபஸ் வாங்கிறன்... எனக்கு ஜன்னல் உடைச்ச காசே வேண்டாம் ஆள்தான் வேணும், சிவபாலி துடிதுடித்தார்.

“அந்தளுந்தை பேரை நான் சொல்லுறது சரியில்லை.. இந்தாருங்கோ இந்தக் கவரிலை அந்த ஆளின்ரை படம் இருக்கு..” கறுவல் ஒரு ஒட்டிய கவரைக் கொடுத்தான். சிவபாலி கவரை உடைக்கப் போனார்.

“வேண்டாம் ! அந்த ஆள் இப்ப கர்த்தரின் அருள் பெற்றவர். அவரை நீங்கள் எனக்கு முன்னால திட்டுறது சரியில்லை. நான் போன பிறகு பாருங்கோ.. உங்களை நான் மன்னிச்சது போல அந்த ஆளையும் நீங்கள் மன்னிக்க வேணும்.. இந்தாருங்கோ இந்தப் புத்தகங்களைப் படியுங்கோ உங்கட மனதில ஒரு புதிய ஒளி பிறக்கும். நீங்களும் எங்களுடைய சகோதரராக மாறலாம், என்னைப் போல உங்களுக்கும் பரலோகத்தில ஒரு நல்ல இடம் கிடைக்க உதவலாம்” கறுவல் அவர்களை ஆசீர்வதித்துவிட்டு விடைபெற்றான்.

வாசல்வரை சென்று அவனை அனுப்பிவிட்டு வந்து அவசரம் அவசரமாக ஓடி வந்து கவரைத் திறந்தார் சிவபாலி. யன்னலை உடைத்த பாவியை அறிய ஆவல் கொண்டார். வதவதவென கவரை உடைத்தார். உள்ளேயிருந்த படத்தை உருவி எடுத்தார். அந்தப் படத்தில் இருந்த ஆளைப் பார்க்கப் பார்க்க அவருக்கு தலையே சுற்றிக் கொண்டு வந்தது.

www.padippakam.com



## 33

கறுவல் கொடுத்துப் போன கடிதத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்ட சிவபாலி தன்னுடைய வீட்டின் ஜன்னலை உடைத்தவனுடைய முகத்தைக் காண கணப்பொழுதிற்குள் துடிதுடித்தார்.

கவரை உடைத்து உள்ளேயிருந்த படத்தை வெளியே எடுத்துப் பார்த்தார். சடைப்பான தலை, ஒட்டிய கன்னங்களுடன் சாட்சாத் கறுவலே அந்தப் படத்தில் காணப்பட்டான்.

அதைப் பார்க்க சிவபாலிக்கு கோபம் கோபமாக வந்தது. முகத்துக்கு முன்னால் உண்மையைச் சொன்னால் உணர்ச்சி வசப்பட்டு தான் போரில் குதித்துவிடுவேன் என்பதை கறுவல் கணிப்பிட்டிருக்கிறான், அதுதான் புகைப்படத்தைத் தந்துவிட்டு போயிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டார். எந்த நாட்டில் இருந்தாலும் போலீஸ்காரனின் கேவலப் புத்தி மாறாது என்பதால் தானே உண்மையைச் சொல்ல முற்பட்டிருக்கிறான் என்றும் நினைத்தார். படத்தைப் பார்க்கப் பார்க்க நடைபெற்ற சம்பவங்கள் எல்லாம் சங்கிலித் தொடர்போல கிலுகிலுவென அவர் கண் முன்னால் உருண்டு ஓடின.

கறுவலுக்கு சிவபாலி அடித்ததால் வந்த வினைதான் கறு-வலின் கோபம் என்பதை இப்போது உறுதியாகப் புரிந்து கொண்டார். பிரியாமணியை உரத்த குரலில் அழைத்து புகைப்படத்தை அவ-ளிடம் கொடுத்தார். குசினிக்குள் போனவள் அவசரமாக வந்து அந்தப் புகைப்படத்தைப் பார்த்தாள்.

சிறு பொழுதில் தலை தலையென அடித்து புலம்பினாள். அவ-ளுடைய கவலை இப்போது வேறு பாதையில் கரைபுரண்டு ஓடியது. காலகாலமாக அவள் நம்பிவந்த மந்திர தந்திர நம்பிக்கைகளை உடைத்துத் தகர்ப்பது போல இருந்தது அந்தப்படம்.

ஊரில் அவளுடைய தாயைக் கொல்ல சுடலை எலும்பில் தலைமுடி சுற்றி எதிர் வீட்டுக்காரன் சூனியம் செய்ததாக மந்திர

www.padippakam.com



ஆட்டக்காரன் ஒருவன் கூற அதை நம்பி காணியை விற்றது ஞாபகத்திற்கு வந்தது. காலகாலமாக அவள் குடும்பம் செய்துவரும் பேயோட்டம் எல்லாமே பொய்த்துவிடுமென நினைத்தாள். தன்னுடைய நம்பிக்கைகள் மெல்ல மெல்ல சிதைவதை அவளால் தாங்க முடியவில்லை.

அந்த நேரம் யாருமே எதிர்பாராமல் ஒரு மின்னல் வெட்டியது.

"குறுக்கால போவாளே! எல்லாம் உன்னால வந்தது.. மந்திரவாதியைக் கூட்டி வந்தது நீதானே.. " என்று கூறி அவளுடைய முதுகில் ஓங்கியோங்கி அடித்தார் சிவபாலி. அடி அகோரத்தில் பிரியாமணி கீழே விழுந்தாள். பழைய சளிக்குணம் திடீரென வரவே அவளுடைய வயிற்றில் ஓங்கி மிதித்து இடது காலால் கடைந்தெறிந்தார் சிவபாலி.

அடிக்குப் பணிந்துவிடாமல் பிரியாமணி மறுபடியும் துள்ளியெழுந்து போர்க்கோலம் பூண்டாள். அவளுடைய வாயைக் கிளறினால் வரக்கூடிய ஆபத்தை முன்னரும் இரண்டொரு தடவைகள் பார்த்திருக்கிறார் சிவபாலி. தெரிந்தும் மடைத்தனமாக உணர்ச்சி வசப்பட்டு விட்டதை நினைத்து கவலை கொண்டார்.

"நீ மட்டும் என்ன ஒழுங்கோ... மந்திரவாதி மோகினி ஆட்டம் ஆட என்ன சொன்னனீ.. எல்லாம் வீடியோவிலை பாத்தனான் சீ நீயுமொரு மனிசனோ .. " காறித்துப்பினாள். சிவபாலிக்கு அதைக் கேட்க வெட்கமாகிப் போய்விட்டது. பிரியாமணி அவ்வளவுடன் விடவில்லை அடுத்த நாகாஸ்திரத்தை தூக்கி வீசினாள்.

மரணாஞ்சலி தொடர் நாடகத்தில் வரும் வில்லி போல மாறினாள். கைகளை மாப்புக் கட்டியபடியே அங்குமிங்குமாக நடந்தாள்.

"மிஸ்டர் சிவபாலி இந்தா உன்னுடைய பாங்காட் ... ,"அவருடைய வங்கி அட்டையை தூக்கி மேசையில் போட்டாள்.

"இதென்னடி கூத்தாடுறாய் "

"என்ரை அப்பன் கோமாளி என்னை ஒழுங்காப் படிப்பிக்கேல்லை

படிப்பகம்

www.padippakam.com



உண்மை. ஆனால் மரணாஞ்சலி நாடகத்தில இருந்து நான் உலகத்தைப் படிச்சிட்டன். உனக்கும் எனக்கும் இண்டையோட உறவு அறுகுது.. சொத்தெல்லாம் என்பேரில நீ செல்லாக்காசு நாய்.. பிரியாமணி ஒரு புரியாமணி டிக்..டிக்..டிக்... எண்ணி பத்தே நிமிசத்தில வீட்டை விட்டு வெளியேறு... இந்தப் பிரியாமணி இனி ஆண்கள் உலகத்தைப் பழிவாங்கும் வில்லியாக மாறப்போறாள்"

சிவபாலிக்கு இப்போதுதான் ஆபத்து விளங்கியது. மந்திரவாதிகளும், மதமாற்றங்களையும் விட பெரிய சீரழிவு தொடர் நாடகம் என்பதை அவர் அறிந்திருந்தார். அடுத்த நகரத்தில இருக்கும் வெறுமண்டை புவனேஸ்வரி தொடர் நாடகத்தை பார்த்துப் போட்டு புருசனின் முகத்தில் அசிட்டை ஊற்றியது நினைவுக்கு வந்தது. மூடர்களின் கூடாரத்தில் சிக்குண்ட பாவியாக துடிதுடித்தார்.

இப்படியான மனப் போராட்டங்களில் சில நிமிடங்கள் கரைந்தன.

"மரணாஞ்சலி... மரணாஞ்சலி... " பாட்டொலி கேட்டது. அதற்குள் மேலே போன பிரியாமணி இப்போது மறுபடியும் படிக்கட்டால் நடந்து வந்துகொண்டிருந்தாள், கூர்ந்து பார்த்தார்.

வெள்ளை நிறச் சேலை கட்டி, குங்குமத்தை அழித்து நெற்றி முழுவதும் பரவி, கண்களில் குடம் குடமாக நீரை ஏந்தி ஒரு தொடர்நாடக பாத்திரமாகவே நடந்த வந்தாள்.

"எடி கோதாரியில போவாளே... இதென்னடி கோலம்... "

"ஸ்டொப் மூடு வாயை ! என்னைப் பொறுத்தளவில நீ செத்துப் போனாய் அதுதான் இந்த வெள்ளைச் சீலை... இந்தா உன்னுடைய தாலிக்கொடி" தாலியை அறுத்து அவர் முகத்தில் வீசினாள்.

"இவள் நெருப்படா நெருப்பு ! கிட்ட வந்தே சாம்பலாகியிடுவாய்..."

www.padippakam.com



புலம் பெயர் தமிழனின் கடைசி அவலத்தின் கடைசி அத்தியாயத்தை அவள் தனக்குக் கற்பித்துவிட்டதை சிவபாலி புரிந்து கொண்டார். இனி மாலைக்கு வாதாடிய மாரியின் மங்கை நாடகப்படி பார்த்தால் அவளே ஒரு வாளி தண்ணீரைத் தலையில் ஊற்றிவிட்டு, இன்னொரு திருமணமும் முடிப்பதற்கும் வாய்ப்பிருப்பதும் தெரிந்தது.

"ஐயோ கடவுளே !" என்று நிலத்தில் புரண்டு அழுதார். அவருக்கு இப்போது எல்லாமே மறந்து போய் தொடர் நாடக சீரழிவில் இருந்து இந்த இனத்தைக் காப்பாற்றுவது எப்படியென்று தெரியாமல் இருந்தது.

"எடியேய் விசர் நாயே ! எத்தினை லெச்சம் சனம் நாட்டிலை செத்துப் போச்சுது... இவ்வளவு சாவுகளைப் பாத்தும் நீ திருந்தேல்லையே.. வெள்ளைச் சீலை, குங்குமம், தாலிக்கொடி இந்த இழவுகளெல்லாம் எங்களுக்கேனடி.. சாத்திரமும், சகுனமும் சடங்குகளும், பூசையளுமாக்கிடக்கிற மூடச் சிந்தனையளை நாங்கள் தூக்கி எறியாமல் இருக்கும் வரையும் எங்களுக்கு விடிவு கிடையாதடி" சிவபாலி உணர்ச்சிவசப்பட்டார்.

அதைப்பார்த்து பிரியாமணியே சிறிது கலவரப்பட்டாள். முதல் தடவையாக நாட்டில் செத்த சனங்களை சிவபாலி நினைத்திருப்பதைக் கண்டு கொண்டதால் வந்த கலவரம் அது.

இப்போது சிவபாலியின் சீன் அரம்பித்தது..

பாய்ந்து அறைக்குள் ஓடியவர் அங்கு கிடந்த குங்குமச் சிமிழ், பஞ்சாங்கம், நிறை குடங்கள், பிளாஸ்டிக் மல்லிகைப் பூச்சரங்கள் எல்லாவற்றையும் அள்ளிவந்து முற்றத்தில் போட்டார். மண்எண்ணெயை ஊற்றி அவற்றில தீ வைத்தார். அதற்குள் தி-னசரி ஐந்து அல்லது ஆறு தொடர் நாடகங்கள் போட்டு மக்களைச் சீரழிக்கும் அந்தத் தமிழகத் தொலைக்காட்சியின் அட்டையையும் போட்டுத் தீ மூட்டினார்.

தீ சடசடத்து எரிந்தது....

www.padippakam.com



பிரியாமணி அமைதியாக வந்து சோபாவில் அமர்ந்து சிந்தித்தாள். எத்தனையோ வருடங்களாக வாழ்ந்த வாழ்க்கையை தொடர் நாடகத்தைப் பார்த்து சீரழித்த கோமாளியாகிவிட்டேனே என்று அவள் மெல்லியதாகக் கவலைப்படுவது முகத்தில் தெரிந்தது.

ஒரு மணி நேரம் இருவரும் எதுவுமே பேசாமல் அமைதியாக இருந்தனர். இந்தப் பிரச்சனையை மூடத்தனமாக கொதி நிலையின் உச்சத்திற்குக் கொண்டு போவதைவிட, வேறு வழியில் திருப்பி குடும்பத்தைக் காப்பதுதான் சரியான செயலென நினைத்துக் கொண்டார்.

"பிரியாமணி நான் உன்னை அடிச்சது பிழைதான் என்னை மன்னிச்சிடு.." சிவபாலி தாழ்ந்த குரலில் கதைக்கத் தொடங்கினார்.

"பெண்சாதிக்கு அடிச்சால் அவளுடைய ஆயுள் குறையும், அந்தக் குடும்பமே அழிஞ்சு போடும். இதுகூடத் தெரியாமல் கலியாணம் முடிச்சு சீரழியிற நாதரியளைப் போல நீங்களும் நடந்திட்டியளே... எனக்கு அதுதான் கவலை"

இப்படி இருவருமே மாறிமாறிக் கதைத்து ஆளையாள் சமாதானப்படுத்தி முடிக்க இருட்டு விழுந்துவிட்டது. சிறிது நேரத்தில் அவள் மேலே சென்று சேலையை மாற்றிக் கொண்டு வந்தாள். அவளாகவே அந்த வெள்ளைச் சேலையை எரிந்து கொண்டிருந்த தணலில் போட்டாள்.

சிவபாலி மனதில் புயலடித்து ஓய்ந்த அமைதி.

அப்போதுதான் கறுவல் தந்த கவரை தற்செயலாகப் பார்த்தார் அதில் ஒரு கடிதம் இருப்பது தெரிந்தது. அதைப் பல தடவைகள் திருப்பித் திருப்பிப் படித்துவிட்டு சிரித்தார்.

"எனப்பா சிரிக்கிறியள்" பிரியாமணியின் குரலில் தணிவிருந்தது.

"ஒண்டுமில்லை கறுவல் என்னையும் மதம்மாறும்படி

www.padippakam.com



கேட்டிருக்கிறான்"

"ஏன் நாங்கள் சமயம் மாறவேணுமாம்"

"ஐரோப்பா வந்தும் உங்கடை சமயம் சாதிப்பிரிவைக் கைவிடேல்லை.. பணம் சுரண்டும் சடங்குகளை கைவிடேல்லை.. தன்னைப் புதுப்பிக்காத ஒரு சமயத்தில இருந்து என்ன பயன் எண்டு கேக்கிறான்.."

"எந்தச் சமயமப்பா புதுமையை ஏற்றிருக்கு எல்லாருமே பழைய புத்தகங்களைத்தானே காவிக் கொண்டு திரியினம். எல்லாமே களிம்பேறின லோட்டாவளாகத்தானே கிடக்கு" பிரியாமணி கேட்டாள்.

"பிரியாமணி சமயம் மாறினதால அவனும் சுவர்க்கத்துப் போக இல்லை, மாறாமல் இருக்கிறதால நாங்களும் சுவர்க்கத்துக்குப் போக இல்லை.. மதம் மாறினதால கறுவல் திருந்தினா அது சந்தோசம், மாறாமல் இருந்து நாங்கள் திருந்தினா அதுவும் சந்தோசம். இந்தச் இழவுளைக் கதைச்சு பொழுதை வீணடிக்கக் கூடாது. கையில கிடைச்ச வாழ்க்கையை ஒழுங்கா வாழத் தெரியாத கோவேறு கழுதையளான எங்களுக்கு சொர்க்கம் இருந்தென்ன நரகம் இருந்தென்ன" என்று கூறினார். கறுவலின் கடிதத்தையும் அதே வெள்ளைச்சீலை நெருப்பில் தூக்கிப் போட்டார்.

அந்த நேரம் சிவபாலியின் தலையில் ஒரு புழு விழுந்தது.. அதைத் தட்டிவிட்டுவிட்டு ஆவென மேலே கூரையைப் பார்த்தார். டொட்டென இன்னொரு புழு வாய்க்குள் விழுந்தது. வீட்டின் ஜன்னலில் தொடங்கிய பிரச்சனை இப்போது கூரைக்குள் ஏறிவிட்டது தெரிந்தது. பாய்ந்து ஓடிப்போய் ஏணியில் ஏறினார். முகட்டிற்குள் போகும் பலகைக்கதவைத் படீரெனத் திறந்தார்.

கூரை முழுவதுமே ஒரே புழு மயமாகவும், எலி கொறித்துக் கொட்டியது போலவும் கருந்துகள்களாகக் குவிந்து கிடந்தன.

அதைப் பார்த்ததும் "ஐயோ அம்மா !" என்று அலறினார்.

அவர் போட்ட சத்தம் இலங்கைத் தீவிலும் கேட்டதோ

www.padippakam.com



என்னவோ அங்கு போன ஐயாமுத்துவும் சிவபாலி வீட்டுக் கூரையில் இருந்த புழுக்களைப்போல நெளிந்து கொண்டிருந்தார்.

## 34

கணேசு வாத்தியாரின் பிலபங்கத் துவாரத்துக் கதைதையயே நினைத்து சிரித்துக் கொண்டிருந்த ஐயாமுத்துவின் நாசிக்குள் சுள்ளி பொறுக்கிக் கிழவி பச்சை மிளகாயை முறிச்சு வைத்ததால் ஐயாமுத்து ஆடிப்போயிருந்தார். அவருக்கு வந்த ஆத்திரத்திற்கு கிழவியை நிலத்தில் போட்டு மிதிக்க எழும்பியவர், வந்த இடத்தில் ஏன் வம்பென்று அமைதியாக இருந்துவிட்டார். மூக்கில் நல்லெண்ணெய் தடவி எரிச்சலெடுக்க பல நாட்களாகிவிட்டது.

அதற்குள் கிழவி ஒரு பட்டியலே அவரிடம் கொடுத்திருந்தாள். யார் யார் வீடுகளுக்குப் போகக் கூடாது, யார் வீட்டில் பச்சைத் தண்ணீரும் குடிக்கக் கூடாது என்பதெல்லாம் விலாவரியாக சொன்னாள். அவள் தன்னைத்தவிர வேறு யாரையும் நல்லவரென்று சொல்கிறாளா, அல்லது மற்றவரைப்பற்றி ஏதாவது நல்ல விடயங்களைப் பேசுகிறாளா என்று இரகசியமாக அவதானித்துப் பார்த்தார், அவருக்கு ஏமாற்றமே எஞ்சியது. அவளுடைய தடைப் பட்டியலைப் பார்த்தால் அவர் காற்றுடன் பேசிக் காலம் கழிப்பதைவிட வேறு வழியிருப்பதாகத் தெரியவில்லை. அவளுடைய சொல்லைத் தட்டினால் சாவுக்கும் இல்லை என்று தண்ணீர் செம்பில் அடித்து சத்தியமும் செய்திருந்தாள்.

யார் வீட்டுக்கும் போக முடியாத பரிதாப நிலையில் பிறந்த ஊரைச் சுற்றிப் பார்ப்பதும், அங்கு என்ன முன்னேற்றங்கள் ஆகியிருக்கிறதென்றும் அவதானிக்க ஆரம்பித்திருந்தார். தெருவுக்கு தெரு ஆமிக்காரரின் சிறு சிறு முகாம்கள்தான் மண் மூடைகளோடு இருந்தன.

அவைகளைப் பார்க்கப் பார்க்க அவருக்கு சிரிப்பு வந்தது.. "வேலை மினக்கெட்டு இந்த வெய்யிலில் நின்று இந்த மண்ணையும், காத்தையும் சாகேக்கே கொண்டே போகப் போறியள்" என்று ஒரு

www.padippakam.com



ஆமிக்காரனிடம் கேட்டார். அவன் அவரைப்பற்றி விசாரித்துவிட்டு வரட்சியாகச் சிரித்தான்.

"ஒரு சண்டை வரவேணுமெண்டுதான் பாத்துக் கொண்டிருக்கிறம்.."

"ஏன் ?"

"அப்பதான் எங்களுக்கு சம்பளம் இரண்டு மடங்காக அதிகரிக்கும்.. தமிழரெல்லாம் வசதியான வீடுகளைக் கட்டி நல்லா இருக்கிறாங்கள்... இந்தச் சாமானுகளை எல்லாம் அள்ளிக் கொண்டு போகவேணும்... எண்டு என்ர கூட்டாளிமார் சிலர் நினைக்கிறாங்கள்... ஆனால் நான் அப்படியில்லை" என்று அரை குறையாக முடித்தான். கொக்குகள் கண்களை மூடிக்கொண்டு ஏன் நிற்கிறதென்று அவருக்கு அப்போது தெளிவாக விளங்கியது.

வெளிநாடு போய் உருப்படாத வேலைகள் பார்த்துத் திரிந்து, அங்குள்ள போட்டி பொறாமைகளில் சிக்குண்டு சீரழிந்து கிடக்கும் தன்னைப் போல சீரழியாமல் அங்கிருக்கும் மக்களாவது முன்னேறியிருப்பார்களா என்று ஆராயத் தொடங்கினார்.

இருபது வருடங்களாக எல்லா வசதிகளும் உள்ள நாட்டில் இருந்தும் தான் முன்னேறாத போது எந்த வசதிகளும் இல்லாத நாட்டில் இருப்பவர்கள் மட்டும் எப்படி முன்னேறியிருப்பார்கள் என்று நினைத்தார். அமைதியான அச்சமற்ற வாழ்க்கையை வாழ அனுமதித்தால் அவர்கள் சிகரங்களைத் தொட்டிருப்பார்கள் என்பதை மெல்ல உணர்ந்து கொண்டார்.

அதற்குப் பிறகு, அங்கிருக்கும் பத்திரிகைகளை எல்லாம் ஒன்று விடாமல் புரட்டிப் பார்த்தார். ஒரு பத்திரிகையில் எப்படி வர்ணங்களை சேர்ப்பது என்ற அளவுகூட அதிகமாக அப்பியிருப்பது போல இருந்தது. அவைகளில் எழுதப்பட்டிருக்கும் விடயங்களின் ஆழத்தை அவதானித்துப் பார்த்தார். அவருக்கு விசர் விசராக வந்தது.

இவைகளைப் படித்து, இவைகள்தான் செய்திகள் என்று

படிப்பகம்

www.padippakam.com



நினைக்கும் மக்கள் வாழ்வு குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடின கதையாகிவிடுமே என்று கவலைப்பட்டார். மீண்டும் ஒரு முறை விழுந்து விழுந்து சிரிக்க நினைத்தார். சுள்ளி பொறுக்கிக் கிழவியின் பழுத்த பச்சை மிளகாயை நினைத்து அமைதியானார்.

அறிவியல் ரீதியான ஆற்றல் மிக்க தலைமுறையை உருவாக்குவது விடுதலையின் ஒரு பரிமாணம் என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். பத்திரிகையாளர் வெளிநாடுகளுக்கு பயிற்சிக்காகப் போக வேணடியது அவசியமென நினைத்தார். பிறவி முட்டாளான தன்னுடைய உள்ளத்திலேயே இவ்வாறான கேள்விகள் தலை தூக்கும்போது மற்றவர்கள் மற்றவர்கள் மட்டும் ஏன் இதுபற்றி சிந்திப்பதில்லை என்று நினைத்தார்.

“வீட்டுக்காரர்...” வாசலில் மிதிவண்டியின் மணி ஒலித்தது.. வெளியே போய்ப் பார்த்தார். கிழிந்து தொங்கும் சேட், கோட்டமடிக்கும் பழைய றிலி சைக்கிள், பரட்டைத்தலை, பத்து நாட்களாக புழுதயிலேயே படுத்துக் கிடந்த அழுக்கான சாரத்துடன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

“என்ன ஐயாமுத்து என்னை மறந்துபோனியோ.. ?” பளீரென்று சிரித்தான். அவனுடைய முன் வாயில் ஒரேயொரு பல்லு மட்டும் வெற்றிலைக் காவியேறி இன்றோ நாளையோ என்று ஆடிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தச் சிரிப்பு மட்டும் எங்கேயோ பார்த்தது போலிருந்தது.

“நீ... நீ... வந்து... வந்து... அ.... பாதாள.... வெடியெல்லோ..”

“நல்லவேளை கண்டு பிடிச்சிட்டாய்..”

“கண்டு பிடிக்கிறதும், மாடு பிடிக்கிறதும் கிடக்கட்டும்.. இதென்னடா உன்ரை கோலமும் குறியும்.. பல்லெல்லாம் எங்கையடா.. நீ என்ன குளிக்கிறேல்லையே.. வா.. வா...” பாதாள வெடி

செல்லராசுவை கூட்டிக்கொண்டு வீட்டிற்குள்ளே போனார்.

"எணேய் ஒரு ரீ போடணை.. " தேவாரச்செல்விக்கு உத்தரவிட்டார்.

"சீச்சீ வேண்டாம்... ரீயும் மனிசன் குடிப்பனோ... ஏத்தினதை எல்லாம் ஒரே வெட்டா வெட்டிப் போடும்.. சும்மாகிட.." உரிமையுடன் பேசினான்.

"எடேய் செல்லராசு.. நீ என்னடா விசர்ப் பூளலியாக் கிடக்கு.. அந்தக்காலத்தில படிப்பில நீதானே முதலாம் பிள்ளையா வாறனீ... இஞ்சை நீ பேரோடையும் புகழோடையும் இருப்பாயெண்டு பயந்து பயந்து வந்தன்.. நீயோ பரதேசிமாதிரி நிக்கிறாய்.."

"நீ என்னைப் பாத்து இப்பிடிச் சொல்லுறாய்... எங்களோட படிச்ச எல்லாரும் என்னைப் பாத்துப் பணக்காறனெண்டுறாங்கள்... அதுதான் பகிடி.." விரக்தியோடு சிரிச்சான்.

"சரி இப்ப என்ன செய்யிறாய்.."

"என்னத்தைச் செய்யிறது.. நிவாரணத்திலதான் காலமோடுது.. இல்லாட்டி ஆராகினும் வெளிநாட்டாலை வருவினம் .. அவையளட்டை வாங்குவன்.. என்ரை காலம் போகுது.. வெளிநாடு போனவன் முட்டாளப்பா, இஞ்சையிருந்து பம்மாத்து விட்டு வெளிநாடுக

ளிலை இருக்கிறவங்களட்டைக் காசை உருவிச் சீவிக்கிறவன்தான் புத்திசாலி.." சிரித்தான்.

மேற்கொண்டு அவனுடன் பேசுவதற்கு ஐயாமுத்துவிடம் எதுவும் இருக்கவில்லை. கடந்த இருபது வருடங்களாக அவனுடைய வாழ்வில் என்ன நடந்திருக்கும் என்பதெல்லாம் அவர் மனதில் திரைப்படம் போல ஓடியது..., மெளனமாகவே இருந்தார். அப்போது செல்வராசு அவருடைய முகத்தின் முன்னால் ஐந்து விரல்களையும் காட்டினான்.

www.padippakam.com



"என்ன செல்வராசு ஐஞ்சு விரலையும் காட்டுறாய்"

"ஐஞ்சு லெச்சம் கடனிருக்கு.. வீட்டை ஈடு வைச்சிட்டன் உன்னைத்தான் நம்பியிருக்கிறன்.. கையை விட்டிடாதை.."

"செல்வராசு.. என்னைப் போல வெளிநாடு போன ஆக்களால காசைத்தவிர வேறை என்னத்தைக் குடுக்க முடியும்.. ஒரு நல்ல சிந்தனையைக் குடுக்காமல், குடும்பம் எப்படி முன்னேற வேண்டுமென ஆரோக்கியமான நிபந்தனை விதிக்காமல் பணத்தை மட்டும் குடுத்துக் குடுத்தே எல்லாத்தையும் சீரழிச்சுப் போட்டம்" என்றார்.

"— - நீ காசைத்தா மற்றதெல்லாம் நான் பாப்பன்.."

"செல்லராசு பணத்தைப் பயன்படுத்தி வாழ்க்கையில முன்னேறுவது எப்படி எண்டுறது ஒரு அறிவு, உன்னட்டை அது எவ்வளவு இருக்கெண்டு தெரியாமல் வெறும் பாசத்தையும், நட்பையும் வைச்சு பணத்தைத் தந்து என்ன இருக்கு ?"

"காசிருந்தால் சரி ! மற்றதெல்லாம் என்னத்துக்கு..?"

"காசிருந்தால் சரியெண்டு சிந்திக்கிறது தானே நூறு வருசமா எங்கடை வரலாறாக இருக்கு.. வேறை என்னத்தை சிந்திச்சம்" ஐயாமுத்துவின் அடி மனதில் இருந்து ஒரு வரண்ட சிரிப்பு வந்தது.

"வெளிநாடு போயும் காசு காசெண்டு நேர காலமில்லாமல் உழைச்சு எங்கடை சனம் காசையும், நகையளையும், வீடுகளையும் வேண்டிப்போட்டு இனியென்ன செய்யலாமெண்டு யோசிச்சுக் கொண்டிருக்கு.. தொண்ணூறு வீதம் நோயில விழுந்திட்டுது.. எல்லா வீடுகளிலயும் சீனியில்லாத் தேத்தண்ணிதான்... "

"எந்த இருட்டுக்கும் பார்க்கின்ற வழியிருக்கு
எந்த சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்.." செல்வராசு சினிமாப் பாட்டொன்றைப் பாடினான். ஐயாமுத்து நெடு நேரமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது தூரத்தே துப்பாக்கியால் சுடும் சத்தங்கள் கேட்டது.. "

www.padippakam.com



"என்னப்பா வெடிச்சத்தம்.."

"அது ஆமி கடலிலை சுட்டுப் பழகுறான்... இங்கை இன்னமும் அமைதியோ பிரச்சனை முடிவோ எதுவும் வரரேல்லை.. இண்டைக்குக் கடலுக்குச் சூடு, நாளைக்கு மனிசனுக்கு.. சும்மா அது இது, சமுதாயம், விளக்கெண்ணையெண்டு பேசாமல் கிட. சும்மா ரெண்டு போத்தில் கள்ளை அடிச்சு கிடாயை வெட்டி கறிகாய்ச்சிப் போட்டு ஓடியிடு.. நீ எழுவதாம் ஆண்டிலை இருக்கிறாய்.." என்று கூறினான். அதைக் கேட்ட பின் ஐயாமுத்து இனி வாய் பேசாமல் இருப்பதே நலமென முடிவு செய்தபடியே ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்தார்.

"வெறும் ஆயிரமே.. "

" இல்லை இதை இப்பதைக்கு வைச்சுக் கொள்.. அடுத்த கிழமை உன்ரை அஞ்சு லெச்சம் பற்றிக் கதைப்பம். ஒரு சாரமும், சேட்டும் தாறன் முதலிலை இந்த நாசங்கட்டின கிழிஞ்ச உடுப்புகளைக் கழட்டி எறி..." ஒரு புத்தம் புதிய சாரத்தையும் வெளிநாட்டு சேட்டையும் உள்ளேயிருந்து எடுத்துவந்து கொடுத்தார். அவனை அங்கிருந்து அவசரமாகக் கழற்றிவிடலமென நினைத்தார்.

"ஐயாமுத்து சந்தோசம்.. நீ அஞ்சு லெச்சம் தரமாட்டாயெண்டு எனக்குத் தெரியும்... ஐஞ்சு லெச்சத்தில ஆரம்பிச்சால்தான்

அம்பதாயிரத்துக்குத் தன்னும் வருவாயெண்டு நினைச்சன்.. நீ என்னடாண்டால் வெறும் ஆயிரத்தோட முடிச்சிட்டாய்.."

"யோசியாதை போக முந்தி உதவி செய்யிறன்..."

"எப்ப வெளிக்கிடுறாய்... "

"பயப்பிடாதை அடுத்த மாதம் வரை நிப்பன்... "

"இந்தா இந்தப் புது உடுப்புகளை வேறை ஆருக்கும் குடு..

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வில் அவர் பெரிய விசயங்கள் என்று நினைத்தவை எவை-வயுமே பெரிய விசயங்களல்ல என்றும் உணர்ந்து கொண்டார். ஒரு வண்ணாத்திப் பூச்சி பறந்து முடிப்பது போன்ற சிறு பொழுதிற்குள் எல்லோருடைய ஆட்டங்களும் அடங்கிவிடும் என்பதையும் புரிந்து கொண்டார்.

டென்மார்க்கில் வாழும் சிவபாலி போன்ற வெங்காயங்களை ஏவி விட்டு வீடு வாங்கச் செய்து படு குழியில் வீழ்த்திவிட்ட செயலை-லயும், கறுவலையும் சிவபாலியையும் முடிந்துவிட்டு வேடிக்கை பார்த்த கீழ்த்தரமான செயலையும் அத்தருணம் நினைத்துப் பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டார்.

ஆமி மட்டும் உயிராபத்தானது என்று இதுவரை நினைத்திருந்தவர் அங்கு வந்த பிறகுதான் மேலும் பல விசயங்கள் உயிராபத்தை விளைவிக்கும் என்பதை உணர்ந்து கொண்டார். பணம், சிறந்த கூர்மையான அறிவு, மகிழ்வாக வாழும் குடும்ப வாழ்வு, மன-தநேயம், சுதந்திர நாட்டம் எல்லாமே அங்கு உயிராபத்தான

விடயங்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

யாரோ தோளில் தட்டுவதைப் போலிருந்தது பயத்துடன் திரும்பிப் பார்த்தார் தேவாரச்செல்வி நின்று கொண்டிருந்தாள்.

"நாளைக்குக் காலையில யாழ்ப்பாணம் போக வேணும் வானுக்குச் சொல்லியிருக்கிறன்.. "

" சரி "

"இண்டைக்குப் பின்னேரமும் ரெண்டு மூண்டு இடங்களுக்குப் போகவேணும்.. "

"நீ போவிட்டு வா ! நான் எங்கடை வாசிகசாலையிலை ஒரு கூட்டமிருக்கு போயிட்டு வாறன்.."

www.padippakam.com



"தனியாப் போகாதையுங்கோ சேகரத்தையும் கூட்டிக் கொண்டு போங்கோ.."

அப்போது சுள்ளி பொறுக்கிக் கிழவி வெளியே வந்தாள். "சேகரம் வயித்துக் குத்தாக் கிடக்கிறான்..." என்று கூறிவிட்டு சட்டி கழுவிய கறித் தண்ணீரை வெளியே விசிறி ஊற்றினாள்.

சேகரத்தைப் பார்க்காமலே அவனுக்கு வயிற்றுக்குத்தென்று கிழவி சொல்வது அவருக்கு ஆச்சரியமாயிருந்தது.

" அப்ப நாளைக்கு யாழ்ப்பாணம் வருவானே.. ? "

"யாழ்ப்பாணந்தானே பிரச்சனையில்லை வருவான்.. அப்ப வயித்துக்குத்து மாறியிடும்" என்றபடி உள்ளே போனாள் கிழவி.

எங்காவது பிரச்சனை வரக்கூடிய பொது இடங்களுக்குப் போவதென்றால் வயிற்றுக்குத்தென்று சுருண்டு படுப்பதும்.. சன்னதி கோயிலிலை இருந்து கதிர்காமத்துக்கு வேல் போகிறது என்பது போன்ற சோலியில்லாத விடயங்கள் என்றால் துள்ளி எழுந்து

வருவதும் அங்கு பொதுவான பழக்கமாக இருந்ததை அவதானித்தார். பலர் அப்படி வாழ்வதற்கு ஒரு மர்மப் பின்னணி இருக்க வேண்டும் என்பதை யாரும் சொல்லாமலே சோகம் கலந்த சோளகக் காற்றில் இருந்தே கண்டு கொண்டார்.

ஒவ்வொருவரும் உயிர் வாழ்க்கையைக் காப்பாற்றுவதானால் அங்கு எவ்வளவோ அவதானமாக இருக்க வேண்டும் என்பதை சே-கரம் போன்றவர்களின் செயற்கையான வயிற்றுக் குத்து அவருக்கு விளக்கியது.

அதற்கு மேல் யோசிக்கவில்லை, சாப்பிட்டு ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிட்டு அப்படியே வாசகசாலைக் கூட்டத்திற்குப் போ-னார்.

www.padippakam.com



அங்கே பலர் குழுமியிருந்தனர். ஏற்கெனவே ஐயாமுத்து வருவதை படிப்பகத்தின் செயலாளர் சிவா எல்லோருக்கும் தெரிவித்திருந்தான். இருந்தாலும் பலர் அவருடைய உருவ மாற்றத்தால் தாமதமாகவே அவரை அடையாளம் கண்டு கொண்டனர். சிலர் அங்கு புதிதாக வந்து குடியேறியவர்கள் அவர்களை ஐயாமுத்தருக்கு அறவே தெரியவில்லை.

வாசகசாலைக்குப் பக்கத்தில் ஒரு சிறிய இராணுவக் காவல-ரண் இருந்தது. மண் மூட்டைகள் அடித்து அதற்குள் சிறிய துளை-ளயைப் போட்டு அதன் வழியாக துப்பாக்கியை நீட்டியபடி ஒரு ஆமிக்காரன் நின்றான்.

அப்போது அவருக்கு அருகாமையில் ஒரு மோட்டார் சைக்கிள் கடந்து போனது... அதன் பின்புறத்தில் யாரோ ஒரு தம-ிழன் கள்ளுக்கானுடன் இருக்க ஆமிக்காரன் ஒருவன் ஓடிக்கொண்டு போனான். அதைப்பார்த்ததும் ஐயாமுத்துவுக்கு அங்குள்ள நிலை-மயின் ஆழம் ஓரளவு புரிந்தது.

"என்ன தம்பி வாசகசாலைக்குப் பக்கத்தில ஆமிக்காரன் இருக்கிறான். அவனோடை சேர்ந்து தமிழனும் கள்ளடிக்கிறதா தெரியுது... பிரச்சனையில்லையே.." சிவத்திடம் கேட்டுப் பார்த்தார்.

"சீ பிரச்சனையில்லை.. அவங்கள் அவங்கடபாடு நாங்கள் எங்கடபாடு " என்றான் சிவம்.

அங்கு யாரைப்பற்றியும், எதைப்பற்றியும் கூடாத வார்த்தை பேசுவதாயின் நிரம்பிய அவதானம் வேண்டும் என்பதைச் சிவத்தின் வார்த்தைகளால் புரிந்து கொண்டார். கூட்டத்திற்குள் வந்து முன்னுக்கு நின்று தன்னை பிரபலப்படுத்தினால் வரக்கூடிய ஆபத்துக்களை அவர் உணர்ந்து கொண்டார். இடைக்கிடை தானும் வயிற்றுக்குத்தென்று கூறி படுத்திருக்கலாம் என்றும் நினைத்துக் கொண்டார்.

கூட்டம் தொடங்கியது...

www.padippakam.com



சென்ற கூட்ட அறிக்கையை வாசிக்க முன்னரே பந்தடிப் பிரச்சனை ஆரம்பித்துவிட்டது. பந்தடியில் இருக்கும் கோபதாபங்களை அடி மனதில் வைத்து வாசகசாலையில் ஆளையாள் பெருங் குரலெடுத்து மோதிக் கொண்டனர்.

இரண்டு மணி நேரமாக இந்தக் கழகத்தைப் போட்டியில் சேர்க்கலாமா அல்லது அந்தக் கழகத்தில் இருந்து யார் விளையாடுவது என்று கேட்டு பெரும் மோதல் நடந்தது. வாழ்க்கையில் பந்தையே கையாலோ காலாலோ தொட்டுப்பார்த்திராத ஐயாமுத்துவிற்கு அதைக் கேட்க சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல இருந்தது.

இரண்டு கடதாசித்துண்டுகள் போல கசங்கிக் கிடந்த செய்திப் பத்திரிகைகள் மட்டுமிருந்த அந்த நொடித்துப் போன வாசகசாலை உருப்பட வேண்டுமென்றோ, தாங்கள் எதற்காக அங்கே கூடியிருக்கிறோம் என்றோ யாரும் நினைத்ததாகத் தெரியவில்லை.

பந்தடி மோதல்...
பள்ளிக்கூட மோதல்...
வாசகசாலை மோதல்... என்று எதையெடுத்தாலும் மோதலாகவே இருந்தது. பொறுமை குலைந்த ஐயாமுத்தர் தன்னை மறந்து எழுந்து அனைவரையும் அமைதிப்படுத்தினார்.

“கொஞ்சம் பொறுங்கோப்பா... நீங்கள் பந்தடிச்சு என்ன உலகக் கிண்ணத்தையே எடுக்கப் போறியள்.. ? ஒழுங்கைக்கு ஒழுங்கை விளையாட்டுக் கழகங்களை வைச்சுக் கொண்டு உங்களுக்குள்ளேயே சண்டை போட்டு, எவ்வளவு காலம் குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டப் போறியள்.. ?” ஐயாமுத்தர் ஆத்திரத்துடன் கேட்டார்.

எல்லோரும் ஐயாமுத்தரை வெறும் பேயன் போலப் பார்த்தார்கள். அவர் தொடர்ந்தார்.

“ஒவ்வொரு நாட்டுக்காரனும் உதைபந்தாட்டத்தை வர்த்தகமாக மாற்றியிட்டான். உதைபந்தாட்டம் தனிப்பாடசாலைக் கல்வியாக வந்திட்டுது... நீங்கள் என்னப்பா செய்யிறியள்.. ?”

www.padippakam.com



நிசப்தம் நிலவியது...

"நான் 84ம் ஆண்டு ஊரிலை நடந்த படுகொலைகளோடை நாட்டை விட்டு ஓடிப் போனனான். அண்டைக்கும் அந்த ஒழுங்கை விளையாட்டுக் கழகமும் இந்த ஒழுங்கை விளையாட்டுக் கழகமும் சாவுக்கும் இல்லையெண்டு சண்டை போட்டிச்சுது.. இருவத்தைஞ்சு வரியமா இந்தக் கோதாரிதானே நடக்குது.. உங்களுக்கு வேறை வேலையில்லையே... " என்றார்.

" அது சரி நீ ஆர்.. வெளிநாட்டிலை இருந்து வந்து இஞ்சை நாட்டாமை காட்டுறாய்" கூட்டத்திற்கு கடைசியாக வந்த ஒருவன் கேட்டான்.

" அது ஐயாமுத்து அண்ணை... எங்கடை ஒழுங்கையின்ரை பழைய பந்தடி வீரன்."

" அது சரி தம்பி ஆர்... " ஐயாமுத்து கேள்வி கேட்ட இளை-ஞனை யாரென விசாரித்தார்.

"அது கோகுலன்.... வெளியூரிலை இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்... நல்லொரு பிள்ளை.. எங்களுக்கு இப்ப எல்லாம் அவர்தான்.." சிவா முன்வாய்ப் பற்களெல்லாம் கழன்று கீழே விழாத குறையாகச் சொன்னான். அவனுடைய சிரிப்பில் இருந்து கோகுலன் ஆமியில

செல்வாக்குள்ள ஆள் என்பது தெரிந்தது.

அந்த நேரம் பார்த்து " சடசட" வென்ற சத்தத்துடன் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது.. இருவர் அதிலிருந்து இறங்கி கூட்டத்தை அவதானித்தனர்.. ஒருவன் கோகுலனைப் பார்த்து சிரித்துக் கொண்டனர். முன்னர் கள்ளுக்கானுடன் போனது அவர்கள்தான்.. இப்போது ஒரு வெற்றுக்கான் மோட்டார் சைக்கிளில் தொங்கியது. ஐயாமுத்து வகை பகை தெரியாமல் உளறிவிட்டதை உணர்ந்து கொண்டார். கதையை மெல்லத் திசை திருப்பினார். சேகரம் ஏன் வயிற்றுக் குத்தென்று படுத்திருக்கிறான் என்பது இப்போது தெள-ிவாகத் தெரிந்தது.

www.padippakam.com



" நான் ஒரு லட்சம் ரூபா தாறன்.. எல்லாக் கழகங்களையும் ஒண்டாக்கி ஒரு நல்ல ரீமை முதலிலை உருவாக்குங்கோ.." ஐயாமுத்து சவால் விடுவதைப் போலப் பேசினார்.

"அது மட்டும் நடக்காது.. அந்தக் கழகமும் இந்தக் கழகமும் ஒற்றுமைப்பட வேண்டுமெண்டால் முதலிலை நான் சா-கவேணும்.. என்ரை சவத்தைக் கடந்துதான் இரண்டு ஒழுங்கை விளையாட்டுக் கழகங்களும் ஒற்றுமைப்பட முடியும்.. தம்பி கோ-குலா... நான் கண்ணீரோடை போறன்ரா... " என்றபடி ஒரு வயோதிபர் ஐயாமுத்துவை மண்ணள்ளி வீசித் திட்டிவிட்டுப் போனார்.

"சரி சரி பந்தடியை விடுவம்.. எங்கடை வாசிகசாலை-யைப் புதுப்பிக்க வேணும்.. அதுக்கு பெரிய நிதி தேவை.." சிவா விடயத்திற்குள் வந்தான்.

"நிதி மட்டும் போதுமா.. அல்லாட்டி வேறை நல்ல புத்தகங்கள்... " ஐயாமுத்து குறுக்கிட்டு வினவினார். கோகுலன் அவரை ஆத்திரத்துடன் பார்த்துக் கொண்டான்.

"சீச்சீ.. வேறை ஒண்டும் தேவையில்லை.. நிதி மட்டுந்தான் வேணும்.. மையடிக்க, கூரைவேய, புத்தகம் வைக்க அலமாரியள் வேண்ட..எண்டு எப்படியும் ஒரு லட்சம் தேவை.." முன்னர் ஐயாமுத்துவின் வாயில் இருந்து வந்த ஒரு இலட்சத்தை மடக்கி வாசகசாலைக்காக உருவிவிட சிவா கச்சிதமாக வலை விரித்தான்.

உலகம் அழிந்தாலும் பந்தடிப்போர் ஒற்றுமைப்பட மாட்டார்கள் என்ற துணிவில் ஒரு பம்மாத்துக்காக ஒரு லட்சம் தருவதாக றீல் விட, இவன் அதற்குள் காலைச் சுற்றிப் பிடித்துவிட்டானே என்று ஐயாமுத்தர் அடி மனதில் கலங்கினார்.

"இத்தினை வருசமா வெளிநாட்டிலை இருந்து வந்திருக்கிறார். அவருக்கு ஒரு லட்சம் என்ன காசோ" இன்னொருவன் துணைக்கு ஊதினான்.

"இந்த வாசகசாலைக்கு கூரை போட்டு மையடிச்சாப் போலை

படிப்பகம்

www.padippakam.com



என்ன உலகம் தலைகீழாப் புரளப் போகுதே.. கூரை போட்டாப் போல நீங்கள் என்ன உருப்படியான புத்தகங்களை வாங்கிப் படிக்கத்தான் போறியளே.. " என்று கேட்க நினைத்தவர் வார்த்தைகளை மென்று விழுங்கிக் கொண்டார்.

"ஐயாமுத்தண்ணே என்ன சொல்லுறியள்... " சிவம் அவரை நெருங்கினான். இதுவரை வாய் தடுமாறி ஐயாமுத்து சொல்லிய அறிவுரைக்கு, இனி பணம் இல்லை என்று சொன்னால் பெரிய அவ-மானமாகப் போய்விடும் என்பதை அவரால் உணர முடிந்தது.

இனி அங்கு ஏதாவது பிரளயம் வந்தால்தான் தப்ப முடியும். இல்லாவிட்டால் ஒரு லட்சம் ரூபா துண்டுதான் என்று நினைத்துக் கொண்டார். ஏதோ சொல்ல எண்ணி மெல்லத் தொண்டையைச் செருகினார்..

"நெடுகக் கூரையைப் போடுறது... பிறகு மையடிக்கிறது மட்டும் வாசகசாலை இல்லை. நாலு நல்ல புத்தகங்களை வாசித்து அறிவைப் பெருக்க வேண்டும். அதுக்குத்தான் முதலிடம்.. என்னம் உண்மையான அமைதி வரேல்லை.." அது இது என்று குழப்பமாகப் பேசி ஒரு லட்சத்தைக் கடாசுவதற்காக கூத்தாட்டத்தில் ஐயாமுத்தர் இறங்கினார். முதலில் ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் என்று தடாலடி போடுவதும் பின் புஸ்வாணமாகி செப்பால் அடித்த சல்லியும் இல்லாமல் ஓடி மறைவதும் அவருடைய தேசிய குணம். இன்று வசமாக மாட்டுப்பட்டுவிட்டதை உணர்ந்தார்.

, அண்ணே .. நீங்கள் எப்ப பயணம்.... , திடீரெனக் குறுக்கிட்ட கோகுலன் கேட்டான்.

"வாற இருபத்தாறாம் திகதி.. " ஐயாமுத்தர் சொன்னார். கோகுலன் ஒரு சிரிப்பு சிரித்தபடியே எழுந்தான்..

அப்போது அங்கு நின்றிருந்த மோட்டார் சைக்கிள் மெல்ல ஸ்ராட் எடுத்தது.. கோகுலன் அதற்கு அருகில் போயிருக்கமாட்டான்... அதில் இருந்தவன் கூட்டத்தை நோக்கி படீரென துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தான்...

www.padippakam.com



குய்யோ முறையோ என்று வாசகசாலைக்குள் இருந்த சனம் அலப்பாரித்து ஓடியது..

அப்பவும் சனத்தை சண்டை போட விடாமல் ஒற்றுமைப்படுத்தாதையுங்கோ எண்டன் கேட்டியளோ என்றபடி யாரோ ஒருவர் சன்னலால் பாய்ந்து ஓடுவது தெரிந்தது...

" சர்ர் " ரென வயிற்றால் அடித்த நாற்றத்தையும் பொருட்படுத்தாது சாரத்தைக் கிளப்பியபடி சமூகமாவது புடலங்காயாவது என்று குளறியபடியே ஐயாமுத்தர் செம்மறி ஆடு போல ஓடியவர்களுக்குப் பின்னால் ஓட்டமெடுக்க ஆரம்பித்தார்.

## 36

ஊரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐயாமுத்து அலறியடித்து ஓடியது போல டென்மார்க்கில் இருந்த தன்னுடைய சொந்த வீட்டில் இருந்து சிதறியோடினார் சிவபாலி. அவருக்குப் பின்னால் பாய்ந்து ஓடிவந்தாள் பிரியாமணி.

"ஏன்... என்னப்பா .. ஏன் இப்பிடிக் குளறிக்கொண்டே ஓடுறியள்.." மூச்சிரைத்தபடி கேட்டாள்.

" புழுவடி புழு... புழுப்புழு... புழுப்புழு... " சிவபாலியின் நாக்கு கிடுகிடுத்து உளறியது.

அவர் புழுபுழுவென்று ஆடியதைப் பார்த்து பிரியாமணி

பயந்துவிட்டாள். மந்திரவாதி அடித்த அடியின் கிறுக்கு இன்னமும் போகவில்லையோ என்று யோசித்தாள்.

"பிரியாமணி நல்லா ஏமாந்து போனம்.. "

"ஏன்... ஏனணை... என்ன ? " பதறித் துடித்தபடி அவருடைய தோள்களை உலுப்பினாள்.

" ஐயோ நான் என்னடி செய்ய..." நிலத்தில் விழுந்து புரண்டு

www.padippakam.com



அழுதார். அவரைப் பார்க்கப் பார்க்க அவளுக்குப் பெரிய பரிதாபமாக இருந்தது. சிறிது நேரம் அவளும் சேர்ந்து ஒப்புக்கு அழுதாள்.

இனி அழுதென்ன பயனென்று நினைத்தாரோ என்னவோ மெல்ல மெல்ல கண்களைத் துடைத்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டார்.

"பிரியாமணி.. "

" என்ன ? "

"நாங்க ரெண்டுபேரும் சண்டைபோட்டு விவாகரத்து செய்யிறதைவிட பெரிய பிரச்சனை வீட்டின்ரை கோப்பிசத்திலை வந்திருக்கு.."

"கோப்பிசத்திலையோ... "

" கொஞ்ச நஞ்சமில்லையடி முழுக்கூரையும் அபேஸ்.. எல்லாம் உழுத்துக் கொட்டி பூச்சியும் புழுவுமாய்க் கிடக்கு... வா காட்டுறன்."

அவளைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்குள் தயங்கித் தயங்கிப் போனார். அவளும் பின்னால் போனாள். ஏணியை வைத்து அவளை மேலே ஏற்றினார். கூரைப்பக்கமாகப் போகும் மேல் பரணின் கதவு போல இருந்த மரத்தட்டைக்கழற்றிவிட்டு அதன் வழியே தலையை நீட்டிப் பார்க்கச் சொன்னார்.

பார்த்தாள்...

சொத்தைப்பற்கள் போல கோப்பிசம் முழுவதுமே புழுக்கள் அரித்துச் சாப்பிட்டு இன்றோ நாளையோ என்று கிடந்தன.

மேலிருந்து கொட்டுப்பட்ட புழுக்கள் கொத்துக் கொத்தாகக் கட்டிப் புரண்டு சுதந்திரமாக முறுகிக் கொண்டிருந்தன. ஊரில் உள்ள முள்முருக்கு மரத்தில் மயிர்க்கொட்டிகள் நிறைந்து நெளி-வதைப் போல கோடிகோடியாகப் புழுக்கள். நத்தைகள் கொறவணன் புழுக்கள்..

www.padippakam.com



நட்டுவக்காலிப் புழுக்கள்.. கோதுகள் .. இன்னும் என்னென்னவோ...

பார்க்கப் பார்க்க பிரியாமணிக்கு வயிற்றைப் புரட்டிக் கொண்டு வந்தது. என்ன செய்வது ஏது செய்வதென்று அவளுக்கு எதுவுமே தெரியவில்லை. மின்சாரம் தாக்கியது போல சிலையாக நின்றாள்.

"பிரியாமணி இறங்கு கீழே..." சிவபாலி அவளை மெல்லக் கீழே இறக்கினார். அதற்குமேல் அவளிடம் பேசுவதற்கு வார்த்தைகள் எதுவுமே இருக்கவில்லை.

"பிரியாமணி"

" ம்.. "

"வாழ்க்கையே ஒரு கல்வி.." அவள் பதிலின்றி அவர் முகத்தையே பார்த்தாள்.

"நாட்டிலை இருக்கிற காலத்தில காசே பெரிசெண்டு நினைச்சு ஒழுங்காகப் படிக்காமல் விட்டிட்டம்.."

"படிச்சாப்போல இதெல்லாம் தெரியுமே.."

"தெரியாதுதான் ஆனால் நாங்களொரு பொதுவான சமுதாய அறிவை வளர்த்திருக்க வேணும்... அதுதான் பிரதான கல்வி." பிரியாமணி பேசாமலே இருக்க அவர் தொடர்ந்தார்.

"தனிமனித அறிவு வேறை சமுதாய அறிவு வேறை.. அறிவுள்ள சமுதாய வாழ்க்கை ஒன்றை நாங்கள் சரியாகக் கட்டியமைக்கவில்லை என்றுதான் இப்ப நான் நினைக்கிறன்.."

சிவபாலி அமைதியான குரலில் தத்துவம் பேச அவருக்கு மேலும் பைத்தியம் முற்றிவிட்டதோ என்ற பயமே அவளுள் மேலோங்கியது.

"ஐரோப்பிய சமுதாய வாழ்க்கை நிலை வேறை, எங்கடை சமுதாய வாழ்க்கை நிலை வேறை.. அதுக்கு இந்தப்

படிப்பகம்

www.padippakam.com



புழுக் கொட்டின வீட்டை நாங்கள் வேண்டி ஏமார்ந்ததுதான் பெரிய உதாரணம்"

அவர் சொல்வது பிரியாமணிக்கு ஓரளவு புரியத்தொடங்கியது. வாழ்க்கையைப் படித்தறியாவிட்டாலும் பட்டறிந்த பின்னர் அவர் பேசுகிறார் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. சிறிது மனம்மாறி அவருடன் சேர்ந்து கொண்டாள்.

"பழுதுபட்ட வீட்டை மட்டும் வாங்கேல்லை.. இவ்வளவு காலமும் ஓய்வில்லாமல் உழைச்சு வருத்தக்காறரா வேறை போயிட்டம்.."

" சண்டையின் ஆக்கிரம்பாலை மட்டும் அழியேல்லை.. இதுவும் அழிவுதான்... வெளிநாட்டு வாழ்க்கையெண்டால் சொர்க்கமெண்டு எல்லாரும் நினைக்கினம். அதை வாழ்ந்து பார்த்தால்தான் தெரியும்."

"ஊரிலை படிக்காமல் இருந்து... சீதனங் குடுத்து.. ஒரு மாப்பிளையை எடுத்து.. பிள்ளையைப் பெத்து, சமைச்சுக் கொடுத்து.. வாழ்ந்தாலே சரியெண்டிருந்த என்னை வெளிநாடனுப்பி நல்ல நல்ல அனுபவப் புத்தகங்களை எல்லாம் படிக்க வைச்சிருக்கு கடவுள்.. "என்றாள் பிரியாமணி.

"சரி இப்ப என்ன செய்யம்.. "

"இந்த வீட்டை வாங்கினதாலை நாங்கள் பெரிய அதிர்ஸ்டக்காரர் என்று புழுகின டேனிஸ்காரனைப் பிடிக்க வேணும். அவனைத்தான் கூட்டிவந்து இந்த கூரையைக் காட்ட வேணும். " என்றாள்.

"பழைய இன்சூரன்ஸ் முடிஞ்சுது.. புதிசா இன்சூரன்ஸ் செய்யவில்லை.. அவன் என்ன சொல்லுறானோ தெரியேல்லை.." சிவ-பாலி முதலில் சிறிது தயங்கினார்.

அதைக்கேட்க பிரியாமணிக்கு அடிவயிறு " பகீர்..." என்றது..

www.padippakam.com



“இந்த வீட்டை வித்த கிழவன் அண்டைக்கே என்னமோ சொல்லிப் பீடிகை போட்டவன்.. அவன் என்ன சொன்னவனெண்டு இப்ப விளங்குது...” சிவபாலி வில்லுக்கத்தியை எடுத்து மடியில் செருகினார்.

“வேண்டாம் வீடு வித்த கொம்பனிக்காறனை கத்தியால குத்துறதால இந்தப் பிரச்சனை தீராது.. வேண்டுற எங்களுக்கு உருப்படியான மூளை இல்லாமல் இருக்கேக்க, மற்றவனைக் குத்தி என்ன இருக்கு..” சிவபாலி ஆச்சரியத்துடன் அவளையே பார்த்தார்.

“தேவாரச்செல்வியக்கா ஏவிவிட முன் பின் யோசிக்காமல் வீட்டை வாங்கினது நான்.., அப்பிடிக் குத்துறதெண்டால் நீங்கள் முதலி-லை என்னைத்தான் குத்த வேணும்.. குத்துங்கோ செத்துப்போறன்..”

சிவபாலி கத்தியை வீசி எறிந்தார்.

மற்றவனைக் குத்த முந்தி உன்னையே ஒரு தடவை குத்திப்பார் என்று அவள் சொல்வது அவருடைய முதுகில் திருக்கைவால் அடிபோல விழுந்தது. சொந்தப் புத்தியைப் பாவித்திருந்தால் கறுவலுக்கே அடித்திருக்க வேண்டியதில்லை என்பதையும் வேதனை-யோடு புரிந்து கொண்டார். அவளையும் கூட்டிக்கொண்டு வீடு விற்ற கம்பனியை நோக்கி வேகமாகப் புறப்பட்டார்.

என்னதான் அமைதித் தத்துவம் பேசினாலும் அவருடைய உள்ளம் படபடவென அடித்தது. அவனைப் பார்த்து நாக்கைப் பிடுங்கிச் சாகிறதுபோல நாலு வார்தையாவது கேட்டுவிட வேண்டும் என்று துடிதுடித்தார்.

துடிப்பு இரத்த ஓட்டத்தை ஜிவ்வென்று ஏற்றியது.. காரை ஓர் உன்னல் கொடுத்து மடாரெனத் திருப்பினார்.

ஐம்பது கி.மீ. வேகத்தில் ஓடவேண்டிய சாலையில் அவர் கார் 100 கி.மீ. வேகத்தில் எகிறிப்பாய்ந்தது.

www.padippakam.com



## 37

சிவபாலி டென்மார்க்கில் உள்ள வீட்டின் கூரைய-ில் புழுப்பிடித்து ஓடிக் கொண்டிருக்க.. அதுபோல இலங்கையில் ஐயாமுத்தரின் ஓட்டமும் தொடர்ந்து கொண்டிருந்தது. வாசகசாலை-லயில் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது என்று ஏதும் தெரியாதவராக ஓடிக்கொண்டிருந்தார்.

குளவிக் கூட்டில் கல்லெறிந்தது போல சனம் கொய்யென்று ஆகாயத்தில் பறக்காத குறையாகப் பறந்தோடியது. சனத்தோடு சன-மாக எங்கெல்லாமோ அவரும் கிறுகி ஓடினார்.

துப்பாக்கிச் சூட்டில் தப்பியோடியவர்கள் எல்லாம் பலத்த அனுபவசாலிகள் குறுக்கு வழிகளாலும், வேலிகள் பாய்ந்தும் அவரவர் வீடுகளுக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். ஐயாமுத்தர் மட்டும் நெடுநேர-மாக வராமலிருக்கவே செத்தவீடு கொண்டாட வேண்டிய மனோநிலை-லயில் இருந்தாள் தேவாரச்செல்வி. சுள்ளிபொறுக்கிக் கிழவி மறந்து போன ஒப்பாரிகளை நினைவுபடுத்திக் கொண்டாள்.

அந்த நேரம் பார்த்து ஒடுங்காவில் இருந்த வேலியில் வீட்டு நாய் போட்டுவைத்த ஓட்டையை மேலும் அகலமாக்கியபடியே வேலி பிரித்து நுழைந்தார் ஐயாமுத்தர். அவரை ஓடிச்சென்று பொட்டுக்குள்ளால் உருவி இழுத்தெடுத்தாள் தேவாரச்செல்வி.

“என்னப்பா என்ன நடந்தது ?”

“ஆருக்குத் தெரியும்... கள்ளோடை போனாங்கள் திடீரெண்டு

வந்தாங்கள் சுட்டாங்கள்.. ”

“ ஆருக்கும் காயம் கீயம்... ”

“ஆர் செத்தா ஆருக்கென்ன ? தப்பினவன் வாயில சோறு! செத்தவன் வாயில மண்! மற்றப்படி என்னத்தைச் சொல்ல.. ”ஐயாமுத்தர் படபடத்தார்.

www.padippakam.com



"ஐயோ காத்திலிங்க சாமியே இந்தக் கோதாரியள் நடக்குமெண்டுதானே சேகரம் வயித்துக் குத்தெண்டு படுக்கிறவன். வெளிநாட்டிலை இருந்து வந்தனீங்கள் வந்த வேலையைப் பாக்காமல் உந்தக் கோதாரியளுக்குள்ள ஏன் போனனீங்கள்.." என்று சுள்ளி பொறுக்கிக் 'கிழவி திட்டினாள்.

"இவர் போற வாற இடமெல்லாம் துவக்குச் சூடுகளாக் கிடக்குது. ஏதோ முற்பிறவியில பாவம் செய்திருக்கிறார். கடவுள் குற்றம் ஏதோ கிடக்கெண்டு நினைக்கிறன்" தேவாரச்செல்வி குண்டொன்றைத் தூக்கிப் போட்டாள்.

அவ்வளவுதான் கிழவியின் முகம் மலர்ந்தது. ஐயாமுத்துவையே காவடிக் கோலத்தில் கற்பனை பண்ணிப் பார்த்தாள். அவருடைய முகத் தோற்றம், பாண்டிக் குண்டுபோல குழி விழுந்த கிடங்கிற்குள் உருளும் விழிகள், பிளவுபட்ட வாய் எல்லாவற்றையும் பார்க்கும்போது கரகம், காவடி, துலாக்காவடி போன்றவற்றில் ஏற்றி சாட்டையடி போட சோக்கான ஆளாகவே தெரிந்தது. கிழவிக்கு தேவாரச்செல்வி ஒழுங்காக பணம் அனுப்பாமல் இருப்பதற்கு ஐயாமுத்துவே காரணம் என்று முன்னரே மனதில் ஒரு வித கோபமிருந்தது. அக்கணமே ஐயாமுத்துவுக்கு சாட்டையடி போட மனதில் தீராத ஆசை கொண்டாள். அவர் சாட்டையடி வேண்டி துடிதுடிக்கும் குதூகலக் காட்சி அவள் கண்களில் கரை புரண்டோடியது.

"வெளிக்கிட முந்தி காவடி அல்லது கரகம் எடுத்துத்தான் போகவேணும்.." கிழவி சுளகில் கிடந்த சோத்தரிசியில் அடித்து சத்தியம் செய்து முடித்தாள். வரும் வெள்ளி ஐயாமுத்து அலகு நாடகம், செடில் குத்தி கரகம் எடுக்க, தேவாரச்செல்வி கற்பூரச்சட்டி எடுப்பதாகவும் முடிவானது.

ஐயாமுத்தருக்கு செடில்குத்துவதை நினைக்க நடுக்கமாக இருந்தது. மறுபுறம் துப்பாக்கிச் சூடு நடாத்தியவர்கள் வீடு தேடி வந்துவிடுவார்களோ என்றும் குலைநடுக்கமாக இருந்தது. கடவுளை விட்டால் இனி வேறு யாருமே தனக்கு உதவ முடியாது என்பதால்

படிப்பகம்

கரகமெடுக்க முடிவு செய்தார்.

என்றாலும் அதற்கு மேலும் நாலு தினங்கள் இருந்தன. அதற்குள் ஒரே இடத்தில் படுக்காமல் வீடுகள் மாறி மாறிப்படுத்து, கரகாட்டம் முடிந்த கையோடு நாட்டை விட்டே ஓடிவிட எண்ணினார். அன்றிரவு பாதுகாப்பிற்காக தலைவாசலுக்கு மேல் ஏறிப்படுத்திருந்து மறுநாள் யாழ்ப்பாணம் புறப்பட்டார்.

யாழ்ப்பாணம் புறப்பட்டபோது மனதில் மெல்லிய புத்துணர்வு தென்பட்டது. பனியில் படுத்துக் கிடந்ததால் உண்டான தேக வலி குறைவது போலிருந்தது. 1984ம் ஆண்டு ஆமி யாழ்ப்பாணம் முழுவதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு போக தலைதெறிக்க ஓடிய பின் இப்போதுதான் மறுபடியும் யாழ்ப்பாணம் போகிறார்.

அமைதி வந்ததாகச் சொன்னாலும் போகுமிடமெல்லாம் சோதனைச் சாவடிகளாகவே இருந்தன. அதற்குள் சேகரத்தின் வான் ஒரு தடவை டயர் வெடித்து, பின் ஒருவாறு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு முன்னாள் உள்ள தரிப்பிடத்தில் நின்றது.

இறங்கியதும் பெரியாஸ்பத்திரியை ஒரு நோட்டம் விட்டார். அங்கு நின்ற சன நெரிசலும், வீசிய டெற்றோல் நெடிலும் அவரை சில ஆண்டுகள் பின்னோக்கி இழுத்தன. டென்மார்க்கில் இருந்து வந்த சீவரத்தினம் ஒரு வாரம் அந்தப் பெரியாஸ்பத்திரியில் கிடந்து பட்ட அவலங்களை அவரிடம் விவரித்திருந்தார். தர்ம ஆஸ்பத்திரி மருந்தே வெளியில் உள்ள மருந்தகங்களுக்கு இரகசியமாகக் கொடுக்கப்படுவதும், பின் பணம் கொடுத்து அதையே வாங்கிவரும்படி நோயாளிகளிடம் றிசீட் கொடுப்பதாகவும் சீவரத்தினம் சொன்னது உண்மையா என்று அறிய ஆசைப்பட்டார்.

அங்குள்ள நிலைமைகளை அவரால் உடனடியாக அடையாளம் காண முடியாவிட்டாலும், அந்த வைத்தியசாலையின் தோற்றப்பாடும், நே-ாயாளிகளின் நிலையும் அவருக்கு திருப்தி தரவில்லை. அவருடைய மனதில் இதுவரை காலமும் அதுவே உலகில் சிறந்த ஆஸ்பத்திரி

www.padippakam.com



என்று எண்ணியிருந்த எண்ணம் ஒரே நொடியில் தகர்ந்து விழுந்தது. ஏனோ தெரியவில்லை ஆண்டவனே எங்கை இருந்தாலும் இந்த ஆஸ்ப்பத்திரியிலை மட்டும் இருக்க வைச்சிடாதையப்பா என்று மனதில் வேண்டிக் கொண்டார்.

" என்ன ஆஸ்ப்பத்திரியைப் பாத்துக்கொண்டு என்னமோ யோசிக்கிறியள்... ? "

"இல்லை நான் போனபோது பாத்தமாதிரியே இருக்கு.. உலகம் எவ்வளவோ முன்னேறியிட்டுது... " மெல்ல இழுத்தார் ஐயாமுத்தர்.

" வீட்டை விட்டு வெளியே போனா உயிரோட வீடு திரும்புவமோ எண்டு தெரியாத நாட்டிலை.. ஆஸ்ப்பத்திரியை மட்டும் ஒழுங்கா வைச்சிருக்க ஆருக்கு மனம் வரும் ? இந்த ஆஸ்ப்பத்திரிக்குள்ளேயே எத்தனையோ டாக்குத்தர் மாரும் ஊழியரும் சுடப்பட்டிருக்கினம். இப்படியான சம்பவங்கள் உலகத்தில எங்கையாவது நடந்திருக்கோ." சேகரம் கேட்டான்.

" கேள்விப்படேல்லை.. "

" அதுதான் அதுதான்.. எதையுமே எடுத்தவுடனே குறை சொல்ல ஏலாது.. எல்லா அவலங்களுமே ஒண்டோட ஒண்டாகப் பின்னி நிக்குது.. இடியப்பச் சிக்கல் போல... எங்கே இருந்து ஆரம்பிக்கிறது எண்டுதான் கேள்வி... ,

அதுதானே நீ அடிக்கடி வயித்துக் குத்தெண்டு கிடக்கிறனீ ?"

" விளங்கினால் சரி.. அதைவிட கான்சர் வந்து கொஞ்ச நாளில போவிடுவமெண்டு செய்தி வந்தால் இன்னம் நல்லம், பாதுகாப்பும் கூட.. " வரட்சியாகச் சிரித்தான் சேகரம்.

யாழ். கடைத்தெருவுக்கு இருபது வருடங்களுக்குப் பிறகு வந்திருந்தார் ஐயாமுத்து. நகரத்தில் எந்தவித முன்னேற்றங்களுமே இல்லாமல் கடைகளும் பேமன்ருகளுமாக வெறும் ஒட்டுண்ணி நகரமாக

படிப்பகம்

www.padippakam.com



மாறியிருந்தது. இடிபாடுகளும், ஜன நெரிசலும், கடைகளுமாக காட்சி தந்தது.

ஐயாமுத்தரும் தேவாரச்செல்வியும் நகரத்தை அண்ணார்ந்து பார்க்க அவர்களுக்குத் தெரியாமல் மறுபுறம் ஒரு நீல வானுக்குள் இருந்து அவர்களை வேறு சிலர் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தனர். கறுப்புக் கண்ணாடி போடப்பட்ட அந்த வானுக்குள் இருந்தவர்களை வெளியில் இருந்து யாரும் அடையாளம் காண முடியாது.

ஜனக்கூட்டம் பிதுங்கி வழியும் நகரத்தில் இராணுவம் ஆயுதங்களுடன் நடமாடியது அச்சமூட்டியது. சிறிது கை சறுகிவிட்டால் தோட்டாக்கள் பாயக்கூடிய அபாயம் இருந்தது. எது எப்படியிருந்தாலும் அவை பற்றிய பிரக்ஞை எதுவும் இன்றி ஆண்டவன் அழைக்க ஞானம் வந்து ஓடுவோர் போல கடைகளுக்குள் வெறித்தனமாக ஓடினாள் தேவாரச்செல்வி.

அந்த நேரம்...

நீலவானில் இருந்து ஒருவன் இறங்கினான். தேவாரச்செல்வியைத் தொடர்ந்து மெல்ல நடக்க ஆரம்பித்தான். வெ-ளிர் நிறம், செந்தாடி, கறுப்புக்கண்ணாடி சகதிம் நின்ற அவனுடைய தோற்றம் வெளிநாட்டவன் போலவே இருந்தது.

வண்ண வண்ணமான சேலைகளையும் அவற்றின் மீது மின்னலங்காரங்களைப் பார்த்து அவள் தன்னை மறந்துவிட்டாள். வண்ணத்துப்பூச்சி ரோஜாத் தோட்டத்திற்குள் தடுமாறித் தடுமா-றி பறப்பது போல பறந்தாள். சொற்ப நேரத்தில் அவள் தன்னை மறந்தாள், தான் எத்தகைய சூழலில் நிற்கிறேன் என்பதையும் அடியோடு மறந்தாள். ஒரு இலட்சம் ரூபா அவளுடைய பையில் இருப்பதையும் மறந்து தொலைத்தாள்.

அவளோடு அலைந்து கடைகளுக்குள் புகுந்து, வெளியேறி, ஜன நெரிசலில் சிக்குண்டு ஐயாமுத்துவிற்கு களையே போட்டுவிட்டது. தாகம் வரவே முன்னர் யாழ்ப்பாணத்தின் பிரபலம் மிக்க கோட்டல் ஒன்றிற்குள் நுழைந்தார். துணிமணியை வாங்கி வைக்கும்படியும் தான்

www.padippakam.com



ஓடி வருவதாகவும் தேவாரச் செல்வியிடம் கூறிச் சென்றார்.

அந்தக் கோட்டலுக்குள் நுழைந்தார்.

ஒரு காலத்தில் சுத்தம் சுகாதாரத்திற்கு பெயர் போன அந்தக் கடைக்குள் நுழைந்ததும் பார்வையை அங்குமிங்கும் ஓடவிட்டார். அவருக்கு சந்தேகம் பிறந்தது. தான் வந்திருப்பது சரியான இடம்தானா என்று யோசித்தார்.

முதலில் சிறுநீர் கழித்துவிட்டு, வரலாமென்று கருதி கோட்டலின் பின்புறமாகச் சென்றார். அங்கு போகவே அவரால் முடியவில்லை. சி-றுநீர் கழிக்குமிடம் மலங்கழிக்கப்பட்டு அசிங்கமாகி ஏராளம் ஈக்கள் மொய்த்தபடி இருந்தது. வயிறு குமட்டவே போன வேகத்திலேயே திரும்பி ஓடி வந்தார்.

அதற்குள் சேகரம் ரீக்கும் வடைக்கும் சொல்லிவிட்டான். களிம்பேறிய அலுமினிய கிளாசின் விளிம்பிலும், வடைகளிலும் மலசல கூடத்தில் மொய்த்த அதே ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. அருகில் கிடந்த மேசையில் இருந்த ஒருவன் பீடியைக் கொழுத்தி நாசியில் புகையேற்றிவிட்டு எரிந்த தீக்குச்சியை சுழற்றி வீசினான்.

ஐயாமுத்து அருகில் இருந்த சர்வரைப் பார்த்தார். அவன் எச்சில் சாம்பாரால் தோய்ந்த கருமை படர்ந்த துணியால் மேசையை சவட்டிச் சவட்டித் துடைத்துக் கொண்டிருந்தான். அவருக்கு முன்னால் கை துடைப்பதற்கு செய்தித்தாள் துண்டு துண்டாக வெட்டி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார், சினம் சிரசில் ஏறியது.

" சேகரம் ! இப்பிடிச் செய்தித்தாளை கை துடைக்க வெட்டி வைப்பது சுகாதார ரீதியாக பார்த்தால் ஒரு குற்றச் செயல் தெரியுமோ ? "

"தெரியாது "

நியூஸ் பேப்பரிலை அச்சடித்திருக்கிற மை நச்சுத்தன்மை உடையது. இதாலை உணவைக் கட்டுறதோ, கை துடைக்கிறோ

படிப்பகம்

www.padippakam.com



மேலை நாடுகளிலை செய்யக் கூடாத செயல், பெரிய குற்றம், சேகரம் சிரித்தான்.

" இது இந்த நாடு முழுவதும் உள்ள பழக்கம். இதையெல்லாம் திருத்திறது லேசான காரியமில்லை.. "

அந்த நேரம் அவர்களைப் பின் தொடர்ந்த நீலவான் அந்தக் அழுக்கடைந்த கோட்டலுக்கு முன் புற வழியால் சப்பறம் போல அசைந்து போனது. அது ஏன் போகிறது என்பதை ஐயாமுத்து அவதானிக்கவில்லை. அதற்குள் இருந்த கறுத்தக்கண்ணாடிக் காரன் மட்டும் ஐயாமுத்துவைப் பார்த்து ஏதோ சொல்லிக் கொண்டு போ-னான்.

அந்த நேரம் எங்கோ ஒரு பிலாக்கண ஓசை...

" ஐயோ அத்தான்... " அலறல், எங்கோ கேட்ட குரல்.. சந்தேகமே இல்லை.. தேவாரச்செல்வியின் குரல்தான். பதகளித்து சுழன்று கீழே கிடந்த சாணகத்தில் சுரீரெனச் சறுக்கி ஓடினார் ஐயாமுத்து.

" என்னடியப்பா.. என்ன...? "

"பையில கிடந்த லெச்சரூபாவையும் களவெடுத்துப் போட்டாங்கள்.. நான் என்ன செய்ய..." தேவாரச்செல்வி அழுதாள். ஐயாமுத்தர் அவளுடைய கைப்பையை வேண்டிப் பார்த்தார். கிழே பிளேட் போட்டு பணத்தை உருவியிருந்தார்கள். கையை விட்டுப் பார்த்தார் கை வெளியே வந்தது.

"எடி குறுக்கால போவாளே.. குடல் பிளந்தது போல பையைப் பிளந்திருக்கிறான் நீ எங்கையடி கனவில கிடந்தனியே.. உலக்கைச்சி... உனக்கு முந்தியே வெளிநாடுகளிலை இருந்து வந்த எத்தினையோ உலக்கச்சியள் இப்பிடி காசுகளை பறி குடுத்திட்டாளுகள்.. தெரிஞ்சும் அதே பிழையை நீயும் விட்டுவிட்டியே.. " ஐயாமுத்தர் திட்டினார்.

"திட்டுறதை விட்டுவிட்டு முதலிலை பொலிசுக்கு

www.padippakam.com



புறப்படுங்கோ..” தேவாரச்செல்வி அவருடைய கையைப் பிடித்திழுத்தாள்.

“பொலிஸ் என்னடி பொலிஸ்.. அங்கை போய் கையில இருக்கிற மிச்சம் மீதியையும் குடுக்கப் போறியோ ? இதென்ன வெளி நாடெண்டு நினைச்சனியோ.. ” ஐயாமுத்தர் சிரித்தார்.

“நான் அழுகிறன் உங்களுக்குச் சிரிப்பாக்கிடக்கோ ?”

ஐயாமுத்தர் விழுந்து விழுந்து சிரித்தார். இரவு முழுவதும் பனியில் கிடந்ததால் அவருக்குத் தலை தட்டிவிட்டதோ என்று இப்போது சேகரமே பயந்தான்.

“எடியேய் இந்த ஐயாமுத்தன் பைத்தியம் இல்லையடி...” என்றபடி மடியில் இருந்து ஒரு கட்டு பணத்தை எடுத்தார். அதுதான் தேவாரச்செல்வி மாற்றி வைத்திருந்த இலட்சம் ரூபாய் பணக்கட்டு. தேவாரச்செல்வி அவரை ஆச்சரியத்துடன் பாத்தாள்.

“இப்பிடி நடக்கும்... நீ பணத்தைப் பறி கொடுப்பாய் எண்டு தெரிஞ்சுதான் பணத்தை முந்தியே எடுத்து வைச்சனான்..”

“அப்ப பையில இருந்து களவெடுத்தது.. ”

“அதுதான் சிரிச்சனான்... உனக்கு ஞாபகமிருக்கே ? டென்மார்க்கில விளையாட்டுச் சாமான் கடையில போலி டொலரு-களை விலைக்கு வாங்கினனான் பாத்தனிதானே ? ”

“ஓ.. செல்லாக்காசுகள்”

“அந்த விளையாட்டு நோட்டுகளை இந்தமாதிரி கள்ளருக்காகத்தான் வேண்டி வந்தனான். அதைத்தான் உன்ரை பை-யில உன்கே தெரியாமல் வைச்சுவிட்டனான். களவெடுத்தவங்கள் இனிக் கவரைத் திறந்து பார்த்தால்தான் தெரியும் ஏமார்ந்தது ஆரெண்டு..” ஐயாமுத்து விழுந்து விழுந்து சிரித்தார். இப்போது சே-கரமும் சிரித்தான்.

www.padippakam.com



அவர்கள் சிரித்துக் கொண்டிருக்க... சரேலென்று ஒரு சத்தம்.

அவர்களுக்கு அருகில் அதே நீல நிறமான வான் பிரேக் போட்டு குத்தி நின்றது. அந்தக் கண்ணாடிக்காரன் ஓவென்றபடியே துப்பாக்கியுடன் பாய்ந்து இறங்கினான்...

மீண்டும் துப்பாக்கியா ? ஐஐஐஐஐஐஐஐ...ஓஓஓஓஓஓஓஓ !!!!

## 38

வானில் இருந்து ஊளையிட்டபடி கீழே இறங்கியவன் தேவாரச்செல்வியைப் பார்த்து ஏதோ புரியாத மொழியில் திட்டினான். கையில் இருந்த போலியான டொலர் கட்டை அவள் முகத்தில் வீசி எறிந்தான்.

ஐயாமுத்தர் அவனையே பயக்கெடுதியுடன் கூர்ந்து பார்த்தார். களவெடுத்தது மட்டுமல்ல திரும்பி வேறு வந்திருக்கிறானே என்பதை நினைத்தார். அப்போது அவரின் தலைக்குள் உலகம் போற போக்கைப்பாரு தங்கமத்தில்லாளே என்பது போல பரம்பரையாக வரும் ஒருவித மாற்ற மருந்து கிடையாத கீலாக்கிறுக்கு ஏற்பட்டது.

“என்னடா பார்க்கிறாய் ? பிற்பொக்கற் அடிக்கிறவனும் வாழத்தான் வேணும். உங்களை மாதிரி ஆக்கள் பணத்தோட வாறதை நம்பித்தான் நாங்கள் பிற்பொக்கற்றுக்காக வெளி நாட்டிலை இருந்து ஆக்களை இறக்கியிருக்கிறம். எங்கடை தொழிலும் இப்ப பெரிய லெவலுக்கு வந்திட்டுது..” பின்னால் நின்ற தமிழன் சொன்னான்.

“போலீஸ் ! போலீஸ் !” ஐயாமுத்தர் கீலாக்கிறுக்கில் பெருங்குரலெடுத்துக் கத்தினார்.

“சும்மா ஜோக்கடிக்காத.. எங்கையும் காதல பூ வைச்சவங்கள் தொடர் நாடகங்களிலை கத்துறதுபோல கத்தாத.. வெடி வைச்சிடுவன் நாய்ப்பயலே, என்றபடி பாய்ந்து அவருடைய தலையில் துப்பாக்கியை வைத்தான் அந்தத் தமிழன். ஐயாமுத்தருக்கு கீலாக்கிறுக்கு பறந்து

www.padippakam.com



இப்போது கை கால்கள் உடம்பு முழுவதும் தட்டிவான் உலாஞ்சியது போல ஆட ஆரம்பித்தன. பாழாய்ப்போன சிறுநீர் கொள கொளவென கால்களால் வடிய ஆரம்பித்தது.

"ஐயா அவரை விட்டிடுங்கோ.. நான் வயித்துக்குத்துக்காரன். நீங்கள் விரும்பியதை எடுங்கோ ஆக்களை ஒண்டும் செய்து போடாதையுங்கோ.." சேகரம் மன்றாடினான்.

"கழட்டடி நகையெல்லாத்தையும்..." தமிழ் பேசியவன் ஐந்து விரல்களையும் விரித்து தேவாரச்செல்வியின் தலைமுடியை கோர்த்துச் சுழற்றி இழுத்தான்.

"ஐயோ...." தேவாரச்செல்வி வலியால் அலறினாள்.

தேவாரச்செல்வியின் சங்கிலி, காப்பு, சிமிக்கி, பதக்கம் எல்லாவற்றையும் பக்கத்தில் நின்ற ஏதோ மொழி பேசிய பாகிஸ்தான்காரன் உருவி ஒரு கறுத்தப் பையில் போட்டான்.

"எனடி ஒட்டியாணத்தையும் கட்டி வந்திருக்கலாமே ? " தமிழன் அவளுடைய கோமாளித்தனமான நகைக்கலாச்சாரத்தை கேலி செய்துவிட்டு வானில் ஏறினான். நீல நிற வான் பறந்து போ-னது.

"நல்லவேளை நீல வான் வந்தது.." என்று சேகரம் அச்சத்துடன் பெருமூச்சு விட்டான்.

எல்லாம் முடிந்து தேவாரச்செல்வி தலைவிரி கோலமாக யாழ்ப்பாண நகரத்தின் மத்தியில் நிற்க சனம் வேடிக்கை பார்க்கக் கூடியது.

"என்னண்ணை நடந்தது... " ஒருவர் வந்து மெல்ல கதைவிட்டார்.

"என்ன உலகமம்பா கொடியை அறுத்தவங்கள் தாலியைத்தன்னும் விட்டிருக்கலாம் " இது இன்னொருத்தியின் கவலை.

www.padippakam.com



முப்பது வருடங்களுக்கு முன்னர் சுள்ளிபொறுக்கிக் கிழவி புதுச்சங்கிலி போட்டுக் கொண்டு யாழ்ப்பாணம் வந்ததும். அவளைக் குறிபார்த்து ஒருவன் வந்து இடித்ததும், அதனால் வாய்த்தகறாறு ஏற்பட்டு அவன் சங்கிலியைக் கழற்றி சத்தியம் செய்யச் சொல்ல கிழவி சங்கிலியைக் கழற்றி அவன் கையில் கொடுத்து சத்தியம் செய்ததும் பின் அவன் சங்கிலியுடன் ஓடியதும், அதன் பின் கிழவி தலைவிரி கோலமாக பஸ்டான்டில் ஒப்பாரி வைத்ததும் பின் யாழ்ப்பாணம் ரவுணுக்கே போகாமல் வாழ்ந்து வருவதும் தேவாரச்செல்வியின் நினைவில் வந்தது. எல்லாவற்றையும் திரும்பித் திரும்பிப் பார்த்த ஐயாமுத்தருக்கு கோபம் நாசியில் ஏறியது.

“தாலி போனால் என்ன ? தாலியை வைச்சென்ன உன்ரை காடாத்து வீட்டுக்கு சுத்தப்போறியோ... தேவடியாள் போடி அங்காலை..” ஐயாமுத்தர் யாரென்று தெரியாத அந்த நடுத்தர வயதுக்காரிக்கு ஓடிப்போய் உதைக்கக் காலை ஓங்கினார்.

“அந்தாள் நகையைக் குடுத்த ஆத்திரத்தில நிக்குது... நீ நடவடி.. தாலிக்கொடி ஆபத்தான சாமான் எண்டுறது கன பெண்டுகளுக்கு விளங்குறதில்லை... முட்டாள் கழுதையள்...” என்று தேவாரச்செல்வியை திட்டியபடியே உதைவாங்க இருந்த பெண்ணை ஒருவன் இழுத்துப் போனான். அவன் அவளுடைய கணவனாக இருக்கலாம்.

“எணேய் நகை போனால் போகட்டும், நீங்கள் ஏன் கவலைப்படுறியள்...” குலைந்த குடுமியைக் கட்டியபடியே தேவாரச்செல்வி தன் கணவனை அடக்கினாள்.

“கோவம் வராமல் வேறை என்ன வரும் ? இவ்வளவு சனம் நடமாடுதுகள்.. ரெண்டுபேர் பட்டப்பகலிலை வழிப்பறி கொள்ளைக்கு வந்திருக்கிறாங்கள். சனம் ஒண்டுந்தெரியாத வேறை லோகத்து மனிதர் போல போகுதுகள். அதுதான் எனக்குக் கெட்ட கோவம் வந்தது.” தேவாரச்செல்வியின் ஆதரவுக் கரத்தை தட்டிவிட்டு சேகரத்தைப்

www.padippakam.com



பார்த்தபடி சொன்னார் ஐயாமுத்தர்.

" அவங்கள் ஆயுதங்களோடை வந்தால் சனம் பயப்படும்தானே !" என்று கூறினான் சேகரம்.

"ஐயா செத்தவன் வாயில மண் இருந்தவன் வாயில சோறு இதுதான் உண்மை. எனக்கொண்டு வந்தால் நாளைக்கு பேப்பரிலை வரும், பிறகு இன்னொருதனுந்தை பேர் நாளையிண்டைக்கு வரும். செத்தவனின்ரை பேருகளை போடத்தானே இஞ்சை பேப்பருகள் இருக்கு.. சுட்டவனுந்தை பேர் எண்டைக்காவது வந்திருக்கோ சொல்லு பாப்பம் ? உலக நாடுகள் வரும் அதுவருது இந்தா இது வருதெண்டு மசிர் கதை கதைக்கிறியள்... அவையளும் இஞ்சை அணிலேறவிட்ட நாயள் போலதானே திரியினம்... சனம் மட்டும் என்ன செய்யிறது ? " யாரோ ஒரு தாடி வைத்த மனிதன் கத்தினான்.

"அது சரியப்பா உங்களாலை காப்பாற்ற வர ஏலேல்லை எண்டால் விடுங்கோவன். பிறகேன் எல்லாம் முடிஞ்சாப்போல வாற பொலிஸ்காறன் போல வாறியள் ? அதுதான் எனக்கு கோபம் வந்தது" என்றார் ஐயாமுத்தர். இப்போது அவருடைய கோபம் சிறிது இறங்கியிருந்தது.

"ஏய் கடைக்கு முன்னாலை கூட்டம் போடாதையுங்கோ யாவாரம் கெடுது..." கோட்டல் சர்வர் வந்து விரட்டினான்.

"எடேய் உலக்கையா நீ எங்களை விரட்ட முந்தி உன்ரை சாப்பாட்டுக்கடையில இருக்கிற இலையானுகளை விரட்டு.. " ஐயாமுத்தர் தன்னை மறந்து கத்தினார்.

"சரி சரி நடவுங்கோ ! " அவருக்கு மறுபடியும் கீலாக்கிறுக்கு வந்திருப்பதை உணர்ந்து இருவரையும் வேகமாகக் கூட்டிக்கொண்டு நடந்தன் சேகரம்.

எல்லோரும் வானுக்குள் ஏறினார்கள்.

"எங்கே வீட்டை போவமோ இல்லாட்டி... ? " சேகரம்

படிப்பகம்

www.padippakam.com



இழுத்தபடியே கேட்டான்.

“இண்டைக்கு வந்த முழிவியளம் சரியில்லை... வீட்டை போவம்.. நாளைக்கு வருவம்...” என்றார் ஐயாமுத்தர். வான் மெல்ல நகர்ந்தது.

“நாளைக்கு பிச்சைக்காரன் வேசத்தோட வந்து சாமான் வேண்ட வேணும் ” என்று சிரித்தபடியே சொன்னார் ஐயாமுத்தர்.

ஐயாமுத்தரோ தேவாரச்செல்வியோ நகை பறி போனதுபற்றி யாதொரு கவலையும் இல்லாமல் சிரித்துக் கதைப்பது சேகரத்திற்கு ஆச்சரியமாக இருந்தது. பறந்த மாவுக்கு பட்டினி கிடக்கும் ஐயாமுத்து நகை போன பின்பும் சிரிப்பது அவனுக்கு குழப்பம் தருவதாக இருந்தது. ஐயாமுத்துவின் தகப்பன் பட்டினி சிவசம்பு ஆட்டுக்குட்டி செத்த நட்டத்தை ஈடுகட்ட ஆறு நாட்கள் அன்னந்தண்ணி இல்லாமல் பட்டினி கிடந்து செத்துப்போன கதையை அவனும் முன்னரே அறிந்திருந்தான்.

“அது சரி பறிபோன நகையின்ரை பெறுமதி எத்தினை லெச்சம் வரும்...” தயக்கத்துடன் கேட்டான்.

“ ஆயிரம் ரூவா.. ” தேவாரச்செல்வி அமைதியாகச் சொன்னாள்.

“ என்ன ஆயிரம் ரூபாவோ ? ” சேகரம் முகத்தைச் சுழித்தான். ஐயாமுத்தர் மறுபடியும் விழுந்து விழுந்து சிரித்தார். சிரிப்பதும், பின் அழுவதும் கடைசியில் மூத்திரம் வடிப்பதுமாக அவரோடு அவன் படும்பாடு போதும்போது மென்றாகிவிட்டது.

“அவங்கள் திரத்திக்கொண்டு என்னமொருக்கா வரப்போறாங்கள்... அதுக்குள்ள வீட்டை போயிடு..” ஐயாமுத்தர் சிரித்தார். அதற்குள் நனைந்து கிடந்த காற்சட்டையை யாழ்ப்பாண

www.padippakam.com



வெயில் காயவைத்துவிட்டது.

"ஏன் வரப்போறாங்கள் ? " சேகரம் மீண்டும் ஆச்சரியமாகக் கேட்டான்.

"தேவாரச்செல்வி போட்டிருந்ததெல்லாம் ரோல்கோட்டு நகை. உவங்களை மாதிரி ஆக்களுக்கு சீதனங் குடுக்க வாங்கின டாஞ்சுச் செற்று நகையள்" ஐயாமுத்தர் சிரித்தார்.

அதைக் கேட்க சேகரம் அதிர்ச்சியடைந்தான்.

"வான் நம்பரைப் பாத்திருப்பாங்கள் தேடி வரப்போறாங்கள்.." சிறிது பரபரத்தான்.

"அவையள் கொள்ளையடிக்க வசதியா நாங்கள் தங்க நகையள் போட வேணுமெண்டதென்ன சட்டமே..." தேவாரச்செல்வி திருப்பிக் கேட்டாள்.

"நீ பயப்பிடாதை அவங்கள் கொள்ளையடிச்ச நகையளை உருக்கிப் பாக்க ஒரு மாதமாகியிடும்.. அதுக்குள்ள நான் கம்பி நீட்டியிடுவன்.." ஐயாமுத்தர் சிரித்தார்.

"நீங்கள் தப்பியிடுவியள் இஞ்சை இருக்கிற என்ரை கதி..." சேகரம் கேட்டான்.

"நீ கதைக்கிறதைப் பாத்தால் ஏதோ நாங்கள் அவங்கள் வருவாங்கள் எண்டு தெரிஞ்சு நகை போட்டுப் போனது போல கிடக்கு , தேவாரச்செல்வி கோபமாகக் கேட்டாள்.

, நீ பயப்பிடுறதைப் பார்த்தா இந்தப் பிறவியிலை குற்றம் செய்யாட்டியும் போன பிறவியிலை செய்த குற்றத்திற்கும் தண்டனை கிடைக்கும் எண்டுறதைப் போலயெல்லோ கிடக்கு" ஐயாமுத்தர் கேட்டார்.

www.padippakam.com


சேகரம் மௌனமாகவே இருந்தான்.

இவர்களோடு யாழ்ப்பாணம் வந்து சீரழிந்த நேரம் வழமைபே-ால வயித்துக் குத்தெண்டு படுத்திருக்கலாமென நினைத்தபடி சேகரம் வாகனத்தை வேகமாக ஓடினான். இனியென்ன கூத்தாட்டமோ என்ற திகிலே அவன் மனதில் நிறைந்திருந்தது.

## 39

நாடு சென்ற ஐயாமுத்தர் காவடி எடுக்கத் தயாராகிக் கொண்டிருக்க டென்மார்க்கில் சிவபாலி, பிரியாமணி இருவருடைய காவடியாட்டங்கள் மெல்ல மெல்ல சுருதி குறைந்து சென்று கொண்டிருந்தன. வீட்டை விற்றவனைத் தேடிப் பிடித்துவிடலாமென்று ஓடி வந்தவர்களுக்கு வீடு விற்கும் நிறுவனக் காரியாலயத்தில் ஏமாற்றம்தான் காத்திருந்தது.

வீட்டை விற்றபோது தங்க அரண்மனையென்று புழுகித்தள்ளிய அந்த டேனிஸ்காரன் இப்போது வேலையில் இல்லையென்றும் மனைவியோடு வேறு நாட்டில் போய் குடியேறிவிட்டதாகவும் அறிந்து கொண்டார். வீடு விற்பனை செய்பவர்கள் அது பழுதடையும் போது வரும் பிரச்சனைகளில் இருந்து தப்புவதானால் வேக வேகமாக வீடுகளை விற்றுவிட்டு நாட்டை விட்டு ஓடிவிடுவது அவசியம் என்பதையும் கண்டு கொண்டார்.

அந்தக் காரியாலயத்திலிருக்கும் ஊழியர்கள் எவருமே சிவபாலியையோ பிரியாமணியையோ ஆவலாக வரவேற்கவில்லை. ஏதோ சொற்ப நேரத்தில் உலக வர்த்தக மையக் கட்டிடம் இடியப்போவது போலவும், இவர்கள் அதற்கு முன்னர் உயிர் பிழைத்து ஓடிவிட வேண்டும் என்பது போலவும் குறுக்கும் மறுக்குமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். சிலர் கடைக்கண்ணால் சிவபாலியைப் பார்த்துக் கொண்டனர். சிவபாலி எதற்கு வந்திருப்பார் என்ற இரகசியம் அவர்களுக்கு தெரியும்.

நீண்ட நேரத்தின் பின்னர் சிவபாலியையும், பிரியாமணியையும் பார்த்த ஒருத்தி அருகில் வந்தாள். அவர்கள் இருவரிடமும் விசயத்தை விசாரித்துவிட்டு, யாரோ ஒருவனின் மேசைக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தினாள்.

www.padippakam.com



இருவரையும் ஏற இறங்கப்பார்த்த அவன் உட்காரும்படி கூறினான். பின்னர் உதடுகளை பனாட்டுப்போல மடித்து வாயைக் கடித்தான். வீடு வாங்கல் விற்றலில் உள்ள அத்தனை சூது வாதுகளையும் அறிந்த அவன் தொண்டையைக் கரைத்து தன்னுடைய புளித்த கீரைக் கதையை ஆரம்பித்தான்.

“என்ன விசயம் ? ”

இருவரும் தங்களால் முடிந்தளவு விலாவரியாக நடந்தவைகளை எல்லாம் அவனிடம் சொன்னார்கள். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, முன்னர் அவர்களுடைய வீட்டை விற்ற படிவங்களை எடுத்து வந்தான். அதைப் பார்த்ததும் சிவபாலியின் மனதில் ஏதோ ஒரு நின்மதி, அப்பாடா ஒரு பெரிய தொல்லை தீரப்போகிறது என்ன நினைப்பு மலர்ந்தது.

படிவங்களைச் சடசடவென உதறிய அவன் இந்தக் கையெழுத்து உங்களுடையதுதானே என்றான். காற்றில் ஆடிய இலந்தை முள்ளு அங்குமிங்கும் சீறி வைத்ததுபோல ஒப்பம். சந்தேகமே இல்லை அது தன்னுடையதுதான் என்று அறிந்து கொண்டார் சிவபாலி.

“நீங்கள் இந்தப் படிவத்தை வடிவாகப் படித்துப் பார்க்கவில்லையா ?” அவன் கேட்டான்.

“ இல்லை ”

“அப்படியானால் ஏன் கையெழுத்துப் போட்டீர்கள் ? ” மீண்டும் கேள்வியை வீசினான்.

இதுவரை சிவபாலியின் மனதில் ஓடிய நம்பிக்கை வரைபடம் இப்போது மெல்ல கீழே இறங்கியது. அவன் எங்கே போகிறான் என்பதை அவரால் உணர முடிந்தது. ஊரில் அவருடைய தகப்பன் முரட்டுக்காளை முருகுப்பிள்ளை பத்திரத்தைப் படிக்காமல் கையெழுத்து வைத்ததும் மூன்று லட்சம் பெறுமதியான வீட்டை மூவாயிரத்திற்கு ஈடு வைத்து தெருவில் நின்றதும் அவருக்கு

www.padippakam.com



நினைவிற்குள் வந்தது.

"உங்களுடைய வீட்டுக்கு நாங்கள் கியரன்ரி தர வேண்டிய காலம் முடிஞ்சுது " அவன் சொண்டை இழுத்தபடி சுதியை இறக்கினான். காலம் முடியாவிட்டால் சிவபாலிக்காக புதிய மாளிகையை கட்டிக் கொடுத்துவிடுவது போல இருந்தது அவனுடைய அடிக்குரல்.

"ஆறு வருடங்களுக்கு கியரன்ரி என்று எழுதியிருக்கே ? " சிவபாலி கேட்டார்.

"இருக்கு ... அது சுவருக்கு.. கூரைக்கல்ல" ஒரு பூதக்கண்ணாடியை எடுத்துவந்து பத்திரத்தில் கண்ணுக்குத் தெரியாமல் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களின் மேல் பிடித்தான். அப்போது அந்த எழுத்துக்கள் பெரிதாகத் தெரிந்தன. ஆறு வருடக் கரன்ரி என்பது நான்கு புறச்சுவர்களுக்கும் மட்டுமே என்பது இப்போது தெளிவாகத் தெரிந்தது.

அந்த நிறுவனத்தில் தொங்கும் ஒரு விளம்பரப் பலகையில் வாங்கும் வீடுகளுக்கு ஆறு வருடங்கள் கியரன்ரி கொடுப்பது நாங்களே என்று பனங்கொட்டை எழுத்தில் போடப்பட்டிருப்பது தெரிந்தது.

சிவபாலிக்கும் பிரியாமணிக்கும் இப்போது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இந்த நேரங்களில எவ்வாறான உணர்ச்சியைக் காட்ட வேண்டும் என்பது இருவருக்குமே புதிதாக இருந்தது.

மேற்கொண்டு எதுவும் பேசாமல "இனி நாங்கள் என்ன செய்யலாம் ? " என்று கேட்டார்.

இது சரியான கேள்வி... நீங்க வீடு போங்க.. எங்கட கொம்பனியின் கூரை வேலை செய்யும் நிறுவன ஊழியர் அங்கு வருவார்கள்... வீட்டில் என்ன தவறென்று பார்ப்பார்கள் " என்றான்.

"ஓகோ... போயிட்டு வாறம்... " இருவரும் புறப்பட்டனர்.

www.padippakam.com



"வீடு வாங்குவதும், விற்பதும் ஒரு கல்வி.. வாழ்க்கைப் பாரம்பரியம். சுமார் பத்து வீடுகளாவது வாங்கி ஏமார்ந்து, பிறகு விற்று ஏமார்ந்த பிறகுதான் சரியான வீடு வாங்கல் கல்வி கிடைக்கும்" சிரித்தபடி கூறினான் அந்த டேனிஸ்காரன்.

"இதை முன்னரே சொல்லியிருக்கலாமே ? "

"வாங்க முன்பு சொல்லும் வசனங்கள் வேறு... வாங்கிய பின்பு பேசும் வசனங்கள் வேறு... இதுதான் வர்த்தகம்.. இப்போது நீங்கள் முதலாவது பரீட்சையில் சித்தி " மீண்டும் சிரித்தான்.

பழைய சிவபாலியாக இருந்தால் இப்போது பிரியாமணியை அந்த இடத்திலேயே போட்டு உழக்கி எடுத்திருப்பார். இப்போது அவர் மாறியிருந்தார். கெட்டு நொந்த உள்ளத்துடன் அமைதியாக வெளி-யே நடந்தார். அவருடைய கார் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

"ஏனப்பா நாங்கள் மட்டுமே வீடு வேண்டினது எத்தினையோ தமிழாக்கள் எல்லாம் வீடுகள் வாங்கியிருக்கினம். அவையளுக்கெல்லாம் ஏற்படாத பிரச்சனை எங்களுக்கு மட்டும் ஏன் ஏற்பட்டது..." பிரியாமணி மலங்க மலங்க விழித்தபடி கேட்டாள்.

"அதெல்லாம் வரேல்லை எண்டு உனக்கு எப்பிடித் தொ-ியும் ? எங்களைப் போல எத்தினைபேர் மாட்டுப்பட்டிருப்பினமோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்... திருடன்ரை கையில தேள் கொட்டினது ஆருக்குத் தெரியும் ? "

பிரியாமணியின் மனத்திரையில் வீடு வாங்கிய கறட்டான் கந்தவனம், பூங்காவனம், வழுக்கல் மடம் நல்லதம்பி, கோலாட்டம் சிவனேசு, கிடரம் பிரட்டி போன்றவர்களுடைய முக வதனங்கள் ஒரு சுற்று வந்து போயின. அவர்களும் திருடன் கையில் தேள் கொட்டியது போல ஏதோ ஒரு வேதனையில் அலைவதாகவே அவளுக்குப் பட்டது.

"வெளிநாடு வந்தும்... பட்ட அனுபவங்களை மற்றவருக்கு சொல்லாமல் விடுறதாலை எல்லாரும் அதே அவலங்களை சந்திக்க வேண்டி வருதே... " மீண்டும் பிரியாமணி கேட்டாள்.

www.padippakam.com



"கஸ்டங்களைச் சொன்னால் போகவிட்டுச் சிரிக்கிறதும்... அந்தக் கதையை ஊர் முழுக்கக் கொண்டோடுறதும்.. மற்றவனுந்தை துயரங்களைக் கேட்டு ஆனந்தப்படுறதும் எங்கடை பேய்க் குணமா இருக்கிறதாலதானே இப்பிடி எல்லாம் ஊமையளா அலையுதுகள்." சிவபாலி சொல்லி முடிக்கவும் அவருடைய கார் வீட்டு வாசலில் நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த நேரம் அவர்களுடைய வீட்டு வாசலில் ஒரு வெள்ளை

வான் நிற்பது தெரிந்தது. அதன் மீது எரிக் லாசன் கூரை திருத்த வேலை என்று எழுதப்பட்டிருந்தது. அந்த வானில் வந்தவனுடன் அவர்களுக்கு வீட்டை விற்ற கிழவனும் நின்று கொண்டிருந்தான். நடப்பவைகளைப் பார்த்தபோது கூரையில் புழு கொட்டுப்படும் என்று முன்னரே காத்திருந்தார்களோ என்று அவர் சந்தேகித்தார்.

காரால் இறங்கிய சிவபாலியை அந்தக் கிழவன் கூர்ந்து பார்த்தான். அவனுடன் அவர் முன்னரும் ஒரு தடவை வீட்டை வாங்கியபோது பேசியிருப்பது ஞாபகத்திற்கு வந்தது. புய்க்க றலிமங் படிச்சனியோ என்று கிழவன் கேட்டதும் நினைவுக்கு வந்தது.

ஒவ்வொரு வீடுகளிலும் சட்ட ரீதியாக என்னென்ன மாறுதல் செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வெளிவரும் அந்த மஞ்சள் புத்தகம் இப்போது வீட்டைத் திருத்த வந்தவன் கையில் ஆடிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்ததும் சிவபாலிக்கு நெஞ்சிடிக்க ஆரம்பித்தது..

## 40

கிழவன் காரில் இருந்து இறங்கி வேகமாக வந்த சிவபாலியை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டான். அதே நேரம் பொதபொத வென டேனிஸ் மொழியில் ஏதோ ஒரு பழமொழியைச் சொன்னான். அதன் உள்ளர்த்தத்தை டேனிஸ்காரரே புரிவது கடினம்.

www.padippakam.com



உங்களைப் போல ஆட்கள் நிறைவே டென்மார்க்கிற்குத் தேவை என்று கூறுவது போல அவன் முகபாவனை இருந்தது. அதற்கு மேல் சிவபாலியால் எதையும் புரிந்து கொள்ள இயலவில்லை.

"என்ன சொல்கியாய் " என்று அவனிடமே கேட்டுப்பார்த்தார்.

"நான் ஒன்றும் சொல்லவில்லை .. இதோ இவர் உன்னைத்தான் தேடி வந்திருக்கிறார்" என்று கூறினான் கிழவன்.

" நான் இயரிக் லாசன் கூரை திருத்தும் நிறுவனத்தில் இருந்து வந்திருக்கிறேன் " என்றான்.

சிவபாலி அவனையே கூர்ந்து பார்த்தார். அவனுடன் அதிகம் பேச வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை. அப்படியே அவனைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்குள் போனார். அருகில் நின்ற கிழவன் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடியே மறுபறுமாகப் போனான்.

உள்ளே வந்தவன் வீட்டை ஒரு நோட்டம் விட்டு கோப்பிசமும் சுவரும் பொருந்தும் இடங்களைப் பார்த்தபடியே ஒரு சுற்று சுற்றி வந்தான். ஆங்காங்கு குத்தூசிபோல ஒரு கம்பியால் வளைகளில் குத்தி இழுத்தான். ஊரில் செத்தல் முள்முருக்கம் கதியாலில் கம்பி உள்ளே போனால் கொட்டுப்படும் தூள்போல உக்கிய மரத்தூள் கொட்டுப்பட்டது.

வந்தவன் இள நீலக் கண்களால் சிவபாலியைப் பார்த்தான். அவன் விழிக்கடையில் ஒருவித பரிதாபம் ஒளி வீசியது. சுவரில் இருந்த மின் விளக்கை அழுத்தினான். அப்போது அதில் கொழுவியிருந்த வானொலிப் பெட்டியும் அதோடு சேர்ந்து ஏதோ உளற ஆரம்பித்தது. அது பாராளுமன்றத்தில் இருந்து நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். அங்கு யாரோ ஒரு ஒரு பெண்மணி ஆக்ரோஸ்மாகப் பேசுவது கேட்டது.

" அகதிகளும், வெளிநாட்டவரும் வேலைக்குப் போவதில்லை. வெளிநாட்டவரின் பிள்ளைகளை டேனிஸ் பிள்ளைகளின் வகுப்பில் இருந்து பிரித்து தனியான வகுப்பில் விட வேண்டும " என்று அந்த

படிப்பகம்

அரசியல் கட்சித் தலைவி பேசுவது கேட்டது.

"உன்னுடைய இரத்தம் உக்கிய தூளாக புழுத்துக் கொட்டுது... இதை எடுத்து அவளுடைய தலையில் போடு.." என்று அந்த டேனிஸ்காரன் கோபத்துடன் சொன்னான். பின் வதவதவென கூரைக்குள் ஏறி மறைந்தான்.

போனவன் போனவன்தான் அரை மணி நேரமாக ஆளையே காணவில்லை. புழுக்கள் கடித்து இறந்துவிட்டானோ என்று ஒரு கணம் அஞ்சினார். அவன் இறந்தால் அதற்கும் தானே நட்டஈடு கட்ட வேண்டும் என்று இடையில் ஒரு தடவை பயந்தார்.

" உறலோ .. இயரிக் அலுவல் முடிஞ்சுதா ?" கீழே இருந்து ஓங்கிக் குரல் கொடுத்தார்.

" இதோ வருகிறேன்.. "

பரிசோதனைக்காகப் போகும் காரில் கறள் இருக்கிறதாவென சுத்தியலால் அடித்துப் பார்ப்பதைப் போல அவன் கூரை முழுவதையும் குத்திப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் உள்ளே இருக்க இருக்க சிவபாலிக்கு நெஞ்சிடித்தது. அவன் மதிய இடைவேளை வரை அங்கேதான் இருப்பான் என்பது அவருக்குத் தெரியும். அரைநாள் சம்பளத்தை எழுதிக் கொடுக்கப்போகிறான் என்பது தெரிந்தது.

அவர் நினைத்தபடியே சரியாக 11.30 மணிக்கு அவன் கீழே இறங்கினான். தனக்கு இப்போது மதிய இடைவேளை என்றும் கூறினான். வெளியே நின்ற வானுக்குள் போய் ஒரு போத்தல் பியரை உடைத்துக் குடித்தான். பின்னர் ஒரு துண்டு பாணை சாப்பிட்டுவிட்டு, வானில் இருந்தபடியே யாருடனோ கைத்தொலைபேசியில் கதைத்தான். 12.00 மணிக்கு இடைவேளை முடிந்ததாகக் கூறிக்கொண்டு மறுபடியும் வீட்டிற்குள் வந்தான்.

www.padippakam.com



" சிவபாலி உனக்காக நான் கவலைப்படுகிறேன்.. "

" ஏன் ? "

"உன்னுடைய வீட்டுக் கூரையை முற்றாக மாற்ற வேண்டும். முழுவதுமே புழுக்குத்தி அரிச்சுப் போட்டுது. இதற்குள் இந்த வீட்டிலிருப்பதே பெரிய ஆபத்து.. "

"இதற்கு நான் பொறுப்பில்லை.. வீட்டை விற்றவன்தான் பொறுப்பு அவனுக்கு மேல வழக்குப் போடுவன்.. " சிவபாலி சிறிது உணர்ச்சி வசப்பட்டார்.

" வழக்குப் போட்டாலும் உன்னாலை வெற்றிபெற இயலாது. முதலில் இந்தப் புத்தகத்தைப் படித்துப்பார்." என்று மஞ்சள் நிறமான புத்தகத்தைக் கொடுத்து அதில் இருந்த ஒரு பந்தியை உரத்து வாசித்தான். சிவபாலி அதனை காதால் கேட்டுவிட்டு பதட்டத்துடன் அவருடைய முகத்தைப் பார்த்தார்.

"இந்தப் புத்தகத்தில் உள்ள சட்டப்படி உன்னுடைய வீட்டின் கூரை முற்றாக மாற்றப்பட வேணும்.. "

"மாற்றாவிட்டால் "

" சட்டப்படி குடியிருக்க ஏலாது.. இந்தப் புத்தகத்தைப் பார்த்துப் போட்டுத்தான் உனக்கு இந்த வீட்டை விற்றிருக்கிறாங்கள்..."

சிவபாலி பரிதாபமாக பிரியாமணியைப் பார்த்தார். அவள் மலங்க மலங்க விழித்தாள். அவளுடைய தமிழ்க் கண்களில் இருந்து சொட்சொட்டென இரண்டு கட்டி நீர்த்துளிகள் விழுந்து பாதரசம்போல உருண்டோடின.

" கூரையை மாற்ற எவ்வளவு செலவு வரும் ? " கரகரக்கும் குரலில் கேட்டார். ஏற்கெனவே ஜன்னல் உடைக்கப்பட்டதால் வந்த

படிப்பகம்

www.padippakam.com



கடன் இன்னமும் அவரை வாட்டிக் கொண்டிருந்ததால் அந்தக் கரகரப்பு.

அந்தக் கேள்வியை முன்னரே எதிர்பார்த்தவன் போல தனது கையிலிருந்த பைலைத் திறந்து, ஒரு றிசீட்டை எடுத்து நீட்டினான். தொலைபேசியில் பேசியபோதே அவன் முழுச் செலவு விபரத்தையும் அப்படிவத்தில் பதிந்திருப்பது தெரிந்தது.

அதை மேலோட்டமாகப் பார்த்தார், பின் கீழே உள்ள கூட்டுத் தொகையைப் பார்த்தார். மூன்று இலட்சம் என்று அண்ணளவாக எழுதப்பட்டிருந்தது.

“ இவ்வளவு பணம் வேணுமோ .. ,” பரிதாபமாகக் கேட்டார் சிவபாலி.

“ என்னுடைய நிறுவனம் செய்தால் மூன்று இலட்சம், முழுக் கடனையும் கட்டி முடிக்க செலவு ஐந்து இலட்சம் குறோணரில் வந்து நிற்கும். இதே வேலையை வேறு யாராவது செய்தால் ஐந்து இலட்சம் முடியும், கடன் முடிய ஏழரை இலட்சமாகும். அதற்கு ஒரு குறோணர் குறையாது” திட்டவட்டமாகக் கூறினான்.

“ இந்த வீடு ஏன் இவ்வளவு மலிவா விற்பனைக்கு வந்ததெண்டு இப்ப விளங்குது.. ”சிவபாலி மெதுவாகச் சொன்னார்.

“அடுத்த கிழமை வேலை ஆரம்பிக்க வேணும்” இயரிக் சொன்னான்.

“ அடுத்த கிழமையோ ... அப்ப... பணம்... ” பிரியாமணி சிவ-பாலியைப் பார்த்துக் கேட்டாள்.

பணம் என்றதும் டேனிஸ்காரன் புரிந்து கொண்டான். ஏற்கெனவே அடகு வைக்கப்பட்ட வீட்டை மேலும் மூன்று இலட்சம் அதிகமாக அடகு வைக்க முடியும் என்றும், அதற்கு தானே ஒழுங்கு செய்வதாகவும் கூறி, சில படிவங்களைக் கொடுத்தான். அவற்றின் அடியில் ஒரு சிறிய புள்ளடியைப் போட்டான். அதில் இருவரும்

கையெழுத்துப் போட்டால் சரி மிகுதியை தானே பார்ப்பதாகவும் சொன்னான்.

ஒரு வீட்டை வாங்கியதால் பதினாறு வருடங்கள் கடனாளியாகப் போயிருந்த சிவபாலி இப்போது கூரையைத் திருத்துவதற்காக இருபத்தைந்து வருடங்கள் கடனாளியாக வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டார்.

இலங்கைத் தீவின் குடிமகனானகப் பிறந்து, அந்த நாடு போருக்காகப் பட்டிருக்கும் கடன்களால் இரு நூறு வருடங்கள் கடனாளியாகியிருந்த அவர் இப்போது டென்மார்க் வந்து மேலும் இருபத்தைந்து வருடங்கள் கடனாளியவதை நினைத்து சிரித்தார். கடைசியாக ஒரு கேள்வியை டேனிஸ்காரனிடம் கேட்டார்.

"இந்த வீட்டை விற்றால் என்ன நடக்கும்"

"விற்கிறதாக இருந்தால் உன்னைப் போல சட்டம் தெரியாமல் வீடு வேண்டக் கூடிய யாராவது மாட்டுப்பட வேணும். வெளிநாட்டவரின் வீடுகளை அதிகமாக வெளிநாட்டவரே வாங்குவதன் இரகசியம் இதுதான்." என்றான் இயரிக்.

" அப்படி யாராவது கிடைக்காவிட்டால் என்ன செய்யலாம் ?" சிவபாலி கேட்டார்.

" வாங்கின விலையை விட ஐந்து இலட்சம் குறைத்துத்தான் விற்க வேண்டும்.. " டேனிஸ்காரன் கூறி முடித்தான்.

வீட்டை விற்றாலும் ஐந்து இலட்சம் நட்டம்..

வீட்டைத் திருத்தினாலும் ஐந்து இலட்சம் நட்டம்...

என்ன செய்யலாம்... ?

திகைத்து நின்றார் சிவபாலி..

www.padippakam.com


## 41

சிவபாலி கூரையை மாற்ற வேண்டிய நிலையில் சுரத்துக் கெட்டு நிற்க, மறுபறும் நாட்டில் ஐயாமுத்து உருவேறி கரகாட்டத்தில் குதித்திருந்தார். சுள்ளிபொறுக்கிக் கிழவி அவரைத் துலாக்காவடியில் ஏற்றி வானத்தில் பறந்தபடியே கூரைகளைப் பார்க்க வைக்திருப்பாள். நல்லவேளையாக அதிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

அடிக்கடி ஆமிக்காறர் துப்பாக்கிப் பிரயோகங்களை செய்வதும், அதில் ஐயாமுத்தர் சிக்குப்படுவதும் வழமையாக இருந்தது. இதனால் வரும் சனி தோசங்கள் விலகவே அவர் அந்தக் கரகத்தை எடுத்திருந்தார். தேவாரச் செல்வி தலையில் தீச்சட்டி ஏந்தியிருந்தாள். சடசடத்து எரியும் தீக்கங்குகளைப் பார்க்கும்போது அவளுடைய சருகு மூளை தீப்பற்றி எரிவதைப் போலிருந்தது ஐயாமுத்தருக்கு. சிறுபெ-ாழுது எல்லாவற்றையும் மறந்து வேடிக்கை பார்த்தார். கற்பூரச்சட்டி வெக்கையாவது தேவாரச்செல்வியின் மூளையை இளக வைத்து அவளுக்கு நல்லறிவைக் கொடுக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார்.

சொடக் சொடக்கென சொக்கில் இடித்து அவருக்கு அல-குநாடகம் குத்தி, முதுகுச் சதையைக் கோலி இழுத்து செடிலும் குத்தியிருந்தார்கள். கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து சூறாவளி போல கரகம் புறப்பட பறை மேளம் முழங்க ஆரம்பித்தது. அதைக் கேட்க ஐயாமுத்தருக்கு நரம்பு புடைப்பேறி தோள்கள் தினவெடுத்தன. ஏதோ சூரன் உடல்கிழிக்கப் போவதைப் போல சீறிக்கொண்டு நின்றார்.

காமாலைக்கண் சின்னச்சாமி செடில் பிடிக்க, சாட்டையடி நமசிவாயம் உடுக்கடித்துப் பாட எல்லாம் அமர்க்களமாக இருந்தது. இப்படியே ஆடியபடி இரண்டு கிலோ மீட்டர் சென்று அம்மன் கே-ாயிலில் கரகத்தை இறக்கியாக வேண்டும்.

"அம்மா நடுச்சுடலை தில்லைவனம் பெற்றவளே தாயே !" நமசிவாயம் பாடலை ஆரம்பித்தார்.

ஐயாமுத்துவின் ஆட்டக் கோலத்தைப் பார்த்து நமசிவாயம் நமட்டுக்குள் சிரித்துக் கொண்டார். இருபது வருடங்களுக்கு முன்னர்

www.padippakam.com



நமசிவாயமும், ஐயாமுத்துவும் ஒன்றாகச் சேர்ந்து வெளிநாடு புறப்பட்ட நினைவு அவருக்கு வந்தது.

வேட்டி, சால்வையுடன் கொடிகாமத்தில் இருந்து புறப்பட்டு கொழும்பு சென்று காற்சட்டை, சப்பாத்துப் போட்டுப் பழகியதும், அங்கிருந்து வெளிநாடு புறப்பட ஆயத்தமானதும் நினைவுக்கு வந்தது. புறப்படும் நாள் நள்ளிரவு லொட்ஜிற்கு வந்த ஆமி நமசிவாயம் யாரடா என்று உறுமியது. பயந்து நடுங்கிய ஐயாமுத்து இவன்தான்

நமசிவாயமென்று தன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டு வெளிநாடு போய்ச் சேர்ந்ததும் நினைவுக்கு வந்தது.

நமசிவாயத்தை அடித்து இழுத்து பூசா முகாம் கொண்டு சென்று விசாரித்தபோதுதான் இராணுவத்திற்கு உண்மை தெரிந்தது. அவர்கள் தேடிவந்தது போராளி நமசிவாயம் என்றும், பிடிபட்டது சாட்டையடி நமசிவாயம் என்பதும் தெரியவந்தது. ஆள் மாறாட்டமாகப் பிடித்துவந்த நமசிவாயத்தை சுட்டால் தமக்கு ஒரு தோட்டாதான் நாசமெனக் கூறி அடித்து விரட்டினார்கள். அங்கிருந்து அவர் ஊர்வந்து சேர ஏஜென்சி அவருடைய பணத்துடன் ஜேர்மனி போய்விட்டான். நமசிவாயத்தின் ஈடு வைத்த காணி ஏலத்திலும் போனது பழைய கதை.

, ஐயாமுத்தா ... வாடா... , என்று மனதிற்குள் கறுவிக்கொண்டாலும், ஒப்பனைக்கு முகத்தைப் பக்திப்பரவசமாகவே வைத்துக் கொண்டார். கரகம் அரசடி சந்திவர பறை மேளம் முதலாவது அகோர வாசிப்பை வாசிக்க, ஐயாமுத்தர் ஆடத் தொடங்கினார். அந்த நேரம் பார்த்து பாழாய்ப் போன எம்.ரீவி நடனம் வரவே ஒருவாறு அடக்கிக் கொண்டு கரகாட்டத்திற்குள் நுழைந்தார்.

"அடியே...ய்... " அசுர வேகத்தில் ஒரு ஒலி கேட்டது. நமசிவாயம் நரம்பு புடையேறி நாக்கை நீட்டி ஒரு சுற்றுச் சுற்றி ஆவேகார ஆட்டம் ஆடத் தொடங்கினார். அம்...ம்... மா நீட்டடி கையை.., என்று ஐயாமுத்துவின் கையை இழுத்தார்.

ஐயாமுத்துவிற்கு அப்போதுதான் நமசிவாயத்தை மாட்டி

படிப்பகம்

www.padippakam.com


விட்டுவிட்டு டென்மார்க் ஓடியது காட்சி நினைவிற்குள் வந்தது. வகை தெரியாமல் மாட்டிக் கொண்டுவிட்டேனே என்று பரிதவித்தபடியே வேறுவழியின்றி கையை நீட்டினார்.

கைகளில் இருந்து பொறி பறந்தது... ஒவ்வொரு கையிலும் தலா இருபது சாட்டை அடிகளைப் போட்டு உருவி இழுத்தார். அடி-விழ விழ ஐயாமுத்துவின் உயிர் அந்த லோகம் போய் இந்த லே-ாகம் வந்தது..

பின்னர் நமசிவாயம் சாட்டையடி போட காலை நீட்டும்படி கட்டளை போட்டார்.

வலது கால், இடது காலென இரு கால்களிலும் தலா இருபது அடிகள் வரை இறக்கினார். நாயுருவியால் கோடிழுத்தது போல சதை கிழிந்தது. ஐயாமுத்தர் வலியின் கொடுமையால் பம்பரம் போல ஆடி-னார்.

“அம்மா கோபாலன் தங்கையடி பெத்தவளே தாயே..”நமசிவாயம் மகிழ்ச்சிக் கடலில் பொங்கிக் குளித்தபடி பாடினார்.

“ அரசடிச் சந்தியிலேயே இந்த ஆட்டம் என்றால் வாசி-கசாலைச் சந்தியில் நடைபெறப் போகும் ஆட்டமும், சாட்டையடியும் மேலும் அகோரமாக இருக்கும் ” என்று யாரோ பேசிக் கொண்டது கேட்டது.

எல்லாவற்றையும் மறந்து வலியின் கொடுமையை மறக்க பதறி ஆடிக் கொண்டிருந்த ஐயாமுத்துவிற்கு வரப்போகும் சந்தியடியை நினைக்க வயிற்றைக் கலக்கியது. சந்தியில் வைத்து கதறக் கதற அடிபோடுவதால்தான் சந்தி...அடி என்று பெயர் வந்ததோ என்று யோசித்தார்.

தில்லையாட்டக்காரி நீ செய்யடி ஒரு மாயம்..., அருகில் இருந்த சித்தப்பா கடைக்குள் நுழைந்து இரண்டு மிடறு கசப்புத்தரும் எரி கோலாவைக் குடித்துக் கொண்ட நமசிவாயம் மறுபடியும் வேகமா

www.padippakam.com



கப் பறந்து வந்தது. தலைவிரி கோலமாகி சுழன்றாடியது. சாட்டையை உருவி தோள், கைகள், வயிறு என்று சகல இடங்களிலும் விளாசித் தள்ள ஆரம்பித்தார். ஐயாமுத்து செய்த கூத்தால் தான் பூசா முகாமில் தலை கீழாகத் தொங்கியதை நினைக்க நினைக்க அவருக்கு வெறி கூடியது.

ஐயாமுத்துவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. செய்த பாவம் எல்லாவற்றுக்கும் சேர்த்து வேண்டிக் கட்டுவதை நினைத்துப் பார்த்தார். ஐரோப்பாவில் உள்ள கோயில்களிலும் சாட்டையடியும் வந்தால் வலு விசேசம் என்று எண்ணினார்.

"படீர் படீரென " ரென விழுந்த அடிகளில் கைகள் வெடித்தன.. சுள்ளிபொறுக்கிக் கிழவி " போதாதம்மா போதாதென " ஓலமிட்டபடி வேப்பிலையைச் சுழற்றி ஆடினாள். டென்மார்க்கில் இருந்து தேவாரச்செல்வியின் பாங் காட்டைப் பிடுங்கிக் கொண்டு, காசை அனுப்ப முடியாமல் செய்துவரும் ஐயாமுத்துவிற்கு தன் பங்கிற்கும் சாட்டையடி போட்டு வெப்பியாரம் தணிய ஆசை கொண்டாள் சுள்ளிபொறுக்கிக் கிழவி.

சந்தியடி முடிந்து கரகம் நகர்ந்தது.. இனி அடுத்தபடியாக சடையாண்டி கோயிலடி முடியவேண்டடும், கடைசியாக கோயில் வாசல் சென்று தீக்குளிப்பை முடித்து, அதன் பின்பே கரகத்தை இறக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் சணல் பறந்த அடியெனப் பேசப்படுவதன் உட்பொருள் இன்றுதான் ஐயாமுத்தருக்குப் புரிந்தது. அவருக்கு அடிவேண்டி தேகமே மரத்துவிட்டது. இனி சாட்டையடி விழுந்தாலும் ஒன்றுதான் விழாவிட்டாலும் ஒன்றுதான் என்ற நிலைக்கு வந்துவிட்டார்.

ஐயாமுத்தரில் திடீர் மாற்றம்.. மழையா புயலா... இடியா...

சடையாண்டி கோவிலடியைத் தாண்டியவுடன் ஆட்டம் மேலும் அகோரமானது. அதைப் பார்க்க பலருக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது. கரகாட்ட வரலாறே சந்திக்காத புதுமை இதுவென பல கிழவிகள் வாயை வாயை அடித்துக் கொண்டனர். உன்னியெறியும்

படிப்பகம்

www.padippakam.com



அந்த துடிப்பு வேகம் அவருடலில் படக்குப் படக்கென அடித்தது.

அந்தக் கோப உதறலால் கறள் கட்டிக்கிடந்த ஐயாமுத்துவின் மூளையின் கதவுகள் மெல்லத் திறந்தன. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும், உருவாட்டத்தை உரு ஆட்டத்தால்தான் அடக்க வேண்டும் என்று யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது.

ஐயாமுத்து தன்னுடைய பழைய கூக்குமாக்குக் கூத்தை ஆரம்பித்துவிட்டது தெரியாமல் நமசிவாயம் கூட்டத்திற்குள் புகுந்து மடியில் இருந்த எரி கோலாவை வாயில் சரித்துவிட்டு ஓடிவந்தார். தீ மிதிப்பில் வைத்து ஐயாமுத்து மீதான சகல கோபங்களையும் தீர்க்கக் கங்கணம் கட்டிக் கொண்டார்.

கோயில் நெருங்கிவிட்டது, வெளி வீதி சுற்றி ஆலய வாசலில் வளர்த்திருந்த தீயை நெருங்கினார். தீயைப் பார்க்கப் பார்க்க அச்சம் ஏற்பட்டது. வெளிநாட்டுக் காசென்பதால் விறகுகளை மனம் போல வேண்டிக் கொழுத்தியிருந்தார்கள். இவ்வளவு பேரையும் கூப்பிட்டுவிட்டு சாட்டையடி வேண்டாமலும், தீ மிதிக்காமலும் தப்பி ஓடுவது சரியில்லை என்பதைப் புரிந்து கொண்டு தீயை நெருங்கி பகீரென அதை வேகமாகக் கடந்தோடினார்.

தீயின் மீது வேகமாக நடந்தால் அது சுடாது என்பதை அப்போதே புரிந்து கொண்டார். போன வேகத்தில் மேலும் ஒரு தடவை தீயை மிதிக்க ஓடி வந்தார். ஐயாமுத்தரைப் போலவே தானும் ஆட்டத்தை அகோரமாக்கி நமசிவாயம் சாட்டையை உருவ-யபடி ஓடிவர, அந்த நொடி பார்த்து நன்கு திட்டமிட்டு சுழன்று விலகினார் ஐயாமுத்து. அவ்வளவுதான் நமசிவாயம் தலைகரண-மாக நெருப்பில் விழுந்து சுழன்றார். அவருடைய சாட்டையைப் பற்றி இழுத்தார் ஐயாமுத்தர், அதைப் பிடித்து எழுந்த நமசிவாயம் புழுப்போல துடிதுடித்து வெளியே ஓடினார்.

அவரை விரட்டியபடியே... தாயே என்று அலறியபடி ஓடிப்போய் கரகத்தின் செம்பால் நமசிவாயத்தின் தலையில் ஓங்கி அடித்தார். கரகத்தை பக்கத்தில் நின்றவனிடம் கொடுத்துவிட்டு, சாட்டையைச்

சுழற்றி அவரை விரட்டி விரட்டி அடிக்க ஆரம்பித்தார். ஐயாமுத்தருக்கு உருவேறிவிட்டதாகக் கருதி பறை மேளத்தை மேலும் வேகமாக அடித்தார்கள்.

அடி அகோரம் தாங்க முடியாத நமசிவாயம் தலை தெறிக்க ஓட ஆரம்பித்தார். ஐயாமுத்து அவரை விரட்டியபடி சென்று அடி போட குறுக்கே இருந்த கழுவேறியான் குளத்திற்குள் விழுந்து வடலிக்காட்டுக்குள் மறைந்தார் நமச்சிவாயம். " அடிபட்ட புலி மறக்காதடா.. " என்றபடி அவர் ஓடுவது கேட்டது.

பறை மேளம் ஆக்ரோசமாக ஒலிக்க, தில்லையாட்ட ஒய்யாரத்துடன் மறுபடியும் அங்கே ஓடிவந்த ஐயாமுத்து, சுள்ளி பொறுக்கிக் கிழவிக்கு சாட்டையால் பொழிந்து தள்ளினார். பின்னர் கோயிலில் நாட்டாமை பண்ணி போவோர் வருவோருடனெல்லாம் வாசலில் நின்று சொறிபடும் நாட்டாமை நல்லபிள்ளைக்கு இருபது அடிகள்வரை போட்டு நெருப்பால் அள்ளி வீசினார்.

பின்னர் வேறு யாராவது மீதமிருப்பார்களா என்று பலரைத் தேடிச் சென்று, கோபமுள்ள வேறும் சிலருக்கு போட்டுப் பிடித்துவிட்டு, மறுபடியும் கரகத்தை வேண்டினார்.

சட்டத்தின் பிடிக்குள் சிக்காமலே அடித்து நிமிர்த்த அரிய வழி இருக்கும் போது வீணாக அடிபட்டு சாகிறாங்களே என்று அங்கலாய்த்தார். கரகத்தை மறுபடியும் வேண்டி அம்மனை மனதார நினைத்தபடியே கோயிலின் உள் வீதியைச் சுற்றிவந்து கரகத்தை இறக்கினார்.

அடி போட வேண்டிய தனக்கும் நல்ல அடி போட்டு, உரிய முறையில் செமை அடி போட வேண்டியவர்களுக்கு அடியும் கொடுக்க வைத்த அம்மன் அருளை மெச்சினார்.

"இப்பதான் உண்மையாக சாமி வந்ததைக் கண்டமப்பா" என்று சிலர் பேசிக் கொள்வது கேட்டது. அவர்கள் அனைவரும் கரகமெடுத்து முன்னர் நமசிவாயத்திடம் வேண்டிக்கட்டிய பேர்வழிகளாக இருக்க வேண்டுமென உணர்ந்து கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



ஐயாமுத்துவின் கரகாட்டம் முடிய எல்லோருடைய மனங்களிலும் ஏதோ புயலடித்து ஓய்ந்தது போல இருந்தது.

## 42

ஐயாமுத்தரின் கரகாட்டம் முடிந்தாலும் அதனால் உண்டான அதிர்வலைகள் தொடர்ந்தன..

சாட்டையடி நமசிவாயம் பெரியாஸ்பத்திரியில் கிடப்பதாக யாரோ சொன்னார்கள். சுள்ளி பொறுக்கிக் கிழவியும் சாட்டையடிக்கு எண்ணெய் தடவிக்கொண்டு வலியைத்தாங்கியபடி படுத்துக் கிடந்தாள்.

மாட்டுக்குக் குறி இழுத்தது போல தேகம் முழுவதும் விழுந்த கோடுகளையும், அதனால் உண்டான தோல் வெடிப்புக்களும், புண்களும் ஆறுவதற்கு ஒருவார காலமாகிவிட்டது.

டென்மார்க்கில் உள்ள வெங்காயம் சிவபாலியை உருவேற்றிவிட்டு வீடுவாங்கச் செய்த பாவத்திற்குத்தான் இந்தத் தண்டனையோ என்றும் நினைத்துக் கலங்கினார்.

உலகம் எங்கேயோ முன்னேறிக்கிடக்க சாட்டை அடியும், அலகு நாடகமுமாகக் கிடக்கும் தன்னுடைய வாழ்வின் அவலத்தை எண்ணியபோது அவருடைய தேகத்தில் இருந்த தழும்புகளால் வேதனை நெருப்பு பக் பக்கெனப் பிரிந்து வான் கலந்தது.

இதற்கிடையில் ஆரென்றே தெரியாத சிலர் அவரிடம் பணம் கேட்டு வந்து போயிருந்தார்கள். அவர்களில் சிலர் ஐயாமுத்தரோடு படித்ததாகவும், இப்போது கெட்டு நொந்து போய்விட்டதாகவும் சொல்லிக் கொண்டார்கள். அவர்களுடன் தான் படிக்கவே இல்லை என்பதும், வேறு யாருக்கோ விட்ட நீலை தனக்கும் விடுகிறார்கள் என்பதையும் அவர் கண்டு கொண்டார்.

அவர்களில் பலர் சிறு பிள்ளைகள் போல கேள்விகளை அன்போடு கேட்டாலும், அவர்கள் அன்புடையவர்கள் அல்ல என்பதைக் கண்டு கொண்டார். அவர்களுடைய கை மடிக்குள் போகின்றதா என்பதை மட்டும் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார். நல்ல

www.padippakam.com



வேளையாக அவலங்கள் எதுவும் நடக்கவில்லை.

அவர்களுடைய மடிகளுக்குள் துப்பாக்கிகள் மறைத்து

வைக்கப்பட்டிருப்பதாக சந்தேகப்பட்டுக் கொண்டார். இனந்தெரியாத நபர்களான அவர்கள் யாருக்காக துப்பறிகிறார்கள் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவர்கள் அங்கு வருவதும் ஒற்றாடுவதும் அமைதிக்குரிய அடையாளமல்ல என்பதை மட்டும் தெளிவுபடுத்தின.

முதலில் அங்கிருந்து விரைவாகப் புறப்பட்டுவிடுவதே அறிவுள்ள செயல் என்றும் அவருடைய மனம் கூக்குரலிட்டது. அமைதி நிலவுகிறது, பாலும் தேனும் ஓடுகிறதென தனக்கு தலைப்பாகை கட்டிவிட்ட டென்மார்க்கில் வாழும் சில தமிழ்ப் பேய்களை விளக்குமாற்றால் அடித்து ஆற அவருடைய மனம் துடிதுடித்தது.

கடைசியாக அவர் படித்த பாடசாலையை ஒரு தடவை பார்த்துவிட்டு அடுத்த வாரமே யாருக்கும் தெரியாமல் புறப்பட்டுவிட மனதலில் இரகசிய திட்டம் தீட்டிக்கொண்டார்.

அவர் படித்த பாடசாலைக்கு அன்று மதியமே போய்ச் சேர்ந்தார். தேவாரச்செல்வி மழைக்கும் பாடசாலைத் தாவாரத்தில் ஒதுங்காதவள் என்பதால் அவரோடு வர மறுத்துவிட்டாள். நிறையப்பேர் அங்கு வந்து பாடசாலை அதிபர்களின் புழுகு புராணங்களைக் கேட்டுக் கொண்டு வெளிநாடு திரும்புவதும், நிதி திரட்டுவதும் அவர் அறிந்த விடயங்கள். எனவேதான் பாடசாலையின் முழுமையான செயற்பாடுகளை அறிய விரும்பி அவர் மட்டும் தனியாகப் போனார்.

சிறு வயதில் இருந்தே படித்த பாடசாலைக்குள் போக அவருடைய கால்கள் நடுங்கின. வாத்தியாருக்கு அடித்துவிட்டு பாடசாலையை விட்டு ஓடிய பின் இப்போதுதான் மறுபடியும் பாடசாலையில் காலடி வைக்கிறார். என்ன இருந்தாலும் வாத்தியாருக்கு அடித்தது மன்னிக்க முடியாத தவறு என்பதை இப்போது அவருடைய மனம் ஒப்புக் கொண்டது.

www.padippakam.com


வாத்தியார் பிள்ளைகளுக்கு அடிப்பது மகாதவறு !

வாத்தியாருக்கு பிள்ளைகள் அடிப்பது அதைவிடப் பெரிய தவறு!

பிரம்பால் அடித்துத்தான் அறிவை ஏற்படுத்த வேண்டுமென ஆரம்பித்த தவறான கல்வி இன்று துப்பாக்கியால் சுடுவதும்,

குண்டுவீசுவதுமே மக்களை அடக்க வழியென நினைக்கும் கலாச்சாரத்தை வளர்த்திருக்கிறதோ என்று சந்தேகித்தார். நல்லவேளையாக எதையும் உரத்துப் பேசாமல் மனதிற்குள்ளேயே பேசுவதற்காக கடவுள் தந்த ஓசையற்ற மனதிற்கு நன்றி கூறினார்.

பாடசாலைக்குள் போனபோது அங்குள்ள ஆசிரியர்கள் எவரையும் அவரால் அடையாளம் காண முடியவில்லை. எல்லோருமே புதிய முகங்களாக இருந்தார்கள். அதிபர் கொழும்பு போயிருப்பதாகவும் தானே இப்போது பாடசாலையை பராமரிப்பதாகவும் உப அதிபர் பதவியில் இருந்த ஒரு பெண் ஆசிரியை தெரிவித்தார்.

உப அதிபர் பாடசாலையின் முன்னேற்றம் பற்றியும், எதிர்காலத் திட்டங்கள் ப்ற்றியும் கூறினார். அதையெல்லாம் அமைதியாகக் கேட்டபடியே சன்னல் வழியாக பார்வையை வீசிக்கொண்டிருந்தார். வெளியே மைதானத்தில் மாணவர்கள் சகட்டு மேனிக்கு விளையா-டிக் கொண்டிருப்பது தெரிந்தது. பிள்ளைகளை மைதானத்திற்கு விரட்டியடித்துவிட்டு ஆசிரியர்கள் சும்மா இருப்பதாக யாரோ சொன்னது அவருடைய காதுகளுக்குள் இருந்தது.

“மைதானத்தில் பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் போல ” ஐயாமுத்தர் கேட்டார்.

“இல்லை மாஸ்டர் ஒராள் லீவு அதுதான்... சும்மா மைதானத்திற்கு அனுப்பியிருக்கினம் போலை..” உபஅதிபர் கூறினார்.

“பள்ளிக்கூடத்திற்கு வெளிநாட்டுத் தமிழர் பலர் நிறைய கொம்பியூற்றருகளை தந்திருப்பதாகக் கேள்விப்படுறன்.. ஒருக்கா பார்க்க ஏலுமே.. ”

www.padippakam.com



" பார்க்கலாம் ஆனால் இண்டைக்கு கொம்பியூற்றர் ஆசிரியர் லீவு... "

"பறுவாயில்லை.. நீங்கள் கொம்பியூற்றர் அறையைக் காட்டினாலே போதும்.. "

"காட்டலாம் ம்.... ஆனால் திறப்பை எங்கை வச்சிருக்கிறார் என்று தெரியவில்லை.." மூன்று வருடங்களுக்கு முன்னர் கொடுத்த கொம்பியூற்றரை பிள்ளைகள் தொட்டு பழுதாக்கக் கூடாது என்பதற்காக பரணில் கட்டிப் பாதுகாத்து வைத்த அதிபர் ஒருவரின் கதையை அவர் முன்னரே கேள்விப்பட்டிருந்தமையால் அவைகளைப் பார்க்க விரும்பினார். ஆனால் முடியாமல் போய்விட்டது.

"சரி சின்னப்பிள்ளையில் இருந்து நான் படித்த பள்ளிக்கூடத்தை சுற்றிப் பார்க்க விரும்புறன்.. முடியுமா?" என்று கேட்டார்.

உப அதிபர் அவரை அழைத்துக் சென்று ஒவ்வொரு வகுப்பாகக் காட்டிக் கொண்டு வந்தார். மை பூசப்பட்டு அழகாகத் தோற்றமளிக்கும் அப்பாடசாலையை தூரத்தில் பார்த்து மகிழ்ந்தவர், உள்ளே சென்று அங்கிருந்த கதிரை, மேசைகளைப் பார்த்து ஆடிப்போய்விட்டார்.

அவர் அங்கிருந்த படித்த ஐம்பது வருடப்பழைய கதிரைகளும், மேசைகளும்தான் இப்போதும் போடப்பட்டிருந்ததைக் கண்டு கொண்டார்.

கால்கள் வளைந்து பரிதாபமாகக் கிடந்த ஓர் இரும்புக் கால் நாற்காலியைப் புரட்டிப் பார்த்தார். அதன் அடியில் வட்டாரிக் கூரினால் ஐயாமுத்து என்று எழுதப்பட்டிருப்பது தெரிந்தது.

அந்தக் கதிரையைக் காட்டியபடியே " ரீச்சர் நீங்கள் எல்லாரும் சர்வதேச சட்டப்படி குற்றவாளிகள்.. " என்றார் ஐயாமுத்து.

www.padippakam.com



“ ஏன் ? ”

“ இத்தனையாண்டு பழைய கதிரைகளைப் பாவிப்பது கூட சர்வதேச சட்டங்களின்படி ஒரு குற்றச் செயல்தான். ” ஐயாமுத்தர் தான் எங்கோ அறிந்து கொண்ட சட்டத்தை அவரிடம் சொன்னார்.

“எத்தனையோ பள்ளிக்கூடங்களிலை பிள்ளைகள் மரங்களுக்குக் கீழே இருந்து படிக்கிறார்கள். பாடசாலைகளே குண்டு

வீச்சுக்களுக்கு இலக்காகியிருக்கு.. பள்ளிக்குப் போகாத நிலையி-லேயே ஏராளம் சிறார்கள் இருக்கிறார்கள், இதெல்லாம் தெரிஞ்சும் திருதராட்டிரன் போல குருடரா இருக்கிற சர்வதேச நாடுகளுக்கு எங்களைக் குறைகூற என்ன தகுதியிருக்கு.. ” உப அதிபர் கேட்டார். அவருடைய வாதத்திலும் நியாயமிருப்பதால் ஐயாமுத்தர் கதிரை விவகாரத்தை அத்தோடு நிறுத்திவிட்டார்.

“ வ....ண...க்கமேம் ரீச்சர்... ” மாணவர்கள் எழுந்து அதிபருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

“ வணக்கம் எல்லாரும் நல்லாப் படிக்கிறியளோ ? ” உப அதிபர் கேட்டார்.

“ ஓ..ஓ...ஓம்ம்ம் ரீ.....ய்ச்சர்ர்ர்... ” மாணவர்கள் ஒரே குரலில் கோரஸ் போல இழுத்தார்கள்.

தான் பாடசாலையை விட்டு ஓடிய நாற்பது வருடங்களாக வகுப்பறைக் கல்வியில் யாதொரு புதுமையும் நடைபெறாமல் யாவுமே நீர்த்துப் போயிருப்பதை அந்த மாணவர் குரல்களின் நீட்சிமையில் கண்டு கொண்டார்.

அந்த வகுப்பின் ஆசிரியரும், உப அதிபரும் ஏதோ தமக்குள் பேசிக்கொண்டிருக்க இவர் மட்டும் அருகில் இருந்த பத்தாம் வகுப்பிற்குள் தனியாக நுழைந்தார். அது முற்றிலும் பெண் பிள்ளைகளுக்குரிய வகுப்பறை.

ஆசிரியர் மேசையில் நல்ல உறக்கம்.. மாணவிகள் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென அங்கே வந்த ஐயாமுத்துவை அவர்கள் யாரென்று தெரியாமல் மலங்க மலங்கப் பார்த்தார்கள்.

இளமைக் காலத்தில் மரவேலைக் கூடத்தில் வாத்தியார் நித்திரை கொள்ள வாசலில் இருந்து அதிபர் வருகிறாரா என்று காவலுக்கிருந்த தன்னுடைய இளமைக்காலத்தின் அழிவையும், இன்றும் அதேபோல அவர் கண் முன்னால் உறங்கும் ஓர் ஆசிரியரையும் பார்த்துக் கொண்டார்.

சாட்டையடி நமசிவாயத்திற்கு பின்னி இழுத்தது போல அவருக்கும் மாணவர்கள் முன்னிலையிலேயே கதறக்கதற வெழுத்தெறிய எண்ணி பெல்ரை வெளியே இழுத்தார்.

அந்த நேரம் பார்த்து பிள்ளைகள் " சேர்.. சேர்.. " என்று குரல் கொடுக்க ஆசிரியர் விழித்துக் கொண்டார். அசடு வழிய சிரித்தபடி புத்தகத்தைத் திறந்து ஏதோ சில கணக்குகளை ஆரம்பித்தார்.

முப்பது முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அந்த இளம் ஆசிரியரின் உறக்கமும், அதனால் வரும் ஆபத்தறியாத அப்பாவி மாணவரின் அவல நிலையும் ஐயாமுத்தருக்கே கவலையைக் கொடுத்தன.

அந்த ஆசிரியரின் உறக்கத்தைப்பற்றி உப அதிபரிடம் கூறலாமா விடலாமா என்று பல தடவைகள் யோசித்தார்.

அந்த ஆசிரியர் யாருடைய ஆள் என்பது முக்கிய பிரச்சனை.. அவருடன் பகைத்தால் தனது பயணத்திற்கு ஆபத்தாகிவிடும் என்றும் உள்ளூரப் பயந்தார். எல்லாமே சீரழிந்து கிடக்கும்போது நான் மட்டும் விழிப்பாக இருந்து என்ன வானத்தைப் பிளக்கப் போ-றனே ? என்று அவர் கேட்டால் அதற்கு ஐயாமுத்தரிடம் பதிலும் இருக்கவில்லை. ஆனாவில் சரிந்த கடதாசி மட்டை அகேனம்வரை சரிந்தோடுவது இயற்கை என்பதால் அவரால் மேற்கொண்டு எதையும் பேச முடியவில்லை.

www.padippakam.com



ஆசிரியர் அடையாளம் காட்ட இரண்டு இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிகளுடன் வருவதைப்போல மனதிற்குள் ஒரு காட்சி.. ஏன் சோலியென எண்ணி வாயைப் பொத்திக் கொண்டார்.

அதற்கு மேல் அவரால் அங்கு நிற்க முடியவில்லை.. கொழும்பிற்குப் புறப்பட ஒரு வானை அவசரமாக ஒழுங்கு செய்வதே சிறந்த வழி என்று நினைத்துக் கொண்டார். பாடசாலைக்கு கொடுப்பதற்காக மடியில் வைத்திருந்த இருபத்தையாயிரம் ரூபாவை-வயும் அப்படியே வைத்துக் கொண்டார். மறு நாள் அதிகாலையே கொழும்பு புறப்பட்டுவிட வேண்டுமென மனதில் எண்ணிக் கொண்டார்.

அதிபருக்குக் கூட எதுவும் சொல்லாமலே பாடசாலையை விட்டு வெளியே பாய்ந்தோடி வந்தார்.

அன்று ஆசிரியருக்கு அடித்துவிட்டு பாடசாலையை விட்டு ஓடியவர்..

இன்று ஆசிரியருக்கு அடிக்க முடியாமலே பாடசாலையை விட்டு ஓடினார்...

எனினும் அன்றைய ஓட்டத்திற்கும் இன்றைய ஓட்டத்திற்கும் யாதொரு பேதமும் இல்லாத நிலையையே அங்கு நிலவுவதாக அவருடய உள்ளுணர்வு சுட்டிக் காட்டியது.

## 43

கரகாட்டங்கள் முடிந்து ஐயாமுத்து நாடு புறப்பட திட்டமிட, டென்மார்க்கில் சிவபாலி வாங்கிய வீட்டை விட்டு புறப்பட வேண்டிய நிலையில் இருந்தார்.

மூன்று இலட்சம் கொடுத்து கூரையை மாற்றினாலும் விவகாரம் முடிந்துவிடுமென்று அவரால் நம்ப முடியவில்லை. அத்திவாரத்திற்குள்ளால் வரும் புதுவகையான அந்துப் பூச்சிகளதான் அவர் அவ்வாறு எண்ணக் காரணமாக இருந்தன.

வாங்கிய வீட்டை தலை முழுகிவிட்டு வாடகை வீட்டுக்குப் போவதா அல்லது தொடர்ந்து அந்த வீட்டுக்காகவே போராடி

www.padippakam.com



மண்ணோடு மண்ணாகப் போவதா? எது சரியானது என்று யோசித்தார்.

வீட்டை விட்டு மறுபடியும் வாடகை வீட்டுக்குப் போனால் ஐந்து இலட்சம்வரை நட்டம் ஏற்படும். வீட்டிலேயே தொடர்ந்து வாழ்ந்தாலோ மேலும் ஒரு மில்லியனுக்கு மேல் கொட்டி இறைக்க வேண்டும். வட்டி, வரி, கிஸ்தி என்று இன்னொரு பிறவி எடுத்து வந்துதான் டேனிஸ்காரரின் கடனை அடைக்க முடியும். இரண்டுமே நட்டமாக இருந்ததால் எந்த நட்டம் நல்ல நட்டம் என்று யோசித்தார்.

அதைவிட இன்னொரு பிரச்சனை மனதை வாட்டியது. தொல்லைகளில் எல்லாம் பெரிய தொல்லையாக அது இருக்கும் என்று உணர்ந்தார். ஏன் வீட்டை விற்றாய் என்று சனம் கேட்கும். உண்மையைச் சொன்னால் கல்யாண வீடு, செத்தவீடு, கோயில் என்று எல்லா இடமும் சிவபாலி கதையே கையும் காலும் வைத்து உலாவர ஆரம்பித்துவிடும்.

ஏற்கெனவே அவர் வீட்டின் ஜன்னல் உடைந்த கதை பிரான்சிற்கு வீடு உடைந்த கதையாக திரிபுபட்டுப் போனதும், அங்கிருந்து பலர் வீடு உடைந்த கதையை விசாரிக்க போனெடுத்ததும் பழைய கதையாக மனதில் இருந்தது.

கறுவல் கண்ணாடி ஜன்னலை உடைக்க, தான் பேயோட்டத்திற்கு மந்திரவாதியைக் கூட்டிவந்து ஆடிய கூத்தும் கதையோடு கதையாக அம்பலத்திற்கு வரும் என்று பயந்தார். இவற்றையெல்லாம் யோசித்தபோது அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

எந்தப் பக்கம் திரும்பினாலும் வில்லங்கமே காத்திருப்பதை உணர்ந்தார். ஆகவே ஏதோ ஒரு வில்லங்கத்தைச் சந்தித்துத்தான் ஆகவேண்டுமென முடிவு செய்து கொண்டார். இருந்தாலும் தானே குற்றவாளியென்று சமூகத்தின் முன் நின்று அவமானப்படாமல் கதையை எங்காவது திசை திருப்பலாமா என்றும் யோசித்தார். எங்காவது ஓர் ஆவுரஞ்சிக் கல்லு அகப்படுகிறதா என்று மூளையால் தடவிப் பார்த்தார்.

www.padippakam.com



அதே நகரத்தில் சுந்தரவதனம் என்றொரு உணர்ச்சிக் கவிஞர் இருப்பது நினைவுக்கு வந்தது. எத்தனை தடவைகள் முதுகில் குத்தினாலும் தாங்கக் கூடிய மனிதன் என்பதால் அவரையே தான் கிண்டிய நரகக் குழிக்குள் இறக்கிவிட்டு தப்பிக்கொள்ள எண்ணினார்.

அந்த நகரத்தில் உள்ள பெரும்பாலான மூடர்களும், தமிழ் தாபனங்களும் சிகரங்களைத் தொட முடியாமல் போனதிற்கு சுந்தரவதனமே காரணமென சொல்லி, தங்கள் மூடத்தனங்களை மறைக்க அடிக்கடி பம்மாத்து பண்ணுவது வழமையாக இருந்தது. அதுவே சிவபாலிக்கும் வசதியாக இருந்தது.

தீமை செய்வோருக்கும் பதிலடியாக தீமை செய்யக் கூடாது என்று கருதும் சுந்தரவதனத்துடன் பகைப்பது சிவபாலிக்கு எதிர்காலத்தில் யாதொரு பிரச்சனையும் தராது என்பதும் புரிந்தது. தன்னுடைய துயரங்களுக்கெல்லாம் அவர்தான் காரணமென கயிறு திரித்தால் விட்ட தவறுகளில் இருந்து தான் எளிதாகத் தப்பிவிடலாமென முடிவு செய்தார்.

அப்பாவியான கவிஞருடன் எப்படிக் கொழுவுவது என்று பல வழிகளிலும் யோசித்தார். அப்போதுதான் தொலைக்காட்சியில் நடந்து கொண்டிருந்த விலங்குகளின் நிகழ்ச்சி ஒன்று அவருடைய கண்களுக்குப் பட்டது.

காயப்பட்ட கரடி ஒன்று கீழே விழுந்து கிடந்து துடிக்கிறது.. அதனுடன் ஒன்றாகத் திரிந்த நரிகளும், மற்ற விலங்குகளும் கரடியின் பின்புறமாகக் காயப்பட்ட இடத்தையே கடித்து கடித்து இழுத்தன. கரடி மன்றாடுகிறது.. ஆனால் அதனுடைய காயப்பட முந்திய கூட்டாளிகளான விலங்குகள் அதை விடவில்லை... கரடியின் காயத்திற்குள்ளால் தலையைப் புகுத்தி குடரை வெளியே இழுக்கின்றன.. கரடி இறக்கிறது.. எல்லா விலங்குகளும் அதை இழுத்துப் புரட்டித் தின்னுகின்றன.. மேலே கழுகுகள் வட்டமிடுகின்றன.. அதைப் பார்த்ததும் சிவபாலிக்கு சகல கேள்விகளுக்கும் விடை கிடைத்தது.

காயப்பட்டுக் கிடக்கும் கரடிக்காக போராட ஏதாவது விலங்குகள் வந்தனவா என்று யோசித்தார். அப்போதுதான் அவருக்கு

www.padippakam.com



வாழ்க்கை இரகசியம் விளங்கியது. காயப்படுகிறவர்களுக்காக சமுதாயம் ஒருபோதும் முன்வராது, அது காயப்படுத்துகிறவர் பக்கமே வசதியாக நிற்கும் என்பதையும் கண்டு கொண்டார். இதுவரை காலமும் பழி சுமத்தப்பட்ட எவருக்காகவும் சமுதாயம் நீதி கேட்காமல் இருப்பது ஏன் என்ற கேள்விக்கான பதிலும் அக்கணமே அவருக்குக் கிடைத்தது.

அவருக்கு இப்போது சிரிப்புச் சிரிப்பாக வந்தது... தொலைபேசியை எடுத்தார். சாவில்லை மறுமுனையில் கவிஞர் சுந்தரவதனமே பேசினார்..

“டேய் என்னடா கவிதை எழுதுறாய்... ” ஆத்திரமாகக் கேட்டார்.

“நீர் ஆரப்பா.. ” கவிஞர் கலக்கத்துடன் கேட்டார்.

“ என்ரை பேர் சிவபாலி.. ஆனால் உனக்கு நான்தான் சவபாலி... கவனம் ”

“ சிவபாலியோ... என்னுடைய எந்தக் கவிதையைப் பற்றிச் சொல்லுறீங்கள் என்று அறியலாமா?” கவிஞர் வினவினார்.

அவர் என்ன கவிதை எழுதினார், எப்போது எழுதினார்.. என்பதெல்லாம் சிவபாலிக்கு அடியோடு தெரியாது. சற்று குழம்பினார்.

“நீ சுத்தாதையடா துரோகி .. நாட்டுக்கு மட்டும் போவாயெண்டு நினைக்காதை... ” இற்றுப் போன கயிறொன்றை எடுத்து கவிஞரை நோக்கி வீசினார்.

“ஐயா நீங்கள் ஆள் மாறி எடுத்துப் போட்டியள்.. நாட்டுக்காகத்தானே பாடுபட்டு சிறையிலை கிடந்து, அடிவாங்கி, நோயாளியாகி இஞ்சை வந்தும் ஏழையாகக் கிடக்கிறன்.. ” கவிஞர் அழுதார்.

“பொத்தடா வாயை... கவிஞரின் எந்தக் கவிதையை

இழுத்து விடுவதென்று சிவபாலிக்குத் தெரியவில்லை. சிறிது தடுமாறினார்.

"ஐயா ஊரைச்சுத்தி வாயிலை போடுறவனுகள் எல்லாம் என்னோடைதான் கொழுவலுக்கு வாறாங்கள்... நீங்களும் ஏன் இந்த வேலை செய்யிறியள்... உங்கடை கோமாளிக் கூத்துகளுக்காக தாய் நாட்டையும், தாய்நட்டுப் பற்றுள்ள என்னையும் ஏனையா ஏலம்விட்டு சீவிக்கிறியள்..." கவிஞர் புலம்ப ஆரம்பிப்பது தெரிந்தது. அதற்குள் தான் முந்திவிட எண்ணினார்.

"டேய்... உமாதேவியாருந்தை கூந்தலிலை வாற வாசம் செயற்கையானது எண்டு ஏனடா எழுதினாய்.. "சிவபாலிக்கு தெரிந்த ஒரேயொரு கதை அதுதான்... வேறு வழியில்லை இழுத்துவிட்டார்.

" உமாதேவியாருந்தை கூந்தலுக்கும் துரோகிப் பட்டத்துக்கும் என்னையா தொடர்பு.. " கவிஞர் அடி தலை விளங்காமல் புழுவாய் துடிதுடித்தார். அவ்வளவே போதும் சிவபாலிக்கு போனைக் கீழே வைத்தார். மனதிற்கு பெரிய ஆறுதலாக இருந்தது.

இனி கவிஞர் தன்னுடைய செலவிலேயே போனெடுத்து.. தன் மீது அபாண்டமான பழி சுமத்திப் போட்டான் சிவபாலி என்று பேசத் தொடங்குவார். தன்னுடைய கவிதைப் புத்தகங்களுடன் வீடு வீடாகப் போய் உதாரணம் காட்டுவார். கதை திசைமாறும்.. கவிஞருக்கும் சிவபாலிக்கும் மோதல் என்று சனம் கதைக்கும்... அதற்குள் வீட்டை விற்று வாடகை வீட்டிற்குள் நுழைந்துவிட வேண்டுமெனத் திட்டம் தீட்டிக் கொண்டார்.

தன்னைப் போன்றவர்களின் சகல கோமாளித்தனங்களை மறைக்க என்றும் உதவியாக உள்ள உமாதேவியாரின் கூந்தலின் புகழை எண்ணி மெய் சிலிர்த்தார்.

வீட்டு முகவருக்கு மறுபடியும் போனெடுத்து வீட்டை விற்பனைக்குப் போடும்படி கூறிவிட்டு, வாடகைக்கு வீடெடுக்க விண்ணப்பப் படிவம் எடுக்கப் புறப்பட்டார்.

www.padippakam.com



ஒரு இலட்சம் இலாபம் கிடைச்சுது அதுதான் வீட்டைத் விற்றுட்டன் என்று எல்லோரும் விடுவது போல ஒரு ரீல் விடவும் தன்னைத் தயார் செய்து கொண்டார்.

தொலைபேசி மணி அடித்தது.. எடுத்தார்.

மறு முனையில் மீண்டும் கவிஞர்..

" ஐயா எரிநெருப்பு, மானத்தமிழன், தலையெடுப்பேன்.. ஈழத்து இன்பப் பலாக்கனி ஆகிய நாலு தொகுதிகளாக என்னுடைய கவ-ிதைகள் வந்திருக்கு.. ஒரு இடத்திலையும் நான் உமாதேவியாா-ின் கூந்தலைப் பாட இல்லையே.. கோயிலுக்கே வாறன் கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்யிறன்... " கவிஞர் பரிதாபமாக மன்றாடினார்.

"டேய்.. நாட்டில மக்கள் படுற கஸ்டம் தெரியாமல் கவிதைத் தொகுதி வெளியிடுறியோ.. உன்னுடைய தவறு மன்னிக்க முடியாத தவறு... இதை நான் மட்டும் சொல்லேல்லை.. சுவிசிலையே கதைக்கிறாங்கள்... ஏலு மெண்டால் நாலு நாட்டிலை அடிச்சு விசாரிச்சுப் பார்.. " போனைக் கட் பண்ணினார் சிவபாலி.

தனது நோக்கம் என்றோ ஒரு நாள் முடிவடைய, கவிஞரின் ஏதாவது ஒரு பழைய கவிதையை படிக்க நினைத்தார். பின் இரகசியமாக கவிஞர் வீடுபோய் மற்றவருக்குத் தெரியாமல் அவரைப் பாராட்டிவிட்டால் நடந்தவை எல்லாவற்றையுமே பூசி மெழுகிவிடலாம் என்றும் முடிவு செய்தார்.

அதே பாராட்டுடன் கவிஞரிடமே கடனாக சில ஆயிரங்களைக் கறந்துவிடவும் உணர்ச்சிகரமான ஒரு வழி ஓடை போல தெரிவதை-தயும் புரிந்து கொண்டார். வாழ்க்கையை எண்ணிச் சிரித்தபடியே வேகமாக வாடகை வீடு எடுக்கும் இடத்திற்கு நடந்தார்.

## 44

முந்தய திட்டப்படி ஐயாமுத்து யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட மேலும் ஒரு வாரம் பாக்கியிருந்தது. ஆனால் அதுவரை அங்கு நிற்க அவரால் முடியவில்லை. விரைவாக அங்கிருந்து வெ

படிப்பகம்

www.padippakam.com



எரியேறிவிட எண்ணினார். வியர்வை படபட சாட்டையடி பட்ட இடம் எரிந்து கொண்டிருந்தது. பழைய மூலக் கொதிவேறு இடைக்கிடை வந்து வெறுப்பேற்றியது.

தேனும் பாலும் ஓடுவதாக மேலை நாடுகளில் உள்ள ஊடகங்களில் வந்த செய்திகளைக் கேட்டு நாடு வந்த அவருக்கு அங்கு கண்ட காட்சிகள் அடிதலையான தோற்றத்தையே வழங்கியிருந்தன. அவர் கண் முன்னாகக் கண்ட நிதர்சனங்கள் மனதில் மெல்லிய கவலையை உண்டு பண்ணியிருந்தன.

சிவபாலியை கறுவலோடு மூட்டிவிட்டு வேடிக்கை பார்த்ததைவிட நாட்டுக்கு வந்து திரும்பி, பொய்யான செய்திகளைக் கூறுவோருடைய மண்டைகளைப் பிளந்திருக்கலாமென ஒரு கணம் நினைத்தார்.

அவர் ஏழையாக இருந்த காலத்தில் என்னென்ன நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமெனக் கனவு கண்டாரோ அதில் ஏதோ ஒன்றையாவது செய்துவிட வேண்டுமென எண்ணி வந்தவருக்கு கடைசியில் ஏமாற்றமே எஞ்சியிருந்தது.

மேலை நாடுகளில் உள்ள நல்ல நல்ல திட்டங்கள், அவர்கள் எப்படியெல்லாம் முன்னேறியிருக்கிறார்கள் என்பதை யாராவது அறிய விரும்புகிறார்களா என்று தேடித்தேடிப் பார்த்தார். அது பற்றிய ஆர்வம் படித்தவர்களிடமிருந்தே வராதிருப்பது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை தான் சரியான ஆட்களை சந்திக்கவில்லையோ, அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் இதுபற்றி அக்கறை காட்டவில்லையோ எது சரி என்பது தெரியாமல் தடுமாறினார்.

பணத்தைத் தவிர அவரிடமிருந்து எவரும் எதையும் கேட்கவில்லை என்பதைக் கண்டு கொண்டார்.

நாடு வந்து படாதபாடுகள் பல பட்டு கடைசியில் கரகம் எடுத்தது சாட்டையடி பட்டதுவரை எல்லாவற்றையுமே நல்ல பாடமாகக் கருதினார். ஒவ்வொரு விடயத்தையும் ஒன்றுந் தெரியாத பெக்கோ

www.padippakam.com



போல கேட்டுக் கொண்டார். அதே நேரம் நாங்கள் எங்கே போகிறோம், இப்படி சிந்தித்தால் எதிர் காலத்தில் நம் வாழ்வு என்னாகும் என்பதை மௌனமாக தனக்குள்ளேயே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டார்.

டென்மார்க் போவதற்கு முன் எம.பியின் வீட்டுக்கு ஒரு தடவை போய்வர வேண்டுமென நினைத்தார். அவர் பாடசாலையில் படித்த காலத்தில் ஒரு தடவை ஆசிரியர்கள் பற்றவில்லை உதவி புரியுங்கள் என்று கேட்டு ஐயாமுத்தரும் அவருடைய வகுப்பு மாணவர்களும் எம். பி வீடு போயிருந்தார்கள்.

முதல் முதலாக மாணவர்களைப் பார்த்ததும் எம்.பி அதிர்ந்து போய்விட்டார். சகல குறைகளையும் கேட்டறிந்த அவர் உடனடியாக யாழ்ப்பாணம் கல்விக்கந்தோருக்கு தொலைபேசி எடுத்து அவர்களை தாறுமாறாகத் திட்டி, உடனடியாக இரண்டு புதிய ஆசிரியர்களை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்.

அவருடைய சேவைத்திறனையும், உடனடியாக நடவடிக்கை எடுக்கும் ஆற்றலையும் அன்று மாணவர்கள் எல்லோரும் மெச்சினார்கள். பின்னர் ஐயாமுத்தர் டென்மார்க் வந்து தொலைபேசிகள் பற்றி அறிந்த பிறகுதான் எம்.பியின் சேவைத்திறனும் ரெலிபோன் விளையாட்டு மகிமைகளும் தெரியவந்தது.

அவர் தொலைபேசியில் இலக்கத்தைச் சுழற்றாமலே கல்விக்கந்தோருக்கு கதைத்த கூத்தை ஐயாமுத்து எம்.பியிடமே ஒரு தடவை நேரடியாக நினைவுபடுத்த ஆசைப்பட்டார். இலக்கம் இல்லாமலே மனதால் நினைத்து பேசும் தொலைபேசி இன்னமும் வரவில்லை என்ற உண்மையை எம்.பியிடம் சொல்லிவிட்டுப் போக ஆசைப்பட்டார். ஆனால் பிறகு சேகரம்தான் எம்.பி இறந்து போய்விட்டதாக அவரிடம் சொன்னான்.

உலகம் எப்படிப் போகிறது, நாம் எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று தெரியாமல் கிணற்றுத் தவளை போல வாழ்ந்த காலத்தில் தான் எப்படி ஏமாற்றப்பட்ட வாழ்வு வாழ்ந்தேன் என்று சிந்தித்துப் பார்த்தார். இன்றும் அதேபோன்ற தகவல் குறைவு சமுதாயத்தில் நி

படிப்பகம்

www.padippakam.com



லவுவதை அவரால் உணர முடிந்தது. அங்குள்ள விதானையார் ஒரு-வருடன் பேசிப்பார்த்து தனது எண்ணத்தை மேலும் ஒருபடி தெளிவாக உறுதி செய்து கொண்டார்.

ஆட்சியில் இருப்பவர்கள் உருவாக்கி வைத்திருக்கும் நாட்டை பார்த்தபோது ஐம்பது வருட ஜனநாயகம் அடைந்திருக்கும் தோல்வியை நிதர்சனமாகக் கண்டு கொண்டார்.

கட்டுவேலை செய்யுமிடத்திற்கு போய் வெறுங்காலால் உழக்கி சீமெந்து குழைத்த கதிர்காமலிங்கத்தை சந்தித்தார். அப்படி வேலை செய்வது தவறான செயல் என்று கூறினார். அதுபோல கடகத்தில் மண்ணைப் போட்டு கழுத்து நசிய தூக்கிச் செல்லும் சிவகங்கைச் சந்தித்தார். அது தவறென்றும், முதுகெலும்பிற்கு ஆபத்தான செயல் என்றும், சர்வதேச வேலைச் சட்டப்படி குற்றமான செயல் என்றும் கூறினார்.

எல்லோரும் அவரைப் பார்த்துக் கேலி செய்து சிரித்தார்கள். கடைசியில் எல்லாவற்றையும் வெறுத்து கள்ளுக் கொட்டில் போய் கள்ளைக் குடித்தார். அங்கும் கலப்படம் இருப்பதாக அவருடைய பாடசாலைத் தோழன் சிவராமதாஸ் கூறி, பட்டைச் சாராயம் வாங்கித்தரும்படி கேட்டான். யாருடைய மடி வீங்கியிருந்தாலும் மடியில் துப்பாக்கி இருக்குமோ என்று எண்ணிப் பயந்தார். வெறுங்கையுடன் யாரை நம்பி அந்த மண்ணில் நடமாடுவது என்று தெரியாது பல நாட்கள் தவித்தார்.

மனிதனின் தேகத்தை துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க முடியாதபடி, ஷெல் துணிக்கைகள் கிழக்காதபடி ஒரு புதிய மருந்தைக் கண்டு பிடித்து ஆயுதங்களை செயலிழக்கச் செய்யாதவரை தன் போன்ற வெறுங்கை மனிதருக்கு அங்கொரு வாழ்க்கை என்பது கடினம் என்றும் தெரிந்தது.

எவைகளை நினைத்தாரோ அவை எல்லாவற்றையும் மனதிற்குள்ளேயே பேசிக் கொண்டார். யாரையும் நம்பி எதையுமே பேசப் பயந்தார். இறைவன் படைத்த பற்களுக்கு அடிக்கடி நன்றி கூறினார். வெளியில் உள்ள எல்லாவற்றையும் பார்த்து சிரிப்பதற்கு

www.padippakam.com



அது உதவியது. இதுவரை காலமும் பற்களைப் பாதுகாருங்கள் என்றுதான் அவர் படித்திருந்தார். இப்போது பற்களே அவரைப் பாதுகாப்பதை உணர்ந்து கொண்டார். யாரைப் பார்த்தாலும் பற்களெல்லாம் வெள்ளையாக சிரித்துக் கொண்டார்.

அன்றிரவே சேகரத்தை அழைத்து நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார். அவன் ஒருவனிடம்தான் அவரால் மனம் விட்டுப் பேச முடிந்தது.

, தலைவாசல், சுற்றுமதில் என்று கட்டிடங்கள் கட்டி பணத்தை வீணாக்க வேண்டாம் , என்று அவனிடம் கூறினார்.

அதிகமானவர்கள் தொடர் நாடகங்களில் வரும் வீடுகள் போல பெரிய பெரிய வீடுகளைக் கட்டியிருந்தார்கள். வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து பணத்தை வாங்கி மேலும் பலர் வீடுகளைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

, பிள்ளைகளிடமிருந்து தொடர்ந்து பணத்தை வறுக வேண்டுமானால் வீட்டுக்கு அத்திவாரத்தைப் போட வேண்டியதுதான் சிறந்த வழி , என்று கள்ளுக் கொட்டிலில் வைத்து சிவராமதாஸ் சொன்னது நினைவுக்கு வந்தது. எல்லாவற்றையும் சேகரத்திற்கு விபரமாகச் சொல்லி விடயத்திற்கு வந்தார்.

“ சுள்ளி பொறுக்கிக் கிழவி செய்வது போல மற்றவர்களுடன் போட்டி போட்டு வீட்டுக்கு போட்டிக்கோ கட்ட வேண்டாம் ” என்றார். பக்கத்து வீட்டுக்காரனுக்குக் கூடத் தெரியாமல் வீட்டிற்குள் நிலத்தடி அறையொன்றை அமைக்கும்படி சொன்னார். அதற்குள் அரிசி, மாவு போன்ற நீண்ட காலத்திற்கு பயன்படக் கூடிய பொருட்களை சேமித்து வைக்க வேண்டும் என்றும் புத்திமதி கூறினார்.

“ பதுக்கலோ .. ” சேகரம் ஆச்சரியத்துடன் கேட்டான்.

“ இல்லை இது பதுக்கல் இல்லை.. மறுபடியும் பிரச்சனை வந்தால் மக்களுக்கு பெரிய உணவுத் தட்டுப்பாடு வரும். ஒவ்வொருவரும் அறிவினால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள

படிப்பகம்

www.padippakam.com



வேணும். பட்டினியால சாகக் கூடிய நிலை வந்தால் அக்கம் பக்கம் இருக்கிற சனங்களையாவது சாகாமல் காப்பற்ற அது உதவும். வீடும், மாளிகையும் கட்டுறதைவிட இப்ப இருக்கிற நிலையிலை அதுதான் புத்திசாலித்தனமா எனக்குப் படுகுது.. ”

சேகரம் அவரையே கூர்ந்து பார்த்தான்.

“ நீ ஒரு இரகசியமான நிலத்தடி அறையைக் கட்டினால் ஆபத்து வரும்போது அதற்குள்ளேயே மறைந்திருக்கலாம். எனக்கென்னவோ வெளியில இருக்கிற பங்கர் பாதுகாப்பானதாக தெரியேல்லை..”

“ நாங்கள் மட்டும் தப்பி வாழ நினைக்கிறமாதிரிக் கிடக்குது.. ”

“ உண்மைதான் ரஸ்யாவைப் பாத்தனியோ அங்கை என்ன நடந்திச்சு.. ”

“ தெரியாது... ”

“ சதி மூலம் ஆட்சியைக் கவிழ்த்த உடனே மக்கள் எல்லாரும் ஒண்டு திரண்டு வீதிக்கு இறங்கியிட்டாங்கள்... உலக நாடுகளால ஒண்டும் செய்ய ஏலாமல் போச்சு... மக்கள் ஒரு சக்தி”

சேகரம் மௌனமாக இருந்தான்.

“செக்கோசுலாவியாவிலை என்ன செய்தாங்கள்.. எல்லாரும் தெருவில இறங்கினாங்கள்.. மக்கள் சக்திக்கு பயந்து உலகம் இறங்கி வந்திச்சு... இருவத்தைஞ்சு வருசமா நாங்கள் மக்கள், மக்கள் எண்டபடி பயந்து கிடக்கிறம்... ஒண்டு எல்லாரும் வீதியிலை இறங்க வேணும் இல்லாட்டி பாதுகாப்பா பங்கருக்குள்ளை இறங்க வேணும். இரண்டும் இல்லாமல் அடையாள அட்டையோடை எங்கடை உயிரை மற்றவன்ரை கையில கொடுத்திட்டு, எங்கடை உயிரை மற்றவனட்டை பிச்சை கேட்கக் கூடாது.. துப்பாக்கி வெடி மட்டும் மரணமில்லை பட்டினியும் மரணம்தான்... ” ஐயாமுத்தர் உணர்ச்சியாகப் பேசியப

www.padippakam.com



டியே தொடர்ந்தார்.

" அந்தா அந்தப் பனை மரத்தில துளை போட்டு சிறிய கமேரா பூட்டி வை.. உள்ளை நிலத்தடி அறையிலை ஒரு சின்ன ரீவீ பூட்டி வெளியே ஆர் வாறாங்கள் என்பதைப் பார்க்க வேணும். நீ அடம்பரமா ஓடித்திரியிற மோட்டார் சைக்கிளை விட நான் சொல்லுற கமேரா விலை குறைவு.. நீ தொடர் நாடகம் பாக்கிற ரீவியை விட நான் சொல்லுற ரீ.வி விலை குறைவு.. டென்மார்க் போனதும் முதல் வேலையா ஒரு கமேரா வேண்டி ஆரட்டையாவது குடுத்துவிடுறன்... கார் பற்றிரியிலை அதை வேலை செய்ய வைக்க வேணும். சுற்றாடலில் நடப்பதில சந்தேகம் வந்தால் உடனே நிலத்தடி அறைக்குள் பாதுகாப்பா போவிட வேணும்.."

" நீங்கள் சொல்லுறது சரி... இதை கண்டு பிடிச்சால்... "

" கண்டு பிடிக்காட்டி மட்டும் உன்னை உயிரோடை வாழவிட்டிடுவாங்களே ? " மீண்டும் கேட்டார். சேகரம் மௌனமாக இருந்தான்.

"எப்பவுமே அச்சம்தான் எங்கடை துன்பங்களுக்குக் காரணம்... உலக நாடுகளை நம்பியிருக்க வேண்டாம். வெளிநாடு பூராவும் சுற்றித் திரிஞ்சு எங்களுக்கு உலக நாடுகளைப் பற்றி இப்ப வடிவாத் தெரியும்.. போர் வந்தால் குடாநாடு துண்டாகும்.. உனக்கு அபிமன்யு கதை தெரியுமே.. "

" கேள்விப்பட்டிருக்கிறன் அவ்வளவாத் தெரியாது.. "

" பதின் மூண்டாம் நாள் போரிலை அவனை எதிரியள் சுற்றி வளைச்சுப் போட்டாங்கள்... உதவி கேட்டு சங்கை ஊதினான்.. அருச்சுணனுக்கு அந்தச் சத்தம் கேட்கேல்லை... அபிமன்யு போரில் இறந்தான். அதுபோலதான் நாங்கள் வெளிநாடுகளிலை இருக்கிறம்... எங்கடை நிலையும் அருச்சுணன் போலதான்.. உடனை உதவ ஏலாது.. அதுதான் இப்பிடியெல்லாம் கதைக்கிறன்.. உன்ரை உடலி-லை உயிர் இருக்கும்வரை எச்சரிக்கை அவசியம்... உன்னைச் சுற்றி இருக்கிற இந்த மக்களை பட்டினியிலை சாக விட்டிடாதை.. "

www.padippakam.com



கையில் இருந்த மூன்று இலட்சம் ரூபாவையும் அவனிடம் கொடுத்து உடனடியாக உணவுப் பொருளை வேண்டி வைக்கும்படி கூறினார்.

" ஒன்று போராடு... அல்லாட்டி நான் சொல்லுறபடி கேட்டு உன்னைப் பாதுகாத்துக்கொள் " என்று கூறிவிட்டு அன்றே கொழும்பு பயணமாக ஏற்பாடு செய்யும்படி கூறினார்.

அன்று காலையிலேயே பயணம் என்றதும் சுள்ளி பொறுக்கிக் கிழவி பயந்துவிட்டாள்.. " வந்த சனம் என்னம் நாலு நாள் நிக்க முடியேல்லையே எண்டு யோசிக்க.. நீங்கள் நாலு நாள் முந்தியே போ-றியளே.. " என்று கேட்டாள். அவளை ஆறுதல்படுத்தி கொழும்புவரை அழைத்துச் செல்வதாகக் கூறினார். அதற்குப் பின் கிழவி சிறிது ஆறுதலடைந்தாள். சேகரத்திற்கு துணையாக வர ஒரு ஆள் தேவை என்பதால் அது அவனுக்கும் சிறிது ஆறுதலாக இருந்தது.

அன்று அதிகாலை யாருக்குமே பயணம் சொல்லாமல்.. இருபது வருடங்களுக்கு முன் போரினால் பாதிக்கப்பட்டு ஓடியது போல அன்றும் ஐயாமுத்துவின் பயணம் ஆரம்பித்தது. பிறந்த ஊரிலிருந்து ஒரு பிடி மண்ணை அள்ளி பெட்டியில் வைத்துக் கொண்டார். அவர் கண்கள் குளமாயின..

" உலகத்தில எந்த மூலையில் மடிந்தாலும் இந்த மண்ணைக் கட்டிக் கொண்டுதான் என்னுடைய இறுதி யாத்திரை நடக்கும் " என்று கூறினார்.

" சேகரம் தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது... இதை விட்டால் அவர்களால வேறை எதையும் செய்ய முடியாது எண்டுறது எனக்கு இப்ப வடிவா விளங்குது.."

மேலும் என்னென்னவோ சொல்ல நினைத்தார்... சொல்லவில்லை வானில் ஏறினார்.

ஊரில் உள்ள செம்பாட்டு மண்ணை சுழற்றிக் கிளப்பியபடி அவருடைய இரண்டாவது தாய்நாட்டுப் பிரிவு ஆரம்பமானது...

www.padippakam.com



## 45

சிவபாலியின் வீடு விற்பனைக்குப் போடப்பட்டுவிட்டது. இது சரியா அல்லது அது சரியா என்று யோசிப்பதைவிட வீட்டை விற்றுவிடுவதே சரியென நினைத்தார். அதுவே அடிபட்டு நொந்த தனக்கு சிறந்த வாழ்வாக அமையுமென்றும் விளங்கிக் கொண்டார்.

எது செல்வம் என்று தனது சிற்றறிவால் தேடித் தேடிப் பார்த்தார். அப்பொழுதுதான் மேலைநாடுகள் உண்மையிலேயே பணக்கார நாடுகள்தானா என்ற கேள்வி அவர் உள்ளத்தில் உதயமா-னது.

தனது உடலில் உள்ள கோடானுகோடி உயிரணுக்களை தினசரி கொலை செய்து அர்த்தமில்லாத வாடகைக்கும், வரிக்கும் கட்டித் தொலைக்க செக்குமாடாக ஓடிக் கொண்டிருக்கிறேனே என்று எண்ணி வருத்தப்பட்டார். தன்னிடமுள்ள ஒவ்வொரு உயிரணுவையும் யாருக்காகவோ பாவித்து நாசமாக்கிவிட்டேன என்று அழுதார். மாட-ாக உழைத்து களி தள்ளிவிட்ட தனது முள்ளெலும்பைத் தடவியப-டியே கண்ணீரைத் துடைத்தார்.

நாட்டில் இருந்த சொத்தையெல்லாம் விற்றுவிட்டு, இங்கு வந்து இருபது வருடங்களுக்கு மேலாக மாடாக உழைத்து மண்டையைப் போட்ட தமிழர்களை நினைத்தார். அவர்கள் கையோடு கொண்டு போனது என்னவென்று யோசித்துப் பார்த்தார்.

அவருக்குச் சிரிப்பு வந்தது, தன்னை மறந்து சிரித்தார். அத்தருணம்தான் தடாலடியாக ஒரு முடிவுக்கும் வந்தார். என்ன நட்டம் வந்தாலும் காரியமில்லை வீட்டை விற்கப் போடுவதுதான் ஒரே வழி என்று உறுதியாக முடிவு செய்தார்.

ஆனால் அவருடைய வீட்டை அறிவுள்ள எவரும் வாங்க முன்வரமாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும். கடைசியாக அது வாங்க ஆளில்லாத நிலையில் ஏலத்தில்தான் போகும் என்பதையும் உணர்ந்து கொண்டார்.

www.padippakam.com


எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அவர் அரை மில்லியன் குறோணர்களை அந்த வீட்டிற்காகக் கட்டியே ஆகவேண்டிய நிலை இருந்தது. மாதாமாதம் சிறு தொகையாகக் கட்டலாமெனக் கணக்கைப் போட்டால் இந்தப் பிறவியில் அவருடைய கடன் முடியாது என்பதும் தெரிந்தது.

இப்படியான தருணத்தில் மீள்வதற்கு என்ன வழியென வீட்டை விற்றவனிடமே விசாரித்துப் பார்த்தார். மேலும் ஒரு தடவை கடனெடுத்து, இன்னொரு விலை குறைந்த வீட்டை வாங்கும்படியும், இரண்டு வீட்டிற்கும் சேர்த்து மாதாந்தம் பணத்தைக் கட்டினால் சரியாகிவிடும் என்றும் வழி காட்டினான்.

நிறையத் தமிழர் இலாபத்திற்கு வீடுகளை விற்று, புது வீடு போவதாகக் கூறும் கதைகளின் சூட்சுமம் இதுதானோ என்றும் யோசித்தார். இந்தப் பிறவிக்குள்ளேயே பட்டகடனைத் தீர்க்கலாம் என்று டென்மார்க் வந்த அவருக்கு இப்போது வந்திருப்பதோ ஏழேழு பிறவிகளுக்கும் மீள முடியாத கடன் என்பது தெரிந்தது.

அந்த நேரம் பார்த்துத்தான் யாரோ ஒருத்தி தொலைக்காட்சியில் தோன்றி அகதிகளுக்கும், வெளிநாட்டவருக்கும் எதிராக சட்டங்களை இறுக்க வேண்டும் என்று ஒப்பாரி வைத்தாள். சிறு பொழுது அங்கு என்ன கூத்து நடைபெறுகிறது என்று அவதானித்துப் பார்த்தார்.

இன்னொருவன் வந்து வெளிநாட்டவர் தாய் நாட்டில் திருமணம் செய்வதானால் இருபத்து நான்கு வருடங்கள் இங்கு வாழ்ந்திருக்க வேண்டுமென்றும், அத்தோடு இருப்பதற்கு வீடும், வங்கியில் ஐம்பதாயிரம் பணமும் இருப்பில் வேண்டுமென்றும் கோரும் சட்டத்தை விளக்கினான். டென்மார்க்கில் உள்ளதுபோன்ற இறுக்கமான திருமணச் சட்டங்களை நோர்வே, கொலண்ட் போன்ற நாடுகளும் அமல் செய்ய விரும்புவதாகவும் சொன்னான்.

பிறகு இன்னொருத்தி வந்தாள். இருபத்தி நான்கு வயதிற்குக் குறைந்த அதி உயர் கல்விகற்ற வெளிநாட்டு வாலிபரென்றால் டென்மார்க்கில் வேலை செய்ய வீசா விரைவாக வழங்கப்படும் என்று கூறினாள்.

www.padippakam.com



அகதியாக வந்து, தனது படிப்புத்திறன், இளமைத்திறன் எல்லாவற்றையும் இன்னொரு நாட்டிற்கு பறி கொடுத்துவிட்டு கடனாளியாக நிற்கும் தனது பரிதாப நிலையை, வரப்போகும் படித்த இளைஞனின் எதிர்காலத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தார்.

இருபத்தி நான்கு வருடங்கள் தாய் நாட்டில் திருமணம் செய்வதற்கு மறுக்கபட்ட தமிழ் இளைஞரை எண்ணினார். தமது வலிமையான கருவளமுள்ள இளமைக்காலத்து வாழ்வை அவர்கள் வேலை செய்தே கழிக்க வேண்டிய கட்டாயம் அந்தச் சட்டத்தில் இருப்பதை அடையாளம் கண்டார்.

தாய் நாட்டில் காயடிக்கப்பட்டு வண்டியிழுக்கும் காளை மாடுகளின் கடின உழைப்பையும், பாடுபட்டு முடிய அவை இறைச்சிக் கடைக்கு அடிமாடுகளாக அனுப்பப்படும் பரிதாப வாழ்வையும், எல்லாம் முடிந்து இருபத்தெட்டு வயதிற்குப் பின் திருமணம் முடிக்க நாடு போகும் இளைஞனின் வாழவையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

அப்பொழுதுதான் அவருக்கு ஆத்திரம் வந்தது. கையில் இருந்த சுத்தியலால் தொலைக்காட்சி திரையின் மீது வீசி எறிந்தார். அது சுக்கு நூறாக உடைந்து வீழ்ந்தது. அன்றோடு தன்னைப் போன்றவர்களை மட்டந்தட்டும் தொலைக்காட்சிகளை பார்ப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார்.

உண்மைகள் இப்படியெல்லாம் இருக்க இன்றுகூட காணி, பூமியை விற்று வெளிநாடு போகத் துடிக்கும் தாய்நாட்டுத் தமிழரையும் நினைத்தார். அவர்களுக்காகவும் ஒரு சொட்டு கண்ணீர் வடித்தார். அதைத்தவிர அவரால் வேறெதையும் செய்ய முடியவில்லை.

அத்தோடு அவருடைய வாடகை வீட்டு வாழ்க்கை மறுபடியும் ஆரம்பித்தது. இரண்டு அறைகளும், குறைந்த வாடகையுமாக சின்னஞ்சிறியதாக அந்த வீடு இருந்தது.

அதைப் பார்த்த பிரியாமணி சிறு பொழுது அமைதியாக இருந்தாள். அகிலத்தை ஆண்ட அரிச்சந்திர மகாராசா சுடலைக்கு வந்து, சுடுகாட்டில் பரதேசியாக நிற்பதுபோன்ற எண்ணம் அவள் மன

படிப்பகம்

www.padippakam.com



தில் படிந்தது.

சீதனத்தை சேர்த்தால் போதும் வாழ்க்கையின் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்துவிடுமென நினைத்து, பணம், பணம் என்று அலைந்த தன்னுடைய யாழ்ப்பாணத்து கிடுகுவேலித் தகப்பனை நினைத்து ஒரு தடவை அழுதாள்.

,"எணேய்.. " என்றபடி சிவபாலிக்கு அருகில் வந்தாள்.

" என்ன... "

" சாமி படம் வைக்க அறை இல்லாமல் கிடக்கு " தயக்கத்துடன் கூறினாள்.

" இனி எந்தச் சாமியளுக்கும் இஞ்சை இடமில்லை... இவர்தான் இனி எங்கடை சாமி " என்று கூறி ஒரு படத்தை எடுத்து முன்னால் வைத்தார் சிவபாலி.

" வைரவர்... " பிரியாமணி ஆச்சரியத்துடன் படத்தைப் பார்த்தாள். அங்கே வைரவர் கோவணத்துடன் ஒரு சூலாயுதமும், நாயுமாக நின்றார்.

" இவர் சாதாரண வைரவர் இல்லை" இவரை ஞானவைரவர் எண்டு சொல்லுவாங்கள். உதகத்தைப் புரிந்த பெரிய அறிவாளி , என்றார். அவர் கூறியது பிரியாமணிக்குப் புரியவில்லை புருவங்களை உயர்த்தினாள்.

" கன்னங்கரிய நிறமா இருக்கிறதால இவர் ஒரு தமிழர் எண்டு சொல்லுகினம். கோவணங்கட்டி, நாயோடை கோயிலுக்கு வெ-ளியாலை நிற்கிறார்.. அவர் ஏன் கோயிலுக்குள்ளை போக இல்லை சொல்லு பாப்பம்..? " மீண்டும் கேட்டார்.

பிரியாமணி அமைதியாக இருந்தார்.

" கோயில் ஒரு கட்டமைப்பு, அதை ஏற்றுக் கொண்டு, பட்டும்,

www.padippakam.com



நகையும் சாத்திக் கொண்டால் உள்ளே இருக்கலாம்.. ஆனால் இவர் எந்தக் கட்மைவையும் ஏற்காமல் இயற்கையோட வாழ்கிறார். கோயி-லையே ஏற்றுக் கொள்ளாமல் வெளியில நிக்கிற அவருக்கு வரி, வா-டகை, கடன், உரிமை, பதவி எண்டு எதுவுமே இல்லை.. " என்றார்.

"வாழ்க்கையின் அனுபவங்கள்தான் நல்ல கல்வி எண்டு இப்பதான் எனக்கும் விளங்குது.. " பிரியாமணி சொன்னாள். சிவபால-யின் மனமாற்றத்திற்கான காரணங்கள் அவளுக்குப் புரிந்தது. அவர் விரக்தியில் அதைக் கூறவில்லை என்பதையும் தெரிந்து கொண்டாள்.

" இந்த உலகத்தில மனிதனால ஏற்படுத்தப்பட்ட எல்லாமே அமைதியான வாழ்க்கைக்குப் பங்கமானவைதான்... வைரவருக்கு இருக்கிற நின்மதி உலகத்தில ஆருக்கு இருக்கு சொல்லு பாப்பம்... ? " சிவபாலி கேட்டார்.

" ஒருதருக்கும் இல்லை... " பிரியாமணி சொன்னாள்.

" வயிரவருக்கு நாரிப்பிடிப்பு இருக்கோ.. "

" இல்லை... "

" கெமிக்கலாலை வாற சுகயீனம் இருக்கோ... ? "

" இல்லை.. "

" வயிரவர் ஆர்ரை பக்கம்... "

" கட்சியில்லாதவர்... "

"இப்ப சொல்லு எல்லாற்றை சதுராட்டங்களையும் நிராகரித்து, அமைதியான வாழ்க்கையைக் கண்ட வைரவர் போல உயர்ந்த சிந்தனை இந்த உலகத்தில ஆரட்டை இருக்கு? "

பிரியாமணி தட்டுத் தடுமாறிச் சிரித்தாள், அவள் முகத்தில் புதிய நம்பிக்கை ஒளி பரவியது..படிப்பகம்

www.padippakam.com



" இனி வயிரவவரைப் போல எங்கடை வாழ்க்கையையும் எள-ிமையாக மாற்றுவம்.. இந்த அரசியல், சமுதாய பக்கச்சார்பு நிறைந்த உலக சமுதாயத்தின் கட்டமைப்புக்களை அறிவாலை விலத்தி வாழ முயற்சிப்பம். " என்றார்.

" இதையெல்லாம் எப்பிடி ஒரே நாளில் கையை விடுறது.. " அவள் கேட்டாள்.

" கஸ்டந்தான்... போன கிழமையும் கவிஞருக்கு போன் பண்ணி அவரோடை சண்டை போட்டனான். நான் செய்த மடைத்தனங்களை திசை திருப்ப அப்பாவியின் தலையில் பழி போட முயற்சித்தன். இப்பிடி நான் வாழ்க்கையில செய்த தவறுகள் ஏராளம் ஏராளம்... முதலிலை இது போன்ற தவறுகளை செய்யாமல் நேர்மையான ஒரு வாழ்க்கையை வாழப் பழகுவம். அப்பிடி வாழ்ந்தால் நிஜத் துறவு தானாக வரும்" என்றார்.

" என்னப்பா இப்பதான் வாழ்கை கொஞ்சம் லேசா இருக்கிறது போல இருக்கு.. மன அழுத்தம் குறைவாக இருக்கு.. பயமில்லாமல் வாழலாம் போலவும் இருக்கு " என்றாள் பிரியாமணி.

" உண்மைதான் பிரியாமணி உலகத்தில நிறைய இடமிருக்கு.. கண்டு பிடிச்சால் வாழ்க்கையே சுவர்க்கம்தான்... வைரவர் பூமியில சுவர்க்கத்தைக் காட்டுற தெய்வம்... " சிவபாலி பரவசமாகக் கதைத்தார்.

அந்த நேரம் தொலைபேசி மணி அடித்தது ஓடிப்போய் எடுத்தாள் பிரியாமணி. ஐயாமுத்தர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்துவிட்டதாகவும் அடுத்த வாரம் புறப்படுவதாகவும் மறு முனையில் இருந்து சொன்னார்.

பிரிந்து போன நதிகள் மறுபடியும் சங்கமமாகப் போவது தெரிந்தது.

www.padippakam.com



## 46

ஐயாமுத்து தேவாரச்செல்வி குடும்பத்தின் அன்றைய கொழும்புப் பயணமும் கொடிய அனுபவமாகத்தான் இருந்தது. கொ-டிகாமம் தாண்டியவுடனே இறுகிய முகத்துடன் இராணுவம் சோதனை-களை ஆரம்பித்துவிட்டது.

முன்னொரு தடவை ஐயாமுத்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்குப் போயிருந்த போது கிடைத்த உணர்வுகள் இப்போது நினைவிற்குள் வந்தன. அந்தச் சிறைச்சாலைக்குள் போகும்போதும் வரும்போதும் ஏற்பட்ட கைதி போன்ற அனுபவமே அவருக்கு யாழ். குடாநாட்டுக்குள் போகும்போதும் வரும் போதும் ஏற்பட்டது.

அவரைப் பொறுத்தவரை நாட்டை சிறைக்கூடமாக மாற்றி அனைவரையும் கூண்டுக்குள் அடைத்து வைத்திருப்பதைப் போன்ற உணர்வுதான் எஞ்சியிருந்தது. வாத்தியாருக்கு அடித்துவிட்டு பாட-சாலையை விட்டு ஓடிவந்த பேர்வழி என்றாலும், அங்கு படித்த ஒன்றிரண்டு பாடங்கள் அவருடைய மூளையிலும் இடைக்கிடை சாமரம் வீசிப்போவதுண்டு. அதுபோலத்தான் கண்டியில் 16 வருடங்கள் சிறையிருந்த வெள்ளைக்காரன் றொபேட்நொக்ஸ்சின் கதையும் திடீ-ரென நினைவிற்குள் வந்தது.

முற்காலத்தில் றெபேட்நொக்ஸ் என்ற வெள்ளைக்காரன் ஒருவன் கண்டி அரசனிடம் அகப்பட்டிருந்தான். அவனைச் சிறை-றயில் அடைக்காமலே கண்டி முழுவதும் உலாவ விட்டிருந்தான் அக்காலத்துக் கண்டி அரசன். அவன் எந்தக் கிரமத்தில் நிற்கிறானோ அவனைக் கண்காணிப்பது அந்தக் கிராம மக்களுடைய பொறுப்பு. அவன் தப்பியோடினால் கடைசியாக அவன் இருந்த கிராமத்தின் மக்கள் அனைவரும் தண்டிக்கப்படுவர் என்று தண்டரோ போட்டிருந்தான் மன்னன். இதன் காரணமாக றொபேட் நொக்சிற்கு பின்னாலேயே கிராம மக்கள் கண் உறங்காமல் திரிந்தார்கள்.

சாதாரண சிறையில் இருந்து தப்பலாம் ஆனால் திறந்த வெ-ளிச் சிறையில் இருந்து தப்ப முடியாது என்பதற்கு றொபேட் நொக்ஸ் வாழ்க்கைதான் சிறந்த உதாரணம். 16 வருடங்கள் கண்டியின் திறந்தவெளிச் சிறையில் சிக்கியிருந்து, அவன் கண்டி மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



பற்றி எழுதிய நூல்பற்றி அவர் அறிந்திருந்தார். இப்போது அதே றொபேட் நொக்சுகளாக குடாநாட்டு மக்கள் திறந்த வெளிச் சிறையில் கிடப்பதை உணர்ந்து கொண்டார்.

அவர் அந்தப்பாதையூடாகக் கடந்து கொண்டிருந்த சகல சோதனைச் சாவடிகளையும், கூத்தாட்டங்களையும் கூட்டிக்கழித்துப்

பார்த்தார். கண்களை ஒரு கணம் மூடி யோசித்துப் பார்த்தார். உலகத்தின் பிரமாண்டமான சிறைக்கூடம் ஒன்று அவருடைய கண்ணுக்குள் தெரிந்த சிவப்புத் திரையில் மஞ்சள் நிறத்தில் ஒரு கிளிக்கூடுபோலச் சுழன்றது.

கழுத்தில் புற்று நோய் பிடித்து உணவு, தண்ணீர் உள்ளே போகாது கிடக்கும் ஒரு புற்று நோயாளி போல குடாநாடு கிடப்பதையும், அதன் உணவுக்குழாய் போல இருக்கும் ஏ.ஒன்பது பாதை சோதனைச் சாவடிகளால் குரல்வளை நெரிக்கப்பட்டிருப்பதும் தெரிந்தது.

இவைகளை எல்லாம் நினைத்து வேதனைப்படுவதும், உணர்ச்சி வசப்படுவதாலும் யாதொன்றும் ஆகிவிடப் போவதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டார். அமைதியாக அந்த நாட்டை விட்டு வெளியேறுவதே இனி உசிதமான செயல் என்றும் எண்ணினார். அவருடைய அறிவுக்கு அங்கு ஏதோ புயலுக்கு முந்திய அமைதி போல, ஒரு போலி அமைதி நிலவுவதாகவே பட்டது.

“என்ன கடுமையாக யோசிக்கிறியள்” சேகரம் கேட்டான்.

“ ஸ்பெயினிலை காதலன், டென்மார்க்கில காதலி, பாரீசிலை முந்தினதாரத்துப் பிள்ளையள். இப்படி குடும்பம் முழுவதையும் உலகம் பூராவும் பரவி, வார விடுமுறையில மலிவு விலை விமானத்தில் ஏறிப் போய் ஒவ்வொரு குடும்பங்களும் சந்திக்குதுகள். இந்த வாரம் ஸ்பெயின், அடுத்த வாரம் பிரான்ஸ், மூன்றாவது வாரம் டென்மார்க் என்று மாறியிட்டுது ஐரோப்பிய வாழ்க்கை. உலகம் எங்கையோ இருக்க நாங்கள் என்னடாவென்றால் இன்னமும் இராமர் அணை கட்டின காலத்தில இருக்கிறம்... இந்தப் பயணத்தையும்

www.padippakam.com



அதில் உள்ள சிரமங்களையும் நினைச்சால் வயித்தைப் பற்றி எரியுது..”

“எல்லாத்தையும் நினையுங்கோ வெளியில சொல்லிப் போடாதையுங்கோ... நீங்கள் சொல்லுறதாலை ஏதாவது நன்மை வரும் எண்டு நினைக்காதையுங்கோ. நீங்கள் சொல்லுறதல்ல இங்கை முக்கியம், அதை வைச்சு யாவாரம் செய்ய இஞ்சை நிறையப்பேர் இருக்கிறாங்கள்... இதுதான் எங்கடை சமூகத்தில இருக்கிற

அடிப்படைப் பிரச்சனை... ” சேகரம் கவலையோடு சொன்னான். அவன் சொன்னதைக் கேட்க ஐயாமுத்தருக்கு சினமாக இருந்தது. இதை அவன் நூறு தடவைகளுக்கு மேலாக அவரிடம் சொல்லிவிட்டான்.

“சரியான கருத்தைச் சொல்லத்தான் இந்த வாய் படைக்கப்பட்டிருக்கு, அதைப் பயன்படுத்தாவிட்டால் பிறகு ஊமையாகத்தான் பிறக்க வேண்டி வரும் ”

சேகரம் அவர் சொன்னதைக் கேட்டு சிரித்தான். வான் அனுராதபுரத்திற்குள் நுழைந்தது.

அனுராதபுரத்தில் தெரிந்த தூபிகள் ஐயாமுத்தரின் நினைவு-களை சுனாமிபோல வேறெங்கோ இழுத்துச் சென்றன.. அந்த நாட்டிற்குள் இரண்டாயிரம் வருடங்களாக ஓடும் இனவாத வரலாற்று நதியின் சுழிக்குள் அந்த எண்ணங்கள் சிக்குண்டன.

சிறு பொழுது அமைதியாக இருந்து அதையே யோசித்துவிட்டு மீண்டும் கதைக்கத் தொடங்கினார்.

“சேகரம் இலங்கை ஒரு தீவு... இங்கு நடக்கும் போா-ின் விளைவுகள் எப்படி இருக்கும் என்பது வெளிநாட்டவருக்கு ஒரு கல்வி. அழிவுகள் நிறைந்த இலங்கை மற்ற நாடுகளுக்கு ஒரு பரிசே-சாதனைக் குழாய் மாதிரித்தான். மற்றப்படி உலக நாடுகளின் மனதில் யாதொரு சுண்டங்காயும் கிடையாது.. இங்கை நடக்கிற பேரழிவுகள் இறுதியில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்றுதான் உலகம் கற்க ஆசைப்படுகுது.. அதுதான் உலகம் முப்பது வருடங்களாக

படிப்பகம்

www.padippakam.com



அமைதியாக இருக்குது.. ” என்று ஐயாமுத்தர் சொன்னார்.

“இதை உங்களுக்கு ஆர் சொன்னது ? ”

“பிளையிட்டிலை வரேக்கை ஒரு வெள்ளைக்காரனைச் சந்தித்தனான் அவன் சொன்னவன்” என்றுவிட்டு ஏனோ தெரியவில்லை திடீரென ஐயாமுத்தர் சிரித்தார்.

“இப்ப ஏன் நீங்கள் சிரிக்கிறியள்... ” சேகரம் கேட்டான்.

“ நான் கனக்கப்படிக்கேல்லை.. ஆனால் உலகம் சுற்றின அனுபவங்கள் பல உண்மைகளை எனக்கு சொல்லியிருக்கு. சிலு-வை யுத்தமெண்டால் என்னெண்டு உனக்குத் தெரியுமோ? ”

சேகரம் யோசித்தான்... அவன் அதுபற்றி எங்கோ சிறிது அறிந்திருந்தான்.

“ முற்காலத்தில கிறீத்தவ மதம் பல பிரிவுகளாகப் பிரிந்து தமக்குள் போட்ட சண்டை.. ” என்று சொன்னான்.

“ அது சரி இப்ப ஈராக்கிலையும், ஆப்கானிலையும் நடக்கிற சண்டைக்கு என்ன பேர் ”

“ மதப்போர் எண்டு சிலர் சொல்லுகினம்... ”

“ சரி அடுத்ததாக எப்பிடியான போர் வரலாம் எண்டு நினைக்கிறாய்... ? ”

“ தெரியேல்லை... ”

“ ஏன் கறுப்பர் எல்லாரையும் உலகத்தில் இருந்து அழிக்கும் ஒரு பெரிய போர் வரக்கூடாது ? ”

www.padippakam.com



" ஏன் அப்பிடி அளவுக்கு அதிகமாகக் கற்பனை பண்ணுறியள்... ? "

"நீ ஒருக்கா உலகத்தில இருக்கிற முக்கிய விமான நிலையங்களை சுற்றிவா இந்த உண்மை அப்பதான் உனக்குத் தெரியவரும். நீ கறுப்பா இருந்தால் உன்னை மட்டும் எயாப்போட்டிலை மறிப்பான். உன்னுடைய பாஸ்போட்டை உரஞ்சி உரஞ்சிப் பார்ப்பான். கஸ்டம்ஸ்காரன் உன்னுடைய பெட்டியைத்தான் கிண்டிக் கிண்டிச் சோதிப்பான். அந்த அனுபவம் கிடைத்தால் மட்டும்தான் உனக்கு கறுப்பருக்கும் வெள்ளையருக்குமான

பிரிவுபற்றிய எதிர்கால அச்சம் வரும்.. அந்த அனுபவம் இல்லாட்டி அதைக் கேட்க உனக்குச் சிரிப்புத்தான் வரும்"

சேகரம் பேசாமல் இருக்க ஐயாமுத்தர் தொடர்ந்தார்.

" கறுப்பன் வெள்ளையன் நிறப்போர்தான் உலகத்தை அழிக்கும் கடைசிப் பெரும் போரென்று நினைக்கிறன்.. அப்பிடி ஒரு போர் வந்தால் கோடி கோடியாக சனம் சாகும். அதற்குப் பிறகு என்ன நடக்கும்... அதுதான் இப்ப அறிய வேண்டிய கடைசிய உண்மை.. "

"அப்பிடி மக்கள் கோடி கோடியாக அழிந்தால் என்ன நடக்கும் ? "

" ஒண்டுமே நடக்காது.. "

" எப்பிடிச் சொல்லுறியள்? ,"

" ருவாண்டாவிலை இரண்டு கறுப்பு இனங்கள் ஒன்றோடை ஒன்று மோதி ஒரு வாரத்தில ஒரு மில்லியன் பேர் செத்தபோது உலகம் என்ன நடந்தது? உலகம் சும்மாதான் வேடிக்கை பார்த்தது.. ஏன்?"

சேகரம் பதில் கூறவில்லை.

www.padippakam.com



" ஒரு மில்லியன் பேர் செத்த பிறகு அந்தச் சமுதாயத்தில என்ன நடக்குது, அந்தச் சமுதாயத்தின் அடிப்படை உறவுகள் எப்பிடிக் குலைந்து போகுது... அந்த இனம் தனது கடைசிக் கேவலமான குணத்தை எப்பிடிக் காட்டும், அதனுடைய மிருக மனத்தின் வடிவம் எவ்வாறிருக்கும்? அதனுடைய பொறுமையின் அளவு என்ன ? அந்த நேரம் உலகத்தின் கடவுள் கொள்கை நிலமைகளோடு எப்படிச் சமரசம் காணும் .. என்பதையெல்லாம் அறிய உலக நாடுகளுக்கு இப்படியான மரணங்கள் அவசியம்.. "

" இப்படியான உலகத்தில நாங்கள் என்ன செய்யிறது... "

"என்ன செய்யிறது... முதலிலை இலங்கைத் தீவை பரிசோதனைக் குழாய் நிலையில் இருந்து விடுவிக்க வேண்டும். இந்த உண்மையை அங்கை இருக்கிற எல்லாரும் விளங்க வேணும்... தெற்கு ஆசியாவிலை இருக்கிற எல்லா நாடுகளும் போரை நடத்தாமல் இருக்க என்ன காரணம் ? போர் நடக்கிற இந்த நாடடைப் பார்த்தால் எந்த நாடுதான் போருக்குள் போகும்? எல்லா அயல்நாடுகளும் போரின்றி முன்னேற நாங்கள் உயிர் கொடுத்திருக்கிறம். "

" இதை இனவாதச் சேற்றிலை கிடக்கிற இந்த நாடு புரியுமெண்டு நினைக்கிறியளோ.. ?"

" இல்லவே இல்லை.. "

" பிறகேன் சொல்லுறியள்.. ? "

" ஒரு விளக்கை வைக்கிறதால உலகத்தில இருக்கிற இருட்டு முழுவதையும் விலத்த இயலாது... ஆனால் ஒரு விளக்கை வைத்தால் சிறிய அறைக்குள் இருக்கும் இருட்டையாவது போக்கலாம் என்ற நப்பாசைதான் இதைச் சொல்லக் காரணம்.. "

சேகரம் ஐயாமுத்தரை சற்று வித்தியாசமாகப் பார்த்தான். கோமாளிகளுக்கெல்லாம் கோமாளியான ஐயாமுத்துவுக்கே வாழ்க்கை இத்தனை பாடங்களைக் கற்பித்திருக்கிறதென்றால் இவ்வளவு பெரும் நெருப்பில் கிடக்கும் தாம் இதுவரை எவ்வளவை கற்றிருக்க வேண்டுமென எண்ணிப்பார்த்தான். வெறுமனே வயிற்றுக்குத்தென்று

படிப்பகம்

www.padippakam.com



கிடந்து வாழ்க்கையை அழித்துவிட்டதாக எண்ணினான்.

" கடைசியாக ஒரு கேள்வி... பேரழிவுதான் உலகத்தின் முடிவோ.. ? அப்பிடியெண்டால் இவ்வளவு கஷ்டப்பட்டு இந்த உலகத்தை முன்னேற்றப் பாடுபடுறதிலை என்ன அர்த்தம் இருக்குது " சேகரம் வானின் வேகத்தை மேலும் கூட்டியபடியே கேட்டான்.

" நல்ல கேள்வி அந்தக் கேள்விக்கும் என்னோடை வேலை செய்யிற ஒரு சீனாக்காரன் பதில் சொல்லியிருக்கிறான். எல்லா ஆயுதங்களையும், எல்லா அரசுகளையும், எல்லாக் கொள்கைகளையும்

ஒரே நொடியில் துவம்சம் செய்து உலகத்தை நுனி விரலில் வைத்து ஆட்டக்கூடிய இரகசியத்தை ஆரோ ஒருதன்ரை மூளை விரைவில் கண்டு பிடிக்கும். வெள்ளையனுக்கும் கறுப்பனுக்கும் இடையே ஒரு போர் வர முன்னரே அந்த மூளை வந்தாலும் வரலாம்."

" எப்பிடி.. "

" ஐ லவ்யூ என்ற வைரஸ்சை அனுப்பி உலகத்தில் உள்ள பெருந்தொகையான கணினிகளை அழிச்சவன் ஒரு பாடசாலை மாணவன்தான். அது போல வரப்போற ஒரு மூளைதான் இன்றைக்கு உலகம் போடும் சதுராட்டங்களுக்கெல்லாம் ஆப்பு வைக்கப்போகுது..."

" யார் அந்த ஒரு மூளைக்கு சொந்தக்காரன்... "

ஐயாமுத்தர் பெரு வெளியைப் பார்த்துக் கொண்டார்...
அந்தக் கேள்விக்கான பதில் அவரிடம் இருக்கவில்லை...

இலங்கை இனப் பிரச்சனைக்கும் இதுவரை யாருமே கண்டு பிடிக்காத ஒரு புத்தம் புதிய தீர்வு இருக்கிறதா ? சேகரம் யோசிக்க ஆரம்பித்தான்.

வாகனம் கொழும்பிற்குள் நுழைந்தது...

www.padippakam.com


47

இனப்போர் கொழும்பிலும், சிங்கள மக்கள் வாழும் பகுதிகளிலும் எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணியிருக்கிறதென அறிய ஐயாமுத்து ஆசை கொண்டார். திட்டமிட்டதற்கு சில தினங்கள் முன்னதாகவே கொழும்பு வந்துவிட்டதால் அந்த நாட்களை சிங்களப் பகுதிகளைப் பார்ப்பதற்காக பயன்படுத்த எண்ணினார்.

கொழும்பின் நடுப்பகுதியில் கோட்டல் ஒன்றில் இரண்டு அறைகள் எடுத்துத் தங்கிக் கொண்டார். ஒரு நாள் அமைதியாகவே படுத்துக் கிடந்தார். யாழ்ப்பாணத்தின் காட்சிகள் மனத்திரையில் பல்வேறு வர்ணங்களில் ஓடி மறைந்தன. அங்குள்ள மக்களின் வாழ்க்கை பற்றிய நிஜங்களை மேலை நாடுகளில் உள்ள தமிழ் ஊடகங்கள் சரியான முறையில் எடுத்துரைக்கவில்லை என்பதை மட்டும் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

இலங்கை போய் வந்தவர்களும் தங்களுக்கு ஏன் வம்பென்று பொய்யான தகவல்களையும், போலியான புகழ்ச்சிகளையும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நினைக்க அவருக்கு பெரும் கவலையாக இருந்தது.

குடாநாட்டில் இருப்பவர்கள் சாதாரண மக்கள்தான். அவர்களும் சாதாரண ஆசாபாசமுள்ள மக்கள்தான். வெளிநாடுகளில் கூறப்படுவது போல அவர்கள் கடவுளின் அவதாரங்கள் அல்ல என்பதையும் நேரடியாகப் பார்த்து உணர்ந்து கொண்டார். வெளிநாடுகளில் உள்ள குழுமாடுகளின் மோதல்களைத் தவிர்க்க தாயகத்தின் புகழை உயர்த்திக் கூறியதால் வந்த கணிப்பீட்டு இடைவெளி என்பதைப் புரிந்து கொண்டார்.

சிந்தனை ரீதியாக, வளர்ச்சி ரீதியாக 60 களில் அவர் கண்ட யாழ்ப்பாணமே இப்போது இருப்பதாக அவருடைய அறிவுக்குப் பட்டது. அங்குள்ள மக்களுக்கு முதலில் வேண்டியது நின்மதியான வாழ்வு, சுதந்திரம் என்று புரிந்து கொண்டார். உடலில் எயிட்ஸ் கிருமி பரவியது போல துப்பாக்கிகள் சமுதாயம் என்னும் உடலுக்குள் கிருமி போல பரவி குட்டி போட்டிருப்பது தெரிந்தது. தின்ன வழியில்லாத நாட்டில்

படிப்பகம்

www.padippakam.com



குண்டு வீச்சு விமானம் குத்துக்கரணம் போட்டு குடியிருப்புக்களில் குண்டு வீசும் கோமாளித் தனங்களை பார்த்து நொந்து கிடந்தது அவர் மனது.

அவருக்கு சிறிது சிங்களம் தெரியும். மறுநாளே சிங்களப் பகுதிகளை நோக்கி பயணிக்கலாம் என்று திட்டமிட்டார். சேகரத்திற்கு துணையாக வான் ஓட்ட பியதாச என்ற சிங்கள சாரதியை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்கள் கோட்டல்காரர்கள்.

தம்புள்ள சென்று சிகிரியாவைப் பார்வையிடலாமென்று திட்டமிட்டு மறுநாள் அதிகாலையே புறப்பட்டனர். கிழவி தான் வரவில்லை என்று கோட்டலிலேயே நின்றுவிட்டாள். ஐயாமுத்து மற்றவர்களுடன் பயணத்தைத் தொடங்கினார்.

வான் சிங்களப் பகுதிகளுக்குள்ளால் அதிகாலையே ஓடத் தொடங்கியது. அது போர் நடக்கும் ஒரு நாடுதானா என்பது தெரியாதளவிற்கு சாலை நெடுக வாகனங்கள் நெரிசலாக ஓடிக் கொண்டிருந்தன. அந்த சாலை நெரிசல் ஆங்கிலேயர் ஆட்சிசெய்த நாடு என்பதைக் காட்டியது.

செவ்விளநீர் குலைகள் தொங்கும் அதே கடைத்தெருக்கள், சிறுசிறு இடைவெளிகளில் உணவு விடுதிகள். கிலோ மீட்டருக்கு ஒரு புத்த பான்சல சகிதம் கிடந்தது சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் அந்தச் சாலை. ஓர் இடத்தில் சமாதானம் மலரட்டும் என்று எழுதப்பட்ட பெரியதோர் போட் போடப்பட்டிருந்தது. அதை யாரோ இரண்டாக மடக்கி வைத்திருந்தார்கள். சமாதானத்தின் நிலையை அந்தத் தகட்டிள் நெளிவுகள் காட்டின. இருந்தாலும் அதையாவது யாரோ போட்டிருக்கிறார்களே என்பதை நன்றியுடன் நினைத்துப் பார்த்தார்.

சிறிது நேரத்தில் சிங்கள தேநீர் கடையொன்றில் வானை நிறுத்தினார்கள். காலைத் தேநீருக்கும் சாப்பாட்டுக்குமாக கடையின் உள்ளே போனார்கள்.

" ஆதர பூஜா நகி " என்று ஆரம்பித்த சிங்களப் பாட்டை நிறுத்திவிட்டு தமிழுக்கும் அமுதென்று பேர் என்ற பாட்டைப்

www.padippakam.com



போட்டார்கள். கடை முதலாளி ஐயாமுத்துவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டான்.

ஐயாமுத்தர் ஒரு தடவை தலையைச் சுழற்றினார் லெவரியா, வட்டலாப்பம், அப்பம், கோதுமை வெள்ளை இடியப்பம், கோப்பைப் பிட்டு, மணிப்பிட்டு, கறிபணிஸ், சங்கிலிப்பணிஸ், கித்துள் அப்பம், தயிரும் கித்துள்பாணியும் கலவை, யானை வாழைப்பழம் என்று ஒரு தொகுதி உணவுகள் ஒரு சுற்றுச்சுற்றி வந்தன. சலரோகம் இருந்தாலும் ஒரு பெரிய தட்டு நிறைய வரவழைத்து கச்சேரியை ஆரம்பித்தார்.

“என்ன இருந்தாலும் கித்துள் அப்பத்துக்கும், லெவரியாவுக்கும் கிட்ட ஒரு சாப்பாடும் வராது ” என்று கூறி, வயிறு முட்ட ஒரு பிடி

பிடித்தார். அருகில் வடையும், பிளேன் ரீயோடும் இருந்த சிலர் வெறும் வடையையும், பிளேன் ரீயையும் இழுத்தபடியே பெரு மூச்சுடன் ஐயாமுத்து முன்னால் கிடந்த தட்டைப் பார்த்துக் கொண்டார்கள். கடைகாரனின் வியாபாரத்தை குழப்பக் கூடாது என்பதற்காக அவர்கள் பொறுமை காக்கிறார்கள் என்பது போலவே ஐயாமுத்துவிற்குப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள கோட்டல் ஒன்றின் மலசலகூடம் நினைவுக்கு வரவே சாப்பிட்டு முடிந்ததும் இங்கு எப்படி உள்ளதென்பதை அறிவதற்காக பின்பக்கம் போய்ப்பார்த்தார். அவருக்கு சாப்பிட்டதெல்லாம் புரட்டிக் கொண்டு வெளியால் வந்தது. அவர் நாட்டைவிட்டுப் போன இருபது வருடங்களில் சிங்கள சமுதாயமும் முன்னேறவில்லை என்பதற்கு அதுவே போதிய சாட்சியமாக இருந்தது.

உணவு விடுதி என்றால் மலசல கூடம் சுத்தமாயிருக்க வேணும். இல்லாட்டி அங்கே இருந்து வரும் ஈக்களால உணவு முழுவமே நாசமாகியிடும். இது கூட தெரியாத உலக்கையங்களா இருக்கிறாங்களப்பா என்று மனதிற்குள் திட்டிக் கொண்டார். ஆயிரம் ரூபா தாளை வீசிவிட்டு வானில் வந்து ஏறிக்கொண்டார்.

www.padippakam.com



அவர்களோடு இருந்த சிங்கள இளைஞனிடம் கேட்டார் "ஏன் சிங்களக் கடைகளிலும் இப்ப தமிழ் பாட்டுக் கேட்குது.. ,

" எல்லாம் வெளிநாட்டுப் பணம்தான். சிங்கள அப்புகாமியும், முனுசாமியும் கடைக்கு வந்தால் ஒரு பிளேன் டீயும், பண்ணும்தான் சாப்பிடுவாங்கள். சிங்களப் பாட்டுக்கு இங்கை பிஸ்னஸ் இல்லை. இப்ப நீங்கள் கடைக்கு வந்ததால ஆயிரம் ரூபா பிஸ்னஸ் ஆகியிருக்கு தமிழ் பாட்டுக்குத்தான் இப்ப நல்ல பிஸ்னஸ்."

அதைக் கேட்டபடியே ஐயாமுத்து அமைதியாக வெ-ளியில் இருக்கும் காட்சிகளைப் பார்த்தபடி இருந்தார். மழையும், தாவரங்களின் பசுமையும், மலைச்சாரல்கள் போன்ற திடல்களும் ஒரு நாட்டிலேயே வேறொரு இயற்கைத் தோற்றத்தைக் காட்டின. இவ்வளவு இயற்கையையும் வைத்து இந்த நாட்டை எங்கேயோ கொண்டு போயிருக்கலாம்.. எல்லாம் குரங்கின் கைப்பூமாலையாகப் போய்விட்டதாகக் கவலைப்பட்டார்.

" வடக்குக் கிழக்கில கஸ்டப்படுற தமிழ்ச் சனம் பற்றி இந்தச் சிங்களச் சனம் என்ன நினைக்குது.. "

அந்தச் சிங்கள இளைஞன் சிரித்தான்.

" உண்மையைச் சொன்னால் உங்களுக்கு வருத்தமா இருக்கும்.. " இழுத்தான்.

" இல்லை பயப்பிடாமல் சொல்லு.. "

" இந்த நாட்டில ஒரு போர் நடக்குது என்ற தகவல் இவர்களுக்கு உள்ளபடி தெரியாது. போரின் சுவடுகள் தெரியாமலே இவர்களுடைய கண்கள் கட்டப்பட்டிருக்கு.. "

" இது போரைவிட ஆபத்தான வேலையெல்லோ "

" உண்மைதான் தமிழரின் கஸ்டங்களை சிங்களப் பொது சனத்திற்கு எடுத்துச் சொல்லாத காரணத்தால்தான் ஒரு தீர்வை வழங்க எங்கட சிங்களத் தலைவர்களால முடியாமலிருக்கு.. "

www.padippakam.com



“ ஆயிரக்கணக்கில இராணுவம் சாகுது.. அதை வைச்சாவது புரிய முடியாதோ .? ”

“ இராணுவத்தில இருக்கிறது பொருந்தொகை படித்தறியாத ஏழைகள்... அவர்கள் இறந்தபிறகு சடலம் வரும்.. அதற்குப்பிறகு இறந்தவர்களுக்கு கொடுக்கப்படும் கொம்பன்சேசன் ஒரு லட்சம் வரும்.. அதைப் பிரிக்க குடும்பங்கள் சண்டை போடும்.. பிறகு அவ-னுடைய படத்தில ஒரு மாலை விழும்.. பான்சலவில ஒரு பூசை.. செத்தவன் வாயில மண் இருப்பவன் வாயில சோறு.. இனப்போர் தொடரும்... ”

“ அப்ப தமிழ் மக்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் ? ”

“சிங்கள மக்கள் ஏழையளா இருக்கிறம், தமிழன் வெளிநாடு போய் நல்லா இருக்கிறான். அவர்களோடை ஒப்பிட்டால் நாங்கள் பொருளாதாரத்தில தாழ்ந்துபோயிட்டம் ..” என்றுதான் நினைக்கிறன்..

“ நீ நினைக்கிறது போல வடக்குக் கிழக்கில உள்ள மக்களின் வாழ்க்கை இல்லையே.. ”

“ அதைப்பற்றி கவலைப்பட சிங்கள தேசத்திற்கு என்ன முகாந்திரமிருக்கு.. ? வடக்கில நடைபெறுகிற போர் சிங்கள மக்களுக்கு மிகவும் இலாபகரமானது. அமெரிக்காவைப் பாருங்கோ போரை எங்கை வச்சிருக்கு.. ? ”

“ ஈராக்கிலையும், ஆப்கானிஸ்தானிலையும்தான் ”

“ போரை எதிரியின் நாட்டுக்குள் திணிச்சால் இரண்டு இலாபமிருக்கு.. ஒன்று போர் நடக்கிற இடம் அழியும், இரண்டு முப்பது வருடங்களாக தமிழரின் மண் எரிவது சிங்களப் பேரினவாதத்திற்கு எவ்வளவு பெரிய இலாபம்.. ”

ஐயாமுத்தர் அமைதியாக இருந்தார்.

" தமிழரை அழித்ததாகவும் போகுது.. போரைக் காரணம்காட்டி தெற்கேயுள்ள அரசியல் எதிரிகளை அழித்ததாகவும் போகுது.. அவ்வளவுமேன் வெளிநாடுகள் பரிசோதிக்க விரும்பும் ஆயுதங்களை எல்லாம் வேண்டி வேண்டி வடக்குக் கிழக்கில கொட்டுறதால நல்ல கொமிசனும் கிடைக்குது.."

" சரி போரை நிறுத்தி அமைதியைக் கண்டால்.. "

" உங்களுக்கு என்ன பைத்தியமே.. அமைதி வந்தால் சனம் படுக்கப் பஞ்சணையும் பொரிக்க நெய்யும் கேட்கும்.. ஆரட்டை இருக்கு பணம் ? போரைக் காரணம் காட்டியே எல்லாவற்றையும் அப்படியே வைத்திருக்கிறதுதான் புத்திசாலித்தனம்.. "

" அப்ப தமிழ் மக்களின் விடிவு எப்போ? "

"ஒண்டுந் தெரியாமல் வாழும் சிங்கள வெகு ஜனம் எப்ப கண்விழிக்குமோ அப்பதான் தமிழருக்கும் விடிவு வரும்.. அண்டைக்கு யூலைக்கலவரத்தில தமிழரின் சொத்தைப் பறித்தது போல பறிக்கும் ஒரு கனவு மனம்தான் இங்கை இருக்கு.. யுத்த நிறுத்தத்தில தமிழன் தேடின சொத்துக்களை சூறையாடுறதுதான் பலருடைய இன்றைய கனவு.. "

" சரி இதையெல்லாம் மீறி தமிழருக்கு ஒரு விடிவு வந்தால்.".
,

"சிங்களப் பகுதியிலை கிளர்ச்சி வரும் ஆட்சியை நடாத்த ஏலாது.. ஆனபடியால்தான் திரும்பத் திரும்ப பேச்சு.. தீர்வுப்பொதி என்று செக்குமாடு சுத்தினதுபோல முப்பது வருடமாக இந்தப் பிரச்சனை சுழலுது.. "

" அப்ப சர்வதேச சமுதாயம்பற்றி என்ன நினைக்கிறாய் ? "

"விபச்சாரி காசுள்ளவனுக்கு சீலை விரிப்பாள்.. வேறை ஒண்டுமே இல்லை.. "

www.padippakam.com



தூரத்தே ஆட்சிக்காக சொந்தத் தகப்பனையே கொன்ற காசியப்பன் கட்டிய சிகிரியா மலைக்குன்று தெரிந்தது..

## 48

ஐயாமுத்தர் கொழும்பு வந்து சேர்ந்துவிட்டதும், அடுத்த வாரம் டென்மார்க் வர இருப்பதும் சிவபாலிக்கும் தெரியவந்தது. கூடியிருந்து கொள்ளி வைத்து கறுவலோடை மோதவிட்டு, பின் வீடு வேண்ட வைத்தது வரை எல்லா நாசங்களுக்கும் காரணமான ஐயாமுத்துவை என்ன செய்யலாமென கடுமையாக யோசித்தார்.

பழைய சிவபாலியாக இருந்திருந்தால் சன்னதமேறி விமான நிலையத்திற்கு நேரே போய் ஐயாமுத்தரோடு போரைத் தொடுத்திருப்பார். ஒன்று காலில் விழுவது அல்லது காலை வாருவது ஆகிய இரண்டு வழிகளைத் தவிர வேறு வழிதெரியாத புலம் பெயர் வாழ்விற்கு அமைவாக அவர் இரண்டில் ஒன்று பார்த்து முடித்திருப்பார்.

ஆனால் இன்றுள்ள நிலை வேறானது விமான நிலையம் போய் ஐயாமுத்தரோடு மோதலைத் தொடுத்தால் பயங்கரவாதியென்று உள்ளே தள்ளிவிடுவார்கள் என்பதையும் அவர் ஒரு தடவை நினைத்துக் கொண்டார். வெளிநாட்டுக்காரனுக்கு தண்டம் விதிக்கிறதைப் போல லாபமான தொழில் உலகில் கிடையாது என்று போலீஸ்காரன் ஒருவன் வேடிக்கையாக கூறியது நினைவிற்கு வந்தது. திடீரென வாசல் மணி அடிக்கவே ஓடிப்போய்த் திறந்தார். அங்கே கறுவல் நின்று கொண்டிருந்தான்.

“ உள்ளே வா.. ”அவனைக் கூட்டிக்கொண்டு போனார்.

“ என்ன விசயம்.. ஏதாவது கடவுளைப் பற்றிய புத்தகங்கள் வெளி வந்திருக்கோ அல்லது இலங்கையில இருந்து ஆராவது பிரசங்கம் பண்ண வருகினமோ ? ”

“ இல்லை சும்மாதான் வந்தனான் ”

“ அலுவல் இல்லாமல் வரமாட்டியே... சொல்லு..”

www.padippakam.com



" ஐயாமுத்தர் திங்கள் வாறாராம்... போன் செய்தவர் "

" உனக்கு தெரியாதெண்டு எனக்கும், எனக்குத் தெரியாதெண்டு உனக்கும் போன் பண்ணியிருக்கிறார். இனி ரெண்டு பேருக்கும் நல்ல பிள்ளையா நடிக்கப் போறார். நாங்க ரெண்டுபேரும் இப்ப உறவெண்டுறது அவருக்குத் தெரியாது பாவம்..."

" ம்.. ஆளையாள் மூட்டிவிட்டு காலம் கொண்டு போறவை கடைசியிலை ஒரு நாளைக்கு எல்லாப் பக்கத்திலையும் முட்டுப்பட்டு நிக்க வேண்டி வரும்.."

" சரி அந்தாள் வருகுது ... இனி என்ன செய்யலாம்..." கறுவல் கேட்டான்.

" நான் நினைக்கிறன் இனி அவருடைய முகமூடியைக் கிழிக்கிறதுதான் நல்லமெண்டு.. அவர் உன்னட்டை கடன் வேண்டிப் போட்டு தராமல் விட்டது முதல் பிழை.. அந்தப் பிரச்சனைக்கு உன்னைப் பழிவாங்க எண்ணி, என்னைக் கொம்பு சீவி விட்டது அதைவிடப் பெரிய பிழை.. அவற்றை மனிசி ஒண்டுந் தெரியாத வெங்காயமான என்ரை மனிசியை வீடு வேண்ட ஏவிவிட்டது மகாதவறு... இப்பிடியே அடுக்கிக் கொண்டே போகலாம்.. ரெண்டுபேரும் நேருக்கு நேராய் போய்க் கேட்பம்..." சிவபாலி சிறிது உணர்ச்சிவசப்பட்டிருந்தார்.

" அண்ணே இது பிறவிக்குணம்... நாங்கள் போய்க் கேட்டாப்போல ஐயாமுத்தர் திருந்தியிடுவாரோ .. இத்தினை வருசமா திருந்தாத ஒராளை ஒரே நாளிலை திருத்த ஏலாது.."

"அப்ப எதுவும் தெரியாதது போல நடந்தால் அந்தாளின்ரை விளையாட்டுகள் தொடருமே.. "

" அப்பிடியில்லையண்ணே இந்த ஐயாமுத்துவே எங்களுக்குப் போதும்.. அந்தாள் போனால் அந்த இடத்தில இன்னொரு படு மோசமான ஐயாமுத்து வரும்.. இருவது வருசத்துக்கு முந்தி கந்தையாவின்ரை பெடி அவிலோசு கலைவிழாக்களிலை போத்தில் எறிஞ்சு குழப்பம் விளைவிச்சுது... அது கலியாணம் முடிச்சு இப்ப நல்ல பிள்ளையா

படிப்பகம்

www.padippakam.com



மாறியிட்டுது இப்ப அந்த இடத்தில பொன்னையாவின்ரை பெடி போத்திலோடை நிக்குது... இடைவெளியை நிரப்ப கடவுள் ஆக்களை அனுப்பிக் கொண்டுதான் இருப்பார்.."

"சமயம் மாறாமல் கூத்தாட என்னையும், சமயம் மாறி கூத்தாட உன்னையும் கடவுள் படைச்சிருக்கிறதைப் போல எண்டு சொல்லன். ஏன் மற்றவனை இழுக்கிறாய்.. முதலிலை நாங்கள் எங்கடை பிழையைப் பேசுவம்... நாங்கள் மண்டையைப் போட எங்கடை இடத்திற்கு எங்களைப் போல வேறை ரெண்டு வேதாளங்கள் வருமெண்டு சொல்லன்... " சிவபாலியும் கறுவலும் சிரித்தனர். இருவரும் சிரித்துக் கொண்டிருக்க இடையில் பிரியாமணி தேநீருடன் வந்தாள்.

"எப்பிடியக்கா சுகமா இருக்கிறியளோ... " கறுவல் கேட்டான்.

" நல்ல சுகம்.. "

" புது வீடு எப்பிடி இருக்கு.. "

"வீடு வித்துப்போட்டு வாடகை வீட்டுக்கு வந்த ரெண்டு மூண்டு குடும்பங்கள் சாப்பாட்டுக்கு வரச்சொல்லியிருக்கு..வீடு வாங்கினால் ஓர் உறவு வித்தால் ஓர் உறவு எத்தினை கூத்தப்பா"

" எல்லாத்துக்கும் ஒரு கூட்டம் இருக்கத்தானே செய்யும்" கறுவல் சொன்னான்.

"ஏதோ ஐஞ்சு லெச்சம் நட்டத்தோட சனியன் தொலைஞ்சுது.". பிரியாமணி பெருமூச்சு விட்டாள்.

" மெய்யேடியப்பா ஐயாமுத்தர் வரப்போறாராம்.. நானும் கறு-வலும் ஒண்டாய்ப் போய் அவருக்கு முன்னாலை நிக்கப்போறம்... எங்கள் ரெண்டுபேரையும் ஒண்டாய்ப் பார்க்க அவருக்கு எப்பிடி இருக்குமெண்டு நினைக்கிறாய்.. "

" அந்தாளுக்கு ரோச நரம்பு கிடையாது ... உங்களுக்கு புது

www.padippakam.com



ரீல் விட்டு, இன்னமொரு டென்சன் வெங்காயத்தோட ரெண்டுபேரையும் கொழுவிவிட்டு வேடிக்கை பாத்திடும் கவனம்.. "

" அக்கா சொல்லுறதும் சரிதான்... ஐயாமுத்தர் மட்டுமோ இந்த வேலையைச் செய்யிறார்.. எங்கை பாத்தாலும் டென்சன் பாட்டியள்தான் நிறைஞ்சிருக்கு.. நேற்றும் ஒரு டென்சன் பிறந்தநாள் அவசரமாக நடந்திருக்கு "

" பிள்ளை குட்டி பிறந்தால் பிறந்தநாள் வரும்தானே.. "

" இது பிள்ளைக்கு பிறந்தநாள் இல்லை... வாற கிழமை ஒரு தண்ணிவாப்.பு நடக்குது.. அதுக்கு போக வேண்டிய ஆக்கள் கொஞ்சப்பேரைக் கூப்பிட்டு பிறந்தநாள் வைச்சிருக்கு.. "

" ஏன் ? "

" அவ்வளவு பேருக்கும் நல்லாத் தண்ணி பருக்கி விழாவைப் பகிஸ்கரிக்கச் சொல்லியிருக்கு.. தண்ணியடிச்ச அவ்வளவு பேரும் தண்ணிவாப்பை பகிஸ்கரிக்கப் போகினமாம்..." கறுவல் சிரித்தபடி கூறினான்.

சிவபாலிக்கு அதைக்கேட்க அதிசயமாக இருந்தது... புலம் பெயர் வாழ்க்கை போகும் அவலங்களின் அவலங்களைக் கேட்டுத் திகைத்தார்.

"அண்ணே மதுபானம் சகல இடங்களிலும் இறுதித் தீர்மானம் எடுக்கும் சக்தியா மாறியிட்டுது.. போத்தலைத் திறந்தால் இந்தச் சமுதாயத்தில எதையும் செய்யலாம்... " கறுவல் விரக்தியுடன் சிரித்தான்.

" கறுவல் அவங்கள் தன்னும் குடிச்சுப் போட்டு கோமாளி வேலை செய்யிறாங்கள்.. நான் ஐயாமுத்து ஏவிவிட ஓடிவந்து உனக்கு அடிச்சனான்... இப்ப சொல்லு குடிக்கிறவனை விட குடிக்காத நான் எவ்வளவு பெரிய வெங்காயமெண்டு" சிவபாலி உண்மையை ஒப்புக் கொண்டு கதைத்தது கறுவலுக்குப் பிடித்திருந்தது.

www.padippakam.com



" கறுவல் .... எல்லாம் சரி நீ குடியை விட்டிட்டியே.. ? " சிவபாலி திடீரென இடை மறித்துக் கேட்டார்.

" எண்டைக்கு இந்த பைபிளைத் தூக்கினேனோ அண்டையோடை குடி சரி.. " கறுவல் சொன்னான்.

" கறுவல் உன்ரை நம்பிக்கையை நான் மதிக்கிறன்.. குடிச்சுப் போட்டு குப்பையில உருண்ட நீ.. இண்டைக்கு குளிச்சு முழுகி, நல்ல உடுப்பு உடுத்து வீடு வீடாய் வாறாய்.. அதை நான் மதிக்கிறன்... அதுதான் நீ தாற எல்லா புத்தகங்களையும் படிக்கிறன்... கடவுளுக்காகவோ சமயத்திற்காகவோ இல்லை உனக்காக.. " சிவ-பாலி சொன்னார்.

கறுவல் அவரையே கூர்ந்து பார்த்தான். அவன் அடுத்தாக என்ன கேட்கப் போகிறான் என்பதை சிவபாலி உணர்ந்திருந்தார்.

"கறுவல் நீ என்ன யோசிக்கிறாய் எண்டு விளங்குது.... என்னை மட்டும் பைபிளை தூக்கச் சொல்லிப்போடாதை... " என்றார்.

" ஏன் ? "

" வாழ்க்கையில பட்டதெல்லாம் போதும்... மதம், அரசியல், அது இதென்று எல்லாரும் வைக்கிற பாரங்களைத் தூக்கித் தூக்கியே என்ரை முதுகு வளைஞ்சு போச்சுது... இனி வாழ்க்கையில எந்த மதத்தையும் நான் ஏற்கப்போறதில்லை.. எந்த அரசியலையும் நான் தலையிலை வைச்சு கூத்தாடப்போறதில்லை.. இயற்கையோட ஒரு அழகான வாழ்க்கையைத்தான் தேடுறன்..."

கறுவல் அதற்கு மேல் மத விவகாரங்களைப் பேசவில்லை...

சிவபாலியின் மனதில் பல ஆயிரம் அலைகள் தொடர்ந்து உருண்டன...

" கறுவல் நாங்கள் ரெண்டு பேருமே எயாப்போட் போய் ஐயாமுத்தரைக் கூட்டி வருவம்... ஏன் நாங்களாவது கோபம், குரோதம்

www.padippakam.com



இல்லாத மனிதர்களாக வாழ்ந்தால் என்ன... ” சிவபாலி கேட்டார்.

“அப்ப கவிஞற்றை பிரச்சனையை என்ன செய்யப்போறியள்..” குசினிக்குள் இருந்து பிரியாமணி குரல் கொடுத்தாள்.

தான் ஆடிய கூத்தை மறைக்க அப்பாவிக் கவிஞருக்கு துரோகிப் பட்டம் கட்டிய சுயநலத்தை எண்ணிப்பார்த்தார். அந்த மானங்கெட்ட பிழைப்பை நினைக்க நினைக்க அவருக்கு வெட்கம் வெட்கமாக வந்தது. என்ன செய்யலாமென்று யோசித்தார்.

“அண்ணே உடனொத்தவனை பாதாளத்தில தள்ளி தாங்கள் மட்டும் வாழலாமென நினைத்த மனிதரெல்லாம் போன இடம் தெரியும்தானே...

தெரியும் தெரிஞ்சு கொண்டே பாழுங்கிணத்திலை குதிச்சிருக்கிறம்... நாளைக்கு காத்திருக்க ஏலாது இன்றைக்கே திருந்துவம்.. ஐயாமுத்தரையும் திருத்துவம்... திங்கள் கிழமை வா... ”

கறுவல் விடைபெற்றான்.

சிவபாலி மனதில் வண்டி வண்டியாக நிறைத்து வைத்திருந்த குப்பைகளை எல்லாம் அள்ளியள்ளி வீச ஆரம்பித்தார்.

## 49

ஐயாமுத்தரின் இலங்கைப் பயணம் முடிவடைய மேலும் இரண்டொரு நாட்களே பாக்கியிருந்தன. எத்தனையோ அவலங்களை எல்லாம் கண்டாலும் கூட தன் தாய்நாட்டைப் பிரிய மனமில்லாது தவித்தார். எப்படியெல்லாமோ வரப்போகிறது என்று கனவு கண்ட தீவு இன்று இப்படியாகிவிட்டதே என்று கவலைப்பட்டார். இறந்தவர்களின் சடலங்கள் தெருவில் கிடக்க உயிருடன் இருப்பவர்களின் பயணம் எங்கோ வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்து கவலைப்பட்டார்.

தெருத்தெருவாக நடைபெறும் கொலைகளை தடுக்க முடியாது என்று தெரிந்த பின் அதற்காக அலட்டுவதில் எதுவித பயனும் இல்லை என்ற உணர்வில் மக்கள் சடலங்களைத் தாண்டிச் செல்வது தெரிந்தது. அந்த நாட்டில் ஒரு கொலை நடந்தாலே முழு நாடும் திரும்பிப் பார்க்கும் காலமொன்று இருந்ததை எண்ணிப்பார்த்தார். அன்றைய காலத்துடன் இன்றைய வாழ்வை ஒப்பிட்டுப்பார்த்துக் கொண்டார்.

அவர் இருந்த கோட்டல் அறையின் நிலத்தை வெறுப்புடன் குனிந்து பார்த்தார். அங்கே செத்துப்போன எறும்பொன்றைச் சுற்றி கூட்டமாக மொய்த்து நிற்கும் எறும்புகள் பரபரத்து ஓடிக் கொண்டிருந்தன.. , ஆண்டவனே எறும்புகளை விட மோசமாகிவிட்டதா எங்கள் வாழ்வு.. , அவர் மனம் அழுதது.

அதைவிட சிகிரியாவிற்கு போய்வந்த அனுபவங்களும்,

www.padippakam.com



போகும் வழி முழுவதும் சிங்கள மக்களிடம் இருந்து பெற்ற தகவல்களும் அவருடைய மனதில் பல கேள்விகளை எழுப்பியபடி இருந்தன. தமிழ் மக்கள் படும் அவலங்கள் சிங்கள வெகுஜனத்தைச் சென்றடையவில்லை என்பதை அவர் அப்போதுதான் தெளிவாகப் புரிந்து கொண்டார். மேலும் ஆயிரம் யூலைக்கலவரங்கள் நடக்கக் கூடியளவிற்கு வெகுஜன மட்டத்தில் பெரும் தகவல் குறைவு இருப்பது தெரிந்தது.

அவர்கள் மட்டுமா நம்மிலிருந்தும் எத்தனையோ தமிழ் ஊடகங்கள் வருகின்றன. அவையாவது சாதாரண ஏழைச் சிங்கள மக்களின் எண்ணங்களை தமிழ் மக்களுக்கு எடுத்துத் தருகின்றனவா என்று எண்ணிப்பார்த்தார். தமது தரப்பிலும் வெறுமை இருப்பதை உணர்ந்து கொண்டார்.

“ சிங்கள தமிழ் ஊடகங்களுக்கு ஒரு கடமையிருக்கு” இரு இனங்களிலும் உள்ள சாதாரண மக்களின் மன உணர்வுகளை பரி-மாற வேண்டிய தார்மீகக் கடமையிருக்கு அதை ஏன் ஒருதனும் செய்யிறானில்லை... அதை ஒழுங்காக செய்தால் அரசியல்வாதிகள் இனவாதத்தை வளர்க்க ஏலாதெல்லோ? உலக்கைப் பயலுகளும் ஊடகங்களும், என்று ஊரால் ஒதுக்கப்பட்டுவிட்ட கம்யூனிஸ்ட் சிங்கராசா தெருவுக்குத் தெரு தண்ணி அடித்துவிட்டு திட்டித்திரிவது அவருடைய நினைவுக்கு வந்தது.

மற்றவரின் புலம்பல்களை கேட்காது தானாகவே தேடியபோது கடைந்தெடுத்த கோமாளியாக வாழ்ந்த அவரால் கூட இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதில் உள்ள பிரதான பிரச்சனைகளை ஓரளவு உணர முடிந்தது. பாரதப் போரின் முடிவு தெரிந்த சகாதேவன் போல அவருடைய மனதிலும் சில வெளிச்சங்கள். இருந்தாலும் காவடியும், கரகமும் சாட்டையடியுமாகத் திரியும் தன்னைப் போல ஒருவனின் பேச்சை யாரும் கேட்கமாட்டார்கள் என்பதை உணர்ந்து மௌனமா-னார்.

இவைகளைத் தவிர சிகிரியா மலைக்கு போனது
அவருக்கு இன்னொரு பாடமாக அமைந்தது. அந்த மலைக்குன்றுக்கு அருகில் போனதும் அங்கு நின்ற காவலன் ஐயாமுத்தரையே கூர்ந்து

படிப்பகம்

www.padippakam.com



பார்த்தான்.

அதைப் பார்ப்பதற்காக இருபது ரூபாபெறுமதியான டிக்கட்டுக்களை எடுத்துவந்து கொடுத்தபோது அவன் சிரித்தான்.

" இலங்கையில் உள்ளவர்களுக்குத்தான் இருபது ரூபாய், வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கு இரண்டாயிரம் ரூபாய்" என்று கூறினார்.

"இருபது ரூபாவுக்கும், இரண்டாயிரம் ரூபாவுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் , என்று அவனிடம் கேட்டார்." தானும் இலங்கைப் பிரஜைதான் என்று ஐயாமுத்தர் சொல்ல பிரச்சனை முற்றியது. ஐயாமுத்தரிடம் இலங்கைக்கான அடையாள அட்டை இல்லாத காரணத்தால் அவரால் அந்த இடத்தில் தன்னை ஓர் இலங்கைப் பிரஜையென உறுதி செய்ய முடியவில்லை.

அந்த நேரம் அருகில் இருந்த மரத்தடியில் குந்தியிருந்த இளைஞர்கள் ஐயாமுத்தர் குடும்பத்தை சுற்றிவளைத்துக் கொண்டனர். அவர்கள் அனைவரும் சிங்களத்தில் பேசிக் கொண்டு அருகே நெருங்கினர். திடீரென அங்கு ஒரு அசம்பாவிதம் தோன்றப் போவதை உணர்ந்து கொண்டார். அதைப்பார்த்தும் அங்கு காவலுக்கு நின்ற இராணுவத்தினர் சும்மாவே நின்றனர். சகல கலவரங்களையும் நேரில் பார்த்து பழமும் தின்று கொட்டையும் போட்டவர் ஐயாமுத்தர்.

அவ்வளவுதான் அவருடைய மூளை ஆயிரம் குதிரை வேகத்தில் ஓடியது. சட்டென ஓர் அந்தர் பல்டி அடித்தார். இரண்டாயிரத்திற்கு டிக்கட் எடுப்பதாக சொன்னார். தூரத்தே நின்ற வானில் பணம் இருப்பதாகவும் அதை எடுத்து வருவதாகவும் கூறினார். அவர்கள் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை, திரும்பி வருவார்கள்தானே என்று நினைத்திருக்க வேண்டும். அதற்குள் வேகவேகமாக எல்லோரையும் கூட்டிச் சென்று வானுக்குள் ஏறும்படி சொன்னார். அவ்வளவுதான் வான் எகிறிப்பாய்ந்தது, பின்னால் சிலர் விரட்டிக் கொண்டு வருவது தெரிந்தது... அவர்கள் வானை நெருங்கிவிட்டார்கள்...

என்ன செய்யலாம் என்று ஒரு நொடி யோசித்தார். டென்மார்க்கில்

www.padippakam.com



இருந்து வாங்கிவந்த விளையாட்டு டாலர்களை கற்றையாக எடுத்தத் தூக்கி வீசினார்... போலிப்பணம் காற்றில் சுழன்று பறந்தது.. அவ்வளவுதான் ஓடி வந்தவர்கள் வானை விட்டுவிட்டு பணத்தைப்

பாய்ந்து பொறுக்கினார்கள்... சிலர் கீழே விழுந்து உருண்டார்கள். ஐயாமுத்தர் சிரித்துக் கொண்டார், செல்லாக்காசுகளுக்கு இருக்கும் மதிப்பை கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தார். வான் வேகமாகப் பாய்ந்து மறைந்தது...

" இப்ப விளங்குதே சிங்கள சமுதாயத்திற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் உள்ள இடைவெளி " நெடுந்தூரம் ஓடிய பிறகு கேட்டான் சேகரம்.

நல்லா விளங்குது... சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாதென தந்தை செல்வா சொன்னது அவருடைய நினைவுக்கு வந்தது. ஓடாத ஓட்டம் ஓடி மாலைக்குள்ளேயே அவருடைய வான் மறுபடியும் கொழும்பிற்குள் வந்துவிட்டது. இனி கொழும்பை விட்டு எங்குமே போவதில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

அன்றிலிருந்து கொழும்பில் வாங்க வேண்டிய பொருட்களை எல்லாம் தேவாரச் செல்வி வாங்கத் தொடங்கினாள். அவள் மூட்டை மூட்டையாக வாங்கிக் குவிக்கும் துணிமணிகளையும், பிளாஸ்டிக் சாமான்களையும் பார்த்தபோது அவருடைய கண்கள் இரத்தக் கண்ணீர் வடித்தன.

" எடி கோதரியில போவாளே... ஒருக்கா தண்ணியில போட்டால் சுருங்கிப் போற இந்த உடுப்புகளை ஏனடி வேண்டுறாய் " என்று கேட்டார்

" டென்மார்க்கில இருக்கிற காந்தாரமலர் கொழும்பு வந்தால் இதைவிட பெரிய பெட்டிகளில் சாமான் கட்டி வருவாள்" என்றபடி தேவாரச் செல்வி அடுத்த கடைக்கு ஓட செருப்பைப் போட்டாள்.

" எடியேய் ஒரு நாட்டுக்கு வந்தால் அந்த நாட்டின் அழகைப் பார்க்க வேணும், அதனுடைய வரலாற்றைப் பேச வேணும், நீ

நாட்டுக்கும் இந்த நாட்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பேச வேணும். அதை விட்டுப்போட்டு எந்தநாட்டுக்குப் போனாலும், கொடிகாமம் சந்தைக்கு சாமான் கட்டப் போனது போல சாமான் கட்டுறியே... பாமரக்கழுதை.. ” அவளை ஓங்கி அடிக்கப் போனார்.

“கடைக்குப் போறது, மலிவு சாமான் வேண்டுறது.. இதைத்தவிர எங்கட பெண்டுகளுக்கு வேறை என்ன வேலை ? நாடுகளின்ரை அழகைப் பாத்து எங்களுக்கு என்ன கிடக்கு..” தேவாரச்செல்வியும் அவருக்குப் பயப்படாமல் பதிலுக்கு அதட்டினாள்.

“ உள்ள சாமானுகளை எல்லாம் வேண்டிக் கொண்டு போய், தண்ணிவாப்பு, கலியாண வீடுகளிலை வெளிக்கிட்டு நிக்கிறதும், மணித்தியாலக் கணக்கில வெளிக்கிட்டு காலத்தை நாசமாக்கிறதும்தானே உன்னைப் போல ஆக்களின்ரை வேலை.. போடி போ... நாடே சீரழிஞ்சு கிடக்கு இனி உன்னைப் போல கோவேறு கழுதையள் திருந்தினால் போல இந்தநாடு உருப்படப் போகுதே ” என்று அவளைத் திட்டினார்.

“இவருக்கு ஏதோ மூளை கீளை தட்டிப்போச்சுப் போலை” என்றுவிட்டு அவள் போயேவிட்டாள். அந்த நேரம் சேகரம் அவருக்குப் பெரிய உதவியாக இருந்தான். பொருட்களை எல்லாம் ஒழுங்காக அடுக்கிக் கட்டிக் கொடுத்தான். இரண்டு நாட்களில் பயணம். இரண்டு நாட்களும் தேவாரச்செல்வி சாமான்களை வாங்குவதை நிறுத்தவில்லை.

பயணம் புறப்படும் நாள் வந்து நின்றது. அன்று அதிகாலை மூன்று மணிக்கே ஐயாமுத்துவின் டென்மார்க் பயணம் ஆரம்பித்தது..

தேவாரச்செல்வியின் மூட்டை முடிச்சுக்களுடன் இடம் பெயர்ந்து போவது போல அவர்களுடைய டென்மார்க் பயணம் ஆரம்பித்தது. காலை நேரத்தின் குளிர்காற்று சிறிது ஆறுதல் கொடுத்தது. முதல் முதலாக நாட்டைவிட்டு வெளியேறியபோது இப்படித்தான் விமான நிலையம் புறப்பட்டது நினைவிற்கு வந்தது.

www.padippakam.com



அன்று அவரைச் சுடப்போவதாக மிரட்டிய போலீஸ்காரனுக்கு நூறுருபா கொடுத்து உயிர் தப்பியதும், வழயில் மறித்த தமிழ் கஸ்டம்காரனிடம் மாட்டிக் கொண்டு பணம் கொடுத்ததும் நினைவுக்கு வந்தது. அதுபோலத்தான் இன்றைக்கும் ஏதாவது கூத்தாட்டங்கள் நடக்குமோ என்று அஞ்சினார்.

வழியில் ஒரு சிங்களக் கடையோரமாக நிறுத்தி காலைச் சாப்பாட்டை வானில் இருந்தபடியே வேண்டிச் சாப்பிட்டார்கள். சுடுசுடு தேநீரும் குடித்து புதுத் தெம்பு பெற்றுக் கொண்டார். கித்துள் அப்பம் வேண்டிச் சாப்பிட்டார். இருபத்தியிரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த சுவையை இன்று அதில் காணமுடியவில்லை. கறிபணிசை எடுத்துக் கடித்தார் அதிலும் அன்றைய சுவை இல்லை.

விமான நிலையம் போய்ச் சேர்ந்ததும் விரைவாக வானில் இருந்து சாமான்களை இறக்கி தள்ளு வண்டிலில் அடுக்கினார். சேகரம் வானை எங்கோ ஒரு பாக்கிங்கில் நிறுத்திவிட்டு வேகவேகமாக வந்தான். எல்லோரும் விமான நிலையத்திற்குள் நுழைந்தனர்.

போடிங் முடிக்க முன்னரே சேகரத்தை ஒரு தடவை பார்த்தார். “ சேகரம் நான் சொல்லுறதை எல்லாம் கவனமாக யோசிச்சுப் பார்... வயித்துக்குத்தை நம்பி காலத்தை ஓட்டாதே.. ” என்றார்.

“ ஒண்டுக்கும் பயப்பிடாதையுங்கோ.. கனகாலத்துக்குப் பிறகு வந்ததால உங்களுக்கு இந்த நாட்டு நடப்பைப் பாக்க பயமாத்தான் இருக்கும். இந்த நாடு உங்களுக்கு தினச் செய்தி எங்களுக்கு இதுதான் தினச் சீவியம்... சிங்களவரும் தமிழரும் அடிபடுறதை நிறுத்தினால் உலகம் எங்கை போயிருக்கெண்டு பாத்துக் கவலைப்பட வேண்டிவரும்... உலகம் முன்னேறுது நாங்கள் வேகமாப் பின்னேறுறம்.. ஏதோ எங்களால முடிஞ்சது..” என்று வேடிக்கையாகச் சொல்லிச் சிரித்தான்.

“ சேகரம் இவ்வளவு நாளும் உன்னோடை பழகினன் ஒருநாள் கூட வெளிநாடு வா எண்டு சொல்லேல்லை ஏன் சொல்லு பாப்பம் ? ” ஐயாமுத்தர் கேட்டார்.

www.padippakam.com



“ தெரியேல்லை.. ”

“ அகதிகளுக்கு வெளிநாடுகள் நன்மை செய்யுதெண்டு நினைச்சுப் போடாதை... வெளிநாடுகளிலை தமிழன் உழைச்சு வரி கட்டி மண்ணோடை மண்ணாய் போனான். இந்த நாட்டை வளமாக்க வேண்டிய எங்கடை மனித சக்தி எல்லாம் வெளி நாட்டவனுக்கு

பயன்பட்டுப் போச்சு.. இனி நீயும் வெளிநாடு வந்து எங்கடை நாட்டின் உழைப்பு வளத்தை மற்றவருக்குக் குடுக்கக் கூடாது அதுதான் உன்னை வெளிநாடு வா எண்டு கேக்கேல்லை.. ”

இதற்கிடையில் கிழவி மகளையும், அவரையும் உணர்ச்சியுடன் கட்டிப்பிடித்து அழுதாள்.. இனி அடுத்ததடவை தன்னுடைய இறுதிக்கிரியைக்குத்தான் அவர்கள் வரக்கூடும் என்று அவள் கலங்கியிருக்க வேணும். அவர்களை கடைசியாகப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டாள்.

மிகுதியாக இருந்த பணத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டு, பாதுகாப்பிற்கு இரண்டாயிரம் ரூபாவை கையில் வைத்துக் கொண்டார். சிறு பொழுது வரிசையில் நின்று போடிங் முடித்து, அனைவரிடமும் விடைபெற்றார். சேகரமும் கிழவியும் அவர்களைப் பார்த்து நெடுநேரமாகக் கைகளை ஆட்டியபடியே நின்றனர்...

, கடவுளே அருமந்த தாய்நாட்டை விட்டு இப்பிடியெல்லாம் போறமே... , அவருடைய மனம் அழுதது.

சிறது தூரம் நடக்க பாஸ்போட் பார்த்து உள்ளே விடும் அடுத்த கவுண்டர் வந்தது. அங்கே நீளமான ஒரு வரிசை நின்றது.

ஐயாமுத்தர், தேவாரச்செல்வி குடும்பத்தைப் பார்த்ததும் ஒருவன் அவர்களைக் கைகாட்டி அழைத்தான். தனது வரிசையில் நின்ற மற்றவர்களை அடுத்த வரிசைக்கு போகும்படி விரட்டினான். பின் ஐயாமுத்தரிடம் பாஸ்போட்டை வாங்கிப் பார்த்தான்.

www.padippakam.com



அங்கு நின்ற வெள்ளைக்காரர் சிலரையே விரட்டியடித்துவிட்டு தன்னைக் கூப்பிடுகிறானே என்பதைப்பார்க்க அவருக்கு பயம்பயமாக வந்தது. நாலாம் மாடியின் கம்பிகள் நினைவுத் திரையில் சர-சரவென ஓடின..

" ஐயா எவ்வளவு சல்லி வைச்சிருக்கிறீங்க... " கேட்டான்.

ஐயாமுத்தர் மெளனமாகவே நின்றார்.

" ஐநூறு ரூபா கொடுங்க போதும்... "

" ஆயிரம் ரூபாதான் இருக்கு.. "

" கொடுங்க மிச்சம் கொடுக்கிறேன்... " ஆயிரம் ரூபா நோட்டை வாங்கிவிட்டு மிகுதி ஐநூர்று ரூபாவைக் கொடுத்தான். சடக் சடக்கென பாஸ்போட்டில் சீலைக் குத்தினான். அதேவேகத்தில் அனைவரையும் மிகுந்த மரியாதையுடன் உள்ளே அனுப்பியும் வைத்தான். ஐயாமுத்தருக்கு முன்னரே வந்தும் இலஞ்சம் கொடுக்க முடியாதவர்கள் கண்ணாடி ஜன்னல்களால் ஐயாமுத்தர் குடும்பத்தையே ஆதுாரத்துடன் பார்த்தார்கள்.

தன்னை மட்டும் சரியாக அடையாளம் கண்டு இலஞ்சமும் வேண்டிய அந்த அதிகாரியை வாழ்த்துவதா விடுவதா என்று தெரியாமலிருந்தது. இருந்தாலும் வெள்ளைக்காரரை விரட்டியடித்து தன்னை மட்டும் முதலாவதாக அனுப்பிய அவனை வாழ்த்தினார்.

ஐரோப்பிய விமான நிலையங்களில் கறுப்பர் என்றவுடன் அவர்களை மறித்து அங்குள்ள அதிகாரிகள் ஆடும் நிறவாதக் கூத்தாட்டங்களால் நொந்து போயிருந்த அவருக்கு அது ஆறுதலாக இருந்தது. நமக்கொரு நாடு வரவேணும், நமக்கொரு சர்வதேச விமான நிலையம் வரவேணும், வெள்ளைக்காரனின் பாஸ்போட்டுக்களை இரண்டுதரம் உரஞ்சி உரஞ்சிப் பார்க்க வேணும், தமிழனின் பாஸ்போட்டிற்கு சலூட் அடித்து மரியாதை கொடுக்க வேண்டும் எனற தன்னுடைய ஆசை எப்போது நிறைவே

படிப்பகம்

www.padippakam.com



றுமென நினைத்தார்.

ஒரு மணி நேரம் உள்ளே இருக்கும் கடைகளை சுற்றி வந்தார். கறுவலுக்காக ஒரு கல்லோயா சாராயப் போத்தல் எடுத்தார்.

சொற்ப நேரத்தில் விமானம் புறப்பட ஆயத்தமானது.

50

கொழும்பு கட்டுநாயக்காவில் ஏறிய ஐயாமுத்தருக்கு டென்மார்க் பிலுண்ட் விமான நிலையம் வந்தபோதுதான் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. அதேவேளை தொடர்பு துண்டிக்கப்பட்டுப் போன

டென்மார்க் வாழ்க்கைக்கு மீண்டும் தயாராக வேண்டியிருந்தது சி-றிது சலிப்பைக் கொடுத்தது. பணத்தை செலவழித்து, நாட்களை நாசமாக்கும் வாழ்வு இலகுவாகவும், பணத்தை உழைக்க வேண்டிய ஐரோப்பிய வாழ்வு பாரமாகவும் தெரிவது இயற்கையென நினைத்துக் கொண்டார்.

இரண்டு பிள்ளைகளைப் பெற்று வெளிநாடு அனுப்பிவிட்டு, பின் நாட்டில் இருந்தபடியே வீடு கட்டப்போவதாக ஓர் அத்திவாரத்தை கிண்டிவிட்டு, வீடுகட்ட, வீடுகட்ட என்று பணத்தைச் சுரண்டியபடியே வாழ்க்கையை ஓட்டியிருக்கலாமே என்று எண்ணி மலங்கினார்.

இப்போது ஆம்பிளைப் பிள்ளையளைவிட பெண்பிள்ளைகளைக் கலியாணம் கட்டி அனுப்பினால் அதிக பணத்தைச் சுரண்ட முடியுமென அறிந்திருந்தார். ஆண் பிள்ளைகளை வெளிநாடு அனுப்பி கஞ்சிக்கும் வழியில்லாமல் கிடந்தவர்கள் சொன்ன கதைகளை ஒரு நொடி நினைத்தார்.

இப்படி பலவாறு யோசித்தபடியே தேவாரச்செல்வியின் துணிமணிகள் அடைந்த சூட்கேஸ்கள், அப்பளம், வடகம், இடியப்பத்தட்டுக்கள் அடங்கிய பெட்டிகளை எல்லாம் ஒரு வண்டிலில் தூக்கிப் போட்டுக் கொண்டு வேகமாக உருட்டத் தொடங்கினார். அந்த நேரம் அவரைமட்டும் சுங்க அதிகாரி ஒருவன் தடாலென மறித்தான்.

www.padippakam.com



மற்றைய பயணிகள் ஐயாமுத்தரை பரிதாபமாகப் பார்த்தபடியே ஓடி மறைந்தனர்.

" ஏதாவது நகை கொண்டுவந்திருக்கிறீர்களா ?" என்று கேட்டபடி சகல பைகளையும் சல்லடை போட்டான் சுங்க அதிகாரி.

எத்தனையோ வெள்ளைக்காரர் எல்லாம் போக தமிழனான தன்னை மட்டும் அந்தச் சுங்க அதிகாரி சோதனை செய்ததைப் பார்க்க ஐயாமுத்தருக்கு சினம் சினமாக வந்தது. விமான நிலையங்களைக் கடக்கும் தமிழர்கள் கால காலமாக ஆடிய ஆட்டங்கள்தான் இப்போது தன்னைச் சூழ்ந்துள்ளதோ என்று நினைத்தார். இருப்பினும் மனதில் சிறிது துணிச்சலை வரவழைத்துக் கொண்டார்.

" எல்லாரையும் போக விட்டுவிட்டு கறுப்பனான என்னை

மட்டும் ஏன் சோதிக்கிறாய்.. " என்று கேட்டார்.

சுங்க அதிகாரி அவரையே சிறு பொழுது பார்த்துக் கொண்டிருந்தான். அவனைப் பொறுத்தவரை அந்த விமானத்தில் வந்தவர்கள் போய்த் தொலையும் வரை யாரோ ஒரு வெங்காயத்தை சோதித்து பொழுது கடத்த வேண்டிய தேவை இருந்தது. குனிந்து, வளைந்து சிரிக்கும் தமிழரைப் போல வசதியானவர்கள் அவனுக்கு யார் கிடைக்கப் போகிறார்கள் என்று நினைத்திருந்த அவனுக்கு ஐயாமுத்தரின் கேள்வி சிறிது ஆச்சரியமாக இருந்தது. மெல்லக் கதைக்கத் தொடங்கினான்.

" எங்களுக்கு இதுதான் வேண்டும்... இப்பிடித்தான் நியாயம் கேட்க வேணும்.. பல்லை இளித்து பணிவதுதான் உங்களுடைய ஆட்களில் உள்ள பெரிய பிழை. உங்களுடைய நாட்டிலை இருக்கிறவர்கள் எல்லோருமே ஒன்று திரண்டு நெஞ்சை நிமிர்த்தி நீதி கேட்டிருந்தால் உலகம் உங்கடை பக்கமாகத் திரும்பியிருக்கும். உரிமையை கேட்கிறது போராட்டமல்ல அதுதான் வாழ்க்கையின் கடமை." என்றான்.

படிப்பகம்

அடிமை போல பணிந்து அவமானப் பட்டுவிட்டு, பின் வீட்டில்

www.padippakam.com



மனிசியிடம் வந்து வீரம் பேசும் தன்னுடைய வெட்கம் கெட்ட செயலை ஒரு தடவை எண்ணிப்பார்த்தார். அவர் மனதில் மெல்லிய மாற்றம்.

" உங்களுடைய நாட்டு ஆட்களைப் பார்த்து, நான் அடிக்கடி மறிக்கக் காரணம் கனக்க இருக்கு. தவறை தவறென்று சுட்டிக்காட்டவும், ஆர் செய்தாலும் பிழை பழைதானென்று சமுதாய வீதியில் நெஞ்சை நிமிர்த்தி பேசவும், நீதி கேட்கவும் நீங்கள் துணிய வேண்டும். கேள்வி கேட்பது சுதந்திரத்தின் அடிப்படை இலட்சணம்... துணிச்சல் ஆருக்கு வரவேணும் தெரியுமா பொதுமக்களுக்கு வரவேணும்... உங்களிலை ஒராள் துணிஞ்சதை இன்றைக்குப் பாத்திட்டன் சந்தோசம்.. போயிட்டு வாரும்.. " அவரை அப்படியே அனுப்பி வைத்தான்.

ஐயாமுத்தருக்கு அந்தச் சம்பவம் மனதில் பெரிய அதிர்ச்சியையே உண்டு பண்ணியிருந்தது. அப்படியே விமான நிலைய வாசல் பக்கமாக வந்த அவருக்கு அங்கே அதைவிடப்

பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே சிவபாலியும், கறுவலும் அவருக்காகக் காத்து நின்றார்கள். இருவரும் தோள்களில் கைகளைப் போட்டபடி காத்து நிற்பது தெரிந்தது.

அதைப் பார்த்ததும் ஐயாமுத்தர் ஆயிரம் வோல்ரேஜில் மின்சாரம் அடித்ததைப் போல சுருண்டு நின்றார். கண்களைக் கசக்கிவிட்டு தான் காண்பது கனவா அல்லது நனவா என்று யோசித்துப் பார்த்தார். மற்றவரை பிரித்து வைத்து, ஆனையாள் கொம்பு சீவி மோதவிட்டு தான் ஆடிய நாடகம் அம்பலமாகிவிட்டதை உணர்ந்து வெட்கினார்.

சிலரை சிலகாலமும் பலரை பலகாலமும் ஏமாற்றலாம் ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாதென்ற பழைய வரிகள் இப்போது நினைவிற்குள் வந்தன. அவர்கள் இருவரும் தன்னை விமான நிலையத்தில் வைத்து மிதித்துத் துவைப்பதற்குத்தான் வந்திருக்க வேண்டுமென்று நினைத்தார். உண்மையை ஒப்புக் கொண்டு, மன்னிப்புக் கேட்டு இனியாவது நயவஞ்சகத்தால் நண்பர்களை சீரழிக்காமல் வாழ்வதே சிறந்த தவம்

என்று நினைத்தார்.

வாசல்வரை வந்த ஐயாமுத்து அதற்குப் பின் ஓர் அடிகூட நகர முடியாமல் நிற்பதைப் பார்த்த சிவபாலியும், கறுவலும் அவரை நோக்கி நடந்து வந்து, கையில் இருந்த பூச்செண்டை அவரிடம் கொடுத்தனர். பின் இருவரும் அவரை கட்டித்தழுவி அன்பைப் பா-மாறிக் கொண்டனர். அதைப் பார்க்க நாரதர் கலகம் நன்மையில் முடியுமென்று யாரோ சொன்னதுதான் ஐயாமுத்தருக்கு நினைவிற்குள் வந்தது.

அதேபோல ஒரு பூச்செண்டை தேவாரச்செல்விக்குக் கொடுத்து அவளையும் கட்டித் தழுவினாள் பிரியாமணி. அதைப் பார்த்ததும் தேவாரச்செல்விக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. செய்மதியில் நாயை விட்டுச் சோதித்துப் பார்த்ததைப் போல பிரியாமணியை ஏவி விட்டு வீடு வேண்ட வைத்து, தான் செய்த நச்சு வேலையை நினைத்தாள் தேவாரச்செல்வி. அதை பிரியாமணி

இனங்கண்டுவிட்டாள் என்பதையும் அவள் கொடுத்த பூச்செண்டைப் பார்த்துப் புரிந்து கொண்டாள்.

தொலைக்காட்சிகளில் தொடர் நாடகங்களைப் பார்த்து வில்லி வேடமும், நச்சு வேலையும் செய்யப் புறப்பட்டிருக்கும் பாமரப் பெண்களின் வரிசையில் தானும் நிறுத்தப்பட்டிருக்கும் அவலத்தைப் புரிந்து கொண்டாள். இனி வாழ்க்கையில் சின்னத்திரைத் தொடரே பார்ப்பதில்லை என்ற முடிவிற்கும் அக்கணமே வந்தாள்.

"பிரியாமணி எப்படி இருக்கிறீர்... " கேட்டாள்.

"வீட்டை வித்திட்டன், ஐஞ்சு லெச்சம் வரை நட்டம், எங்களைப் போல நீங்களும் வீட்டை வாங்கி ஏமார வேண்டாம்... வாங்கிறதா இருந்தால் அதுக்குரிய சரியான பின்னணி அறிவோடை வாங்குங்கோ... "என்று சொன்னாள். அனுபவம் அவளுள் பேசியது.

தேவாரச்செல்வி கண்களால் அவளிடம் மன்னிப்புக் கேட்டாள்.

www.padippakam.com



"யோசிக்காதையுங்கோ அக்கா .. வாழ்க்கையிலை எல்லாமே நல்ல பாடங்கள்தான். புத்தியுள்ள இனம் புத்தகத்திலை இருந்து படிச்சு ஆபத்திலை இருந்து தப்பியிடும்... நாங்கள்தான் நெருப்பில விழுந்து சூடுபட்ட பிறகு தெரியிற ஆக்களாச்சே ... என்ன செய்ய.. ம்... எல்லாமே மறக்க முடியாத பாடங்கள்தான்"

"நடவுங்கோ ... நடவுங்கோ வாகனத்தில் இருந்து கதைக்கலாம்.." என்றபடியே சிவபாலி எல்லோரையும் அங்கிருந்து நகர்த்தினார். எல்லோரும் போய் வானில் ஏறிக் கொண்டனர். கறுவல் வண்டியை அலாக்காக சுழற்றி ஓட ஆரம்பித்தான்.

சிவபாலி பிளாஸ்க்கில் இருந்த தேநீரை வார்த்து ஐயாமுத்தருக்கும், தேவாரச் செல்விக்கும் அன்போடு கொடுத்தார்.

"ஐயாமுத்தண்ணே.. " கறுவல் குரல் கொடுத்தான்.

"ம்.."

"ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ.. நடந்ததை எல்லாம் மறப்பம்.. மறுபடியும் புதிய வாழ்க்கை ஒன்றை அமைப்பம்"என்றான் கறுவல்.

" பிரயாணத்தால வந்த களைப்பு மாறவேணும்.. முதலில் படுத்து நித்திரை கொண்டு எழும்புங்கோ.. வாற சனிக்கிழமை மிச்சத்தைக் கதைப்பம்.. " என்று சிவபாலி எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

சிவபாலியின் புதிய வாடகை வீட்டில் முதல் முதல-ாக ஐயாமுத்தருக்கும், தேவாரச்செல்விக்கும் ஆட்டிறைச்சிக்கறி சோற்றுடன் விருந்து கொடுத்தார் சிவபாலி.

ஐயாமுத்தர் தான் காண்பது கனவா நிஜமா என்று தெரியாமல் தவித்தார். வேகமாக சாப்பிட்டுவிட்டு எழுந்து கொண்டார். அப்படியே ஏதோ பேச வாயெடுத்தார்..

www.padippakam.com



“வேண்டாமண்ணே எல்லாம் பிறகு பேசுவம்.. ” சிவபாலி அடித்துக் கூறினார்.

அவர்கள் வீட்டிற்குப் புறப்பட்டனர்.

51

சனிக்கிழமை மாலை.

சிவபாலி குடும்பமும், ஐயாமுத்தர் குடும்பமும் கறுவலோடு சேர்ந்து றிங்குபிங் கடற்கரையில் இருந்து மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நடந்ததை எல்லாம் பிரியாமணி சொல்லக் கேட்டு ஐயாமுத்தரும் தேவாரச் செல்வியும் கண்களைத் திறந்தபடி ஆச்சரியத்தில் இருந்தனர்.

அதுபோல இலங்கை போய் தான் கண்ட உண்மைகளை எல்லாம் பூசி மெழுகாமல் போட்டுடைத்தது போல சொல்லி முடித்தார் ஐயாமுத்தர்.

சிறிது தூரத்தே றிங்குபிங் கடலலைகள் எந்தவித அவசரமும் இல்லாமல் உருண்டு கொண்டிருந்தன. கடற் காகங்கள் அங்குமிங்கும் பறந்து திரிந்தன. கடற்கரைக் காட்சி மனதிற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது.

“இனி நாங்கள் என்ன செய்யலாம் ” சிவபாலி கேட்டார்.

“ புலம் பெயர் வாழ்க்கையிலை நாங்கள் செய்த எல்லாப் பி-ழைகளையும் மறு மதிப்பீடு செய்ய இதுவரை எங்களுக்குக் கிடைத்த அனுபவங்கள் போதுமானவை... ” கறுவல் பதில் சொன்னான்.

“ நாங்கள் நடந்தவைகளை எல்லாம் நினைச்சு கோபப்பட்டு பிரிந்து போகாமல், பழைய குப்பைகளை எல்லாம் எடுத்து வீசிப்போட்டு நிதானமாகப் பேச வேணும். நாங்கள் மூண்டுபேரும் எல்லாப் கோபங்களையும் மறந்து சிரிப்பதைப் போல எல்லாரும்

www.padippakam.com



கோபங்களை மறக்க வேணும்.. நாங்கள் பட்ட பாடுகளும், சுட்ட சூடுகளும் போதும் போதும் ” என்று சிவபாலி சொன்ன போது அவருடைய குரல் தழுதழுத்திருந்தது.

“ எங்கடை சின்ன வாழ்க்கையின் பிரச்சனைகளையே தீர்ப்பது எவ்வளவு கடினமாயிருக்கு, அப்பிடிப் பார்க்கையில ஒரு நாட்டுப் பிரச்சனையை தீர்ப்பது எவ்வளவு பெரிய கஸ்டம்.. ”

“நீங்கள் என்ன சொல்லுறியள் ” விளங்காமல் கேட்டார் சிவபாலி.

“நாட்டுக்குப் போய் எல்லாத்தையும் பார்த்தன்.. நரம்பில்லாத நாக்காலை எத்தினையோ குறைகளைச் சொன்னன்.. பிழை சொல்லுறது எவ்வளவு இலகுவான வேலை என்பதை இப்ப என்னாலையும் உணர முடியுது.. ”

பிரியாமணி எல்லாருக்கும் பொரித்த கோழிக்கால்களை ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து கொடுத்தாள். கடற்கரையின் குளிர்காற்றுப் பட கோழிக்காலின் சுவை மேலும் தூக்கலாக இருந்தது.

“எங்கடை நாட்டிலை அமைதியைக் காண எங்கடை வாழ்க்கை அவலங்களும், உலகம் முழுவதும் போய் நாங்கள் கண்ட அவதானிப்புக்களும் முக்கியமானவை. இலங்கையில் ஓர் அமைதியைக் காண இந்த அனுபவங்களை பயன்படுத்த வேண்டும்.. அமைதிக்காக நாங்கள் இனியாவது மானசீகமாக முயல வேண்டும்.” ஐயாமுத்தர் சொன்னார்.

“ஓம்... நாங்கள் மூண்டு பேரும் சந்தித்த அவலங்களுக்கெல்லாம் அறியாமையும், ஒருதரை ஒருத்தர் புரியாமையும்தான் காரணம் என்பதை சரியா விளங்கியிட்டம்.. இதுபோல எல்லாவித அறியாமைகளையும் அகற்றப் பாடுபட்டாலே போதும்... ”

கோழிக்காலை கடித்தபடி அவர்கள் மூன்று பேரும் இப்படியெல்லாம் மெய் மறந்து பேசிக் கொண்டிருக்க, அவர்கள்

www.padippakam.com



மூவருடைய முதுகுகளிலும் , பளீர் பளீரென சலாகையால் யாரோ ஒருவன் அடி போட ஆரம்பித்தான். அவ்வளவுதான் கோழிக்காலையும் வீசிவிட்டு மூவரும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

ஓடியபடியே மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே ஏழைக்கவிஞர் சலாகையுடன் அவர்களை விரட்டிக் கொண்டு வருவது தெரிந்தது. அதைப் பார்த்ததும் மூவரும் அப்படியே நின்றனர். கவிஞருக்கும், சிவபாலிக்கும் இடையே இருந்த மோதல் நல்ல வேளையாக சற்று முன்பு ஐயாமுத்தருக்கு தெரிந்திருந்த காரணத்தால் வேகமாகச் சென்று கவிஞரைப் பிடித்தார்.

கவிஞரின் தேகம் கோபத்தில் ஆடிக் கொண்டிருந்தது. பழைய ஐயாமுத்தரென்றால் கவிஞருடைய கோபத்தை பயன்படுத்தி, அவருக்கு செடில் குத்தி தூக்குக் காவடியிலும் ஏற்றி அழகு பார்த்திருப்பார். ஆனால் இப்போது அவரை மறித்து நிதானமாகப் பேசினார்.

“ கவிஞரண்ணே.. கொஞ்சம் பொறுங்கோ... நடந்தது பிழைதான்.. நான் உங்களை மன்னிப்புக் கேட்கிறேன்.. ”சிவபாலி தலை குனிந்து சொன்னார்.

“ என்ன மன்னிப்பு.. நீ உன்ரை சுயநலத்துக்காக மற்றவனுக்கு துரோகிப் பட்டம் கட்டுறதுக்கு மன்னிப்பு வழங்க முடியுமோ.. ” கவிஞர் மறுபடியும் அடிக்க சலாகையை ஓங்கிவிட்டு அதைக் கீழே போட்டார்.

“கவிஞரண்ணே நீங்கள் ஆர்... ” கறுவல் கேட்டான்.

“ உணர்ச்சியுள்ள கவிஞன்.. ”

“ ஒரு கவிஞருக்கு உணர்ச்சி மட்டும் போதாது அறிவும் வேணும்... ”

கவிஞர் சிறிது யோசித்தார்.

" உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா ? "

" ஓம்.. "

" துரோகிப் பட்டம் கட்டின அதே சிவபாலியே உமக்கு தியாகிப் பட்டம் கட்டினால் உலகம் உம்மை தியாகியா மதிச்சிடுமோ.. ? "

கவிஞர் திடுக்கிட்டார். முதல் தடவையாக அவருடைய அறிவு மறு பக்கமாக வேலை செய்தது.

" இல்லை " என்றார் தணிந்த குரலில்..

" ஒருவர் தியாகி என்றால் நாங்கள் தியாகி ஆகிறதோ அல்லது துரோகி என்றால் துரோகியாகிறதோ முடியாத காரியம் ... எல்லத்தையும் காலம்தான் தீர்மானிக்கும். தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசும் மனிதராலை இதையெல்லாம் ஒரே நொடியில் தீர்மானிக்க முடியாது.. " பட்டு நொந்த அனுபவத்தோடு சிவபாலி அவரைப் பார்த்துச் சொன்னார்.

கவிஞர் சிரித்தபடி " என்னுடைய அறிவுக் கண்கள் திறந்திட்டுது " என்றார்.

" நன்றி கவிஞரண்ணே.. வாங்கோ கோழிக்கால் சாப்பிடுவம்" கறுவல் அழைத்தான்.

" பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமானுக்குப் போட்டது போல எங்களுக்கும் முதுகிலை நல்லமாதிரிப் போட்டிருக்கிறியள்.. "சிரித்தபடி சிவபாலி சொன்னார்.

" என்னை இனிக் கவிஞரெண்டு கூப்பிடாதையுங்கோ.. "

www.padippakam.com



“ ஏன்.. ”

“ துரோகி, தியாகி எண்டதை மட்டுமல்ல கவிஞர், புலவர் என்ற பட்டங்களையும் காலமே தீர்மானிக்கும்.. நான் வெறும் மனிதன்தான்.. உங்களோடை சேர்ந்து இனி நானும் வித்தியாசமாக சிந்திக்கப் போ-றன்... ”

“ ஒரு வீட்டை வாங்கி ஒரு தமிழன் பெற்ற அறிவு இண்டைக்கு எல்லாத் தமிழருக்கும் ஒரு வழிகாட்டியா வந்திருக்கு... ” நடந்தபடியே சிவபாலி சொன்னார்.

“ நன்மைக்கும் நாமே காரணம்.. தீமைக்கும் நாமே காரணம்..” இப்படி ஐயாமுத்தர் சொன்னார்.

“ ஒரு வீடு ! ஒரு தமிழன் ! ” என்று சிவபாலி சொல்ல அனைவரும் கலகலவென நம்பிக்கையுடன் சிரித்தனர்.

எத்தனையோ பேர் வந்தனர், போயினர். அதுபோல எத்தனையோ மண் வீடுகள் கல் வீடுகள் எல்லாம் வந்தன... போயின... அத்தனையையும் தாங்கியபடி அமைதியாகச் சுழன்ற உலகம் இப்போதும் அமைதியாகவே சுழன்றது... உலக அமைதியின் அடிநாதத்தை அவர்களாவது அடையாளம் காண்பார்களா என்று ஏங்காத அமைதியுடன் அது தன் வழியில் உருண்டது...

முற்றும்.

www.padippakam.com



இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்ந்து வரும் கி.செ.துரை பூக்கள்,இளம்புயல் திரைப் படங்களை இயக்கியவர். நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை வழங்கியவர்.அலைகள் இணையப்பத்திரிகை ஆசிரியர்,நாவல்,சிறுகதை,கவிதை,கட்டுரை என்று பல தளங்களிலும் அதிகமாக எழுதி வருபவர்.இவர் எழுதியுள்ள நாவல்களில் அதிகமாக பேசப்பட்ட நாவல்களில் இந்நாவல் முக்கியமானது. புலம் பெயர் வாழ்வில் தான் கண்ட அவலங்களை வேடிக்கையாக மாற்றி முழு நீள நகைச்சுவை நாவலாக தந்திருக்கிறார். தமிழர் வாழ்வை தமிழ்க் கண்களால் மட்டும் பார்க்காமல் மேலைத்தேய அரசியல்,பொருளாதார,சமூகவியல் வாழ்வோடு இணைத்து சிரித்துச் சிரித்து நகர்த்தப்படுகிறது கதை. சிரித்துவிட்டால் மட்டும் போதுமா... ஒவ்வொரு தடவை சிரிக்கும்போதும் ஆழமாக சிந்திக்கவும் தூண்டுகிறது. கோபமாகப் பார்க்க வேண்டிய பல விடயங்களை சிரித்துக் கொண்டே கடந்து போவது சுகமான அனுபவமாகவும் இருக்கிறது.கவலைகளை மறந்து சிரிக்கவிரும்பினால் படிக்கத்தொடங்குங்கள்.

படிப்பகம்